# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56

சுடர் 32 | கதிர் 211 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 11 ஞாயிற்றுக்கிழமை 25.06.2017


## சம்பந்தன் உட்பட ஐந்து எம்.பிக்கள் ஜேர்மனி பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜேர்மனியின் அரசமைப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக 5 நாள் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்லவுள்ளனர். இலங்கைக்கு அண்மையில் >> 53

## மைத்திரி கூறிய யோசனையை நிராகரித்தார் ராணுவத் தளபதி



கொழும்பு, ஜூன் 25
கூட்டுப்படைகளின் தளபதி பதவியை ஏற்குமாறு இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்த >> 53

# மாவை - விக்கி நேற்று திடீரென சந்தித்துப் பேச்சு

### பரபரப்பான அரசியலுக்குப் பின் திருப்பம் சுமுகமாக நடந்து முடிந்தது



யாழ்ப்பாணம், ஜூன் 25
வடக்கு மாகாண சபையின் பரபரப்பான குழப்பங்களுக்குப் பின்னர் நேற்று அதிரடியான - எதிர்பாராத நிகழ்வு ஒன்று தமிழ் அரசுக் கட்சியின் மார்டின் வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவை நேற்று மாலை திடீரெனச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். எதிர்காலத்தில் இரு தரப்பும் இணைந்து செல்வது தொடர்பில் சந்திப்பில் இணக்கம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. >> 53

### முச்சந்தி முரளி



அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா! விடுங்க விடுங்க!



## அடிப்படைவாதிகள் சிலர் இன மோதலைத் தூண்ட சதி

சந்திரிகா குமாரதுங்க சாடல்

கொழும்பு, ஜூன் 25
சிறிய அடிப்படைவாதச் சிங்கள பௌத்த குழுவொன்று இந்த நாட்டில் இன மற்றும் மதங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றது என முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் >> 53

## குடும்பத்தலைவர் விபத்தில் சாவு

யாழ். தட்டாதெருவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
விபத்தில் படுகாயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனளிக்காது சில மணித்தியாலங்களில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் தட்டாதெருப் பகுதியில் இடம்பெற்ற இந்த >> 53



## நயினை நாகபூசணியின் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 25
வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
சிவசிறி முத்துக்குமாரசுவாமிக் குருக்களின் தலைமையில் ஆராதனைகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு கொடியேறும். தினமும் இரவுத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இரவு 11.30 மணிவரை நடைபெறும் என ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். >> 53

## பங்காளிகளுடன் பேசியே அமைச்சர்கள் நியமனம்

மாவை. சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
வடக்கு மாகாண சபையில் வெற்றிடமாகியுள்ள அமைச்சுக்களுக்கான அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் பேச்சு நடத்தியே இறுதி முடிவு எடுக்கப்படும்.
இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.
வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் >> 53

## 2 அமைச்சர்களை விசாரிக்க புதுக் குழு நியமித்தார் விக்கி

தலைவராக மீண்டும் தியாகேந்திரன்

யாழ், ஜூன் 25
வடக்கு மாகாண சபையின் இரு அமைச்சர்கள் மீது மட்டும் விசாரணை நடத்துவதற்கென முன்னர் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவைப் போன்ற நான்கு பேரை உள்ளடக்கியதான புதிய விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ள தாகத் தெரியவருகின்றது.
இந்த விசாரணைக் குழுவுக்கும், கடந்த விசாரணைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரனே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அறிய முடிகின்றது.
வடக்கு மாகாண அமைச்சர்கள் தொடர்பில் விசாரணை செய்து தனக்கு அறிக்கையிடுவதற்கு, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்ரன் >> 53

## காணாமற்போனோர் செயலகத்தை உடனே நிறுவவேண்டும் அரசு

வலியுறுத்துகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, ஜூன் 25
காணமற்போனவர்கள் குறித்த அலுவலகத்தை உடனடியாக நிறுவவேண்டும் என இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது பன்னாட்டு மன்னிப்புச் சபை.
"இலங்கை மக்கள் இனியும் காத்திருக்க முடியாது. இலங்கையின் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே பல வருடங்களாகக் காத்திருக்கின்றனர். >> 53

## பிரிட்டனும் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 25
காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டம், இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதைப் பிரிட்டன் வரவேற்றுள்ளது.
இது தொடர்பாகக் கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ், தனது அதிகாரபூர்வக் கீச்சகப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு ஒன்றில், "இலங்கையில் காணாமற்போனோ >> 53

### கொக்கிளாய் மீனவர் விவகாரம்

## தீர்வு குறித்து ஆராய்வதற்கு முல்லைத்தீவுச் செயலருக்கு சட்டமா அதிபர் அழைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 25
முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைக்கப் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட நிலம் தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வை எட்டுவதற்காக மாவட்டச் செயலர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆகியோரைச் சட்டமா அதிபர் அழைத்துள்ளார்.
முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைக்கப் பிரதேச செயலரால் வழங்கப்பட்ட நிலப் பகுதி தென்னிலங்கை மீன >> 53

## மலேரியா நோயைப் பரப்பும் புதியவகை நுளம்பு மன்னாரில்

சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு



மன்னார், ஜூன் 25
"மலேரியா நோய்த் தொற்றை ஏற்படுத்தும் புதிய வகை நுளம்பு மன்னார் கரையோரப் பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்தே இந்த வகை நுளம்பு இலங்கைக்குப் பரவியிருக்கலாம். இந்த நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அனைவரும் விரைந்து செயற்படவேண்டும்" என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கே.அரவிந்தன் தெரிவித்தார். >> 53

## 100க்கு மேற்பட்ட பௌத்த துறவிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

போதனா வைத்தியசாலைக்கு குருதி வழங்கவாம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
கண்டியில் இருந்து நூற்றுக்கும் அதிகமான பௌத்த துறவிகள் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குருதிக்கொடை >> 53





0115 411 411

SDB முதலீட்டு கணக்கு

- உயர் வட்டி வீதம்
- 10 வருடங்கள் வரையிலான முதலீட்டுத் திட்டங்கள்
- உங்களின் விருப்பத்திற்கேற்ப முதலீட்டு திட்டங்களை தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பு

மேலதிக தகவல்கள் அருகிலுள்ள SDB வங்கியில் அல்லது அழையுங்கள் 0115 411 411

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SDB வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டும் கருத்தரங்கு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட கிராம மட்ட அமைப்புக்கள் கலந்து கொண்டன. கருத்தரங்கில் அரசமைப்பு சபையின் செயலாளர் வின்சன் பக்திராஜா, வ.மா எதிர்க்கட்சித் தலைவரும் சட்டத் தரணியுமான தவராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற)

# அரசை அச்சுறுத்தி எவரும் உரிமையைப் பெற முடியாது

## அமைச்சர் துமிந்த கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 25
அரச சொத்துக்களை சேதப்படுத்தி அரசை அச்சுறுத்தி தமது உரிமைகளை பெற எவராவது முற்படுவார்களானால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சிறிலங்கா அரசின் விவசாயத் துறை அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் தரப்பினர் அதற்கு முன்னதாக எதற்காக தாக்கப்பட்டார்கள் என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நிதி ரீதியாக தற்போதைய அரசு பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. இந்த நெருக்கடிக்கான பொறுப்பை கடந்த அரசின் மீதோ அல்லது தனி நபர்கள் மீதோ குற்றஞ்சுமத்தி நாம் தப்பித்துக் கொள்ளத் தயாரில்லை. இந்த நெருக்கடிக்கு முகம் கொடுப்போம் என்று தெரிந்தே ஆட்சியைப் பொறுப்பேற்றோம். பெரும் கடன் சுமை தொடர்பில் நன்கு அறிந்தே ஆட்சியை பொறுப்பேற்றோம். அதனால் தான் அவற்றுக்குத் தீர்வுகளைக் காண அரசு என்ற வகையில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அந்தத் தீர்வுகளால் உடனடியாக மக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய வகையில் இல்லாதிருக்கின்றது என்பது உண்மைதான்.

ஆனால் அரச தலைவரும் தலைமை அமைச்சரும் நாட்டுக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்கி உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த நெருக்கடிகளில் இருந்து இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள முடியும்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகக் கண்டனப் பேரணியில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது சிறப்பு அதிரடிப்படை பொலிஸாரைக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு கடும் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை மாணவர்களே ஏற்படுத்தினார்கள்.

தற்போது வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் நியாயமான உரிமைகளைப் பயன்படுத்தி சில தரப்பினர் குழப்பங்களை விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது பரகசியம். குழப்பங்களை ஏற்படுத்தி நாட்டை நெருக்கடிக்குள் தள்ளும் நடவடிக்கைகளில் இருந்து விலகியிருப்பதே அனைவருக்கும் நல்லது.

குழப்பம் விளைவிக்க முற்பட்ட மாணவர்களை பொலிஸார் தாக்குதல் நடத்தி கலைத்தனர். அரச சொத்துக்களை சேதப்படுத்தவோ அல்லது அழித்து நாசமாக்கவோ எவருக்கும் அனுமதி அளிக்க முடியாது. பொலிஸார் தமது கடமையையே நிறைவேற்றினார்கள். என்றார். (ற-10)

# காணாமற்போன குழந்தை மீட்பு

கொழும்பு, ஜூன் 25
கதிர்காமத்தில் காணாமல் போயிருந்த குழந்தை நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமம் ஆலய வளாகத்தில் வைத்து கடந்த 21ஆம் திகதி 3 வயதுடைய நெதுமி அனுஷ்கா என்ற குழந்தை காணாமல் போனது. இந்தக் குழந்தையே மீட்கப்பட்டுள்ளது. கதிர்காமம் ஆலய பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் அருகில் இருந்து குறித்த குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

எந்த விதமான பாதிப்புக்கும் உள்ளாகாத நிலையில், பாதுகாப்பாக மீட்கப்பட்ட குழந்தை, அவரின் தாயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸா தெரிவித்தனர். (ற-10)

# வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா, ஜூன் 25
வவுனியா குருமன்காடு முதலாம் ஒழுங்கையில் உள்ள பூட்டிய வீட்டொன்றில் இருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குருமன்காடு முதலாம் ஒழுங்கையில் வசிக்கும் நல்லையா சிவராசா (வயது 75) என்பவரே சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

அந்த வீட்டில் அவரும், அவரது மனைவியுமே தனித்து வாழ்ந்துள்ளனர். கடந்த புதன்கிழமை குறித்த நபரின் மனைவி அவரது சொந்த ஊரான வட்டக்கச்சிக்கு சென்றுள்ளார். அவர் தனிமையில் வீட்டில் இருந்துள்ளார். இவரது வீட்டின் மேல் பகுதியில் குடியிருப்பவர் குறித்த நபரின் நடமாட்டங்கள் எவையும் காணப்படவில்லை என வீட்டின் யன்னல் வழியாக எட்டிப்பார்த்த சமயத்தில் அவர் இறந்த நிலையில் கிடந்துள்ளாா. கிராமசேவையாளருக்கு தகவல் வழங்கப்பட்டு வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# தலைமைத்துவ பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 25
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு வலய வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அலகின் ஏற்பாட்டில் "நல்ல வண்ணம் வாழ்ந்திடுவோம்" என்னும் தலைமைத்துவப் பயற்சி வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின.

அதன் முதல் நிகழ்வாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாணவர்களுக்கும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்குமான யோகாப் பயிற்சிகள் காலை 5.30 மணியளவில் மன வள பயிற்சி மையத்தால் நடத்தப்பட்டன. காலை 8 மணியளவில் தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின.

வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்டப் பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்படும் செயலமர்வில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 21 பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்றங்களின் 130 அமைச்சர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மூன்று தினங்கள் நடைபெறும் வதிவிடப் பயிற்சி வகுப்புகளின், செயலமர்வை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆரம்பித்து வைத்தார். (ற-9)



வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலய தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. மு.ப. 10.30 மணியளவில் பக்த அடியவர்கள் சூழ அம்மனின் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. இன்று காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (ற)



கடந்த ஆண்டு நடந்த ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நேற்று நடத்தப்பட்டது. சங்க மண்டபத்தில், சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலக பிரதி கல்விப் பணிப்பாளர் ( கல்வி அபிவிருத்தி ) கு.சிவானந்தம் கலந்து கொண்டார். நிகழ்வில் 3 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ற)

# முடிவுக்கு வந்தது பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 25
அரச மருத்துவவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்புறக்கணிப்பை உடனடியாக நிறுத்திக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது என்று அந்த சங்கத்தின் தலைவர் அநுருத்த பாதெனிய தெரிவித்தார்.

“அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் அரச தலைவர் உத்தியோகபூர்வ இல்லத்தில் பேச்சு நடத்தப்பட்டது. அதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கப்பாடுகளுக்கு வரமுடிந்தது. அதன்பின்னர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் அவசர கூட்டம் நடத்தப்பட்டது. பணிப்புறக் கணிப்பை கைவிட அதில் தீர்மானிக்கப்பட்டது.” என்று மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் சஜித் மல்லவராச்சி தெரிவித்தார்.

மாலபேயிலுள்ள சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவபீட மாணவச் செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தே கடந்த வியாழக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (ற-10)

# கேப்பாபிலவுப் போராட்டம் தீர்வின்றித் தொடர்கிறது

முல்லைத்தீவு, ஜூன் 25
பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி நடத்தப்படும் கேப்பாபிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்றுடன் 116 ஆவது நாளைக் கடந்தது.

138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

41 மீனவக் குடும்பங்களும், 97 விவசாயக் குடும்பங்களும் ஒன்றிணைந்து தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 18 ஆம் திகதிக்குள் உரிய தீர்வு முன்வைக்கப்படும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் உறுதியளித்தபோதும் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமை செய்யப்படாமையே நீர் பிரச்சினைக்குக் காரணம்

## அரச தலைவர் மைத்திரி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 25

பௌதீக ரீதியில் எமக்கு கிடைக்கும் நீரின் அளவு, எமது நாட்டைப்போன்று பத்து மடங்கு பெரிய நிலப்பகுதிக்கு போதுமானதாகக் காணப்பட்டபோதும் உரிய முறையில் முகாமை செய்யப்படாமையின் காரணமாகவே நீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற "சுபென் பிரஜா அபிமானி" மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீர்வளம் தொடர்பாக பொறுப்புக்கூறும் தனியானதொரு நிறுவனம் இல்லை. இதனால் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பன நீர் முகாமைத்துவம், நீர் பாதுகாப்பு மற்றும் சிக்கனம் தொடர்பாக குறைந்த பொறுப்புடன் செயற்படுதல் நீர் முகாமைத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அனைவரும் பொறுப்புடன் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்றார்.

சமூக நீர் அமைப்புக்களால் தயாரிக்கப்பட்ட சிறப்புப் பத்திரிகை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமைச்சரவையில் முன்வைத்து தேவையான நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்று அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக அரச தலைவர் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட இடர் நிலைமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க கொலோன் குளோபல் கொரிய நிறுவனத்தால் இரண்டு மில்லியன் ரூபாவுக்கான காசோலையும் நிகழ்வில் வழங்கப்பட்டது. அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், சுநாணி பண்டார, தலதா அத்துகோரல, இராஜாங்க அமைச்சர் மருத்துவ கலாநிதி சுதர்சனி பெர்னான்டோ புள்ளே ஆகியோரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் சரத் சநர விதான உள்ளிட்ட அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ற-10)

# தீர்வுகள் வழங்க முடியாவிடில் ஆட்சியை விட்டு வெளியேறுக

## அரசைச் சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 25

பல்கலைக் கழக மாணவர்கள் மீதான தாக்குதலை நியாயப்படுத்தி வரும் அரசின் அமைச்சர்களின் கருத்துக்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தவல்லன. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது விட்டால் ஆட்சியை கைவிட்டு வெளியேறுங்கள்.

இவ்வாறு ஜே.வி.பி.யின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பு பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பி யின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆர்ப்பாட்டங்கள் என்பது ரத ஊர்வலங்களோ அல்லது அமைதியாக நடைபெறும் மத அனுட்டானங்களுக்கான பேரணிகளோ அல்ல. பேச்சுக்கு அனுமதி இல்லையென்றால் ஏனைய அரச அலுவலகங்களும் முற்றுகையிடப்படும். அரசு கோரிக்கைகளை முன்வைக்கும் தரப்பினருடன் பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். அதைவிடுத்து பொல்லுகளால் அவர்களைத் தாக்கி மண்டைகளை உடைத்து பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

நாடு தற்போது மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவு பல மடங்கால் அதிகரித்துள்ளது.

ஆனால் அரசோ வருமானத்தை அதிகரிப்பதை விடுத்து செலவினத்தை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அமைச்சர்களுக்கான செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் அதிசொகுசு அலுவலகங்களை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும் அரசு பெருந்தொகை நிதியை செலவிடுகின்றது. மைத்திரி - ரணில் அரசு ஆட்சி பீடம் ஏறும் போது வழங்கிய வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி வருகின்றது.

மாணவர்களைத் தாக்க மாட்டார்கள் என சத்தியம் செய்தனர். ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க மாட்டோம் என்றனர். ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்டுவதாக கூக்குரலிட்டனர்.

ஆனால் இன்று காது கேட்காதவர்களைப் போல் இருகின்றது இந்த அரசு. மக்களின் பிரச்சினைகளைச் செவி மடுப்பதில்லை. அதற்கு எதிராக வீதியில் இறங்கி போராடினால் பொலிஸாரைக் கொண்டு தாக்குதல் நடத்துகின்றனர். அரசின் இந்த நடவடிக்கைகள் தொடர இடமளிக்க முடியாது. இந்த அரசால் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது விட்டால் ஆட்சியை கைவிட்டு வெளியேறுங்கள். அதனை விடுத்து அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டு ஜனநாயக உரிமைகளை பறிக்க முறபட்டால் அரச அலுவலகங்கள் அனைத்தையும் முற்று கையிடுவோம் என்றார்.

(ற-10)

# மருத்துவ நிபுணர் சங்கம் பணிப்புறக்கணிப்பில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 25

மருத்துவர்கள் சங்கப் பணிப்புறக்கணிப்பில் மருத்துவ நிபுணர் சங்கம் இணைந்து கொள்ளவில்லை என்று வைத்திய நிபுணர் சங்கத்தின் வடக்கு மாகாணப் பிரதிநிதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் மருத்துவ சங்கப் பிரதிநிதிகளே பில் ஈடுபடுகின்றனரே அன்றி மருத்து நிபுணர் சங்கம் இணைதது கொள்ளவில்லை. அவர்கள் தொடர்ந்தும் பணியில் ஈடுபட்டனர். குடாநாட்டில் யாழ். போதனா மருத்துவமனையில் மட்டும் சுமார் 70 மருத்துவ நிபுணர்கள் பணியில் உள்ளனர். இலங்கை மருத்துவ சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மருத்துவர் பணிப் புறக்கணிப்பில் வடக்கு மருத்துவர் சங்கம் நேரடியாக பங்கு கொள்ளவில்லை. ஏனெனில் வடக்கு மாகாண மருத்துவர் சங்கத்தின் யாப்பு விதிகளின்படி எந்தவிதமான நடவடிக்கைக்கும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட முடியாது என்பதே விதியாகும் என்றார். "மருத்துவ நிபுணர்கள் அனைவரும் தீவிரமாக பணியாற்றுவதோடு ஒரு சில மருத்துவர்களும் மருத்துவத்தின் தேவையை நோக்கமாக மட்டும் கருதி மனித நேயத்துடன் பணியாற்றுகின்றனர்." என்று மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்தனர்.

(ற-10, 101)

# தென்கிழக்குப் பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, ஜூன் 25

தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியை வழி மறித்து நேற்று ஆரப்பாட்டம் நடத்தினர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவர்கள் இருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் தாக்கப்பட்டனர். தாக்கியவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்தியும், பல்கலைக்கழக நிர்வாகத் தால் தடை விதிக்கப்பட்டுள்ள வர்த்தக முகாமைத்துவ பீட மாணவர்களின் தடையை நீக்கக் கோரியுமே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பல்கலைக் கழகத்துக்கு வெளியிலுள்ள உணவகம் ஒன்றுக்குச் சென்ற போது சுமார் 20 பேர் அடங்கிய கும்பலொன்று மாணவர்களைத் தாக்கியது.

அதில் ஒரு மாணவன் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பல்கலைக்கழக மாணவர்கள் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டைஅடுத்து கடை உரிமையாளர் ஒருவரையும் மற்றுமொரு நபரையும் சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்றுப் பொலிஸார் கைது செய்திருந்த போதிலும் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்தே ஒலுவில் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் திரண்ட மாணவர்கள் கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியை வழி மறித்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதி வழியான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

(ற-10)

**வீடு விற்பனைக்கு**

K.K.S வீதி கோண்டாவில் மேற்கு தபாற்கந்தோருக்கு முன் ஒழுங்கையில் 100m தூரத்தில் 4 பரப்புக் காணியுடன் 1600 சதுர அடி விஸ்தீரணமுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

**077 854 3441**

**விற்பனைக்குண்டு**

Prima வின் முதல் தரமான இறைச்சி மற்றும் முட்டைக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
வட பிராந்திய அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர் VSP

**077 704 8972**

# விழிப்புடன் இருக்கவேண்டியது மக்களே தவிர தலைவர்களல்லர்

## பேராசிரியர் சிவசேகரம் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 25

தமிழ் மக்களைப் பொறுத்தவரை மக்கள் தான் விழிப்பாக இருக்கவேண்டுமே தவிர தலைவர்கள் அல்லர். தலைவர்கள் எப்பொழுதும் தவறாகவே சிந்திப்பவர்கள். அவர்கள் தங்களின் அரசியலுக்கு அப்பால் செல்லமாட்டார்கள்.

இவ்வாறு பேராசிரியர் சிவசேகரம் தெரிவித்தார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:


மக்கள் தங்களை அரசியல் பிரதிநிதிகளிடம் கேள்வி கேட்கும் நிலைமை உருவாக வேண்டும். பொறுப்புக் கூறும்படி கோர வேண்டும். அழுத்தக் குழுக்களாக இருக்க வேண்டும். ஆனால் எங்களுடைய மக்களை பொறுத்தவரை எங்களுக்கு ஏன் வீண் வம்பு என எல்லா விடயங்களிலும் ஒதுங்கியிருப்பதுதான் மக்கள் தலைவர்கள் தவறாக இருப்பதற்கு காரணமாகவும் இருக்கிறது. சமூகத்தில் எங்கு அநீதி நடந்தாலும் அதற்கு எதிராக குரல் கொடுக்க பின்நிற்கக் கூடாது. மக்கள் தங்களுக்குள் அரசியல், சாதி, இன, மத பிரதேசவாதங்களால் பிளவுபட்டு நிற்பது மக்களையே பலவீனப்படுத்துகிறது. - என்றார்.

(ற-10, 35)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழி

DELF A1 A2



021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ் மாணவர்களே!**

A/L / தொழிநுட்பவியல் மாணவர்கள்
நீங்களும் British / Srilanka Chartered Engineer ஆகலாம்

APSS International (College of Engineering), City & Guilds (U.K.)
பயிற்சி நெறிகளை No. 4 Clock Tower Lane இல் ஆரம்பிக்கவுள்ளது

Civil Engineering / Quantity Surveying / Electrical and Electronic Telecommunication / Mechanical / Mechatronics

Diploma - Ad Diploma - Grad Diploma
(Level 3) (Level 4&5) (Level 6 = Beng. (Hons))

NVQ Level 4 & 5 மாணவர்கள் City & Guilds Ad. Diploma இற்கு அனுமதிக்கப்படுவர்.
A/L / O/L மாணவர்கள் Level 3 இற்கு அனுமதிக்கப்படுவர்

Prof. K. Chandirabose
SMS / E-mail மூலம் தொடர்பு கொள்ளவும்

T.P: 0773867695
apssengineer@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி மனோகரதாஸ்



நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி மனோகரதாஸ் 22.06.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சிவகுரு மனோகரதாஸின் அன்பு மனைவியும் ரேணுகா, திரிபுரன், நவசுதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, லோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
077 262 2264
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### நவரத்தினம் இராசேந்திரகுமார்

(குஞ்சுத் தம்பி) (சாரதி - யாழ்.மாநகரசபை)

வன்னேரியைப் பிறப்பிடமாகவும், 20/4, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் இராசேந்திரகுமார் (குஞ்சுத்தம்பி) 22.06.2017 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் அகாலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகராசா - வடிவம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயராணியின் ஆருயிர்க் கணவரும், கிருஷாந், கிருஜிகா, யர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகலட்சுமி (லண்டன்), வசந்தகுமார் , சுகிர்தலட்சுமி, விஜயலட்சுமி, சாந்தலட்சுமி (ஜேர்மனி), விஜயகுமார், யசோதா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு சகோதரரும், பத்மராஜா, நவரத்தினராஜா, யோகராணி, ஜெனிதராணி, செல்வராணி, விக்கினேஸ்வரராஜா, ஆனந்தராணி, மஞ்சுளராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2017) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் 20/4, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/4, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.
077 346 3501



பிறப்பு
26
.
02
.
1958

இறப்பு
22
.
06
.
2017

### திருமதி வசந்தகுமாரி பரமானந்தன்

யாழ்.இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும், சுவிஸ் Zurich ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வசந்தகுமாரி பரமானந்தன் 22.06.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பரமானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், கௌசல்யன், செந்தூரன், யதுர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வீரசிங்கம், லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாதினியின் அன்பு மாமியாரும், செல்வராணி, காலஞ்சென்ற ரோகினி, பூமலர்ச்செல்வி, பத்மாவதி, சண்முகேஸ்வரி, கணேசானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2017) திங்கட்கிழமை சுவிஸிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.
தகவல்:
குடும்பத்தினர்.
077 303 2238, 0041 443 622 867

## வருடங்கள் - 5 நீங்கா நினைவுகள்



அமரர் அருணாசலம்
கோபாலரத்தினம்


பிறப்பு
01.01.1933

இறப்பு
21.06.2012
திதி : 25.06.2017

கள்ளமில்லா சிரிப்புடனும்
கனிவான பேச்சுடனும்
நாமெல்லாம் நல்வாழ்வு வாழ
நல்வழி காட்டியவரே
தங்களின் நினைவு என்றும்
எங்களை விட்டு நீங்காது.

88, பருத்தித்துறை வீதி,
நல்லூர் , யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## மரணஅறிவித்தல்



தோற்றம்
04
.
10
.
1949

மறைவு
23
.
06
.
2017

### முத்துவேலு கணேசலிங்கம்

யாழ் புளியங்கூடலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு கணேசலிங்கம் 23.06.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் லீலாவதியின் பாசமிகு கணவரும் இராசலிங்கம், சாரதாமணி காலஞ்சென்ற தேவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கஜானனன் (கஜன் - பிரான்ஸ்), கஜானனி(சாயிதா - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபா, தயாளன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானா (அதிசயா) வின்அன்புப் பேரனும் இராசாம்பாள், சதாசிவம், சசிமாலா, புஸ்பராணி காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சிவபாதம், சந்திரமதி, சாரதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது புளியங்கூடல் இல்லத்தில் இன்று (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணி வரைக்கும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைக்காக கனடாவிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
[illegible]
தகவல்:
குடும்பத்தினர்.
077 060 3244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி முடித்து நாடு திரும்பின இந்தியக் கடற்படை விமானங்கள்

கொழும்பு, ஜூன் 25

இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படையினருக்குப் பயிற்சிகளை அளிப்பதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்த இந்தியக் கடற்படையின் டோனியர் விமானங்கள், பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளன.

இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இந்தியக் கடற்படையின் இரண்டு டோனியர் கண்காணிப்பு விமானங்கள் கடந்த 19ஆம் திகதி, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தன.

இந்த விமானங்கள், இலங்கையின் சிறப்புப் பொருளாதார வலயத்துக்கு உட்பட்ட மேற்கு மற்றும் தென்மேற்குக் கடற்பகுதியில், இலங்கைப் படையினருடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டிருந்தன.

இலங்கைக் கடற்படையின் ஏழு வான் கண்காணிப்பாளர்கள் மற்றும் இலங்கை விமானப் படையின் கண்காணிப்பாளர்களுக்கு டோனியர் விமானத்தில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்தப் பயிற்சிகள் கடந்த வியாழக்கிழமை நிறைவடைந்ததை அடுத்து, இந்தியக் கடற்படை விமானங்கள் திரும்பிச் சென்றுள்ளன.

இலங்கையில் இந்தியக் கடற்படையின் டோனியர் விமானங்கள் பயிற்சிகளை அளிப்பதற்காக வந்திருந்தமை இதுவே முதல்முறையாகும். (த)

## தகவல் அறியும் உரிமை சட்டத்துக்கு ஒருவருடம்

கொழும்பு, ஜூன் 25

தகவல் அறியும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளது.

இந்தச் சட்டம் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

தகவல் அறியும் திருத்தச்சட்ட வரைவு தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் கடந்த வருடம் ஜூன் மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெற்றன.

திருத்தச் சட்டவரைவு திருத்தங்களுடன் வாக்களிப்பின்றி ஜூன் மாதம் 24ஆம் திகதி ஏகமனதாக நாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி தக வல் அறியும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## மலையகத்தில் கடும் மழை

கொழும்பு, ஜூன் 25

மத்திய மலையகப் பிரதேசங்களில் நேற்று முன் தினம் இரவு முதல் அடைமழை பெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழையுடன் ஓரளவு கடும் காற்று வீசுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதனால் மத்திய மலையகப் பகுதிகளில் இடைக்கிடையே மின்சாரம் தடைப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஹற்றன் நுவரெலியா வீதி மற்றும் ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் பல இடங்களில் பனி மூட்டம் காணப்படுவதால் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் காலை நேரங்களில் குறித்த வீதிகளில் பயண நடவடிக்கைகளுக்கு தடை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

BBC For a Brilliant Future
British BUSINESS COLLEGE Where Students Come First
BBC For a Brilliant Future

## EARLY LEARNING SCHOOL

**"பட்டம் விடுவோம்**
**பட்டம் விடுவோம்**
**பாலா ஓடி வா"**

**இன்று (25.06.2017)**
**பிற்பகல் அனைவரையும்**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

Happy Father's Day

பிரிட்டிஸ் பிஸினஸ் கொலிஜ் தனது அனைத்துப் பாடசாலைக் கிளைகளின் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் யாழ் குடாநாட்டு மக்களுடனும் இணைந்து நடத்தும் மாபெரும் பட்டம் விடும் போட்டியுடன் இன்னும் பல போட்டிகளும் கொண்டாட்டங்களும்.

**இடம் : மாநகரசபை விளையாட்டு மைதானம்**
**காலம் : 25.06.2017 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : மாலை 2.00 மணிமுதல்**

### BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் | நீர்வேலி |
|---|---|---|---|
| இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | இல.625, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. | பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி, நீர்வேலி. |
| **மானிப்பாய் 1** | **மானிப்பாய் 2** | **சுன்னாகம் 1** | **சுன்னாகம் 2** |
| இல. 252, யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி, (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல.142,K.K.S வீதி, சுன்னாகம், (NSB வங்கி முன்பாக) |
| **வடமராட்சி** | **சாவகச்சேரி** | **சங்கானை** | **புத்தூர்** |
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பொன்னாலை வீதி, பிரதான வீதி, சங்கானை. | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

**BRITISH BUSINESS COLLEGE** இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 077 362 7055, 077 468 2951**

### விற்பனைக்கு உண்டு

கன்ரெனர் பெட்டி விற்பனைக்கு.
(அலுவலக உபயோகம்
களஞ்சியப்படுத்தல்)
**077 959 7231**

### அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் பலாலி வீதியில் மாணவர்களுக்கான (ஆண்கள் மட்டும்) அறைகள் வாடகைக்கு உண்டு.
**076 431 5824**

### தேவை

NEW LION
DETECTIVE SECRURITY
சேவைக்கு பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள் தேவை.
14,K.Cyril.C.Perera Mawatha,Colombo -13
**077 113 1949, 077 029 3256**

### மணமகள் தேவை

யாழ்.இந்து, 1980 ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம், கிரகபாவம் 33½, செவ்வாய்க்(4)குற்றமற்ற அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்குத் தொழில்புரியும் அழகிய மணமகள் தேவை.
**077 350 6244**


### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, துறைமுகம், சந்தைக்கு மிக அருகில் பீச்றோட்டில் நல்ல தண்ணீர் கிணறு 2, அத்திவாரமும் 02 உள்ள 03 பரப்பு காணி பகுதியாகவோ, முழுமையாகவோ விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு.0779685566

### வீடு வாடகைக்கு தேவை

ஓய்வுபெற்ற அரச ஊழியருக்கு 3 அங்கத்தவர் கொண்ட கௌரவ குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உடனடியாக தேவை. (தரகர் தேவையில்லை)
**077 517 8727, 077 242 3400, 077 887 1217**

## மரண அறிவித்தல்



### பூதத்தம்பி சிவதரன் (சிவா)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி துணுக்காயை வாழ்விடமாகவும் தற்போது முதலி கோயில் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூதத்தம்பி சிவதரன் (சிவா) கடந்த (23.06.2017) இரவு அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவி த்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று க்கொள்ளவும்.

தகவல்
**திருமதி சி. பாலகௌரி**(மனைவி)
**ப. பகீரதன்** (உடன் பிறவாசகோதரன்)
முதலி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு.

## அருந்ததி
இணைய திருமண சேவை

Arunthathee Online Matrimony
simplifying your marriage

### மணமகன் விபரம்

**3858 | வே | 1976**
உடுவில் | 175 cm | கி.பா: 22 | இந்து
Senior Management Assistant |
இலங்கை | திருவாதிரை (மிதுனம்)
சூ +செ:11 : 11

**7678 | வே | 1976**
சித்தங்கேணி | 195 cm | சூ +செ:12
IT Officer | இலங்கை | கி.பா: 50
உத்தரம் (கன்னி)

**7798 | வே | 1981**
யாழ்ப்பாணம் | 165 cm | இந்து
Administrator | கனடா | சூ + செ: 04
சித்திரை (துலாம்) |

**5379 | வே | 1981**
உடுப்பிட்டி | 167 cm | இந்து
Accountant | இலங்கை | சூ + செ: 12
புணர்பூசம் (மிதுனம்) | கி.பா: 14

**7771 | வே | 1983**
ஏராளை | 174 cm | இந்து
Hotel Servant | இலண்டன் | சூ +செ: 03
உத்தரம் (கன்னி) | கி.பா: 18

**8102 | வே | 1983**
வேலணை | 178cm | இந்து | கி.பா: 30
Managing Director | ஜேர்மனி
சித்திரை (துலாம்) | சூ +செ: 01

**5385 | வே | 1985**
சாவகச்சேரி | 177cm | இந்து | கி.பா: 02
Development Officer | இலங்கை
திருவோணம் (மகரம்) | சூ + செ: 03

**7561 | வே | 1985**
வரணி | 163 cm | இந்து
Distribution center officer | சூ +செ:03
அவுஸ்திரேலியா | பூசம் (சிம்மம்)

**7774 | வே | 1987**
வசாவிளான் | 167 cm | இந்து
Accountant | மலேசியா | சூ +செ:09
சித்திரை (கன்னி) | கி.பா: 32

**6554 | வே | 1985**
அல்வாய் | 165cm | இந்து | சூ +செ:06
Senior QA Engineer | இலங்கை
உத்திரட்டாதி (மீனம்) | கி.பா: 13

**4603 | வே | 1983**
யாழ்நகரம் | 165 cm | இந்து சூ +செ:03
Assistant Manager | இலங்கை
அனுஷம் (விருச்சிகம்) | கி.பா: 29

**7687 | வே | 1983**
சுழிபுரம் | 167 cm | இந்து
Account Assistant | இலங்கை
ரோகிணி (ரிஷபம்) | சூ + செ: 09

**6912 | வே | 1978**
கந்தர்மடம் | 161cm | இந்து | சூ + செ: 11
Creative Director | அவுஸ்திரேலியா
சுவாதி (துலாம்) | கி.பா: 28

**3837 | வே | 1985**
சித்தங்கேணி | 172cm | இந்து
Engineering Assistant | இலங்கை
பூராடம் (தனுசு) | கி.பா: 61 | சூ + செ: 09

### மணமகள் விபரம்

**3831 | வே | 1981**
காரைநகர் | 162 cm | இந்து
Tecacher | இலங்கை | சூ +செ:09
சித்திரை (துலாம்) | கி.பா: 16

**3703 | வே | 1989**
மாவிட்டப்புரம் | 162 cm | இந்து
Accountant | இலங்கை | சூ +செ:01
சதயம் (கும்பம்) | கி.பா: 72

**4416 | வே | 1976**
சண்டிலிப்பாய் | 167 cm | இந்து
Senior Software Engineer | இலங்கை
சதயம் (கும்பம்) | கி.பா:47 | சூ + செ; 08

**3735 | வே | 1987**
சாவகச்சேரி | 162 cm | இந்து
IT Teacher | இலங்கை | சூ + செ: 12
மிருகசீரிடம் (மதுனம்) | கி.பா: 32

**7361 | வே | 1991**
கொழும்பு | 164 cm | இந்து
Customer Relations Officer | இலங்கை
மூலம் (தனுசு) | கி.பா: 18 | சூ + செ: 09

**5932 | வே | 1985**
திருநெல்வேலி | 157 cm | இந்து
Doctor | இலங்கை | சூ + செ: 09
மகம் (சிம்மம்) | கி.பா: 27

**3465 | வே | 1989**
மூளாய் | 162cm | இந்து | சூ + செ: 12
Software Engineer | இலங்கை
உத்தரம் (கன்னி) | கி.பா: 27 | சைவம்

**5539 | வே | 1981**
காரைநகர் | 170 cm | இந்து
CIMA | இலங்கை | சூ +செ: 05
பூசம் (கடகம்) | கி.பா: 38

**5996 | வே | 1987**
நல்லூர் | 157 cm | இந்து
WP Manager | இலங்கை | சூ +செ: 08
அஷ்வினி (மேடம்) | கி.பா: 71

**3735 | வே | 1987**
சாவகச்சேரி | 165 cm | இந்து
IT Teacher | இலங்கை | சூ +செ: 12
மிருகசீரிடம் (மிதுனம்) | கி.பா: 32

**7077 | வே | 1979**
யாழ்நகரம் | 161 cm | இந்து
Accountant | இலங்கை- | சூ +செ: 07
ரேவதி (மீனம்) | கி.பா: 46

**6825 | வே | 1985**
நல்லூர் | 158 cm | இந்து
இலங்கை | சூ +செ: 01
பரணி (மேடம்) | கி.பா: 52

**5189 | வே | 1985**
சில்லாலை | 162 cm | இந்து
AG Officer | இலங்கை | சூ + செ: 12
பூரம் (சிம்மம்) | கி.பா: 19

**3777 | வே | 1978**
சித்தங்கேணி | 170 cm | இந்து
Accountant | டென்மார்க் | சூ + செ: 06
மிருகசீரிடம் (மிதுனம்) | கி.பா: 02

480/2C, காலி வீதி, வெள்ளவத்தை
011 40 63 282

20, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 49 27 527

www.arunthathee.com
info@arunthathee.com

0777 16 45 24
Viber, Whatsapp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு கையாளும் நிலைய கழிவு நீர் திறந்த வெளியில்

*வர்த்தகர்களுக்கு 24 ஆயிரம் தண்டம்*

தென்மராட்சி, ஜூன் 25
உணவுகையாளும் நிலையங்களின் கழிவு நீரை சூழல் மாசடையக் கூடியதாகத் திறந்த வெளியில் விட்டிருந்த வர்த்தகர்கள் இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று 24 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள உணவுகையாளும்நிலையங்களில் பரிசோதனை நடத்தியபோது இந்த நிலையை அவதானிக்க முடிந்தது.
அங்குள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமல்கழிவுநீரால்உணவுமாசடையக்கூடியதாகக் காணப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.
இந்த வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்களை எச்சரித்த நீதிவான் ஒரு வர்த்தகருக்கு 16 ஆயிரம் ரூபாவும் மற்றைய வர்த்தகருக்கு8ஆயிரம்ரூபாவும்தண்டமாக விதித்து உத்தரவிட்டார்.
இதுதவிர, வெதுப்பக உணவுப் பொருள்களை சுகாதாரமற்ற முறையில் வைத்திருந்ததுடன் அவற்றைக் கையால் எடுத்து விநியோகித்த முச்சக்கர வண்டிச் சாரதிக்கு நீதிவான்5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (4-9)

## பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சிறப்புப் பூசைகள், அபிஷேகம் இடம்பெற்று நாகநாதசுவாமி பொங்கல் உற்சவம் இடம்பெறும். தொடர்ந்து 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சதுர்த்தி விரத பூசை நடைபெறும்.
28ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை நடைபெறும்.
29ஆம் திகதி வியாழக்கிழமை ஆனி உத்தரத்தை முன்னிட்டு மாலை 5 மணிக்கு பூசைகள் நடைபெற்று திருமஞ்சத்தில் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும். மறுநாள் அதிகாலை ஆனி உத்தர தரிசனமும், தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (த-17)

## உரும்பிராயில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 25
தேசிய இனப் பிரச்சினையும் சமூக முரண்பாடும் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் உரும்பிராய் வடக்கு சரஸ்வதி கலையரங்கத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு இடம்பெறும்.
தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் என். இன்பம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமூக ஆய்வாளரும் கவிஞருமான வி.ஜெகநாதனும் (நக்கீரன்)அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.ஜோதிலிங்கமும் கருத்துரை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு திறன்விருத்திக்கான வதிவிடப் பயிற்சிகள்

*தென்மராட்சியில் இன்று ஆரம்பம்*

தென்மராட்சி, ஜூன் 24
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கான 'நல்லவண்ணம் வாழ்ந்திடுவோம்' எனும் வாழ்க்கைத் தேர்ச்சி திறன் விருத்திக்கான மூன்று நாள் வதிவிடப் பயிற்சிகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன.
இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மேலும் தெரிவித்ததாவது:
வேள்ட்விஷன் லங்கா நிறுவன அனுசரணையுடன் வலய வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலுக்குமான அலகினால் வதிவிடப் பயிற்சி நடத்தப்படுகிறது. வலயத்திலுள்ள 20 பாடசாலைகளில் இயங்கும் மாணவர் நாடாளுமன்றங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 130 மாணவர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர். மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு தியானப் பயிற்சி, சூரிய நமஸ்காரப்பயிற்சி, உடற்பயிற்சி, வாழ்க்கைத்தேர்ச்சி தொடர்பான உளஆற்றுகைகளுக்கமைய நாடக ஆற்றுகைத்திறன் பயிற்சி போன்றவை வழங்கப்படவுள்ளன.
இதற்கென கொழும்பிலிருந்து சிறப்பு வளவாளர்கள் வந்துள்ளனர்.பல்கலைக்கழக நாடக ஆற்றுகைக் குழுவினராலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
யாழ்ப்பாண மன வளக்கலைப் பயிற்சி மையத்தினரால் தினமும் காலை 5.30 தொடக்கம் 6.30 வரை யோகா பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இறுதி நாள் நிகழ்வுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெறும்.
இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்களின் பெற்றோர்களும் பார்வையாளர்களாக அழைக்கப்படவுள்ளனர்." என்றார்.
கடந்த வருடமும் 13 பாடசாலைகளின் மாணவர்நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு 'வெற்றிகளை வென்றிடுவோம்' என்னும் வதிவிடப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (4-21-9)

## போதை எதிர்ப்பு தினம் வடமராட்சியில் நாளை

வடமராட்சி, ஜூன் 25
பன்னாட்டு போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினர் நாளை திங்கட்கிழமை நடத்தவுள்ளனர்.
இந்தநிகழ்வு "போதைப்பொருள் பாவனை பற்றி வினாத் தொடுப்போம் அறிவைப் பெறுவோம்" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நிகழ்ச்சியாகதுண்டுஅறிக்கைகள் விநியோகமும கருததுரைகளும் இடம்பெறும.
வல்வெட்டித்துறை பேருந்து நிலையத்தில் முற்பகல 9.30 தொடக்கமும், நெல்லியடி பேருந்து நிலையத்தில் முற்பகல் 10.30 தொடக்கமும், பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் முற்பகல் 11.30 தொடக்கமும். விழிப்புணர்வு வழங்கவுள்ளனா என்று நல்லொழுக்க நிறுவன செயலாளர் க.ஆ.குலநாதன் தெரிவித்துள்ளார். (4-173)

## எழுதுமட்டுவாழில் நிர்மாணித்த கூட்டுறவுச் சங்கம் இன்று திறப்பு

தென்மராட்சி, ஜூன் 25
எழுதுமட்டுவாழில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கட்டடம இன்று ஞர்யிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்பட வுள்ளது.
மாகாண பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடம் சங்கத் தலைவர் செ.அமரசிங்கம் தலைமையில் நடைபெறும்.
தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாட்டச செயலாளர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு கட்டடத்தைத திறந்துவைப்பார்.
தென்மராட்சி பிரதேச செயலா திருமதி தே.பாபு, யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு உதவிஆணையாளர்பொ.மோகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வா. கிளைக்கட்டடம அமைககக் காணியை அன்பளிப்பாக வழங்கிய சிவயோகலிங்கம கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார். (4-9)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தேவராசா



அளவெட்டி வடக்கு முருக்கடியைப பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு விசவிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தேவராசா 23.06.2017 வெள்ளிக் கிழமை இறைபதம் எய்திவிட்டார்.
அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கனகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனி, விக்கினராசா, பார்த்தீபன், நிசான் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் செல்வராசா, தீபா, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நடராஜா மற்றும் சரஸ்வதி, மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் மகேஸ்வரன், கணேஸ்வரன், பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் அபிராமி, அஸ்வினி, அஸ்விதா, சுவாதிகா, காவியா சேயோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2017) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இலத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்,
குடும்பத்தினர்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2894 திகதி 24.06.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 26 43 51 52 M
போனஸ் இல: 14
திங்கட் கிழமை ஜக்பொட்: 68,076,852/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 667
சீட்டிழுப்பு திகதி 24.06.2017 சனிக்கிழமை
H 22 51 57 70
சுப்பர் ஜக்பொட் ரூ. 49,863,852/=
வெல்லப்படவில்லை

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 51
சீட்டிழுப்பு திகதி 24.06.2017 சனிக்கிழமை
Development Fortune
வெற்றி இலக்கங்கள்: 28 54 56 61
சுப்பர் இலக்கம்: 01
அதிர்ஷ்ட மாதம்: பெப்.
ரூ. 13,033,446/=
ரூ. 31,46,582/=
ரூ. 1,000,000/=
29.06.2017
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

பனர் பிறிண்டிங், கலர் பிறிண்டிங்
எந்த நேரத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு - 077 165 9845

WIN Repair
சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/Cகளும் வீடுகளுக்கு வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648 942

வேலையாள்கள் தேவை
கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு - 077 159 5826

தேவை
1) SALES REP
2) STORE KEEPER (மருத்துவ உபகரணம்)
தகைமை:
ஆங்கிலம் வாசிக்க, எழுத தெரிந்திருக்க வேண்டும்.
ஆண்கள் மட்டும் அழையுங்கள்
தொ.பே.எண்: 0777 033 494

காணி விற்பனைக்கு
வயாவிளான் கிழக்கு பிரிவில் கலப்பனாவுடை எனும் பெயருடைய கற்காணி 26 பரப்பு விற்பனைக்குண்டு. போக்குவரத்து, மின்சார வசதி உண்டு.
தொ.பே.எண்: 071 856 2098

வீடு விற்பனைக்கு
யாழ். வீதி மானிப்பாயில் வீட்டுடன் கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 2799 670

பெயர் மாற்றம்
மல்லாகத்தை வசிப்பிடமாக கொண்ட நாகமணி சுரேஸ் ஆகிய நான் எனது மகனுடைய சு. கவிநயன் எனும் பெயரை சு. கவிநீஷான் என்று இன்று முதல் பெயர்மாற்றம் செய்கின்றேன்.
நாகமணி சுரேஸ்

காணி விற்பனைக்கு
சங்குவேலி தெற்கு, மானிப்பாயில் 7 ½ பரப்பு சதுரக்காணி, கிணறு மற்றும் பயன்தரு மரங்களுடன் பரப்பு 3½ இலட்சம் பேசித் தீர்மானிக்கலாம். இரு பகுதிகளாகவும் பிரித்து வாங்கலாம்.
077 810 5102/ 077 371 8768

வேலையாள்கள் தேவை
✓மேசன்
✓வயரிங் வேலை
✓கிறைண்டர், றில்லர் திருத்த தெரிந்தவர்கள
✓அலுவலக பராமரிப்பாளர்கள் (பெண்) தேவை
076 310 1597

புவியியல் தகவல் ஒழுங்கு (GIS) புவிசார் இடமறியும் முறைமை (GPS) கற்கை நெறிகள் செய்முறைப்பயிற்சியுடன் விரிவுரைகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு -
HUBS IIMS
461, K.K.S. Road, Sivalingapuliyady, Jaffna. 077 165 9845

வடிவமைப்பாளர்கள் தேவை
CorelDraw (கோரல்றோ), Photoshop (போட்டோ சொப்) போன்றவற்றில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
அச்சுத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 165 9845

வேலை வாய்ப்பு
1) தாதியர் பயிற்சி பெற்றவர்
2)தாதிப் பயிற்சி பெற விரும்புபவர்களும். வெளி மாவட்டத்தவர்க்கு தங்குமிட வசதியுண்டு.
தொடர்பு - 077 8730 129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களை ஏற்றி இறக்கவே உதயதாரகை பொருத்தமானது

## நெடுந்தீவு கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 22

"நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு ரூபா 70 இலட்சம் செலவில் உதயதாரகை படகு தரப்பட்டது.

இந்தப் படகு பயணிகள் போக்குவரத்துக்கு உகந்ததல்ல. பொருள்களை ஏற்றி இறக்கவே பொருத்தமானது.

இவ்வாறு நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளர் தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு ரூபா 70 இலட்சம் நிதியில் படகு உருவாக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. அந்தப்படகு எவ்விதத்திலும் பயன்படுத்தப்படாது தரித்து நிற்கின்றது.

குறித்த படகில் சில பழுதுகள் இருப்பதாகத் தெரிவித்து அண்மையில் நீர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து திருத்த வேலைகள் நடைபெற்றன. மீண்டும் நெடுந்தீவுக்கு வந்த படகு எவ்வித பாவனைக்கும் பயன்படுத்தாமல் தரித்து நிற்கின்றது.

நெடுந்தீவுக்கு கடல்வழிப் போக்குவரத்தே ஒரேயொரு வழி. இந்த நிலையில் நெடுந்தீவிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் படகுகள் பல சமயங்களில் பழுதடைவதனால் போக்குவரத்து வசதிகளின்றி தமது பிரதேச மக்கள் தொடர்ச்சியாக அவதிப்பட்டு வருகின்றனர்.

இத்தனை இலட்சம் ரூபா செலவழித்து படகைப் பெற்றுக்கொண்டும் எவ்வித பயன்பாடுமில்லை என்றால் ஏன் அவர்கள் இந்தப் படகை வைத்திருக்கின்றனர்? அதனை பொது மக்களின் பாவனைக்கு உபயோகப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று நெடுந்தீவு பிரதேச கிராம அமைப்புக்களும் பயணத்துக்காகக் காத்திருப்பவர்களும் கோருகின்றனர்.

எமது சங்கத்துக்கு சமுத்திரா தேவி என்ற படகும் சேவையில் ஈடுபடுகின்றது. சமுத்திராதேவியிலேயே எமது விற்பனைக்கான பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன. உதய தாரகைப் படகு சீமெந்து மூட்டைகளுடன் கடற்கரையில் தரித்து நின்றமையால் படகு மூழ்கியது. இதனால் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்ய நீர்கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டு ரூபா 5 இலட்சம் செலவில் திருத்த வேலைகள் இடம்பெற்றன.

குறித்த படகை கனியவளங்களை ஏற்றி இறக்குவதற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளோம்" என்று நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார்.

(4-8)

# கிராம அலுவலரை தாக்கியவருக்குத் தண்டனை

## ரூ.35 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் 9 மாதங்கள் ஒத்திவைத்தசிறைத் தண்டனை

தென்மராட்சி, ஜூன் 25

கிராம அலுவலரைத் தாக்கி, அவரிடமிருந்த கைபேசியைச் சேதமாக்கியதுடன், அவரை கடமை செய்யவிடாது இடையூறு விளைவித்தவருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைத்த 9 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கி சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

மேலும் குற்றவாளி பாதிக்கப்பட்ட கிராம அலுவலருக்கு 35 ஆயிரம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றும் நீதிமன்று கட்டளையிட்டது.

அல்லாரையில் கடந்த சித்திரைப்புத்தாண்டன்று தொடர்ந்து 3 நாள்கள் ஒலிபெருக்கியில் பாடல்களை ஒலிக்க விட்டமை தொடர்பாக அல்லாரைப் பிரிவு மக்கள்கிராமஅலுவலருக்குமுறையிட்டனர். குறித்த பிரிவில் உள்ள வீட்டுக்குச் சென்ற கிராம அலுவலர் பாடல் ஒலிபரப்புவதை நிறுத்துமாறு கூறியுள்ளார். அவ்வேளையில் அங்கு நின்ற ஏனைய பிரிவைச் சேர்ந்த நால்வர் கிராம அலுவலரைத் தாக்கியதுடன் அவரிடமிருந்த அலைபேசியைப் பறித்து உடைத்துள்ளனர்.

கிராம அலுவலர் கொடிகாமம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். கிராம அலுவலர் தாக்கப்பட்மை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் கொடிகாமம் பொலிஸார் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாததால் கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் பிரதேச செயலகத்தில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தமது பிரிவுகளுக்குக் கடமைக்குச் செல்லாமல் பிரதேச செயலகத்தில் கடமையாற்றினர். அவ்வேளையில் சம்பவத்தில் ஈடுபடாத 16 வயதுச் சிறுவனைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக பிரதேச செயலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. அதற்குப் பிரதேச செயலக கிராம அலுவலர்கள் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யும்வரை தமது அலுவலகத்துக்குச் செல்வதில்லையென விடாப்பிடியாக நின்றனர்.

அதன்பின்னர் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்று அடையாள அணிவகுப்பு நடத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டது. அடையாள அணிவகுப்பின் போது கிராம அலுவலர் இருவரை அடையாளம் காட்டியிருந்தார். விளக்கமறியலில் இருந்த குறித்த 5 பேரும் தலா 50 ஆயிரம்ரூபாபெறுமதியான பிணையில்செல்லஅனுமதிக்கப்பட்டனர். வழக்கு கடந்த புதன்கிழமை தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்ட விரோதமாக கூட்டம் கூடியமை, அரச பணியாளரைத் தாக்கிகாயப்படுத்தியமை, கடமைசெய்யவிடாமல் தடுத்தமை, அவரது 35 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியை உடைத்து சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் 5 பேருக்கும் எதிராகச் சுமத்தப்பட்டன.

அரச பணியாளரைத் தாக்கியமை தொடர்பாக கிராம அலுவலரின்கோரிக்கைக்குஇணங்க எதிரிகள் நீதிமன்றில் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதையடுத்து அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஏனைய மூன்று வழக்குகளுக்கு அரச பணியாளரை கடமை செய்யவிடாமல் தடுப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதால் தலா 3 மாதங்கள் வீதம் 9 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து சிறைத்தண்டனையை 5 வருடங்களுக்குஒத்திவைத்ததுமன்று. அத்துடன் உடைக்கப்பட்ட அலைபேசியின்பெறுமதித்தொகையை இழப்பீடாகச் செலுத்த வேண்டுமெனவும் நீதிமன்று உத்தரவிட்டது.

(4-9)

# அடிதடியில் ஈடுபட்ட இருவருக்குத் தண்டனை

## பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 7 லட்சம் இழப்பீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

நபர் ஒருவரின் முகத்தில் இரும்புக் கம்பியால் தாக்கிப் படுகாயம் விளைவித்த இருவரும், 7 இலட்சம் ரூபாவை காயப்பட்டவருக்கு இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்று உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கோண்டாவில் உப்புமடம் பகுதியில் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி இரவுவேளை கோப்பாய் பகுதியைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் மூவர் அடங்கிய இளைஞர் குழுவினால் இரும்புக் கம்பியினால் முகத்தில் தாக்கப்பட்டார். படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கோண்டாவில், கோப்பாய் மற்றும் தாவடிப் பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பணக் கொடுக்கல் வாங்கல் காரணமாக முன்னர் ஏற்பட்டிருந்த பிணக்கே தாக்குதலுக்குக் காரணமென்றும் காயமடைந்தவரை அவரது வீட்டுக்குச் சென்று அழைத்துவந்த மூவரும் அவருடன் சேர்ந்து மது அருந்திய பின்னர் அவரை இரும்புக் கம்பியால் தாக்கியதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்தது.

தாக்கியவர்கள் நீதி மன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். மூவரில் ஒருவர் நீதிமன்றுக்கு கடந்த தவணைகளில் சமுகமளிக்கவில்லை. ஏனைய இருவரும் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.

இந்த வழக்கு சில நாள்களுக்கு முன்னர் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலை யில் விசாரணைக்கு வந்தது. தீர்ப்பளித்த நீதிவான்,

தாக்குதல் நடத்திய இருவரும் தண்டமாக 3 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு இழப்பீடாக 7 இலட்சம் ரூபாவை செலுத்துமாறும் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் நீதி மன்றுக்குச் சமுகமளிக்காமல் தலைமறைவாகியுள்ளவருக்குப் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(4-103)

# வடக்கு மாகாணத்தில் வாகன வரிப் பத்திரத்துக்கு இணைய முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலத்திரனியல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் https://www.gov.lk. என்ற இணையத்தள முகவரியின் ஊடாக அதன் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ள முடியும். வரி உள்ளிட்ட பணம் செலுத்த வேண்டும். இதன் மூலமாக 14 நாள்கள் வலிதான தற்காலிக வாகன வரி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். பின்னர் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வாகனம் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு மூலப்பிரதி 14 நாள்களுக்குள் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படும் என்று மாகாண போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

(4)

# மன்னார் வளைகுடாவில் அதிக நிறையுடைய மீன்கள்

## பிடிபடுவதாகக் கூறுகின்றனர் இந்திய மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மன்னார் வளைகுடா கடற்பரப்பில் அதிக நிறையுடைய மீன்களின் பிடிபாடு தற்போதைய நாள்களில் அதிகரித்துள்ளதாக இந்திய மீனவர்கள் கூறியுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைக் கடற்படையினரின் அச்சுறுத்தல்கள், 'பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்பு போன்றவற்றால் மீன்வளம் குறைந்து, மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வறுமையில் தவிக்கும் நிலை கடந்த சில ஆண்டுகளாக இருந்து வருகிறது. மீன்வளத்தைப் பெருக்கும் வகையில் ஆண்டு தோறும் 45 நாள்கள் மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுவருகிறது.

சென்னை தொடக்கம் குமரி வரையிலான [illegible] 15 ஆம் [illegible] இந்தத் தடைக்காலம் இந்த ஆண்டு 61 நாள்களாக நீடிக்கப்பட்டது. 61 நாள்கள் மீன்பிடி தடைக்காலத்தின் பயனாக தென் கடல் பகுதியில் மீன்கள் அபரிமிதமாக வளர்ந்துள்ளன. ஆழ்கடல் பகுதியான மன்னார் வளைகுடா பகுதியில் வாளைமீன், தடியன், மாவுலா, குமுலா, கணவாய், சீலா என நூற்று க் கும் மேற்பட்ட வகையிலான மீன்கள் பெருமளவு பெருகியுள்ளன. நேற்று (நேற்றுமுன்தினம்) தென்கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்புக்குச் சென்ற மீனவர்களின் வலைகளில் [illegible] கொண்ட ஓட்டுக்கணவாய் மீ[illegible]ள் சிக்கியுள்ளன. கல்சிய சத்து கொண்ட இந்த வகை மீன்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிகளவு கிராக்கி இருக்கும். ஐரோப்பிய நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய இந்தக் கணவாய் மீன்களை ஏற்றுமதி நிறுவனங்கள் கொள்முதல் செய்தனர். என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.



(4-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுமொத்த கல்விச் சமூகத்தையும் விசாரணைக் குழு அவமதித்துவிட்டது

*வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி, அதிகார முறைகேடு, பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்த விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கல்வி அமைச்சர் த.குருகுலராசா முதலமைச்சருக்கு முன்வைத்த தன்னிலை விளக்க அறிக்கையின் நிறைவுப்பகுதி.*

நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டியின் பிரகாரம் கல்வி வலயங்களில் நடாத்தப்பட்ட ஆசிரியர் மாநாட்டின் விவரம் பின்வருமாறு:

| வலயம் | வலயங்களில் ஆசிரியர்களின் எண்ணிக்கை | சுற்றறிக்கையின் படி ஆகக் கூடியதாக மாநாட்டில் பங்குபற்றக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்டிருக்க வேண்டிய ஆசிரிய மாநாட்டின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட ஆசிரிய மாநாட்டின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2920 | 500 | 6 | 1 |
| வலிகாமம் | 2240 | 500 | 5 | 1 |
| தென்மராட்சி | 887 | 500 | 2 | 1 |
| வடமராட்சி | 1461 | 500 | 3 | 1 |
| தீவகம் | 718 | 500 | 2 | 1 |
| கிளிநொச்சி | 1818 | 500 | 4 | 1 |
| முல்லைத்தீவு | 1006 | 500 | 2 | 1 |
| துணுக்காய் | 474 | 500 | 1 | 1 |
| வவுனியா வடக்கு | 679 | 500 | 2 | 1 |
| வவுனியா தெற்கு | 1544 | 500 | 3 | 1 |
| மன்னார் | 1123 | 500 | 3 | 1 |
| மடு | 454 | 500 | 1 | 1 |
| மொத்தம் | | | 34 | 12 |

நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 34 ஆசிரிய மாநாடு நடாத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனைய தேவைகளின் நிதி ஒதுக்கீட்டு முக்கியத்துவம் கருதி 12 ஆசிரிய மாநாடுகள் மட்டுமே எம்மால் நடாத்தப்பட்டது.

## இறுக்கமான சிக்கனமான நிதிப் பயன்பாடு

உண்மையில் சுற்றறிக்கையின் பிரகாரம் எம்மால் மாநாடு நடத்தப்பட்டிருந்தால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 80 மில்லியன் ரூபாவும் போதாமல் இருந்திருக்கும். ஆனால் 23.5 மில்லியன் ரூபாய் நிதியை மிகவும் சிக்கனமானதும் இறுக்கமானதுமான முறையில் செலவு செய்து வெற்றிகரமாக ஆசிரியர் மாநாட்டை 12 வலயங்களில் 12 நிகழ்வுகளுடன் நடாத்தி முடிந்திருந்தோம்.

30 வருட காலமாக போரால் பாதிக்கப்பட்டு அடிமட்டத்திலும் பார்க்க கீழ் நிலைக்கு வீழ்த்தப்பட்ட ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அதிகளவு நிதி தேவைப்படுகிறது. அந்த நியாயதிக்க அடிப்படையில் மாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மிகுதியை அத்தியாவசிய தளபாடம் மற்றும் கட்டுமானங்களுக்கு பயன்படுத்தியிருந்தோம்.

இதிலிருந்து ஆசிரிய மாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அறிக்கையில் குறிப்பிட்டவாறு சரியாக திட்டமிட்டு பயன்படுத்தப்படவில்லை வீண்விரயம் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டு ஏற்க முடியாத ஒன்று என்பதுடன், சரியான முறையில் ஆய்வை மேற்கொள்ளாத ஒரு அறிக்கையாகவே நாம் கருதுகிறோம். இந்த விடயங்கள் அடங்கிய கோவையை விசாரணையின் போது சமர்ப்பித்திருந்தும் இந்த விடயங்களை கவனத்தில் எடுக்காது மீளஅளித்திருந்தமை அறிக்கை சரியான ஆய்வுக்குட்படுத்தி வழங்கப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

## நாடு முழுவதும் நடந்த ஆசிரியர் மாநாட்டை குறை கூறுவதாகவே குழுவின் முடிவுள்ளது

அத்துடன் இந்த ஆசிரிய மாநாடு தனியே வடக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்ட ஒன்றல்ல. இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நடாத்தப்பட்ட ஒரு நிகழ்வாகும். வடக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்டதை மட்டும் வீண் விரயமாக்கப்பட்டதாகக் கூறுவது ஒட்டுமொத்தமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஆசிரிய மாநாடுகளையும் வீண் விரயம் என்று கூறுவதாக அமைவதுடன் நிதி ஆணைக் குழு, கொழும்பு கல்வி அமைச்சு ஆகியவற்றின் மாநாடு தொடர்பான தீர்மானம் தவறென்ற கருத்தையும் வலியுறுத்துவதாகவே அமையும்.

ஆசிரியர்கள் எமது வருங்கால சமுதாயத்துக்கு அத்திவாரமாக இருப்பவர்கள். பாடசாலை நேரத்தில் கற்பிப்பதுடன் மட்டுமல்லாது பாடசாலை நேரத்தின் பின்னரும் விளையாட்டுத்துறை, இணைபாட விதானம், மெல்லக்கற்போர் கற்பித்தல் மேலதிக வகுப்புக்கள் என பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். எமது பிள்ளைகளை கண்காணித்து கல்வி புகட்டுபவர்கள். இந்தப் பணியுடன் சேர்த்து கற்றல் நடவடிக்கைகளை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது. இதனால் தற்போது ஆசிரியப் பணி விரும்பப்படாத ஒரு தொழிலாக கருதப்பட்டு பல பட்டதாரிகள் ஆசிரியத் தொழிலுக்கு வரத் தயங்குகின்றனர். முக்கியமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்ற பட்டதாரிகள் ஆசிரிய தொழிலிலுள்ள நெருக்கடி காரணமாக வேறு தொழிலை நாடிச் செல்கின்றனர்.

இதனைப் போக்கி ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்குடன்தான் இந்த ஆசிரிய மாநாடு கொழும்பு அரசின் கொள்கையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

வருடத்தில் ஒரு முறை ஆசிரியர்கள் ஒன்று கூடி தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிப்பதாக இது அமையும். ஆசிரியர் மாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் குறைக்கப்பட்ட நிதியானது பாடசாலைத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆசிரியர் கதிரை, மேசைகள் மற்றும் பாடசாலை மாணவர் கதிரை, மேசைகள் என்பன பற்றாக்குறையாகக் காணப்பட்டதால், இந்த நிதியைப் பயன்படுத்தி



பின்வரும் தளபாடங்கள் பாடசாலைகள், ஆசிரியவள நிலையம், முறைசாரா கல்விப்பிரிவுக்கான பயிற்சி உபகரணங்கள் என ரூபா 2 கோடியே 4 லட்சத்து 17 ஆயிரத்து 760 பெறுமதியான பொருள்கள் பாடசாலை அலுவலகங்களுக்குமாக விநியோகம் செய்யப்பட்டிருந்தன.

**PSDG Expenditure Details- 2016**

| No | School | Activity | Expenditure |
|---|---|---|---|
| 1 | Teacher centre, Jaffna | Computers 04 Nos | 405,960.00 |
| | | Photocopier 01 | 415,000.00 |
| | | Multimedia Projector 01 | 59,000.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | Camera | 30,500.00 |
| | | | **999,360.00** |
| 2 | Teacher centre, Vadamaradchi | Duplo machine | **250,000.00** |
| 3 | Teacher centre,Thenmaradchi | Desktop Computer 01 | 101,490.00 |
| | | Laptop Computer 01 | 89,500.00 |
| | | Photocopier 02 | 830,000.00 |
| | | Multimedia Projector 01 | 59,000.00 |
| | | Scanner | 9,900.00 |
| | | Desktop Computer 02 | 199,800.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | Ceiling Fan -10 | 44,191.51 |
| | | Water Dispenser-01 | 6,500.00 |
| | | Laminating Machine | 10,000.00 |
| | | | **1,439,281.51** |
| 4 | Teacher Centre-Mannar | Desktop Computer 05 | 507,450.00 |
| | | Desktop Computer 04 | 399,600.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | | **995,950.00** |
| 5 | Teacher Centre-Murunkan | Desktop Computer 05 | 507,450.00 |
| | | Desktop Computer 04 | 399,600.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | | **995,950.00** |
| 6 | Schools,Vavuniya south | Laporatary equipments & chemicals | **1,230,164.75** |
| 7 | ZEO,Vavuniya south | Procurement of Equipment for Non-Formal Center | **1,944,011.46** |
| 8 | Schools Furniture | Teacher's Table - @ 7700 - (500Nos) | 3,850,000.00 |
| | | Teachers Chair (175Nos) | 693,875.00 |
| | | Student Chair Type IV -@ 2200 (600Nos) | 275,000.00 |
| | | Student Table Type IV -@2900 (600Nos) | 362,500.00 |
| | | Student Chair Type III - @2100 (600Nos) | 315,000.00 |
| | | Student Table Type III - @ 2600 (600Nos) | 390,000.00 |
| | | Photocopier,Vavuniya south | 87,690.00 |
| | | Taplet | 525,000.00 |
| | | Air Conditiner-School Works | 823,992.96 |
| | | Air Conditiner- PDE | 385,480.00 |
| | | | **7,708,537.96** |
| 15 | Schools,Mullaitivu | Repair school furniture (students & teacher furniture) Mullaitivu | **2,000,000.00** |
| 16 | Schools,Mannar | Dept.of Industries (Furniture Repair) | 1,700,000.00 |
| | | Other Zone Repairs - Madhu | 300,000.00 |
| | | Repair school furniture (students & teacher furniture) | **2,000,000.00** |
| 17 | Ministry of Education,Jaffna | Public Addressing System | 873,000.00 |
| | | Voice Recorder | 8,900.00 |
| | | Conference Hall Tabe | 574,300.00 |
| | | Confernce Hall Chair | 662,000.00 |
| | | 5s Table | 1,464,140.67 |
| | | Flower Vass | 30,000.00 |
| | | CPU Stand | 86,100.00 |
| | | Medium Back Revolving Chair | 34,320.00 |
| | | Conference Hall works | 1,186,999.00 |
| | | UPS | 8,240.00 |
| | | Sacanner | 9,900.00 |
| | | Flower Vass Cement | 13,600.00 |
| | | Sound system | 8,500.00 |
| | | **Improvement works of Ministry of Education Administrative building** | **4,959,999.67** |
| | | Total | 24,523,255.35 |

மேற்படி விவரத்தின் பிரகாரம் ரூபா.25 மில்லியன் வரையில் பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. பற்றாக்குறையான நிதியைச் சரியான திட்டமிடல் மூலமாக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய ஆசிரிய மாநாட்டை நடத்தியதுடன் மிகுதி நிதியைப் பயன்படுத்தி தேவையான பௌதிக வளங்களுக்கும் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016ஆம் ஆண்டுக்கு மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ரூபா 969 மில்லியன் ஒதுக்கீடு செய்யபட்டிருந்தும் ரூபா 583 மில்லியன் மாத்திரமே 2016ஆம் ஆண்டு கட்டு நிதியாக விடுவிக்கப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டில் மிகுதிக் கொடுப்பனவுக்காக ரூபா 312 மில்லியன் கட்டுநிதி விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே பற்றாக்குறையான நிதியில் சிக்கனமானதும், திட்டமிடப்பட்டதுமான முறையில் நிதி திறமையாகவே பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்தில் எடுத்து பார்க்கும்போது நிதி வீண் விரயம் செய்யப்பட்டது என்பது ஒருபக்கச் சார்பானதும் ஏற்கனவே இவ்வாறான அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதொன்றாகும். அறிக்கையைத் தயாரித்தவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட காலம், வசதிகள் என்பவற்றைப் பயன்படுத்தி சரியான முறையில் ஆய்வைச் செய்திருந்தால் உண்மைத் தன்மை புலப்பட்டிருக்கும். ஆனால் விசாரணைக் குழுவினர் அவ்வாறு செய்யாமல் எழுந்தமானமான அறிக்கையொன்றைத் தயாரித்துள்ளனர்.

கொடுக்கப்படவேண்டும் என தயார் செய்யப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது. இது ஒட்டு மொத்த கல்விச் சமூகத்தையும் அவமதிக்கும் ஒரு செயலாகவே நான் கருதுகிறேன்.

ஆய்வறிக்கைக்காகப் பெருந்தொகை நிதியும் களஆய்வு வசதிகளும் செய்யப்பட்டிருந்தும் எந்த விதமான களஆய்வுகளையும் மேற்கொள்ளாது இந்த அறிக்கை

## முறைப்பாடு 3.8 இற்கான விளக்கம்

3.8 மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் அரச தலைவரின் வருகைக்காக 6 தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.

இந்தக் குற்றச்சாட்டு விசாரணைக் குழுவால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

## முறைப்பாடு 3.9இற்கான விளக்கங்கள்

3.9 கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையைத் தொடருவதற்கு முயற்சிக்கிறமை.

இந்தக் குற்றச்சாட்டு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட குற்றப்பத்திரத்தில் பின்வருமாறு அமைந்திருந்தது.

“கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளின் சேவைக் காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் உடன்பாடு அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை”

விசாரணை அறிக்கை எனது கைக்கு கிடைக்கப் பெறும்வரை குற்றச்சாட்டில் மாற்றம் செய்யப்பட்டமை குறித்து எனக்கு எதுவித அறிவித்தலோ உரிய கால அவகாசமோ வழங்கப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டும் ஏற்கனவே விசாரணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் உண்மைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*(43 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக யோகா தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு



வவுனியா, ஜூன் 25

3ஆவது உலக யோகா தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் வடமாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் இந்திய கொன்சூலர் ஜென்ரல் ஆர். நடராஜன் தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களையடுத்து வவுனியாவிலும் நேற்று முன்தினம் யோகா தினம் இடம்பெற்றது. இதில் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம், முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணன், தமிழருவி சிவகுமார், தமிழ்மணி அகளங்கன், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், நகர பாடசாலையைச் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் யோகா தின நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். நிகழ்வின் இறுதியில் யோகா சிறப்பு மலர் கலந்துகொண்ட அதிதிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

(21)

# தான்தோன்றீஸ்வரருக்கு இராஜ கோபுரம்

முல்லைத்தீவு, ஜூன் 25

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவிழா அடுத்து ஆலயத்துக்கான நூதன நவதள ராஜ கோபுர அங்கு நிறுவும் நிகழ்வு எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி அனைத்து கிரியைகளுடனும் இடம் பெறவுள்ளதாக ஆலய முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளார்.

(21, 500)

# தொற்றா நோயிலிருந்து பாதுகாக்க வடக்கு மக்களுக்கு யோகா பயிற்சி

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் யோசனை

வவுனியா, ஜூன்

"தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு எங்களுடைய வாழக்கை முறையில் யோகாக் கலையை நாங்கள் வளர்க்க வேண்டும். வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் என்ற வகையில் இந்தக் கலையை வளர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்."

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற யோகா தின நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டுஉரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவ மனைகளிலே குறிப்பாக மறுவாழ்வு மருத்துவ மனைகளிலே யோகாசனக் கலையை பயிற்றுவிக்கின்றார்கள். அவர்கள் விஞ்ஞான ரீதியாக நிரூபித்துக்காட்டியிருக்கின்றார்கள். மறுவாழ்வு பெறுபவர்களுக்கு யோகாசனம் ஒரு மருத்துவ ரீதியான சிகிச்சை முறையாக இப்போது செய்யப்பட்டு வருகின்றது. எங்களுடைய முன்னோர்கள் ஆலயங்களிலே நமஸ்காரம் செய்வதிலிருந்து பாடசாலையிலே தோப்புக்கரணம் போடுவது வரை யோகாசனத்தை எமது வாழ்க்கை முறையில் செய்திருக்கின்றார்கள்.




யோகா கலையை வளர்ப்பதற்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். இந்த மாகாணத்தினுடைய சுகாதார அமைச்சுக்குப் பொறுப்பானவர் என்ற வகையிலே நிச்சயமாக எங்களுடைய செயற்பாடு யோகா கலையை வளர்ப்பதற்கு முயற்சிப்பதாக அமையும். எங்களுடைய அமைப்பினூடக நாங்கள் என்றும் எங்களுடைய மாகாணத்திலிருக்கின்ற மக்களுக்கு இயற்கையாக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எங்களுடைய நேரங்களை பிரியோசனமான முறையிலே பயன்படுத்தி யோகாவை பயிற்றலாம். உள ஆரோக்கியத்தையும், உடல் ஆரோக்கியத்தையும் பெறுவதற்கு நாங்கள் எல்லோரும் இணைந்து உழைக்கவேண்டும். எங்களுடைய சமுதாயத்திலே ஏற்பட்டுள்ள தொற்றா நோயைக் கட்டுப்படுத்தவதற்கு எங்களுடைய வாழக்கை முறையில் யோகாக் கலையை வளர்க்க வேண்டும். இதன் மூலம் எங்களுடைய சமுதாயத்தில் இந்தத் தொற்றா நோய்களைக்கட்டுப்படுத்துவதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்புகின்றேன்- என்றார்.

தலைமையுரையாற்றிய யாழ்ப்பாணத்துக்கான இந்திய கொன்சூலர் ஜென்ரல் ஆர். நடராஜன், "யோகா செய்வது என்றால் அது நமக்கு உடல் நலத்தை மன நலத்தை கொடுப்பது மட்டுமல்ல யோகாசனம் மூலமாக நாம் ஐக்கியப்படுகின்றோம். நாங்கள் இன்று ஒன்றாகக் கூடியிருக்கின்றோம்.

ஆகவே இந்த யோகாசனமே எங்களை இங்கு ஒன்றுபடுத்தியுள்ளது. அந்த ஐக்கியம் எப்படி வரும் ஒவ்வொருவரிடமும் அன்பைப்பகிர்ந்து கொண்டால் அன்பு வரும். யோகாசனம் என்பது அன்பைத்தரும் அறிவைத் தரும் ஆனந்தத்தைத்தரும் ஆரோக்கியத்தைத்தரும்" -என்றார்.

(21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடிப்படையை உதாசீனம் செய்தார்களாம் மருத்துவர்கள்

கொழும்பு, ஜூன் 25
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்த அதிரடிப்படைச் சிப்பாய்கள் மூவருக்குக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கிச்சை யளிக்க மறுத்துவிட்டதாகப் பொலிஸ் அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரியும் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருமான எம்.ஆர். லத்தீப் தெரிவித்தார்.

காயமடைந்த மூவரும் கடந்த புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களைப் பரிசோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ மருத்துவர்கள், தாதிகள் முன்வரவில்லை. இந்தநிலையில் சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின் அவர்கள் மூவரும் பொலிஸ் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜாசிங்க இதனை முற்றாக நிராகரித்துள்ளார். மாணவர்களை விட பொலிஸாருக்கே அதிக அக்கறை காட்டிச் சிகிச்சையளிப்பதாக மாணவர்கள் சிலர் தம்மை ஏசினர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (கு-ய)

## சமாதானம், ஒற்றுமையை வலுவாக்கட்டும் ரமழான்

### எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து

கொழும்பு, ஜூன் 25
ரமழான் பண்டிகையானது, எமது மக்களிடையே சமாதானம், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை மேலும் வலுவாக்குவதாக அமைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புனித ரமழானை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை வாழ் அனைத்து இஸ்லாமிய மக்களுக்கும் எனது இதயங்கனிந்த ரமழான் பெருநாள்



வாழ்த்துக்கள். புனித ரமழான் மாதத்தின் நிறைவினை நினைவு கூரும் முகமாக இந்த நாளை நாம் கொண்டாடுகின்றபோது, இந்தப் பண்டிகையின் பாரம்பரியத்தை போற்றும் வகையில், சகோதரத்துவ உணர்வோடு நாம் பகிர்ந்து கொள்ளும் அதேவேளை இல்லாதவர்கள் மேல் காட்டும் கரிசனையையும் எமது சிந்தையில் கொள்வோமாக.

இந்த பெருநாளை கொண்டாடும் இத்தருணத்தில், எமது தேசத்தின் நல்லுறவிற்கான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துவதுடன், நாட்டின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டவும் செயற்படுவோமாக.

இந்த ரமழான் பண்டிகையானது, எமது மக்களிடையே சமாதானம், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தினைமேலும் வலுவாக்குவதாக அமைய வேண்டும் என பிராத்திக்கிறேன் - என்றுள்ளது. (கு)

## சைட்டத்துக்கு எதிரான மேன்முறையீட்டு மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 25
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருந்த தீர்ப்புக்கு எதிராக இலங்கை மருத்துவ சபை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை ஜூலை மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

புவகை அளுவிஹாரே, சிசிர டீ ஆப்ரூ, சுனில் குணரத்ன ஆகிய மூன்று நீதியரசர்கள் அடங்கிய ஆயத்தின் முன் கடந்த வியாழக்கிழமை இந்த மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டு 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் பெறும் வைத்தியப் பட்டம் இலங்கை மருத்துவசபையில் பதிவு செய்யப்படுவதற்கு ஏற்புடையது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-ய)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### குளிரூட்டிகள் விற்பனைக்கு
மிக நல்ல நிலையிலுள்ள கண்ணாடி பிறிஜ் அதிவேக உறைவிப்பிகள் (பிறிசர்) பெரிது. சிறிது உடன் விற்பனைக்குண்டு.
**078 721 2272**

### விற்பனைக்கு
SHARP போட்டோ.கொப்பி மெசின்
A\C Inverter:-18000 BTU
A/C:-12000 BUT
தொடர்பு 077 917 7477, 077 895 2108

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
**077 712 0979**

### வீடு விற்பனைக்கு
சுன்னாகம். புத்தூர் வீதியில் 5.5 பரப்புக் காணியில் (55 பேர்ச்) அமைந்த 5 படுக்கை அறைகளைக் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
**077 664 5203**

### விற்பனைக்கு
அல்சேஷன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு.
Lion Sherpard
**078 301 4280**

### லொறி விற்பனைக்கு
COMET SUPER மரபொடி
வாகன இலக்கம் WP/JX XXXX,
விலை 27 இலட்சம்.
**075 837 7583**

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
German Shepherd. Pomarenian நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு.077 6701503, 077 4147463

### காணி விற்பனைக்குண்டு
பலாலி வீதி, கந்தர்மடத்தில் 3 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. வியாபார கட்டடங்களிற்கு மிக உகந்தது.
தொடர்பு - **076 851 4296**

## தேவை

### வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்.நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
**077 359 9588**

### வேலையாள்கள் தேவை
புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை. தையல் வேலையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
**077 604 7459/ 077 399 6396**

### மணமகன் தேவை
U.K.யில் பிரஜா உரிமையுடைய 27 வயது உடைய யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தொழில் பார்க்கும் விஞ்ஞானப் பட்டதாரியான மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் பெற்றோர்கள் உயர்கல்வி கற்ற லண்டனில் வசிக்கும மணமகனைத் தேடுகின்றார்கள். பிரஜா உரிமை இல்லாதவர்களும் கருத்தில் கொள்ளபபடும்.
**077 036 6059**

### மணமகள் தேவை
38 வயதுடைய யாழ்.இந்து கௌரவ, மகம். 34, பாவம். Bank இல் வேலை செய்யும் மணமகனுக்கு. குறைந்தது 4 வயது வித்தியாசமுள்ள அழகான மெல்லிய மணமகள் தேவை.
**077 473 1429**

### மணமகள் தேவை
கௌரவ குடும்பத்தில் பிறந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த (R.C) திருமணம் முடித்து ஆறுமாதத்தில் விவாகரத்துப் பெற்ற அரச கட்டட ஒப்பந்தகாரராக தொழில் புரியும் மணமகனுக்கு படித்த. அழகிய மணமகள் தேவை. விவாகரத்துப் பெற்ற. பிள்ளைகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். வயது - 39. ரேவதி நட்சத்திரம். 4ஆம் பாதம்
**077 894 4938/ 021 224 0796**

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம். 1982 சித்திரை 3.4 இல் செவ்வாய். கிரகபாவம் 13¾. லண்டனில் தொழில்புரியும் மணமகனுக்கு (Not PR) லண்டனில் PR உள்ள மணமகள் தேவை.
**077 230 6648**

## ஏனையவை

### சிங்கள வகுப்புக்கள்
சிறுவர் முதல் வளர்ந்தோர் வரையான சிங்கள வகுப்புக்கள் குழுவாகவோ தனியாகவோ கற்பிக்கப்படும். எழுத - வாசிக்க- கதைப்பதற்கான எளிய முறையில் விளக்கங்கள் வழங்கப்படும்.
**076 838 5662**

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் A9 வீதிக்கு அருகில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
**077 436 4781**

### விற்பனைக்கு
Scooty, டிஸ்கவரி மோட்டார் சைக்கிள், முதிரைக் கட்டில், பழைய மொடல் சொனி TV, வாட்டர் பம், தீராந்திகள், Love Birds கூடு என்பன விற்பனைக்குண்டு.
**076 660 4584**

### காணி விற்பனைக்கு
தெற்கு மானிப்பாய் லோட்டன் வீதி (புளியடிச்சந்தை ஒழுங்கை)யில் உள்ள 6 பரப்புக் காணி மின்சாரம், கிணறு, சுற்றுமதில் வசதியுடன் வியாபாரத் துக்கோ, வீடு கட்டவோ விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
**076 804 5556**

### விற்பனைக்கு
பாவித்த, நல்ல நிலையிலுள்ள வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
**077 911 3014**

### வேலைவாய்ப்பு
விஷன் லங்கா நிறுவனத்தால் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள்.
தரம் 10 முதல் O/L, A/L முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
**077 270 5388, 075 487 6233**

### OLUMPYA MATHS CENTRE
(இணுவில் புகையிரத வீதி, அருகாமையில்)
தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கான கணித வகுப்புக்கள் (தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமாக) பிரத்தியேக. குழு வகுப்புக்கள் எமது Centre இல் பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். மற்றும் கணித வினாடி வினா, ஒலிம்பியா பரீட்சைக்குப் பயிற்றுவிக்கப்படுவர்.
தொடர்புகளுக்கு :- **077 236 9133**
குறிப்பு :- பிரத்தியேக. குழு வகுப்புகள் வீடு வந்தும் கற்பிக்கப்படும்.
(யாழ்ப்பாணம் - மல்லாகம் எல்லைக்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்)

### கலைமகள் சனசமூக நிலையம்
கட்டட நிதிக்காக இன்று 25.06.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சவாரிப் போட்டி நடத்தப்படும்.
நீர்வேலி சவாரித் திடலில் நடைபெறும். அனைவரும் கலந்துகொள்ளவும்.

### இயந்திரங்கள் விற்பனைக்குண்டு
Copra Cutter, கொப்ரா அரைக்கும் இயந்திரம். Stoner, அரிசிமா அரைக்கும் இயந்திரங்கள். (Plate Machine, கல்லு Machine) Shifter, Icing Sugar Machine விற்பனைக்குண்டு.
**075 640 4546, 021 224 0270**

### வீடு வாடகைக்கு
இந்து குடும்பத்துக்கேற்ற W.A.Silwa Mw, வெள்ளவத்தையிலுள்ள சமையலறையும் 3 அறையும் கொண்ட 1500Sqft வீடு வாடகைக்கு உண்டு.
**076 389 8991**

### காணி விற்பனைக்கு
இல.22/3. புங்கன்குளம் றோட், கனகர் சந்திக்கு அருகில் (கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்) நில.பரப்பு 07 குளி 09 காணி விற்பனைக்கு உண்டு.
ஆனந்தன்- **077 329 1501/ 077 196 8633**

### வீடு விற்பனைக்கு
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
**077 614 6434**

### பொறியியல் சேவைகள்
வடமாகாணத்தில் நியாயமான கட்டணத்தில் பின்வரும் வேலைகள் வடிவமைத்து செய்து தரப்படும். வீடுகள், கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும். சகலவிதமான வயறிங் வேலைகள், CCTV Camera வேலைகள்
VS Engineers & Contracters
**077 612 0859, 077 856 1745**

### வேலை வாய்ப்பு
கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு
- விற்பனையாளர்
- காசாளர்
- கணக்காளர்
- சிட்டை எழுதுநர்
- உதவியாளர் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு. பழகிய வேலையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
**076 851 4296**

### வாடகைக்கு
கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத் தொகுதி ($2^{ம்}$,$3^{ம்}$ மாடி) வாடகைக்கு உண்டு.
3000 sqf (750x4)
**077 734 4074, 077 739 6176**

### மல்லாகத்தில் காணிகள் விற்பனைக்கு உண்டு
மல்லாகம் K.K.S. வீதியிலுள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகிலுள்ள பாடசாலை ஒழுங்கையில் 7 பரப்புடன் சேர்ந்த வீடும், மற்றும் 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **077 871 4374**
**021 321 9802**

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
...ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### S.K.Broking (பதிவு இல - NAL/DS 1442)
### வீடுகள், காணிகள் விற்பனைக்குண்டு
எம்மிடம் வீடுகள் காணிகள் விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கோண்டாவில், கல்வியங்காடு, கோப்பாய், இராசவீதி, அரியாலை. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
**077 193 3490, 077 461 3884**

### வேலையாள்கள் தேவை
பேபி போட்டோ. நிறுவனத்துக்குப் புகைப்பட தொழில் பயிலுநர் தேவை.
வயது 17 - 18.
ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.
**பேபி போட்டோ**
**243, பலாலி வீதி, கந்தர்மடம்**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோன்புப்பெருநாள்

## காதர் மஸ்தான் எம்.பி. வாழ்த்து

கொழும்பு, ஜூன் 25
இன நல்லுறவை மேலும் கட்டியெழுப்பும் நோன்புப்பெருநாளாக அமையட்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நோன்புப்பெருநாள் தொடர்பில் வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கடந்து சென்ற ரமழான் மாதம் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு ஒரு பொறுமையுடன் கூடிய சோகத்தையும் ஏற்படுத்திய மாதமாகா அமைந்து இருந்தமையை யாரும் மறுக்க முடியாது. ஒருபகுதி மக்கள் வெள்ளத்தாலும் மற்றுமொரு பகுதி மக்கள் வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள் மீதான இனவாதத் தாக்கு தல்களும் குறையவில்லை.

அண்மைக்காலமாக இலங்கை வாழ்முஸ்லிம்களுடைய மதஸ்தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் மூலம் பெரும்பாண்மை மற்றும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் இன விரிசலை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலை தொடருமாக இருந்தால் எதிர்காலத்தில் சிறுபாண்மை மக்களின் பங்களிப்போடு கொண்டுவரப்பட்ட நல்லாட்சியின் இருப்பு தொடர்பில் சிறுபான்மையினர் அதிகம் சிந்திக்கத் தொடங்கி விட்டனர். எனவே இந்தவிடயம்தொடர்பில் ஆட்சியாளர்கள் விரைவாக தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும்.

கடந்த கால ஆட்சியில் சிறுபான்மையினருக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட செயற்பாடுகளால் ஏற்பட்ட இழப்புக்களையே இன்னும் ஈடு செய்ய முடியாத நிலையில் மீண்டும் அதே நிலைதொடர்வதை முஸ்லிம்கள் விரும்ப வில்லை.

அதே நேரத்தில் கடந்து சென்ற ரமழான் மாதத்தில் முஸ்லிம்களின் இப்தார் நிகழ்வுகளில் அதிகளவிலான சிங்களஇ தமிழ் சகோ தர சகோதரிகள் கலந்துகொண்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. இவ்வாறான தங்களின் வருகை இனங்களுக்கிடையிலான சகவாழ்வை கட்டியெழுப்ப உதவி புரியும் என்றுள்ளது.

(த)

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தசாமி மனோன்மணி**
(முறிவு தெறிவு வைத்தியர்)

தோற்றம்
04.12.1947

மறைவு
29.06.2010

ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் மாறாத சொந்தம் அம்மா - நீ
ஏழாண்டு காலத்தில் மறந்திடுவோமா?
எந்நாளும் உனை நினைத்து ஏங்கித் தவிக்கின்றோம்
இந்நாளில் உனக்காக பூசித்திருக்கின்றோம்

பாடசாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் செல்லையா யோகராசா**



தோற்றம்
04.02.1943

மறைவு
04.07.2016

யோகம் போய் எமைவிட்டு ஓராண்டு ஆனதுவோ!
ஜோதி வடிவாக எம்மோடு வாழ்கின்றீர்
பாகமாய் எம்மோடு பலவற்றில் கலந்திருந்தீர்
பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம் தெரியுதைய்யா!
தேகமாய் இல்லாமல் தெய்வமாய் வாழ்பவரே!
தேடும் இடங்களெல்லாம் தெய்வமுகம் தெரியுதய்யா
வேகமாய் பயணித்தீர் போதுமினி வாழ்க்கையென
வேறேதும் நினைவின்றி அப்பாவே! அஞ்சலித்தோம்

இல.54/4, ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

குடும்பத்தினர்.

---

## 6 ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு
13 . 04 . 1968

உதிர்வு
02 . 06 . 2011

**திருமதி இராசரஞ்சினி கணேசன்**
(திதி: வளர்பக்க பிரதமை)

நறுமலராக இத்தரணியில் பூத்து
நறுமணம் மிக்க குணவதியாய் வாழ்ந்து
நாம் அனைவரும் தவிக்க
நல் உலகம் அடைந்து விட்டாயே எம் அம்மாவே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர் - கணேசன்
பிள்ளைகள்:
திருமதி சாயித்திரா- சாந்தன்,
க.தமிழ்அழகன், க.தமிழ்ச்செல்வன்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

---

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அவதாரம்
02 . 01 . 1937

மறைவு
09 . 07 . 2013

**திருமதி நல்லம்மா பொன்னம்பலம்**
(ஓய்வு நிலை ஆசிரியை)
திதி: ஆனிமாத பூர்வபக்க துதியை

ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்ந்து வந்தோம்
நீர் எனை விட்டுப்பிரிந்து தனிமரம்மாக்கி விட்டீர்
உம்மிடம் வந்தோரை வாழவைத்த தெய்வமானீர்
எம்முடன் வாழ்ந்த உமது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

டச்சு வீதி,
மீசாலை.

குடும்பத்தினர்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 . 03 . 1936

மறைவு
06 . 07 . 2016

**அமரர் காலிங்கராசா பரமேஸ்வரி**
திதி: துதியை

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே !
இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் தெய்வமே !

இணுவில் கிழக்கு,
அங்கிளிப்பாய்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷி வீரவன்ஸவின் பிணை நிபந்தனையை கடுமையாக்கும் கோரிக்கை மன்றால் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 25
முறையற்ற விதத்தில் இராஜதந்திரக் கடவுச்சீட்டை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் பிணை நிபந்தனையை மேலும் கடுமையாக்குமாறு புலனாய்வுப் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு தலைமை நீதிவான் லால் ரணசிங்க பண்டார நிராகரித்துள்ளார்.

சஷி வீரவன்சவின் வழக்கு முன்னைய தலைமை நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிராளியான சஷி வீரவன்ச மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நீதிமன்றப் பதிவாளர் முன் கையொப்பமிட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை தற்போதைய நீதிவான் லால் ரணசிங்க பண்டாரவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது புலனாய்வுப் பொலிஸாரின் தரப்பில் முன்னிலையாகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், எதிராளி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும் என மிக இலகுவான பிணை நிபந்தனையொன்றை விதித்திருப்பதன் மூலம் எதிராளிக்கு சிறப்புரிமையொன்று வழங்கப்பட்டிருப்பதாகவும் அதனால் அந்தப் பிணை நிபந்தனை மேலும் கடுமையாக்கப்பட வேண்டும் எனவும் வாதிட்டார்.

இவரது வாதத்தைப் பரிசீலித்த நீதிவான் எதிராளி நீதிமன்றத்துக்குத் தவறாமல் வந்துகொண்டிருப்பதால் அவருக்கு முன்னைய நீதிவான் வழங்கிய பிணையை மாற்றத் தேவையில்லையென அறிவித்ததுடன் பிரதி சொலிஸிட்டர் ஜெனரலின் வேண்டுகோளை நிராகரித்தார். (த)


## வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி நகரில் A9 வீதிக்கு அருகில் டச்சு வீதியில் டிறிபேக் கல்லூரிக்கு முன்பாக இரு தளங்களைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள் நிறுவனங்களுக்கு தனித்தளங்களாகவோ முழு வீடாகவோ வாடகைக்குத் தரப்படும்.

T.P : 077 255 4327



## சாந்தா றீட்டா ஓட்டுத் தொழிற்சாலை
## அங்கம் பிட்டிய வைக்காலை



50 ஆண்டு காலமாக பொதுமக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்ற (டபிள் ஸ்ரார்) இரண்டு நட்சத்திர ஓடுகளைக் கேட்டு வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். சிறிய வாகனத்தில் எமது கம்பனி கூரை ஓடுகள் வருவதில்லை. அப்படி இனங்கண்டால் எமக்கு அறியத் தரவும். புதிய முகவர்களும் தேவை.

077 721 9351, 077 602 3002





ஸ்ரீ காளியம்மன் துணை
## பண்டித் - குமார் சாஸ்த்திரி
## ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்

தொடர்புகளுக்கு
077 251 8305 / 077 467 0325

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி, செய்வினை கோளாறு (Black Magoc) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலின்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)



## சைவ உணவகம்



Vegitable
**Restaurant Rohyal Lunch**
No.129, Stanley Road, Jaffna, Sri Lanka.

உங்கள் விருப்பம் போல் நாவுக்கு சுவையாகும் மனதுக்கு மகிழ்வாகும் அனைத்து விதமான சைவ உணவு வகைகளை சுடச் சுட அமர்ந்து உண்ணவும் உங்கள் இல்லத்திற்கு எடுத்துச் செல்லவும்

## றோயல் லஞ் சைவ உணவகம்

Vegitable
**Restaurant Rohyal Lunch**

- சுத்தம்
- சுகாதாரம்
- அறுசுவை
- சுட சுட
- மலிவானது
- பூசனிக்காய் கிறீம் சூப்
- சாப்பாடு
- குளிர் ஊட்டப்பட்ட குடிநீர்

**27.06.2017 செவ்வாய்க்கிழமை திறப்பு விழாவை**
முன்னிட்டு என் அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு
PG Tea இலவசமாக வழங்கப்படும்.
வருக வருக என வரவேற்கின்றோம். மிகுந்த நன்றி
**மீண்டும் வருக வணக்கம்**

Vegitable
**Restaurant Rohyal Lunch**
No.129, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 221 9300, 077 760 9964
Email: m.neethi@hotmail.com



## திருமண சேவை

உங்கள் மனதுக்கு பிடித்த வாழ்க்கை துணையை காளி அம்மன் துணையுடன் நாம் தேடித்தருகின்றோம் வெளிநாடு, உள்நாடு டொக்டர், இஞ்சினியர் மணமக்கள் உண்டு.
தொடர்பு இலக்கம்.
T.P : 077 946 4287
+ Viber
லண்டன், கொலண்ட், பிரான்ஸ், பெல்ஜியம், தற்சமயம் மணமக்கள் வருகை தந்துள்ளனர். பெற்றோர், உரித்துடையோர் தொடர்பு கொள்ளவும்.



## ஐரோப்பிய STUDENT விசா

*Medicine *Engineering *Business Management
* Language Studies * Hospitality & Tourism
*IT & many more...

- NO Need IELTS
- NO Age Limit
- NO Need Sponsor
- No Need Bank Balance

2017 September Intake now on

Contact : EURO UNI
No. 44, Vajira Road, Colombo - 04
email : eurounilk@gmail.com
Phone - 077 4796 483





# Study in Latvia
## Schengen visa
**WITH WORK PERMISSION**

## மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்

- எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS, இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Sehengen Visa ( Sehengen Union இல் உள்ள 26 நாடுகளிற்க்கும் சென்று பணிபுரிய முடியும்)
- UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும்.
- ஒரு வருடத்திற்கான கட்டணமாக Rs. 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.
- 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி.

கொழும்பு மற்றும் யாழ். கிளையினுடாக முற்றிலும் இலவசமாக Latvia Student Visa தொடர்பான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள முடியும்.

EXPONET
Overseas Consultants
No : 379 ½ Galle Road, Colombo 06.
Hotline: 011 255 5511/14/18
Email: nimal@expogroup.lk



## PROJECT OFFICER – 1 POSITION (MALE / FEMALE)

Base station : Mullaitivu
Contract period: Immediate to November, 2017 (may be extended)

PARCIC is looking for a suitable person as a Project Officer for Aquaculture project in Mullaitivu

### Essential Qualifications & Experience

- Educational background in Fisheries and Aquaculture or related subject.
- Work experience related to aqua farming activities.
- Good knowledge of project cycles, demonstrated experience in Monitoring and Evaluation.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities.
- Ability and willingness to travel to all parts of the country.

### Please note:

- **Closing date for applications will be 30th June 2017**
- The contract will be renewed depending on the project budget allocation as well as the applicant's work performance.
- The position applied for should be indicated on the top of your application, on the top left hand corner of the envelope or in the subject line of the email.
- Please send in your application together with the names of two non-related referees to;

slproject1@parcic.org or
Regional Director,
No28, Temple Road,
Jaffna
021 222 7897

**Only applicants selected for the interview will be contacted.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை :**

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு CD கடைக்கு வேலையாள் (ஆண்/பெண்) தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

**077 764 3322** (CS 5126) (14)

**அறைகள் வாடகைக்கு**

குறைந்த விலையில் அறைகள் நாள் வாடகைக்கு. ரூபா 650 முதல் 3900 வரை. AC, TV இணைந்த குளியலறை வசதிகளுடன் உண்டு.

Hotel Villa City- 422/1, Galle Road, Wellawatte இராமகிருஷ்ண Shed அருகில்- **077 796 7878**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி Farm School இற்கு மிகவும் அருகில் 5 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு.

**077 220 4680, 077 716 6461**

**பெயர்மாற்றம்**

4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **சிவானந்தன் கமலராஜ்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **சிவானந்தன் ஸ்ரனி பிரபு** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சி.ஸ்ரனி பிரபு

**காணி வீட்டுடன் விற்பனைக்கு**

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் முதலாம் ஒழுங்கையில் 4பரப்பு உறுதிக்காணி சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

**077 258 8715/077 277 8090**

**விற்பனைக்கு**

பிறிமா கல்பேட் இன ஏழு மாத கோழி முட்டை இடத் தொடங்கி மூன்று மாத நிலையில் விற்பனைக்குண்டு.

**076 838 8727**

**தென்னங்காணி விற்பனைக்கு**

இயக்கச்சியில் ஒன்றரை வருட பராமரிப்பில் உள்ள 5 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.

**075 569 0798**

**தேவை**

கறிமுருங்கை இலை தொகையாகச் சேகரித்து வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். சிறந்த விலை கொடுத்து பெற்றுக் கொள்ளப்படும். அத்துடன் இதனைப் பயிரிட்டு நீண்டகால அடிப்படையில் வழங்கக் கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும்.

K.விவேகானந்தர் - **070 325 9035** (N.M.R.Group)

**மாடிக்கட்டடம் விற்பனைக்கு**

வெள்ளவத்தை காலி வீதிக்கு முகப்பாக மூன்று மாடிக் கட்டடம் விற்பனைக்குண்டு. மாதமொன்றுக்கு வருமானம் 6/= இலட்சம்.

**077 796 7878 - Mohamed**

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி, பெரிய அரசடியில் மாடி வீடு விற்பனைக்குண்டு.

**T.P: 077 910 7242**

**விற்பனைக்கு**

பிளாஸ்ரிக் INJUCTION MOULDING MACHINE விற்பனைக்குண்டு. (300 கிராம்) சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. (பாவித்தது)

**T.P : 077 779 6310**

**வீடு விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு பருத்தித்துறை வீதியில் 04 அறைகள் வீடு, ஒன்பது பரப்பில் உடனடி விற்பனைக்குண்டு. வியாபாரம் மற்றும் வசிப்பிடத்திற்கேற்ற சிறந்த சூழல். விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**077 340 4101**

**தேவை**

யாழ். நகரில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட சிகைஅலங்கார நிலையத்துக்கு (சலூன்) முடிவெட்டுபவர்கள் (ஆண்கள்) தேவை. தங்கி நின்று வேலை செய்யலாம். 50% கமிசன் வழங்கப்படும்.

தொடர்பு:

**0767593357**

**இளைஞர் யுவதிகளே வாழ்க்கையில் மாற்றம் வேண்டுமா ?**

இலவச தங்குமிட வசதி, இலவச உணவு, இலவச பாடப் புத்தகங்களுடன் 8 நாள்கள் கற்பித்தலும், 5 நாள் கள் பகுதிநேர வேலைவாய்ப்பு ஏற்பாட்டையும் கொண்ட தொழிற்கல்வி பகுதி நேர சம்பளம் உங்கள் கல்வி, அனுபவத்தில் தங்கி உள்ளது. பாடநெறி களாகிய Hospitality Management அல்லது Bussiness Management கற்கை நெறிகளுக்கு மாதம் 15,000/= மட்டுமே செலுத்த வேண்டும். 6மாத கல்வி முடிவில் 8 அரசாங்க அங்கீகாரமுள்ள சான்றிதழ்களும் 5 நட்சத்திர Hotel களில் அல்லது தரமான கம்பனி களில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தரப்படும். மேலும் Qatar, Oman, Dubai நாடுகளுக்கு செல்வதற்கான முழு ஆலோசனைகளும் செய்து தரப்படும்.

**Leaders International Campus**
**077 918 8778/ 077 238 3542**

**அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம்**
**பண்டித் துளசிராம் சுவாமி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள். வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த திகதி நட்சத் திரம் ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப் போகின் றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை, லட்சுமிகடாச்சப் பூஜைகள், எல்லா தோசங்க ளுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக் கும் பரிகாரம் செய்யப்படும். படிப்பு, தொழில், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், , கணவன் மனைவி ஒற்றுமை, ககல்யாண யோகம், எதிரிகள் கண்திருஸ்டி, கோட் வழக்குகள், வசிகரம் செய்யப்படும். எண்கணிதப்படி மண மக்கள் பொருத்தம் பார்க்கப்படும். நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள்.

**நேரம்: காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (முலைவச் சந்தி அருகில்) **T.P: 077 2186 324**

SCHENGEN VISA

**ஐரோப்பாவில் கல்வி**
**(லட்வியா மற்றும் லுத்வேனியா)**

ஐரோப்பாவில் கல்வி கற்று, வேலை பார்த்து சுதந்திரமாக அவ்விடமே நிரந்தர வதிவிடம் பெறுவதற்கான அரியதொரு வாய்ப்பு

**தேவையான தகைமைகள்:**
- க.பொ.த.சாதாரண தரம்
- க.பொ.த.உயர்தரம்

IELTS அவசியமில்லை

**கற்கை நெறிகள்**
- Bachelors
- Masters
- PhD

EDUCARE

**0777 166 461, 0777 166 462, 0777 166 463**

33C 1/1,W.A Silva Mawatha, Colombo-06

**மீன்பிடி உபகரணத் தொழிற்சாலைக்கு பணியாளர்கள் உடன் தேவை**

வவுனியா, ஓமந்தை, பெரியவிளாத்திக்குளம் பகுதியில் இயங்கிவரும் ராஜா மீன்பிடி வலைத் தொழிற்சாலை நிறுவனத்தில் பணிபுரிவதற்கு அனுபவம் வாய்ந்த / அனுபவமற்ற (ஆண்/ பெண்) தொழிலாளர்கள் உடன் தேவைப்படு கின்றார்கள். உணவு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் நேரிலோ / தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும்.

**011 528 9779, 077 946 9668, 076 679 0179**

**ஆங்கிலப்பயிற்சிக்கு NO.1 பயிற்சி மையம்**

**IELTS Life Skills -A1, B1**

**திருமணம் செய்து நிரந்தர விசாவில் U.K செல்பவர்களுக்கானது**

# UK இல் இருந்து கணினி மூலமான 40 மேற்பட்ட online listening மாதிரி பரீட்சைகள் DMI இல் மட்டுமே.
# அனுபவம் வாய்ந்த பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர் குழாம்.
# இதுவரை 2000 க்கும் மேற்பட்டோர் பயின்று UK சென்றுள்ளார்கள்.
# Visa நடைமுறைகள் தொடர்பான இலவச விளக்கங்கள்
# மாதாந்தம் 30 மேற்பட்ட மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பும் ஒரே ஒரு நிறுவனம்.

Hotline 0777 17 35 17

Fee 9500/

இணைய முன் இணையத்தளத்தினை பார்வையிடவும் www.itdmi.com/ls அல்லது www.itdmi.com/lifeskill-english

Spoken English கற்கை நெறிக்கு இணைபவர்களுக்கு IELTS Life Skills கற்கைநெறி முற்றிலும் இலவசம். நேரடியாக IELTS Life Skills கற்பவர்களுக்கு 9500/- மட்டுமே.
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**IELTS**
ACADEMIC MODULE , GENERAL MODULE

We offer:
A practice workbook
A 30 hour online IELTS preparation course
A reference library membership to access IELTS material
Access to the IELTS Top Tips seminar
#Latest course Material #unique Test Tips
#40 hrs with free 4 mock exams

DMI COMPUTER EDUCATION

**SPOKEN ENGLISH**
**ஆங்கிலப்பேச்சுக்கு உத்தரவாதம்**

www.itdmi.com/english

**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | A9 வீதி, |
| **யாழ்ப்பாணம்** | **நெல்லியடி** | **சாவகச்சேரி** | **சுன்னாகம்** | **கிளிநொச்சி** |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 | Tel.:021-228 5655 |

**பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு**

Educational Technologies Pvt Ltd

(Jaffna Branch)

**இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.



G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

**Grand Opening 25 June,2017**

**star rest jaffna**

FAMILY RESTAURANT

New Lovers corner அருகில்

Star Rest Jaffna has been home to great tasting dishes. Join us for a hearty lunch or dinner of your choice.

Outdoor & Indoor food catering available for all kinds of functions

On the spot sea food items prepration of your choice



No.164,Ramanathan Road,Jaffna. 021 222 30 20 0770716838 starrestjaffna@gmail .com


# சமாதானமும் நல்லிணக்கமும் நிறைந்திருக்கட்டும்

## நோன்புப் பெருநாள் வாழ்த்தில் தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

இலங்கை மற்றும் உலக வாழ் அனைத்து சகோதர முஸ்லிம்களுக்கும் சமாதானமும்,நல்லிணக்கமும் நிறைவாக கிடைக்க வேண்டுமென என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலகம் முழுமையுமாகவுள்ள முஸ்லிம்கள் சகோதரத்துவம், சமத்துவம், சகவாழ்வு ஆகிய உயரிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கடைப்பிடித்துவருகின்ற ரமழான் நோன்புப் பெருநாள் குறித்து வாழ்த்தினைத் தெரிவித்து வெளிப்படுத்தியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

“இஸ்லாம் மார்க்கத்தின் ஐம்பெரும் கடமைகளில் நோன்பு மிகப்பிரதானமான இடத்தைப் பெற்றுள்ளது.ஒரு மாதத்தின் முழு நாள்களுமே உணவின்றி நோன்பிருந்து ரமழானைக் கடைப்பிடிக்கின்றனர்.

நோன்பு காலத்தை தனிப்பட்ட ரீதியிலும், சமூக ரீதியிலும் வளம் பெறவேண்டிய உடல், உள அமைதி, கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றைட்டமைத்துக் கொள்கின்ற மிகச் சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்திக் கொள்வதும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பினை யதார்த்தமாக மாற்றிக்கொள்வதற்கு நோன்பு காலத்தில் உடல் மற்றும் உள ரீதியாக நாம் வளர்த்துக் கொள்ளும் தன்னார்வக் குணாம்சங்க ளின் பெறுமானங்களை வாழ்வின் அனைத்துச் சந்தர்ப்பத்திலும் பேணிக் கொள்ள வேண்டும்” என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

LG
Life's Good

## இலங்கையில் வேறு எந்தவொரு குளிர்சாதனப் பெட்டியை விடவும் அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும் ஒரேயொரு குளிர்சாதனப் பெட்டி.

அபான்ஸ் வழங்கும் LG இன்வெர்டர் குளிர்சாதனப் பெட்டி நீங்கள் கொள்வனவு செய்த நாள் முதல் சிறந்த செயல்திறனுடன் மின் நுகர்வை குறைத்து, சூழலை பாதுகாக்கிறது.

**அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட LG இன்வெர்டரின் புதிய மாதிரிகளுக்கு இன்றே மாறுங்கள்.**



- உலகளாவிய புகழ்பெற்ற விற்பனை நாமம்
- ஆற்றல் சேமிப்பு - சூழல் நட்புறவுமிக்க R600a வாயு
- நேர்த்தியான வடிவமைப்பு மற்றும் வர்ணங்கள்
- உணவின் புத்துணர்வை பேணி உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்திடும்.
- வேறு எதனுடனும் ஒப்பிட முடியாத பிரமாண்ட விற்பனை நாமங்கள்.
- மின்சாரத்தை சேமிக்கும் இன்வெர்டர் கம்பிரெஸர்

SMART INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY
Smart Inverter Compressor
R600a ECO-FRIENDLY REFRIGERANT GAS




ஒற்றைக் கதவு குளிர்சாதனப் பெட்டி

இரட்டைக் கதவு குளிர்சாதனப் பெட்டி

ஆரம்ப விலை ரூ.49,900/-

HOTLINE 011 5000000

நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் லைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

LOYALTY CARD **APPLY NOW**

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் திருமணச் சட்டம் திருத்தப்படுதல் அவசியம்

## அமெரிக்கத் தூதரிடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 25
இலங்கையில் நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் திருமணச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அதன் வரலாற்றில் முதற்தடவையாகக் கடந்த வாரம் இப்தார் நிகழ்வொன்றை நடத்தியிருந்தது.
குறித்த இப்தார் நிகழ்வு கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி மட்டக்களப்பில் நடைபெற்றிருந்தது. இதன்போது இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த முஸ்லிம் பிரமுகர்கள் சிலர், இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் திருமணச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.
கடந்த 1951 தொடக்கம் நடைமுறையில் இருக்கும் குறித்த திருமணச் சட்டம் காரணமாக தாம் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்று குறித்த முஸ்லிம் பிரமுகர்கள் சுட்டிக்காட்டினர் என அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)




## தம்புள்ள விகாரையின் 700 கோடி ரூபா மோசடி

### விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 25
தம்புள்ளை ரங்கிரி விகாரையில் 1996 2016 காலப்பகுதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் சுமார் 700 கோடி ரூபா மோசடி தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பௌத்த விவகார ஆணையாளர் நாயகத்துக்கு கல்வியமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.
விகாராதிபதி தனது 21.02.2017 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.
அடிப்படையிலேயே கல்வியமைச்சர் இந்த விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.
சிகிரியாவுக்குச் செல்லும் சுற்றுலாப்பயணிகள் மூலம் நாளாந்தம் ஒரு கோடி ரூபா வரை சேகரிக்கப்படுவதாகவும் தேரர் தெரிவித்துள்ளார். (த-ய)

## தேர்தல் கட்டுப் பணத்தை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன்24
உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்டுப்பணத்தைக் குறைப்பது உட்பட 28 அம்சங்களைத் திருத்துவதற்கான பிரேரணையொன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
வேட்பாளருக்கான கட்டுப்பணம் ஐயாயிரத்தில் இருந்து 2,500 ரூபாவாகவும், சுயேச்சைக் குழுவின் கட்டுப்பணம் 25 ஆயிரத்திலிருந்து ஐயாயிரமாகவும் குறைக்கப் படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.
வேட்பாளர்களில் இளைஞர், யுவதிகள் 30 வீதம் இல்லாவிடில் பட்டியல் நிராகரிக்கப்படும்.
மேலும், வேட்பாளர் ஒருவர் இறந்தால் அவருக்கு அடுத்தபடியாக உள்ளவருக்கு இறந்தவரின் பதவி வழங்கப்பட்டு வருகிறது. புதிய சட்டத்தின்படி அந்த உரிமை நீக்கப்படும் எனவும் அந்த பிரேரணையில் விபரிக்கப்பட்டுள்ளது. (த-ய)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்கிரிய பீடம் மீது விக்ரமபாகு சீற்றம்

## பொதுபலசேனாவுக்கு ஆதரவு அளித்து வருகின்றமைக்காக

பொதுபல சேனா அமைப்புக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ள பௌத்த மக்களின் மதிப்பிற்குரிய தலைமைத்துவங்களில் ஒன்றான அஸ்கிரியப் பீடத்தின் தீர்மானத்துக்கு நம சமசமாஜக் கட்சி கடும்எதிர்ப்பைவெளியிட்டுள்ளது.

அஸ்கிரியப் பீடத்தின் இந்த அறிவிப்புக்குப் பல தரப்பிலும் எதிர்ப்புக்கள் வெளியிட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்புக்குப் பின்னால் அரசியல் சக்தியொன்று செயற்படுவதாக நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகுகருணாரட்னதெரிவித்தார்.

பொதுபல சேனாவின் ஞானசார தேரர் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

எனினும் பௌத்த புராதனச் சின்னங்கள் சிறுபான்மையினரால் அழிக்கப்பட்டு வருவதாகவும், அதற்கெதிராகவே ஞானசார தேரர் குரல் எழுப்பி வருவதாகவும் சில தரப்பினரால் நியாயம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், ஞானசார தேரரின் கொள்கைக்கு தாங்கள் இசைந்து போவதாக அஸ்கிரிய பீடத்தின் மாநாட்டின்போது விடுவிக்கப்பட்டஅறிவிப்புபெரும்சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

இது குறித்து கருத்து வெளியிட்ட விக்ரமபாகு,

"பௌத்த மதத்தை காப்பாற்றுவது குறித்து பேசுகின்றனர். பௌத்த மதம் இந்த நாட்டில் பெரும்பான்மையான மதம். அதற்கு எந்த பாதிப்பையும், நெருக்குதலையும் ஏற்படுத்த எவராலும் முடியாது. பௌத்த மதத்தைக் காப்பாற்றுவதற்கோ பாதுகாப்பதற்கோ வரலாற்றில் எவரும் போர் செய்யவும் இல்லை. இது போரால் முன்னேறிய மதமும் இல்லை. அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி பௌத்த மதத்தைக் காப்பாற்றுமாறு புத்த பெருமான் ஒருபோதும் கூறியதில்லை. பௌத்த மதத்தை காப்பாற்றுவதற்காக வீதியிலிறங்கி போராட்டம் செய்து கலகம் செய்ய வேண்டும் என்ற சங்கைக்குரியவர்கள் எடுத்துள்ள தீர்மானத்திற்கு நாங்கள் இணங்கமுடியாது. அப்படியொரு நடவடிக்கையும் அவசியமில்லை. அஸ்கிரிய பீட மாநாட்டில் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட தீர்மானம் வெறும் அரசியல் மயப்படுத்தப்பட்டது என்றே நான் நினைக்கின்றேன். புதிய அரசமைப்புஉருவாக்கப்பணிகள் ஒவ்வொரு அடியாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.ஜே.வி.பிஉட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்கூட இதற்கு முழுமையான ஆதரவை நல்கி வரும் நிலையில் பாசிசவாதக் குழுக்களுக்கு இதனை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே இதனைத் தடுப்பதற்காக பல்வேறு தடைகள் இடப்படுகின்றன- என்றார். (த)

# சிறுநீரக நோயாளர்கள் மலையகத்தில் அதிகம்

கொழும்பு, ஜூன் 25

தூய்மையற்ற குடிதண்ணீர்ப் பாவனை, இராசயனம் கலந்த உணவு பழக்கவழக்கங்கள் காரணமாக மலையகத்திலுள்ள மக்களில் பெரும்பாலானோர் சிறுநீரகம் தொடர்பான நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நோய்த் தொற்று குறித்து அவர்களுக்கு எவ்வித அடிப்படை அறிவும் இல்லாமலே உள்ளனர். இந்நிலையை மாற்ற மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய தோட்ட காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆ.முத்துலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையகத்தில் இன்று பெரும்பாலான இடங்களில் தூயநீர் கிடைப்பதில்லை. தோட்டங்களிலே பல்வேறு காரணங்களுக்காக நீர் மாசுப்படுத்தப்படுவதுடன், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகளும் உரவகைகளும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீரில் கலக்கின்றன. அத்தோடு இன்னும் பல காரணங்களாலும் குடிதண்ணீர் மாசடைகின்றது. தோட்டங்களிலே பொதுமக்களுக்காக விநியோ கிக்கப்படும் குடிதண்ணீர் முறையாக சுத்திகரிக்கப்படுவதில்லை.

உணவுக்காகப் பயன்படுத்தப்படும் காய்கறிகளும், ஏனைய உணவுகளும் இராசயனம் கலந்தவையாகவே உள்ளன. இதன் காரணமாக மலையகத்திலும் சிறுநீரக நோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது.

கடந்த காலங்களில் பொலனறுவை, அநுராதபுரம், மஹியங்கனை போன்ற பகுதிகளிலேயே சிறுநீரகத் தொற்று நோய்க்கு உள்ளானவர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டனர். இந்நிலைமை இன்று மலையகத்திலும் பரவலாகக் காணப்படுகின்றது. இந்நிலைமைக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்.

மலையகத்தில் சிறுநீரக தொற்று காரணமாக புத்திஜீவிகளும் இளவயதினரும் அதிகளவில் உயிரிழந்து வருகின்றனர். அரசால் சிறுநீரக நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை மலையகத்திலும் முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளை மலையக மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து ஏற்படுத்தவேண்டும் - என்றார். (த)

### மாணவர் கலவரத்தின்போது

# கல்வியமைச்சுக் கட்டடத்துக்கு ஏற்பட்ட சேத விபரம் மதிப்பீடு

கொழும்பு, ஜூன் 25

பல்கலைக்கழக மாணவர்களின் கலவரத்தின்போது கல்வியமைச்சுக் கட்டடத்துக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட சேத விவரங்களின் மதிப்பீடு ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் சேத விவரங்கள் பற்றிய அறிக்கையொன்றைத் துரிதமாக சமர்ப்பிக்குமாறு கல்வியமைச்சின் செயலாளர் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு விடுத்த பணிப்புரைக்கமைய மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (த)

# விசாகப்பட்டணத்துக்கான வானூர்திச் சேவை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 25

இந்தியாவின் விசாகப்பட்டணத்துக்கான வானூர்திச் சேவைகளை மேலும் அதிகரிக்கப்படும் என்று சிறிலங்கா எயார்லைன்ஸ் வானூர்திச் சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக மேலதிகமாக நான்கு விமான சேவைகள் நடத்தப்படவுள்ளன. எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி முதல் விசாகப்பட்டணம் ஹைதராபாத் மற்றும் கொழும்புக்கு இடையில் இந்தச் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# விழிப்போடு இருந்து செயலாற்றுவோம்

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவது தொடர்பான சட்டம் ஒரு வழியாக இயற்றப்பட்டுவிட்டது. சுமார் ஒரு வருடகால இழுபறியின் பின்னர் இப்போது சட்டம் முழுமையடைந்திருக்கிறது. இந்தச் சட்டத்தின் ஊடாக அமைக்கப்படும் அலுவலகம் போர்க்குற்ற விசாரணைக்கு ஒருபோதும் வழிவகுக்காது என்று தெரிவித்து பெரும்பாலான சிங்கள மக்களுக்கு நிம்மதியளித்திருக்கிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

போர்க்குற்ற விசாரணைக்கு உதவாத, அதாவது எந்தவிதத்திலும் அரச தரப்புக்கோ அரச படையினருக்கோ பாதிப்பை ஏற்படுத்தாத ஒரு அலுவலகத்தை அமைப்பதற்கே ஒரு வருடத்திற்கும் மேலான காலத்தை இந்த அரசு எடுத்துக்கொண்டது என்பதிலிருந்தே அதன் நல்லிணக்கம் மீதான அக்கறையும் விருப்பும் வெளிப்பட்டுவிடுகிறது.

காணாமற்போனோரின் பிரச்சினை வடக்கு–கிழக்கில் எரியும் பிரச்சினையாக இருந்தாலும், மக்கள் வீதிகளிலே இறங்கிப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருந்தாலும் கொழும்பு அரசுக்கு அவையெல்லாம் இரண்டாம்பட்சம் என்பதைத்தான் இந்தச் சட்டம் முழுமைபெறுவதற்கு எடுத்துக்கொண்ட காலம் எடுத்தியம்புகிறது. அதாவது சிறுபான்மை மக்களின் நலன்களில் தாம் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தீவிரமாக இருக்கிறார்கள் என்றும் அரச தலைவரும் தலைமை அமைச்சரும் என்னதான் கூறிக்கொண்டாலும் கொழும்பைப் பொறுத்தவரையில் தமிழர்களின் பிரச்சினை என்பது இரண்டாம்பட்சம்தான்.

இந்த அணுகுமுறைக்கூடாகத்தான் காணாமற்போனோர் தொடர்பான சட்டமும் இயற்றப்பட்டது. இந்த அலுவலகத்தில் சிறப்பு வழக்குத் தொடுநர்களை உள்ளடக்குமாறு தமிழர் தரப்பில் வைக்கப்பட்ட யோசனை நிராகரிக்கப்பட்டது. அலுவலகம் பொருளாதாரச் சுயாதீனத்துடன் இயங்காதவாறும் முடக்கப்பட்டது.

இவற்றுக்குப் பின்னரும் இந்த அலுவலகம் ஏன் என்று கேட்டால், அதன் மூலம் கிடைக்கப்போகும் உருப்படியான பயன், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான முறையான, ஆதாரபூர்வமான தகவல்களைத் திரட்டிக்கொள்ள முடியும் என்பதுதான்.

இன்று வரையில் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முழுமையான தகவல்கள் எவையும் இல்லை. அரச அலுவலகங்களின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டவர்கள் காணாமற்போயிருக்கிறார்கள், என்றொரு குற்றச்சாட்டு உண்டு. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவோ தன்னிடம் சிங்களவர்களையும் உள்ளடக்கி காணாமற்போனோர் தொடர்பில் 19 ஆயிரம் முறைப்பாடுகள் உள்ளன என்று தெரிவிக்கிறது.

ஆனால், இவற்றில் அறுதியான இறுதியான தரவுகள் எவையும் இல்லை. அந்தத் தரவு சேகரிக்கும் உருப்படியான நடவடிக்கை ஒன்றுமட்டுமே இப்போது அமைக்கப்படவுள்ள காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் ஊடாகக் கிடைக்கப்போகும் நன்மை. யார்யார் காணாமற்போனார்கள், எந்தச் சந்தர்ப்பத்தில் காணாமற்போனார்கள், அவர்கள் காணாமற்போனமைக்கு யார் காரணம், ஒட்டுமொத்தமாக எத்தனை பேர் காணாமற்போனார்கள் என்பன போன்ற தரவுகள் இந்த அலுவலகத்தின் ஊடாக வெளிவரும்.

இதைத் தாண்டி இந்த அலுவலகத்தினால் பெரிதாக எந்தப் பயனும் இல்லை. இந்த அலுவலகம் போர்க்குற்ற விசாரணைக்கு ஒருபோதும் வழிவகுக்காது என்று ரணில் விக்கிரமசிங்க சொன்னதைப் போலவே போர்க்குற்ற விசாரணைக்கும் காணாமற்போனவர்களைக் காணாமல் ஆக்கியவர்களைத் தண்டிப்பதற்கும் இந்த அலுவலகத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

ஆனால், இந்த அலுவலகத்தினால் திரட்டப்படும் தரவுகளை வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் பயன்படுத்துவதற்கு தடையேதும் இல்லை. அதாவது காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் கண்டடைவுகள் உள்ளூர் மற்றும் பன்னாட்டு நீதிமன்றங்களின் குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படலாம். அதற்கூடாகப் போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும். தமிழர்கள் விழிப்போடு இருந்து செயற்படுத்துவதன் மூலம் இதனைச் சாத்தியப்படுத்தலாம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்கனவே இந்த அலுவலகத்தை நிராகரித்திருக்கிறார்கள். பன்னாட்டு விசாரணை ஒன்றே தமக்கு வேண்டும் என்று குரல் எழுப்பி வருகிறார்கள்.

இத்தகைய நிலையில் இந்த அலுவலகத்தைப் பயன்படுத்தி அதன் தரவுகளுக்கு ஊடாக தமிழர்களுக்கு நன்மையைப் பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை அரசியல் மற்றும் சிவில் அமைப்புகள் முனைப்புடன் முன்னெடுக்கவேண்டும்.

# 'அரிசி' மாபியாக்கள்

## அரசின் அனுசரணையோடு மக்களைக் குடையும் தன்னிறைவற்ற ஆபத்துக்கள்

ஜ.எம்.ஐ. முபாறக்

பொருளாதாரப் பிரச்சினை காரணமாக நாடு இப்போது தடுமாறிக் கொண்டிருக்கிறது. அந்தத் தடுமாற்றம் மக்களை நேரடியான தாக்கத்துக்கும் உட்படுத்தியுள்ளது. வாழ்க்கைச் செலவினங்களின் அதிகரிப்பை கட்டமைத்துக்கொள்ள முடியாமலும் அவர்கள் பரிதவிக்கின்றனர். இந்த நிலையில் வெள்ள இடர், நாட்டின் ஒரு பகுதியில் உள்ள மக்களுக்கு மேலும் அதிகரித்த சுமையைத் தந்துள்ளது. இவற்றின் மேலாதிக்கமான உருவமாக 'பிளாஸ்டிக் அரிசி' விவகாரமும் தற்போது மக்கள் அடிமைத்தன வாசகமாக தோற்றம் கண்டுள்ளது.

### பிளாஸ்டிக் அரிசி கொடுத்த விம்பங்கள்

பிளாஸ்டிக் அரிசி என்றும், பிளாஸ்டிக் முட்டை என்றும், பிளாஸ்டிக் மரக்கறி என்றும் நிரூபணமற்ற மூலங்களை உடைய பலசெய்திக்கட்டமைவுகள் இணையச் சுவாரஸ்யங்களைத் தரும் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றன. உண்மை, பொய் குறித்தான ஊடாட்ட வெளி எமது சமூகத்தில் அருமைத் தன்மையோடு இருப்பதால் இவ்வாறு பரம்பலடையும் செய்திகள் அனைத்தையும் உண்மையெனவே நம்பும் நிலைமை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் அரிசி பற்றியதான செய்தியும் அவ்வாறானதொரு பரம்பலே.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை சமைத்தபோது சோறு அதிக பச்சைத் தன்மை கொண்டதாக இருந்ததை மக்கள் அவதானித்தனர். அது குறித்த பரீட்சார்த்த முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். தங்களாது தன்னார்ந்த சோதனை முடிவுகளின் படி அவை பிளாஸ்டிக் அரிசிதான் என்ற முடிவுக்கும் அவர்களுள் சிலரை உள்வாங்கிக் கொண்டுள்ளது. இது குறித்தான அவதானங்களை சுகாதார அமைச்சும், சதொச நிறுவனமும் மேற்கொண்டதுடன் இறக்குமதி செய்யப்படும் அரிசில் இருந்து 11 மாதிரிகளைச் சோதனைக்கும் அனுப்பியது. அரிசியை எரித்தும், நீரில் போட்டும் இரண்டு வகையான சோதனைகளை மேற்கொண்டனர். பரீட்சித்தலின் போது பிளாஸ்டிக் அரிசி எனில் தீப்பற்றும்; என்ற அவதானத்தையும், நீரில் போட்டால் மிதக்கும் என்ற அவதானத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தனர். ஆனாலும் அந்த இரண்டு எதிர்வுகூறல்களும் இடம்பெறவில்லை. அதன் அடிப்படையிலே அவை பிளாஸ்டிக் அரிசி இல்லை என்ற முடிவுக்கு சுகாதார அமைச்சும், சதொச நிறுவனமும் வந்துள்ளன.

### இரசாயனம் கலந்த அரிசி

ஆரோக்கியமான பயிரிடல் முறைமையின் கீழாக விளைகின்ற உள்நாட்டு அரிசியிலும், இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு அரிசியிலும் எவ்வாறு நஞ்சு கலக்கப்படுகின்றது. அவற்றிலிருந்து எவ்வாறான முறையில் அதிக இலாபம் ஈட்டப்படுகின்றது என்பதை அறிந்து அது தொடர்பிலும் விழிப்படைய வேண்டியது கட்டாயமாகும்.

அந்த அதிர்ச்சியான உண்மைப் பற்றியும் அதன் பின்னாலுள்ள ஊழல், மோசடிகள் பற்றியும் தான் இந்தக் கட்டுரை உங்களைத் தெளிவுபடுத்தப் போகின்றது. குறுகிய காலத்துக்குள் அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் முதலாளித்துவம் செய்கின்ற மனித குலத்துக்கு எதிரான அநியாயங்களுள் ஒன்றுதான் இந்த அரிசி விவகாரம். உண்மையில், அரிசியின் ஆரோக்கியம் என்பது மூன்று மாதங்களுக்குற்பட்டதாகும். மூன்று மாதங்களைத் தாண்டினால் அது பாவனைக்கு உதவாத ஆரோக்கியமற்ற அரிசாக மாறிவிடும். ஆனாலும் மூன்று வருடங்களைத் தாண்டியும் கெட்டுப் போகாமல் இருக்கக் கூடிய அரிசி வகைகள் எம்மிடையே உலாவருகின்றன. பிளாஸ்டிக் அரிசி எனச் சந்தேகிக்கப்பட்ட 'நெடிய நாட்டரியை' அரிசியை எடுத்துக்கொண்டால் அதன் பொதியில் உற்பத்தி ஆண்டு என்பது 2017 எனவும் காலாவதித் ஆண்டு 2019 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இரண்டு வருடங்களுக்கு அந்த அரிசி கெட்டுப் போகாதிருக்கும் என்பதே அர்த்தம். இந்தியாவில் இருந்து தருவிக்கப்படுவதான ஒரு சில அரிசி வகையும் இவ்வாறு இரண்டு வருட உத்தரவாதம் கொண்டதுதான். மூன்று மாதங்களுக்குள் பாவித்து முடிக்க வேண்டிய அரிசியை இரண்டு வருடங்கள் வரை பாவனைக்குரித்தாக்குவதற்கு ஏற்றவிதமாக இந்த அரிசி வகைகளில் அதீத ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய இரசாயன பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. அவையே அரிசியைக்கெட்டு விடாமல் பாதுகாக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை சமைத்த போது சோறு அதிக பச்சைத் தன்மை கொண்டதாக இருந்ததை மக்கள் அவதானித்தனர். அது குறித்த பரீட்சார்த்த முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். தாங்களாது தன்னார்ந்த சோதனை முடிவுகளின் படி அவை பிளாஸ்டிக் அரிசி தான் என்ற முடிவுக்கும் அவர்களுள் சிலரை உள்வாங்கிக் கொண்டுள்ளது. இது குறித்தான அவதானங்களை சுகாதார அமைச்சும், சதொச நிறுவனமும் மேற்கொண்டதுடன் இறக்குமதி செய்யப்படும் அரிசில் இருந்து 11 மாதிரிகளைச் சோதனைக்கும் அனுப்பியது.

### அரிசியின் கையிருப்பு

நெல் உற்பத்தியில் நாம் தன்நிறைவை அடைந்திருக்கிறோம். நடப்பாண்டினையும் தாண்டி அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரையாக நாட்டு மக்களின் பாவனைக்குத் தேவையான அளவு அரிசி கையிருப்பில் உள்ளது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி நடப்பாண்டில் 16 லட்சம் மெற்றிக் தொன் அளவுடைய அரிசி கையிருப்பில் உள்ளது. மேலும் பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட 10லட்சம் மெற்றிக் தொன் அரிசியும் இந்த எண்ணிக்கையுடனேயே சேர்கிறது. சிறு போகத்தில் இடம்பெறவுள்ள அறுவடையையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதன்படி 26 லட்சம் மெற்றிக் தொன் அரிசி கையிருப்பில் இருக்கும். முழு நாட்டுக்கும் மாதமொன்றுக்குத் தேவைப்படும் அரிசியின் அளவை நோக்கின் அது இரண்டு லட்சம் மெற்றிக் தொன்னாக அமைந்திருக்கும். ஆக. வருடம் ஒன்றுக்கு 24 லட்சம் மெற்றிக் தொன்களே தேவை. நடப்பாண்டில் ஆறு மாதங்கள் முடிந்துவிட்டதால் 12 லட்சம் மெற்றிக் தொன் அரிசி பாவனைக்குட்பட்டதாகிவிட்டது. இன்னும் 14 லட்சம் மெற்றிக் தொன் கையிருப்பில் உண்டு. தற்போது ஆரம்பமாகி இருக்கும் கால போகத்திலும் மேற்கொள்ளப்படும் அறுவடை மூலம் 2லட்சம் மெற்றிக் தொன் அரிசியை எதிர்பார்க்கலாம். ஆக. மொத்தமாக அடுத்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தையும் தாண்டி பாவிக்கக்கூடியதான அரிசி கையிருப்பில் உண்டு. இவ்வாறு அரிசி மேலதிகமாக இருக்கின்ற நிலையில், மூன்று லட்சம் மெற்றிக் தொன் அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எமது பாவனைக்கு மேலதிகமாக அரிசி கையிருப்பில் இருக்கின்றபோது ஏன் நஞ்சு கலந்த அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும்..? அரசு ஏன் இதற்கு அனுமதி வழங்க வேண்டும்…? என்பதான கேள்விகள் எழுகின்றன. அதற்குப் பதிலாக அரசின் ஊழல். மோசடித் தனங்கள் காரணமாக அமைந்துள்ளதையும் அவதானிக்க முடியும்.

### அரசின் அனுசரணை பெற்ற அரிசி மாபியாக்கள்

உழைக்கும் விவசாயிகளின் இரத்தத்தை உறிஞ்சும் கூட்டம் ஒன்று இன்று அரிசிநெல் வர்த்தகத்தின் ஏக போக உரிமையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அவர்கள் ஏற்படுத்தும் அரிசிக்கான செயற்கைத் தட்டுப்பாடே அரிசி விலைகள் தாறுமாறாக அதிகரிப்பதற்கான காரணம்.

குறிப்பாக பொலன்னறுவையில் இயங்கும் அரிசி ஆலைகளான நிப்புன. அரளிய மற்றும் நிவ் ரட்ன ஆகிய மிகப் பெரிய மூன்று அரிசி ஆலைகளின் உரிமையாளர்களிடமே நாட்டின் அரிசி வகைகளும், நெல் வகைகளும் தேங்கிக் கிடக்கின்றன. இந்தப் பிரதான மூன்று அரிசி ஆலைகளின் சொந்தக்காரர்களுள் ஒருவர் அரச தலைவர் மைத்திரிபாலவின் சகோதரர். இன்னொருவர் முன்னாள் அமைச்சர் மித்ரபால. இவ்வாறு அரசியல் பின்னணி கொண்டவர்களே முழு அரிசியையும் நிர்வகிக்கின்றனர். இவர்கள் விவசாயிகளின் உழைப்பினை உறிஞ்சி மக்களுக்கு விசத்தை ஊட்டும் விந்தைகளை விழிப்போடும் நொக்க வேண்டியிருக்கிறது.

இவர்கள் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நெல்லை 28 ரூபா முதல் 35 ரூபா வரை கொள்வனவு செய்தனர். அதை அரிசாக்கி ஒரு கிலோ அரிசை 64 ரூபா என்கின்ற மொத்த விலைக்கும் 75 ரூபா என்ற சில்லறை விலைக்கும் விற்பனை செய்ய முடியும். ஆனாலும் நெல் முழுவதையும் பதுக்கி வைத்து அரிசிக்கான செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி ஒரு கிலோ அரிசியின் விலையை 96 ரூபாவாக உயர்த்தியுள்ளனர். இதனால் சில்லறை விலை நிர்ணயம் என்பது 100 ரூபாவை எட்டியுள்ளது. இவ்வாறு நெல்லைப் பதுக்கி வைத்துக் கொண்டு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பாவனையாளர் சேவை அதிகாரசபை சட்டம் மற்றும் நெல் கொள்வனவு சட்டம் என்பன உள்ள போதும் அரசின் அனுசரணை கொண்ட மாபியாக்கள் என்ற வகையிலே எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

### அரிசி இறக்குமதியும் மோசடியும்

நடப்பாண்டில் மாத்திரம் அண்ணளவாக 30 கோடி கிலோ அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த அளவ்டானது முழு நாட்டு மக்களும் ஒன்றரை மாதங்களுக்கு உண்பதற்குப் போதுமான அளவாகும். இந்த 30 கோடி கிலோ அரிசியும் உள்நாட்டு அரிசுடன்தான் கலப்படம் செய்யப்பட்டு சந்தையில் விடப்பட்டுள்ளது. அது போக பாகிஸ்தான். இந்தியா போன்ற நாடுகளில் இருந்து முறையே பாசுமதி மற்றும் சைக்கிள் மார்க் போன்ற பொதி செய்யப்பட்ட அரிசி வகைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வாய் கிழியக் கூறி வரும் அரசியல் தலைமைகளின் அனுசரணையுடன்தான் இந்த இறக்குமதிச் செயற்பாடுகள் இடம்பெற்ற வருகின்றன.

### நெல்லை சேகரிக்கும் விதம்

மேற் குறிப்பிட்ட மிகப் பெரிய மூன்று அரிசி ஆலை உரிமையாளர்களுக்குத்தான் நெல்லை விற்கின்றோம் என்ற விடயங்கள் விவசாயிகளுக்குத் தெரியாது. நாடு முழுமையுமாக இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக இவர்கள் தரகர்களை வைத்திருக்கின்றனர். இந்தத் தரகர்களும் முன்கூட்டியே கொள்வனவுக்கான ஏற்பாடுகளைச் செய்து வைப்பதால் அவர்களே நெல்லைக் கொள்வனவும் செய்கின்றனர். இந்த அடிப்படையில்தான் அதிக தொகையான நெல் இந்த மாபியாக்களிடம் போய்ச் சேர்கின்றது.

விவசாயிகள் ஆரோக்கியமான நெல்லை உற்பத்தி செய்கின்றபோதிலும். மக்களின் உயிரைக் கொன்றாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற முதலாளித்துவத்தின் பணப் பசி அலங்காரங்களும், அரசியல்வாதிகளின் ஊழல் நாடகங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. நாட்டை உண்மையாக நேசிக்கின்ற. நாடு அபிவிருத்தியடைய வேண்டும் என்று விரும்புகின்ற அரசியல்வாதிகளிடம் அன்றி ஊழல். மோசடிமிக்க அரசியல்வாதிகளிடம் இருந்து இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் சிக்கிக் கிடக்கும்வரை இந்த அவல நிலைகள் தொடரவே செய்யும். மக்கள் விழித்தெழுந்தால் மாத்திரமே இந்த நிலையை இல்லாதொழிக்க முடியும்.

மக்கள் முடியுமானவரை உள்ளூரில் இயங்கும் சிறிய சிறிய ஆலைகளில் நெல்லையோ. அரிசியையே அதிகம் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும். நிதி பலம் இல்லாத ஆலைகளில் இருந்து வெளியாகும் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கும் முயற்சிக்க வேண்டும்.

### தீர்வு என்ன ?

இதற்கான தீர்வுகள் அரசின் கைகளில்தான் தங்கியுள்ளது. ஊடகங்களால் இந்த மோசடியை. ஆபத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தத்தான் முடியும். தெரியப்படுத்துவதன் மூலம் இந்த ஆபத்தில் இருந்து மக்களால் முழுமையாகத்தப்பித்துவிட முடியாது. ஆக. இந்தப் பிரச்சினைக்கு மக்களால் முழுமையான தீர்வைத் தேட முடியாது என்பதை உளமாரப் புரிந்துகொண்டு அரசு நடுநிலையோடான கண்டறிதல்களையும். நுகர்வோர் நலன் சாரந்த பாதுகாப்பு வெளிகளையும் கட்டமைக்க வேண்டும். வேறு எவராலும் இதற்குத் தீர்வை முன்வைக்க முடியாது என்பதை சிந்தனை பூர்வமாகப் புரிந்துகொண்டு அரிவி வியாபாரத்தின் மூலம் அமைச்சர்கள் பெற்று வருகின்ற கொமிஷனை நிறுத்த வேண்டும். உள்நாட்டு விவசாயத்தில் அபிவிருத்தியையும், சிறந்த [illegible] நிறைவை [illegible] வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

## இஸ்ரேலியர்களின் மனப்பான்மை குடாநாட்டிலும் அவசியமானதே

குடாநாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் தண்ணீர்ப் பிரச்சினை உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. ஏற்கனவே வறண்ட பகுதியென அடையாளம் காட்டப்பட்டுள்ள வடபகுதி மிகக் குறைந்த மழைப்பொழிவு காரணமாக மோசமான வறட்சிக்கு உள்ளாகிய நிலையில் காட்சியளிக்கின்றது. இங்குள்ள குளங்கள் யாவும் வற்றிய நிலையில் காணப்படுவதால் கிணறுகளின் நீர்மட்டமும் அடிமட்ட நில்லையை எட்டியுள்ளது. இதனால் பயிர்களுக்கு நீரைப்பாய்ச்சுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாடு விரைவில் பாலைவனமாக மாறிவிடும் எனவும் எதிர்வுகூறப்பட்டு வருகின்றது. ஆனால் இது தொடர்பாக குடாநாட்டு மக்கள் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. நடப்பது நடந்து முடியட்டும் என்கின்ற வழக்கமான மனோநிலையைத்தான் அவர்களிடம் காணமுடிகின்றது. வறட்சியான நிலை காணப்படுவதால் நாம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற மனப்பான்மை கூட மக்களிடம் காணப்படவில்லை. அவர்கள் வழக்கம் போன்று நீரை விரயம் செய்து வருவதைத்தான் காணமுடிகின்றது. மக்கள் தாமாகவே மாற்றத்தைக் கொண்டுவரும் வரை வேறு எவராலும் எதுவுமே செய்து விட முடியாது.

யூத மக்களுக்கென உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாடு கற்பாறைகள் நிறைந்ததும் மழைவீழ்ச்சி குறைந்ததுமான பிரதேசங்களைக் கொண்டது. இஸ்ரேல் மக்கள் பொறுப்புணர்வு மிக்கவர்கள் என்பதால் ஒரு சொட்டு நீரைக் கூட அவர்கள் விரயம் செய்வதில்லை. பெய்கின்ற மழைநீரின் ஒவ்வொரு துளியும் அவர்களால் சேமிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதால் வறட்சியை அவர்கள் வெற்றிகரமாகச் சமாளித்து வருகின்றனர். உலகிலேயே தரம் வாய்ந்த திராட்சைப் பழங்களும் அந்த நாட்டில்தான் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

யாழ். குடாநாடும் இஸ்ரேல் நாட்டை ஒத்ததான புவியமைப்பைக் கொண்டது. ஆனால் இங்க வாழ்கின்ற மக்கள் இஸ்ரேலிய மக்களின் குணவியல்புகளைக் கொண்டிராததால் பல விடயங்களில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாகத் தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இஸ்ரேலிய மக்களை முன்னுதாரணமாகக் கொண்டு நாம் செயற்பட்டால் வறட்சியையும் தண்ணீர்த் தட்டுப்பாட்டையும் எளிதில் சமாளித்துவிட முடியும்.

கா. கார்த்திகா
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்
குமார்லோஜினி கணேசன்

# நீரிழிவு நோயாளர்களில் ஏற்படும் வாய்க்குழி சம்பந்தமான நோய்கள்

நீரிழிவு எல்லா வயதினரையும் பாதிக்கக்கூடிய ஒரு நீண்டகால நோயாகும். அந்த வகையிலே இந்தக் கட்டுரையானது கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயாளர்களிடையே ஏற்படும் வாய்க்குழி சம்பந்தமான பிரச்சினைகள் (Complication) பற்றி பேசுகின்றது. சாதாரணமானவர்களை விடவும் கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயாளர்களிடையே வாய்க்குழி சம்பந்தமான நோய்கள் அதிகம் ஏற்படுகின்றன. பாதிக்கப்படும் வீதமும் அதிகரிக்கின்றது. பொதுவாக வாய்க்குழி மென்சவ்வே அதிகம் பாதிப்படைகிறது.


பற்களைத் தாங்கும் முரசு, என்பு, நாரிழையங்களில் ஏற்படும் அழற்சி (Periodontitis), உமிழ்நீர் சுரப்பு சுரத்தலின் பாதிப்பு (Gingivitis), உமிழ்நீர் சுரக்கும் அளவும் தன்மையும் மாறுதல், சுவையில் மாற்றம் ஏற்படுதல், பக்ரிறியா பங்கசுகளின் கிருமித் தாக்கம் என்பன பொதுவாக ஏற்படும் நோய்களாகும்.

மேலும் வாய்க்குழி மென் சவ்வில் காயங்கள் (Oralmucosal Lessions), வாய்க்குழியில் கிருமித் தொற்று (Stomatitis), நாக்கின் மேற்பகுதியில் சில மாறுதல்கள் (Geographic tongue/ Benign Migratory Glossries), நாக்கின் வெடிப்புக்கள் (Fissured tongue), வாய்க்குழி மென்சவ்வில் வெண்மையான பகுதிகள் தோன்றுதல் (Lichenplanus, lichenoid reactions), கடைவாய்ப் பகுதியில் கிருமித் தாக்கம், காயங்கள் குணமடைவதில் தாமதம், மென்சவ்வின் நரம்பு உணர்ச்சிகளில் பாதிப்பு ஏற்படுத்தல் பற்சொத்தை, பற்கள் இழந்து போவதற்கான வாய்ப்புக்கள்

> நீரிழிவு நோயாளர்களில் குறிப்பாக வகை 2 இனை சார்ந்தவர்களில் கன்ன உமிழ்நீர்ச் சுரப்பியின் பாதிப்பால் உமிழ்நீர்ச்சுரப்பு வீதம் குறைவடைந்து வாய் உலர்தல் ஏற்படுகிறது. இது அதிகமாக 'டயபிற்றீஸ் நியூறோப்தி' உள்ள நோயாளர்களிடையே காணப்படுகிறது. வாய் உலர்தல் காரணமாக அடிக்கடி அதிக தண்ணீர் அருந்துவதனால் சிறுநீர் போக்கு என்பது அதிகமாகக் காணப்படும்.

என்பனவும் நீரிழிவு நோயாளர்களில் ஏற்படுகின்றன.

பற்களை தாங்கும் இழையத்தில் ஏற்படும் கிருமித் தொற்றுக்கு பக்ரீறியாவே பிரதானமான காரணமாக விளங்குகிறது. இவை முரசு நார் இழையம், பல் என்பு என்பவற்றைப் பாதிக்கும் ஒரு நீண்டகால நோய்க் காரணிகளாக காணப்படுகின்றன. மைக்றோ பளோறா (Miclro Flora) எனப்படும் நுண் அங்கிகளால் உருவாகும் நச்சுப் பதார்த்தமானது முரசுப்பகுதியில் தாபிதம் (Inflammation) ஏற்படக் காரணமாக அமைந்துவிடுகிறது.




ஆகவே நாளாந்தம் பற்களில் ஏற்படும் படிவுகளை தூரிகைகள் கொண்டு அகற்ற வேண்டும். இவை அகற்றப்படாவிடின் முரசு அழற்சி ஏற்பட்டு பற்களை தாங்கும் இழையத்துக்கும், பற்களுக்கும் இடையே இடைவெளிகள் (Pockets) ஏற்பட்டு பற்களில் இருந்து பற்தாங்கிழையம் விடுபட்டு விலகிட வாய்ப்புகள் அதிகம் ஏற்படுகிறது. இந்த இடைவெளிகளுள் பக்ரீறிரியாக்களும், வெளிவரும் நச்சுப் பதார்த்தங்களும் (Toxin) தேங்கிக் காணப்படுகின்றன. இதனால் அதிகளவான கிருமித் தொற்றுகள் பற்றாங்கிழையத்தில் ஏற்படுகின்றன. இந்த செயல்நிலைகள் நாரிழையம், பல் எலும்பு என்பனவற்றை அழித்து பற்களை இழக்க வேண்டிய நிலைமைகளை ஏற்படுத்துகின்றன. நீரிழிவு நோயாளர்களில் எதிர்ப்புச் சக்தி குறைவடைவதால் நுண்ணங்கிகளின் தாக்கம் அதிகரிக்கின்றது. இதனால் புண்கள் குணமடைவதில் தாமதம் ஏற்படுவதுடன் பல்தாங்கும் இழையங்கள் கூடுதலாக அழிவடைகின்றன. நீரிழிவு நோயாளிகள் ஏனையவர்களைவிடவும் மூன்று மடங்கு முரசு நோய் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

## உமிழ்நீர்ச்சுரப்பியில் ஏற்படும் பாதிப்பு

சுகாதாரமான வாய்க்குழியை பேணுவதில் உமிழ்நீர்ச்சுரப்பி பெரும் பங்கினை வகிக்கின்றது. பிரதானமான உமிழ்நீர் சுரப்பிகளாக கன்ன உமிழ்நீர்ச்சுரப்பி, கீழ்த் தாடை உமிழ்நீர்ச்சுரப்பி, நாக்கீழ் உமிழ் நீர்ச்சுரப்பி என்பனவும், இதனை விட 'மைனர் சல்வரி கிளண்ட்ஸ' (Minor Salivary Glands) என்று சொல்லப்படுகின்ற சிறிய உமிழ்நீர்ச்சுரப்பிகளும் வாய்க்குழியில் காணப்படுகின்றன. நீரிழிவு நோயாளர்களில் குறிப்பாக வகை 2 இனை சார்ந்தவர்களில் கன்ன உமிழ்நீர்ச்சுரப்பியின் பாதிப்பால் உமிழ்நீர்ச்சுரப்பு வீதம் குறைவடைந்து வாய் உலர்தல் ஏற்படுகிறது. இது அதிகமாக 'டயபிற்றீஸ் நியூறோபதி' (Diabetes Neuropathy) உள்ள நோயாளர்களிடையே காணப்படுகிறது. வாய் உலர்தல் காரணமாக அடிக்கடி அதிக தண்ணீர் அருந்துவதனால் சிறுநீர் போக்கு என்பது அதிகமாகக் காணப்படும்.

தொடர்ச்சியான வாய் உலர்தலினால் வாய்க்குழி மென்சவ்வில் உராய்வுகள் ஏற்பட்டு கிருமித் தொற்றும், வலியும் ஏற்படுகிறது. வாய்குழியின் நடுநிலைத்தன்மையை இந்த செயல்நிலைகள் பாதிப்பதுடன் பற்சொத்தையை ஏற்படுத்திவிடுகின்றன. மேலும் இருபக்க கன்ன உமிழ்நீர்ச் சுரப்பியின் வீக்கம் (Sjalosis) நீரிழிவு நோயாளர்களிடையே அதிகம் காணப்படுகின்றது.


## சுவை மாற்றம்

அநுசேபத்திலும், அகச்சுரப்பிகளிலும், உமிழ்நீர்சுரப்பிகளிலும் ஏற்படும் மாறுதலானது சுவை உணர்ச்சிகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. நீரிழிவு நோயாளர்களிடையே 'ரேஸ்ற் திறஸ்கோல்ட்' (Taste Threshold) அதிகமாகக் காணப்படுவதால் சுவை உணர்வில் மாற்றம் ஏற்படுகின்றது. இவை உணவுக் கட்டுப்பாட்டினை சரியான முறையிலே கடைப்பிடிக்காத சந்தர்ப்பங்களிலும் ஏற்படுகின்றது.




## கிருமித் தொற்று

'கன்டிடா அல்பிகன்ஸ்' (Candida albicans) எனப்படும் பங்கசுத் தொற்று கன்னங்கள், நாக்கு, முரசு, அண்ணம் என்பவற்றில் அடிக்கடி ஏற்படுகின்றது. பக்ரீறிரியாக்களின் தொற்றானது எதிர்ப்புச் சக்தி குறைவான வர்களிலேயே அதிகம் ஏற்படுகிறது. 'டீப் நெக் இன்பெக்சன்' (Deep Neck infection), முகத்தாடை இடைவெளிகளில் கிருமித் தொற்று (Maxillo Fecial space infection of odoodntogenic origin) என்பன நீண்டகாலம் நோய் தொற்றுகளாகும். வைத்தியசாலையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.





## பங்கசுத்தொற்று அல்லாத வாய்க்குழி நோய்

நீரிழிவு நோயாளர்களின் நாக்கில் ஏற்படும் வெடிப்புகள், என்பன பங்கசு தொற்றல்லாத நோய்களாகும்.

## வாய்ப்புண் குணமடைவதில் தாமதம்

நீரிழிவு நோயாளிகளில் புதிய குருதிக்கு ழாய்கள் உருவாவதில் தாமதமும், குருதி வழங்கல் செயன்முறையில் பாதிப்பும் ஏற்படுவதுடன், எதிர்ப்புச் சக்தியின் வளர்ச்சிக் காரணிகளும் அவர்களிடத்தில் குறைவடைகின்றன. இதனால் வாய்க்குழியில் ஏற்படும் புண்கள், சத்திரசிகிச்சையின் பின் காயங்கள் குணமடைதல் என்பன தாமதமடைகின்றன.

## வாய்க்குழி மென்சவ்வில் ஏற்படும் நோய்கள்

(Oral Mucosal Diseases)

அடிக்கடி வாயில் புண்கள் (Recrrent aphthous Stomatis) Lichen Plans), 'லிச்சன் பிளன்ஸ்' (Licham Planus) என்பன பொதுவாக நீரிழிவு நோயாளர்களில் ஏற்படுகின்றன. வாய்க்குழி மென்சவ்வில் ஏற்படும் 'லிச்சம் பிளபனஸ்' (Licham Planus) ஆனது தோல் சம்பந்தமான ஒரு நோயாகும். இது கூடுதலாக வகை ஒன்றிற்குரிய நீரிழிவு நோயாளர்களிடையே காணப்படுகின்றது.

## வாயில் ஏற்படும் நரம்பு உணர்ச்சி பாதிப்புக்கள் ( Neuro senory oral Disorders)

பேர்னிங் மவுத் சின்றம் (Burning mouth Syndrome) எனப்படுகின்ற வாய் எரிவு நோயானது வலிமிகுந்த நோயாகும். அண்ணம், நாக்கு, தொண்டை, முரசு எல்லாவற்றையும் இந்த நோயானது பாதிக்கின்றது. இதனோடு இணைந்து வித்தியாசமான உணர்வுகளான கூச்சம், விறைப்புத் தன்மை, வாய் உலர்தல், (Soremouth) என்பனவும் ஏற்படுகின்றன. இந்த உணர்வுகள் 'டயபிற்றீஸ் நியூறோபதி' (Diabetes Neuropathy) உள்ள நோயாளர்களிடையே அதிகம் காணப்படுகிறது.

வாய்க்குழி சம்பந்தமான பிரச்சினைகள் கட்டுப்பாடில்லாத நீரிழிவு நோயாளர்களிலேயே அதிகம் ஏற்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்யக் கீழ்வரும் நற்சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிடித்தல் சாலச் சிறந்தது.

01. பற்சுகாதாரத்தை பேணுதல்.
02. ஒழுங்கான வைத்திய ஆலோசனைகளையுமம், சிகிச்சைமுறைகளையும் பெறல்.
03. கட்டுப்பாடான உணவுப் பழக்க வழக்கங்களை பேணுதல்.
04. உடற்பயிற்சி செய்தல்.
05. மன அழுத்தமுள்ளவர்கள் உளவளத் துணை அல்லது அது சார்ந்த சிகிச்சை முறைகளைப் பெற்றுக் கொள்ளல்.
06. ஆரோக்கியத்தை மேலும் மேம்படுத்தும் யோகாசனம், தியானப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல்.

பற் சத்திரசிகிச்சை நிபுணர்,
யாழ் போதனா வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 25.06.2017

# ஈழம் என்பது ‘தனிநாடு’ அல்ல தனி ஒரு ‘நாடு’









கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரன்

‘ஈழம்’ என்ற பதம் இந்து சமுத்திரத்தில், இந்தியாவிலிருந்து தென்கிழக்குத் திசையில், கடலால் சூழப்பட்டவண்ணம் அமைந்திருக்கும் தனி ஒரு தீவைக் குறிப்பதாகும். ஆனால் இந்தச் சொல் அந்தத் தீவில் தமிழர்கள் செறிந்து வாழும் வடபுலத்தை மாத்திரமே குறிக்கின்றது என்று எண்ணங்கொள்ளத்தக்க மாயை ஒன்றுக்கு இப்போது அத்திபாரமிடப்பட்டுள்ளது. தமிழர்கள் இந்தத் தீவுக்கு உரித்துடையவர்கள், சிங்களவர்கள் வந்தேறு குடிகள் எனும் வரலாற்று உண்மையைத் தகர்ப்பதற்காகக் கையிலெடுக்கப்பட்டிருக்கின்ற மற்றுமொரு மூலத் தோற்றுவாய் என்ற கருத்துக்களும் இல்லாமலில்லை. இதன்படி முழுத் தீவையும் சுட்டும் ஈழம் என்ற அந்தச் சொல் இப்போது அழியப்போகும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

'ஈழம்' என்ற சொல்லாடல் பற்றிய இத்தகைய கருத்துநிலை இன்று திடீரெனத் தலையெடுத்ததன்று. அது நீண்டகாலமாகவே சிங்கள அறிஞர்களால் தவறான கொள்கை, விளக்கங்களுடனேயே நோக்கப்பட்டு வருகின்றது. பிற்காலங்களில் அவை அவர்களிடமிருந்து சில மக்கள் குழுமங்களுக்கும் கடத்தப்படத் தொடங்கின. அவையே இன்று இராணுவப் புலனாய்வாளர்கள் வரைக்கும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளன.

**இன்றும் வழக்கிலிருக்கும் ஈழம்**

முன்பு 'இலங்கை வானொலியின் வர்த்தக சேவை' எனும் பெயரில் இயங்கி வந்த அரச ஊடகம் "தமிழுக்கு அமுதென்று பெயர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நிகர்" (பாரதிதாசன்) போன்ற தமிழுணர்வுப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மறுத்திருந்தது.

ஆனால் அதே வானொலி 'ஈழத்துப் பாடல்கள்' என்று தலைப்பிட்டு ஈழத்துக் கலைஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட மெல்லிசைப் பாடல்களைத் தொடர்ந்தும் ஒலிபரப்பி வந்தது. 'ஈழம்' என்ற சொல் அன்று வரைக்கும் முழு நாட்டையும் குறிப்பதாகவே இருந்தது. அதற்கு முன்பும் அதுவே நிலை. அப்படியிருக்கத் திடீரென்று, இன்று அது ஏன் புறக்கணிக்கப்படுகின்றது...? என்று ஆராய்ந்தால் இது 'தமிழ் ஈழம்' என்ற தனிநாட்டுக் கோரிக்கை ஏற்படுத்திச் சென்றுள்ள பொருள் மயக்க நிலை எனவும் கொள்ளலாம்! அதாவது விடுதலைப் புலிகள், ஈழம் என்று குறிப்பிடப்படும் இந்த முழுநாட்டின் ஒரு பகுதியாகவே தமிழ் மக்களுக்கான தனி நாடாகத் 'தமிழீழத்தை' வேண்டி நின்றனர். அதன் மூலம் பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே ஏற்படுத்தப்பட்ட 'ஈழம்' பற்றிய தவறான புரிதலே இதற்குக் காரணமாக இருக்கலாம்!

**வடக்கு மாத்திரம் ஈழம் அல்ல**

ஈழம் என்ற சொல் தமிழர் வாழும் பிரதேசம் என்பதே பெரும்பாலனவர்களின் கருத்தாகும். இதனால் 1975கள் தொடங்கி மெது மெதுவாக இந்தச் சொல்லின் பாவனையைத் தவிர்க்க வேண்டும் என்ற கொள்கைகள் எழுதாத சட்டங்களாகச் சிங்கள அதிகாரிகள் மத்தியில் உருவாகின. முதலில் அதன் பிரதிபலிப்பை வானொலி நிகழ்ச்சிகள், நாடகங்கள், உரைச் சித்திரங்கள் போன்றவற்றிலும் கொழும்பிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளிலும் அவற்றுக்கு ஏற்படுத்தப்பட்ட மறைமுகமான தடைகளில் இருந்தும் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனாலும் 'தமிழீழம்' என்று விடுதலைப் புலிகள் வரிந்த கொள்கையின் பின்னரே 'ஈழம்' என்ற சொல்லுக்கான எதிர்ப்பு அதிகரித்தது எனலாம். அதேசமயம் இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போன்ற பல அரசியல் கட்சிகள் ஈழம் எனும் பதத்தைத் இன்றுவரைத் தரித்திருந்தாலும் அவற்றின் கொள்ளைகள், செயற்பாடுகள் விடுதலைப்புலிகள் போன்றோ, தமிழ் மக்களுக்குச் சாதகமாகவோ இருக்காத காரணத்தாலும் தொடர்ந்தும் அவை சிங்கள அரசுகளைச் சார்ந்து இயங்குவதாலும் அவற்றிலுள்ள ஈழம் எனும் பதம் இன்னமும் யாருக்கும் உறுத்துவதாக இல்லை. அதைப்போன்றதே அரச பாடத்திட்டத்தின்படி பாடசாலைகளில் போதிக்கப்படும் ஈழத்துச் சிவாலயங்கள், ஈழத்து ஆலயங்களின் நிலைமையும்.

**அன்றிருந்த ஈழம்**

புவிக் கோளத்தில் மேலே கூறிய அமைவிடத்தில் திட்டாகவிருக்கும் தீவு, ஈழம் என்றே ஆரம்பங்களில் பெயர் தரித்திருந்தது. இது புராணங்கள், காப்பியங்களில் இருந்து வெளிப்படுவது. தேவாரங்கள் பதிகங்களில் அதிகம் குறிப்பிடப்பட்டிருப்பது. ஈழம் எனும் பழந்தமிழ்ச் சொல்லின் பயன்பாட்டை இவற்றிலுள்ள ஏராளம் வரலாற்றுச் சான்றாதரங்களைக் கொண்டு நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.




தென்னிந்தியத் தமிழ் இலக்கியகாரர் கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைச் சங்க காலம் என்கின்றனர். அந்தக் காலத்தில் இங்கிருந்து அங்கு சென்று தமிழ் வளர்த்த ஒருவராகப் பூதந்தேவனார் எனும் புலவரைக் குறிப்பிடு கின்றனர். அவர்கள் அவரை வெறுமனே பூதந்தேவனார் என்று குறிப்பிடவில்லை. அவர் ஈழத்திலிருந்து அங்கு சென்ற காரணத்தால் 'ஈழத்துப் பூதந்தேவனார்' என்றே குறிப்பிடுகின்றனர். தென்னிந்தியர்களின் இந்தக்கூற்றுப்படி சங்ககாலத்தில் இந்த நாடு 'ஈழம்' என்றே அழைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலையிலுள்ள ஒரு பாடல்

*ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,*
*அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,*
*வளம் தலைமயங்கிய நனந் தலை மறுகின்*
*நீர் நாப்பண்ணும் நிலத்தின் மேலும்*
*ஏமாப்ப இனிது துஞ்சி.* என்றமைகின்றது.

இந்தப் பாடலில் வரும் 'ஈழம்' ஒரு எடுத்துக்காட்டு. பள்ளுப் பாடல்கள், சிந்துகள் போன்றவற்றிலும் இவ்வாறாக ஏராளமான குறிப்புக்களுள்ளன.

இந்தத் தீவு பழங்காலத்தில் ஈழம் என்றே அறியப்பட்டது. பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்பட்ட ஈழம் பற்றிய குறிப்புக்கள், சொற்கள் மேற்படித் தீவின் தென்மையைக் காட்டி நிற்கின்றன. பழந்தமிழ் மன்னர்களால் வெளியிடப்பட்ட சாசனங்களும் ஈழம் அல்லது ஈழ மண்டலம் என்ற பெயரையே பயன்படுத்தியுள்ளன. ஆக ஈழம் என்பது இந்தத் தீவைக்குறிக்கும் புரதானசொல் என்பது உறுதி.

ஈழம் எனும் பழந்தமிழ்ச் சொல்லின் பயன்பாட்டை இவற்றிலுள்ள ஏராளம் வரலாற்றுச் சான்றாத ரங்களைக் கொண்டு நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

**ஈழமும் தமிழீழமும்**

முழு நாட்டையும் குறிக்கின்ற புரதான பெயரான ஈழத்துடன் தமது இன அடையாளத்தைப் புகுத்தி 'தமிழீழம்' என்ற சொற் பிரயோகத்தை விடுதலைப் புலிகள் உருவாக்கினர்.


இன முரண்பாடுகள் அதிகம் கூர்மையடையாதிருந்த காலத்தில் ஈழகேசரி, ஈழநாடு போன்ற செய்திப் பத்திரிகைகளின் பெயர்களும் பிரபலம் பெற்றன. நாட்டில் இன வேறுபாடுகள் விரிவடையத் தொடங்கியதும் அரசியல் அரங்கிலிருந்தவர்கள் தமிழர் வாழும் பகுதிகளைக் குறிக்கப் புலிகளின் 'தமிழீழம்' என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர். இலங்கையில் தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலைப்புலிகள் முன்வைத்தபோதே இவர்கள் மத்தியில் ஈழத்துக்கும் தமிழீழத்துக்குமான பெயர்களில் இருந்த மயக்க நிலை ஆரம்பமாகியிருக்க வேண்டும்! காலப்போக்கில், பேச்சு வழக்கிலும், சிங்கள இனத்தவர் மத்தியிலும் 'தமிழீழம்' சுருங்கி ஈழம் ஆகியது. பின்னர் முழு நாட்டின் பெயரும் புலிகள் வேண்டிநின்ற தனி நாட்டின் பெயரும் ஒன்றாகியது. ஒரு காலத்தில் முழு இலங்கைத் தீவையும் குறிக்கப் பயன்பட்ட சொல், இதன்போது அதன் ஒரு பகுதியை மட்டுமே குறிக்கும் சொல்லாக அவர்கள் மத்தியில் மாறியது. இப்போதும் அதுவே இவர்கள் மனங்களில் நீடிக்கின்றது. இவை எல்லாவற்றையும் தாண்டி இந்தத் தீவு இப்போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என்றாகிவிட்டது. ஆனந்த சமரக்கோன் என்பவரால் சிங்களத்தில் அதன் தேசிய கீதமும் இயற்றப்பட்டது. தமிழ் மொழியில் அது பின்னர் மு.நல்லதம்பிப் புலவர் என்பவரால் மொழிபெயர்க்கவும் பட்டது. அதில்

"ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே" என்பதாகஇன்றுவரை ஈழம் எனும் இந்தத் தீவின் புரதான பெயர் தொடர்ந்தும் மிளிர்ந்து கொண்டேயிருக்கின்றது.



இலங்கையில் தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலைப்புலிகள் முன்வைத்தபோதே இவர்கள் மத்தியில் ஈழத்துக்கும் தமிழீழத்துக்குமான பெயர்களில் இருந்த மயக்க நிலை ஆரம்பமாகியிருக்க வேண்டும்! காலப்போக்கில், பேச்சு வழக்கிலும், சிங்கள இனத்தவர் மத்தியிலும் 'தமிழீழம்' சுருங்கி ஈழம் ஆகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.எஸ்ஸின் பிடிக்குள் சிக்கித் தவிக்கிறது மாராவி

பிரகாஸ்

பிலிப்பைன்ஸின் மாராவித் தீவு, கடந்த சில வாரங்களாகப் பன்னாட்டு அரங்கில் பேசுபொருளாக மாறியுள்ளது. அமைதியும் இயற்கை எழிலும் நிறைந்திருந்த அந்தத் தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடிக்குள் தற்போது சிக்கியுள்ளது. மாராவியை மீட்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது பிலிப்பைன்ஸ். அங்கு, இரண்டு தரப்புகளுக்கும் இடையே கடந்த ஒரு மாத காலமாக மோதல்கள் நடைபெறுகின்றபோதும் மாராவிக்காக இரண்டு தரப்புக்களும் இன்னமும் மல்லுக்கட்டிக் கொண்டேயிருக்கின்றன.

**மாராவி ஐ.எஸ்ஸின் இலக்கானதேன்?**


பல தீவுக்கூட்டங்களைக் கொண்டநாடாகபிலிப்பைன்ஸ் உள்ளது. இங்கு கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சம அளவில் வாழ்கின்றனர். முற்றுமுழுவதும் இஸ்லாமியச் சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் என்று அங்கு தோன்றியுள்ள சிறுசிறு ஆயுதக் குழுக்கள் பலவும் வலியுறுத்துகின்றன. மாராவித் தீவு கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் தீவு என்று அறியப்படுகிறது. எனவே அந்தத் தீவில் இருந்துதனது ஆக்கிரமிப்பை ஆரம்பித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. மாராவியை மீட்பது மிகவும் இலகு. ஆனால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தம்முடைய பாதுகாப்புக்காகச் சில கிறிஸ்தவப் பாதிரியார்கள் மற்றும் பொதுமக்களையும் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். எனவே அவர்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை உள்ளதால் பிலிப்பைன்ஸ் அரச படைக்கு மாராவியை மீட்பது கடினமாக உள்ளது.

> இங்கு கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சம அளவில் வாழ்கின்றனர். முற்றுமுழுவதும் இஸ்லாமியச் சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் என்று அங்கு தோன்றியுள்ள சிறுசிறு ஆயுதக் குழுக்கள் பலவும் வலியுறுத்துகின்றன. மாராவித் தீவு கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் தீவு என்று அறியப்படுகிறது. எனவே அந்தத் தீவில் இருந்து தனது ஆக்கிரமிப்பை ஆரம்பித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ்.



**மாராவி என்பது மற்றொரு மோசூலா?**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உலகின் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே ஆதிக்கம் செலுத்துகின்ற போதிலும் ஈராக்கின் மோசூல், சிரியாவின் ரக்கா ஆகிய நகர்களே அந்த அமைப்பின் செல்வாக்குக்கு உட்பட்ட முக்கிய இடங்களாகச் சொல்லப்படுகின்றன. ஈராக், சிரியா ஆகிய இரண்டு நாடுகளையும் இணைத்து ஆளும் முயற்சி யிலேயே அந்த அமைப்பு ஐ.எஸ். ஐ.எஸ். என்ற நாமத்தைக் கொண்டுள்ளது. இதில் மோசூல் நகர் ஐ.எஸ்ஸிடமிருந்து கிட்டத்தட்ட மீட்கப்பட்டு விட்டாயிற்று. மோசூலில் ஐ.எஸ். மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கள், அட்டூளியங்கள் போன்றன மாராவியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாராவியில் இருந்து மீட்கப்பட்ட ஒரு சில இடங்கள் இதற்குத் தக்க சான்றாக அமைகின்றன. நகர்ப்புறச் சுவர்கள், கட்டடங்கள், வீடுகள், குடியிருப் புத் தொகுதிகள் என்று பல இடங்களிலும் ஐ.எஸ்ஸின் கறுப்பு வெள்ளைக் கொடி வரையப்பட்டுள்ளது. இதைப் பல பன்னாட்டு ஊடகங்கள் ஆவணப் படுத்தியுள்ளன.



**போதையுடன் தீவிரவாதம்**

போதைப் பொருள் பாவனையில் மிகவும் மோசமான நிலையில் இருந்தது பிலிப்பைன்ஸ். அந்த நாட்டின் அதிபர் தேர்தல் கடந்த வருடம் மத்திய பகுதியில் நடைபெற்றது. தனது தேர்தல் பரப்புரையில் போதைக்கு எதிரான பல்வேறு திட்டங் களை முன்வைத்தார் அதிபர் றொட்றிகோ டுடேர்தே. காலத்தின் தேவை கருதி மக்கள் தமது தலைவராக அவரைத் தெரிந்தெடுத்தனர். பதவியேற்ற காலம் முதல் பல்வேறுபட்ட அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் டுடேர்தே.

போதைப் பொருளுடன் பாவனையாளர்கள், விற்பனையாளர்கள், தரகர்கள், போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் கண்டதும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். போதையின் பிடியில் இருந்த அந்த நாடு டுடேர்தேயின் அதிரடித் திட்டங்கள் மற்றும் நகர்வுகள் மூலம் படிப்படியாக அதிலிருந்து மீண்டு வருகிறது என்று எதிர்பார்க்கையில் தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அந்த நாட்டின் ஒரு சிறு பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

அதிரடி நகர்வுகளை அசால்டாக மேற்கொள்ளும் டுடேர்தே. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பையும் சும்மா விட்டுவிடவில்லை. தனது கட்டளைக்கு உட்பட்ட இராணுவ ஆட்சியை மாராவியில் அறிவித்துள்ளார். கூடுதல் படைகள் அங்கு குவிக்கப்பட்டுள்ளன. இதுவரை நேரெதிராகத் துப்பாக்கிச் சூடு நடத்தியே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது வான் தாக்குதல்களும் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**ரஷ்யா - சீனா உதவிக்கு வரலாம்!**

மாராவி மீட்பில் தனக்கு உதவி செய்யுமாறு இதுவரை பிலிப்பைன்ஸ் எந்த நாட்டையும் அழைக்கவில்லை. அவ்வாறு அழைப்பு விடுத்தால், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் உதவிக்கு வகை கூடிய சாத்தியக்கூறு மிகவும் அதிகமாக உள்ளன.

இராணுவத் தளபாடங்களின் இருப்பில் பிலிப்பைன்ஸ் சொல்லிக் கொள்ளும்படியான வலிமையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அது பல்வேறுபட்ட நாடுகளின் முக்கிய விடயங்களில் துருப்புச்சீட்டாக உள்ளது. உதாரணமாகத் தென்சீனக் கடல் பிராந்தியத்தைச் சீனா சொந்தம் கொண்டாடுகிறது. அந்தப் பகுதியை பிலிப்பைன்ஸ், தாய்வான், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் சொந்தம் கொண்டாடுகின்றன. இதனால் தென்சீனக் கடல் பிராந்தியத்தில் தனது ஏக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்குச்சீனாவுக்குப் பிலிப்பைன்ஸின் ஆதரவு தேவை.

அதேபோல் தனது உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே விரும்பவில்லை. பிலிப்பைன்ஸ் இதுவரை காலமும் அமெரிக்காவிடம் இருந்தே இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்து வந்தது. ஆனால் அதை முறித்துக்கொண்டு ரஷ்யாவுடன் தற்போது ஒப்பந்தம் செய்துள்ளது. இதனால்பிலிப்பைன்ஸுடனான உறவைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய தேவை இராணுவப் பலமிக்க நாடுகளான சீனா மற்றும் ரஷ்யாவுக்கு உள்ளது. இதனால் இவை மாராவி மீட்பில் பிலிப்பைன்ஸுக்கு உதவலாம். ஆனால் இயலுமான வரை தனது படைகளையே வைத்து அதைச் சாதித்துவிட எத்தனிக்கிறார் டுடேர்தே.

ஒப்பீட்டளவில் மாராவி, சிரியாவின் ரக்கா போன்றோ அல்லது ஈராக்கின் மோசூல் போன்றோ மிகவும் கவலைக்கிடான நிலையில் இல்லை. மாராவி ஒரு சிறிய தீவு என்றபடியால் ஐ.எஸ்ஸின் ஆதிக்கம் பரவலாகாமல் பார்த்துக்கொள்ளலாம். எனினும் தற்போதுள்ள ஒரே ஒரு கேள்வி மாராவி எப்போது மீளும்...? என்பதே. தனது நட்பு நாடுகளான சீனாவையும், ரஷ்யாவையும் டுடேர்தே உதவிக்கு அழைப்பாரா? என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தவார முகநூலில்...



உசிலமணி

எவருமே எதிர்பார்க்காத வகையில மாகாணசபைப் பிரச்சினை முடிஞ்சுது. அந்தப் பிரச்சினையை அவை கடிதம் அனுப்பித் தீர்த்தாங்கள். ஆனாலும் 'பேஸ்புக் போராளிகள்' இந்தப் பிரச்சினையை இன்னமும் பினைஞ்சு கொண்டிருக்கிறாங்கள். மைடியர் சாம்...! அன்புடன் விக்னேஸ்...! என்று இருவரும் விளித்து எழுதினதை வைச்சுக் கலாய்க்கிறாங்கள். இந்த வயசிலையும் இருவரும் அன்பைப் பரிமாறுறாங்கள். ஆனால் சில பேர் அதைப் புரியாமல் அடிபடுகுதுகள் என்று நொந்து கொள்ளுறாங்கள்.



Like Comment Share



வடக்கு மாகாணசபைப் பிரச்சினையில றொம்ப அடிவாங்கின ஆளாகச் சி.வி.கே.தான் இருந்தார். அந்த மனுசன் சிரிச்சுக் கொண்டு பிரேரணை கொடுத்ததிலிருந்து, அந்தாளின்ர அந்தக் காலம் வரையில கிளறி எடுத்து வதைச்சாங்கள் 'பேஸ்புக் போராளிகள்'. இதுக்குள் அந்தாள் இருக்கிற ஆசனம் மூன்று வருசத்தில மூன்று மாத்திப் போட்டுது எண்டதையும் விட்டு வைக்கேல்ல. இதுபோதாதெண்டு அந்தாளின்ர பதவியைப் பிடுங்க வேண்டும் என்று சில 'பேஸ்புக் போராளிகள்' கொடுக்குக் கட்டினாங்கள். அந்தாளோ தான் உதுக்கெல்லாம் அசர்ற ஆளில்லை எண்ட மாதிரி, வியாழக்கிழமைச் சபையைக் 'கப்சிப்பா' நடத்திச்சுது.

Like Comment Share



உந்த மருத்துவபீடப் பெடி, பெட்டையள், அடிக்கொரு தடவை சைட்டத்துக்கு எதிராப் போராட்டம் நடத்துறதும் அவங்களும் இவையளை அடிச்சுக் கலைக்கிறதும் வேலையாப் போச்சுது. ஆனா இந்தமுறை பெடி, பெட்டையள் சுகாதார அமைச்சுக்குள்ளையே புகுந்திட்டுதுகள். அவங்கள் வழமைய மாதிரி அடிச்சுக் கலைச்சாங்கள். அந்தப் புடுங்குப் பாட்டுக்குள்ள எடுக்கப்பட்ட புகைப்படம் வலைத் தளத்தில பலராலையும் வறுத்தெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில கலந்து கொண்ட பிக்குவை, எஸ்.ரி.எவ்.காரன் கையெடுத்துக் கும்பிடுற படம்தான் அது. எத்தனையோ ஆக்களை அடிச்சு துவைச்ச அவங்கள், பிக்கு எண்டதும் கையெடுத்துக் கும்பிடுறது, நாட்டில எப்படிப்பட்ட ஆட்சி நடக்குது எண்டதைக் காட்டுறதாக அதைப் பகிர்ந்த எல்லாரும் அலட்டிக் கொண்டாங்கள்.

Like Comment Share

இத்தினை சர்சைக்குள்ளையும், பெரியதொரு பொழுதுபோக்க மிஸ் பண்ணிட்டினம் கனபேர். இந்தியாக்காரரை இழுத்து வைச்சு அடிச்சுக் கலைச்சுப் போட்டாங்கள் பாகிஸ்தான்காரர் எண்டு இந்தியாக்காரரை, இலங்கை ரசிகர்கள் முகநூல் முழுக்க கழுவிக் கழுவி ஊத்துறதுதான் அது.

(அடுத்த வாரம் சந்திப்பம்)






# கணினி நச்சு நிரல்கள்

சி.சிவபாலன்

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்பார்கள். இது உணவை உதாரணமாகக் கொண்டு நல்ல பல விடயங்களைத் தெளிவுபடுத்த உவமைகொண்ட முதுமொழி. அதுவே தற்காலத்தில் கணினிகளுக்கும் பொருந்துகின்றது. கணினியிலும் 'நஞ்சைக்' கலந்து அதன் ஆற்றலை மழுங்கடித்து வருகிறார்கள் சிலர். நாம் 'கணினி வைரஸ்' என அறிந்திருக்கும் விடயமே தமிழில் 'நச்சு நிரல்கள்' என அழைக்கப்படுகின்றன.

மின்னாமல் முழங்காமல் பெய்யும் மழை போல இந்த நச்சுக்கள் சொல்லாமல் கொள்ளாமல் எமது கணினிகளுக்குள் புகுந்து கணினியின் செயற்பாடுகளைப் பாதிக்கச் செய்வதுடன் அவற்றைச் செயலிழக்கச் செய்யவும் கூடும்.

### 'வைரஸ்' எனும் தாக்கம்

'வைரஸ்' என்பது மனிதனைப் பொறுத்தவரை தொற்றக் கூடிய ஒரு கிருமியாகும். ஆனால் கணினிகளைப் பொறுத்தவரை கணினிகளின் இயக்கத்துக்கு உயிர்நாடியாக உள்ள மென்பொருள்களைப்போல இதுவும் ஒரு மென்பொருளாகும். அதாவது கணினிகளை இயக்குவதற்குப் பலவகை மென்பொருட்களை நாம் பயன்படுத்துகிறோம். இவை கணினிகளின் இயக்கத்துக்குத் தேவையான கட்டளைகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் நச்சு நிரல்கள் கணியின் செயற்பாட்டைப் பாதிக்கச் செய்யும் கட்டளைகளைக் கொண்டவையாகவே இருக்கின்றன. இந்த நச்சுநிரல்களைத் தயாரிப்பவர்கள் கணினிமொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். போட்டி நிறுவனங்களின் தகவல்களைப் பெறுவதற்காகச் சிலரும், எதையும் குழப்பி வேடிக்கை பார்ப்பதற்காகச் சிலரும், நச்சு நிரல்களுக்கு எதிரான மென்பொருட்களைத் தயாரித்து, விற்று இலாபம் பெறுவதற்காகச் சிலரும் இதனைத் தயாரிப்பதாகச் சொல்லப்படுகிறது.

### நச்சு நிரல்களின் வீரியம்

பாதுகாப்பற்ற இணையப் பாவனையாளராக இருப்பின் அவற்றினூடாக நச்சு நிரல் கணினிகளுக்குப் பரவக்கூடும். நச்சுநிரல்களைத் தயாரிக்கும் சிலர் இணையத் தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யும் இணையப்பக்கங்களினூடாகவும் கணினிகளுக்குள் இவற்றை நிறுவிவிடுகினறனர். அத்துடன் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குத் தகவல்ளை மாற்றும்போதும் இவை பரவக்கூடும். அதாவது நச்சு நிரல்களால் பாதிக்கப்பட்ட கணினிகளிலிருந்து தகவல்களை எடுத்துச்சென்று மற்றொரு கணினியில் பயன்படுத்தும்போது அந்தக் கணினியிலும் நச்சுநிரல்கள் நிறுவப்பட்டுவிடுகின்றன. நச்சுநிரல்கள் தாமாகவே தம்மை நகலெடுத்துத் தகவல்களுடன் சேர்ந்து பரவும் தன்மையைக் கொண்டவையாக இருப்பதால் இது சாத்தியமாகிறது. பல்வேறு வகையில் செயற்படும் வெவ்வேறு வகையான நச்சுநிரல்கள் உள்ளன. இவை வேறுவேறு விதமாகச் செயற்பட்டு கணினிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாகக் கணினிகளின் வேகம் குறைவடையவோ அல்லது கணினிகள் அடிக்கடி தாமாக இயக்கத்தை நிறுத்திக் கொள்ளவோ கூடும். வலையமைப்புகள் பாதிப்படையும். மென்பொருட்கள் சரிவரச் செயற்படாது போகலாம். புதிய மென்பொருட்களை நிறுவ முடியாதுபோகலாம்.

### நச்சு நிரல்களின் கபட வேலைகள்

நச்சு நிரல்கள் பல்வேறு வகையில் செயற்படுகின்றன. சில நச்சு நிரல்கள் கணினியில் இரகசியமாக இருந்துகொண்டு கணினியிலுள்ள தகவல்களை உளவுபார்த்து நச்சு நிரலைத் தயாரித்தவர்களுக்கு அனுப்பி வைக்கும் செயற்பாட்டைச் செய்கின்றன. சில கணினியிலுள்ள தரவுகளைப் பிரதியெடுத்து அதேபோன்ற பல கோப்புக்களை நிறுவுவ தால் கணினியின் சேமிப்பகங்கள் நிரம்பி அவை இயங்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. சில நச்சு நிரல்கள் தரவுகளை அழிக்கும் செயற்பாட்டைச் செய்கின்றன.

### பாதுகாப்பான வழிமுறைகள்

நச்சு நிரலிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குக் கணினிகளில் நச்சுநிரல் காப்பு மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை நாம் நிறுவிக்கொண்டால் இவை கணினியிலுள்ள தேவையற்ற செய்நிரல்களை அடையாளம் கண்டு அவற்றை நீக்கிவிடுகின்றன. அல்லது செயலிழக்கச்செய்கின்றன. பெரும்பாலும் இவற்றைப் பணம் செலுத்தியே கொள்வனவு செய்யவேண்டும். சில, இணையத்தளங்கள் ஊடாக இலவசமாகவும் கிடைக்கின்றன. பணம்செலுத்திப் பெறப்படும் இவ்வகை 'அன்ரி வைரஸ்கள்' குறிப்பிட்ட காலத்துக்கே பயன்படுகின்றன. பின்னர் மீண்டும் பணம் செலுத்தி அவற்றைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டியிருக்கும். இவை புதிய புதிய நச்சு நிரல்கள் வரும்போது அவற்றைக் கண்டுபிடிக்கத்தக்க வகையில் இணையத்தினூடாக இற்றைப்படுத்தப்படுகின்றன. இணையப் பாவனையாளர்கள் கட்டாயமாக இந்த நச்சுநிரல் காப்பு மென்பொருள்களைக் கணினியில் நிறுவிக்கொள்ள வேண்டும். அத்துடன் பொதுப் பாவனையிலுள்ள கணினிகளுக்கும் இது அவசியமாகும். 'வருமுன் காப்போம்' என்பதுபோல கணினிகளைக் கொள்வனவு செய்யும்போது நச்சுநிரல் காப்பு மென்பொருள் ஒன்றை நிறுவிக்கொள்வதே அதி சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தேவிபரமலிங்கம்





# சிறுவர்களில் அக்கறை கொள்வோம்



**சிறுவர்கள் யாவர்...?**

சிறுவர் என்றால் ஆண்களிலும், பெண்களிலும் ஏறத்தாழ 15 வயதுக்கு உட்பட்டவர்களை மட்டுமே குறிப்பிட முடியும். அதற்கப்பால் அவர்களை இளைஞர்கள், யுவதிகள் என்றே கொள்ள வேண்டும். குழந்தையாய் இருக்கும் இருபாலாரும் 5வயதுக்கு அப்பாற்பட்டதும் வளரிளம் பருவத்தை அடைகின்றனர். அப்போது தொடங்கி அவர்களுக்கான கல்வி அறிவூட்டல் என்பது ஆரம்பிக்கப்படுகின்றது. எமது நாட்டில் என்றில்லாமல் உலக முழுமையுமாக இந்த விடயங்கள் நடந்த வண்ணமே உள்ளது.

அப்பொழுதில் இருந்தே அவர்களின் மூளை சகல விடயங்களையும் தேடவும் கற்கவும் விளைகின்றது.

அதன் குறியீடாகவே 'இளமையிற் கல்' எனும் முதுமொழி தமிழில் பன்நெடுங்காலமாக இருந்து வருவதை நாம் அறிவோம்.

இதன் காரணமாகவே கல்விஅறி வூட்டும் வயதை இளம் வயதாக கல்வி சார் உலகம் நிர்ணயம் செய்துள்ளது. ஆகவேதான் கல்வியைச் சிறுவயதில் இருந்தே வழங்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருப்பதைப் பரவலாகக் காண முடியும். அதேவேளை முதியவர்களுக்கான கல்வி, இரவு நேரப் பாடசாலை என்றெல்லாம் இருக்கின்றபோதும் அவை ஊடாகக் கல்வியைப் பெற்று பதவிகள் பட்டங்களை எவரும் பெற்றதாக நாம் அறிய முடியவில்லை. அதனாலேயே கற்றலுக்கு உரிய வயதாக இளவயதை உலகம் முழுமையுமாக உள்ள கல்விக் கூடங்கள் பின்பற்றி வருகின்றன.

**சிறுவர்களின் குணாம்சங்கள்!**

சிறு பராயத்தில் சிறுவர்களின் குணாம்சங்கள் ஒன்றாக இருப்பதில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இருப்பதை அவதானிக்கிறோம். ஒருசிலர் மிகவும் அமைதியாகவும் சிந்தனையு டன் அது வயப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.



வேறு சிலர் 'துரு துரு' என ஏதாவது செய்து கொண்டே இருப்பார்கள். இன்னும் சிலர் விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்பார்கள். அதுபோல் மற்றவர்களைச் சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பவர்களாகவும் இருப்பர். அதேவேளை அமைதியாக இருப்பவர்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டு இருப்பவர்களையும் பார்க்கலாம்.

இவ்விதம் சிறுவர்கள் பலவிதமான குணாம்சங்களுக்கு உட்பட்டவர்களாக வளர்வதைத் தடுக்கவும் முடிவதில்லை. இதனாலேயே அவர்கள் வளர்ந்த பின்பாக பல்வேறு பட்ட கோணங்களைக் கொண்ட மாந்தராக சமுதாயத்தில் திகழ்கின்றனர். இவற்றில் இருந்து மாறுபட்ட குணாம்சத்தைக் கொண்ட ஒரு சிலரே தமது வேலை, படிப்பு என்னும் ஊக்கத்துடன் அந்த வயதினரிடையே தனித்துவம் உடையவர்களாக காணப்படுவதை அவதானிக்கலாம். இவர்கள் தவிர்ந்த ஏனைய குணாம் சங்களைக் கொண்டவர்கள் வளர்ந்து சமுதாயத்தில் முன்னேற்றகரமான தொழில், வளம் போன்றவற்றை பெற்றிடாது கீழ்மட்ட வாழ்வாதாரமுடைய வாழ்வியலில் உட்புகுந்து உழல்வதையும் நாம் அறிவோம். ஆனாலும் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்பாக முற்று முழுதாகத் தம்மை முன்பிருந்த நிலையிலிருந்து விடுவித்து வாழ்க்கையில் முன்னேறிய வர்களும் இருக்கின்றனர். என்றாலும் 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்ற கூற்றுக்குப் பொருத்தமுடையவர்களாக அதிகளவான சிறுவர்கள் பிற்கால வாழ்க்கையில் பின்னடைவைக் கொண்டவர்களாகவே உருவாகின்றனர்.

**ஆராய்வும் அதற்கடுத்ததைத் தேடும் வேகமும்**

சிறுவர்களின் இதயம் மென்மையானது. அதேவேளை காற்றின் போக்கில் பறக்கும் பஞ்சு போன்று எல்லா இடமும் அலைந்து கொண்டிருக்கும் தன்மையுடையது.

சிறுவர்களின் கண்களில் காணப்படுகின்ற பொருள்கள் எல்லாம் அவர்களது உள்ளத்தில் ஏற்றத்தாழ்வில்லாமல் ஒரே தன்மை உடையதாக விளங்குவது ஒன்றும் விந்தையில்லை. அவர்களின் பார்வையில் அல்லது உணர்வுகளில் சகலமும் ஒன்றாகவே காணப்படுகின்றது அல்லது உணரப்படுகிறது.

அதனால் எந்தப் பொருள்களைக் கண்டாலும் அதில் அவர்களுக்கு விருப்புணர்வு ஏற்படுகிறது. அவற்றின்பால் அவர்களது மனங்கள் கவரப்படுகின்றன. அது விளையாட்டுப் பொருளாக இருக்கட்டும், வினையை ஏற்படுத்தும் ஆபத்தான, அபாயகரமான பொருளாக இருக்கட்டும் எந்தப் பொருளாக இருந்தாலும் அவர்களின் மனங்களை அவை இயல்புறுதியால் கவர்ந்து விடுகின்றன.

அவற்றைப் பகுப்பாய்ந்து இது ஆபத்தான பொருள், இது அலங்காரப் பொருள், மென்மையான பொருள்களை வேறுபடுத்தி உணராமல் சகலதையும் ஒரே விதமாக நோக்கி அணுகுகின்ற பாங்கே சிறுவர்களிடம் விகுதியாக உள்ளது.

அதனால் அவற்றைச் சிறுது நேரம் வைத்திருந்தோ, விளையாடி விட்டோ கைவிட்டு வேறொன்றை நாட முற்படுகின்றனர். திரும்பவும் முன்பு வைத்திருந்த பொருளைக் காண்கையில் அவற்றின் செயற்பாடுகளை ஆராய முற்படுகின்றனர். தன்னுடைய ஆர்வமிகுதியோடு மனதில் தோன்றும் வன்முறைச் செயற்பாடுகளுக்கு உருக்கொடுத்து அவற்றை உடைத்து அந்நீதம் செய்து விடுவதையும் காணலாம்.

அதுபோலவே கற்றல் உபகரணங்களான பேனா, பென்சில், கொப்பி, கலர்ப்பெட்டி, புத்தகங்கள் அனைத்திலும் அவர்களின் மூளையின் வேகத்துக்கு ஏற்றவாறு செயற்பாடுகளைப்பிரயோகித்து உடைத்தோ, கிளித்தோ அவற்றை சிறுபிள்ளைத்தளம் கொண்டு வீண் விரயம் செய்வதை காண்கின்றோம். இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சிறுவர்கள் ஓரிரண்டு தடவைகளில் அவற்றில் திருப்தி அடைந்து தம்மைத் திருத்திக் கொள்வதும் உண்டு. அல்லாமல் அந்த குணாம்சங்களை வளர்த்துக் கொண்டு வாழ்க்கையில் அவர்கள் சீரழிவதையும் காண்கின்றோம்.

**சிறுவர்களை மகிழ்வூட்டும் விடயங்களைக் கண்டறிதல்**

குடாநாட்டைப் பொறுத்தமட்டில் சிறுவர்களை மகிழ்வூட்டும் காரண காரியங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. 30 வருடங்களாக எமது மண்ணில் நடந்து முடிந்துள்ள போர் அதற்குக் காரணமாகச் சொல்லப்படலாம். சிறுவர்களை மகிழ்வூட்டக் கூடியதான தளங்கள், களங்கள் புதிதாக உருவாக்கப்படாமையும் இதற்கான காரணங்கள் ஆகின்றன.

சிறார்களை மகிழ்ச்சி ஊட்டக் கூடியதான பொழுது போக்கு அம்சங்கள் மற்றும் விந்தை, விசித்திரம் வாய்ந்த கலைக் கூடங்கள்; அருங்காட்சி அகங்கள் அதிகம் இல்லாமையும் இதற்குக் காரணங்களே. இங்குள்ள நூலகங்கள் பலவும் சிறுவர்களுக்கான நூல்களையோ, காட்சிப்படுத்தல்களையோ பெரிதாகச் செய்துவதில்லை. மேலும் சிறுவர்களை மகிழ்ச்சி ஊட்டக் கூடிய பூங்காங்கள், பொழுதுபோக்கிடங்கள், அவர்களைக் களிப்பூட்டத் தகுந்த நிகழ்ச்சிகளின் வெளி என்பன வடபகுதியைப் பொறுத்தமட்டில் நூற்றுக்கு ஐம்பது வீதம் கூடத் தேறவில்லை.

ஆயினும் சிறுவர்கள் காலையில் எழுந்து படிப்பது, பாடசாலைகள் சென்று வந்த பின்னரும் மீட்டல் வகுப்புக்களுக்கு உட்படுத்தப்படுவது. தனியார் கல்வி நிலையங்களில் பயிற்றப்படுவது போன்ற விடயங்களில் எந்தச் சளைப்பும் இருப்பதில்லை. இதனால் ஒருவகைச் சுமையானது அவர்கள் மீது பெற்றோராலும், மற்றோராலும் சுமத்தப்ப டுகின்றது. மகிழ்ச்சி என்பது அவர்கள் மனதில் இடம்பிடித்துக் கொள்ளத் தவறிவிடுகின்றது.

> குடாநாட்டைப் பொறுத்தமட்டில் சிறுவர்களை மகிழ் ஹுட்டும் காரண காரியங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. 30 வருடங்களாக எமது மண்ணில் நடந்து முடிந்துள்ள போர் அதற்குக் காரணமாகலாம். சிறுவர்களை மகிழ்ஹுட்டக் கூடுமான தளங்கள், களங்கள் புதிதாக உருவாக்கப்படாமையும் காரணங்கள் ஆகின்றன.

ஏனைய மாகாணச் சிறுவர்களோடு வட மாகாணச் சிறுவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்களுக்கு வழங்கப்படுகின்ற நெருக்கடிகளுக்கும், மன மகிழ்ச்சிக்கும் இடையே எப்படிப்பட்ட சமநிலை நிலவுகின்றது என்பதை உய்த்துணர முடியும். ஒரு காலத்தில் கல்வியில் முன்னிலை வகித்த வடபகுதி மாணவர்களிடம் பின்னடைவு ஏற்பட தற்காலச் சூழலில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியற்ற, நெருக்கடியான நிலமைகளே பிரதான காரணங்களாகும். ஆகவே சிறுவர்களிடத்தே கல்வி, மூளை வளர்ச்சியை ஏற்படுத்துவதாயின் அதற்கு மகிழ்ச்சி நிறைந்த காரணிகளைப் பசளையாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சினிமா



ஈழத்திலிருந்து வெளிவருகின்ற திரைப்படங்களின் வரிசையில் இது ஒரு புதிய கதைக்களமாகவும், புதிய அழகியல் பார்வைகொண்டதாகவும் இருக்கின்றது. இதுவே படக்குழுவின் வெற்றியாகவும் அமைந்துள்ளது.

# மூக்குப்பேணி

## நம்பிக்கை தரும் சினிமா

சி.ப.வேந்தன்

வெற்றி தோல்வி என்கிற விளிம்புகளுக்குள்இயக்குநர்கள் மாறிமாறிச் சுழல்கையில் அதன் விஸ்தீரத்தைக் கடந்து யோசிக்கின்ற, எளிமையாய்க் கடந்து வெளியேறுகின்ற, அதன் வார்ப்புக்களை சுக்கலாக உடைக்கின்ற அதிசயம் தமிழில்நிகழவில்லை. சூழலும்உட்பரப்புகள் விரிவடைகின்றனவே அன்றி அதனால்சிலஎல்லைகள்விரிவடைவதில்லை. (வெற்றிடத்திலிருந்து எழும் குரல் - செழியன்)

தம்மால் வெளியிடப்படும் சினிமாவின் மூலம் உலக சினிமாவில் எப்படியாவது, சிறிதளவான ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்துவிடவேண்டும் என்றும், சினிமா உலகில் தங்கள் பெயரை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்னும்முனைப்போடும் இயக்குநர்கள்தமது படைப்புக்களைப் புதிது புதிதாக உருவாக்குவதுண்டு.

உலக சினிமாவிலும் சரி உள்ளூர்ச் சினிமாவிலும் சரி வர்த்தக ரீதியாகவோ, கலை ரீதியாகவோ அல்லது தொழில்நுட்ப ரீதியாகவோ ஏதாவதொரு வகையில் எல்லோரையும்திரும்பிப்பார்க்கவைத்துவிடவேண்டுமெனும்நோக்கிலும் படைப்பாளிகள் இயங்கு நிலை பெறுகின்றனர். சில வேளைகளில் இந்த விடயங்கள் கைகொடுக்கின்றன, பல சந்தர்ப்பங்களில் சறுக்கியும்விடுகிறன. புகழ் பெற்றவர்களுக்கும் சரி, புதியவர்களுக்கும் சரி சமயங்களில் இது நிகழ்ந்துவிடுகிறது. எப்படியாயினும் இத்தகைய நோக்கம் காரணமாகச் சில காத்திரமான படைப்புக்களும் அவ்வப்போது தோன்றி வரலாற்றில் இடம்பிடித்து விடுகின்றன.

ஈழத்தமிழ் சினிமா உச்ச வளர் நிலையை இதுவரையிலும் அடையாது விட்டாலும் அதுகூடஇவ்வகைப்பரீட்சார்த்தங்களுக்கு உட்பட்டே தொடர்கின்றது. இங்கே படைக்கப்படுகின்ற குறுந்திரைப்படங்களுக்குள்ளேயே எல்லாப்படைப்பாளிகளும் எப்படியெப்படி எல்லாம் தங்களுடைய படைப்புக்களில் மாற்றங்களையும், வித்தியாசங்களையும்கொண்டுவர முடியுமோஅவ்வளவுக்கு முயற்சிக்கின்றனர். தென்னிந்தியசினிமாப்பரப்பைப்போலவே இங்கும்; பரவலாகப் பல சினிமாக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. காதல், கற்பனை, விஞ்ஞானம், நகைச்சுவை, சண்டை, சரித்திரம் என ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த விடயங்களை அணுகிச்சினிமாக்களைஉருவாக்கிக்கொண்டிருக்கின்றனர். இவற்றுள்சிலவித்தியாசமாகவும்மாற்றுச் சினிமாவுக்கான நகர்தலோடும் தம்மை அடையாளப்படுத்தியும் வருகின்றன.

### மாற்றுச் சிந்தனையில் கதைத்தெரிவு

அந்த வரிசையிலே எம்மிடமிருந்து அருகிப்போய்விட்டபண்பாடு, பழக்கவழக்கம், மூதாதையரின் வாழ்க்கைமுறை என்பவைகள் மாறிவரும்நவீன உலகில், வழக்கிலிருந்து அமிழ்த்தப்பட்டுள்ளன.

அவற்றுள்ஒன்றான மூக்குப்பேணிஎனும் தண்ணீர்குடிக்கப்பயன்படுத்தப்படும்பாத்திரத்தை மையமாகவைத்து அதனூடே பழமையையும், புதிய தலைமுறையையும்இணைக்கும்புள்ளியில்கதைசொல்கிறது 'மூக்குப்பேணி'திரைப்படம்.

பிரசன்னா, மச்சிந்திரகுமாரி, புவனேஸ்வரன், சபாரட்ணம், நிருஜன், பிரசாத், சஞ்சீவன், நிருபன், ரமணன் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இசை முரளி. படத்தொகுப்பு சிவராசன். ஒளிப்பதிவு டயஸ். எழுதி இயக்கியிருக்கிறார் எஸ். ராகவன்.

### கதைச் சுருக்கம்

குடியிருப்புக்கள் அடுக்கடுக்காக இருக்கும் கிராமத்துத் தெருவொன்றில் 'பழைய அலுமினிய, பித்தளைப் பாத்திரம் இருக்கா...' எனக்கூவியபடி பாவனைக்குதவாத பொருள்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரிஒருவன்வருகிறான். பாடசாலை விடுமுறைக்காமலாதலால் ஊரளந்து கொண்டு திரியும் சிறுவர் பட்டாளம் தங்களதுவீடுகளில்இருக்கின்றபழையமூக்குப் பேணி களைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அதற்குப்பதிலாக வியாபாரி கொடுக்கும் விளையாட்டுப்பொருள்களை வாங்கிக்கொண்டு செல்கிறார்கள்.

அவர்களில்மூக்குப்பேணிகொண்டுவராத கதையின் நாயகனான சிறுவன் சின்னா, தன்னுடைய நண்பர்களுக்கு கிடைத்த விளையாட்டுப்பொருள்களை ஆசையுடனும், ஏக்கத்துடனும், பார்க்கின்றான். பார்த்துவிட்டுத் திருப்பித் தருவதாகக் கேட்டும் அவனுக்குத் தம்முடைய விளையாட்டுப்பொருள்களைக் கொடுக்க ஒருவரும் முன்வரவில்லை. 'விரும்பினால், நீயும் ஒரு மூக்குப்பேணியக் குடுத்து வாங்கு' என்றுவிட்டுச்செல்கிறார்கள். வீடுதிரும்பும் சிறுவன் எப்படியாவது வீட்டுக்குத்தெரியாமல் அங்கிருக்கும் மூக்குப்பேணியைக்கொடுத்துப் புதிய விளையாட்டுப் பொருள் வாங்கிவிடவேண்டுமென்று நினைக்கிறான்.

படிக்கச்சொல்லித் தாய் பேச புத்தகத்தோடு இருந்தவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. மூக்குப்பேணியை எப்படியாவது தேடி எடுத்துவிடவேண்டுமென்பதிலேயே குறியாக இருக்கிறான். தாய் சந்தைக்குப் போகும்வரையிலும் காத்திருந்து மேலே பரணில், பழைய சாமான்களுடன் இருக்கும் மூக்குப்பேணியை ஒருவாறு எடுத்து ஒளித்துவைத்துக்கொண்டுவியாபாரிக்காகக் காத்திருக்கிறான். பின்பொரு தடவை அவன் வரும்போது தாயாருக்கு தெரியாமல் மூக்குப்பேணியைக் கொடுத்து அதற்குப்பதிலாக ஒரு விளையாட்டுத் துப்பாக்கியை வாங்கிக்கொள்கிறான்.

ஒருமுறைசின்னாவினுடையதாத்தாமிகுந்த களைப்பாலும், நோயாலும்துடித்தபடிசின்னாவிடம் மூக்குப்பேணியில் குடிக்கத் தண்ணீர்வார்த்துத்தரும்படிஅவஸ்தைப்பட்டுக் கேட்கிறார். சின்னா ஓடிச்சென்று இல்லாத மூக்குப்பேணியைத் தேடுவது போல்தேடுகிறான். அதற்குள் தாத்தா உயிரிழந்துவிடுகிறார். திரும்பிவரும் சின்னா 'மூக்குப்பேணி இருந்திருந்தால் தாத்தாவுக்குத் தண்ணி குடுத்திருக்கலாம், தாத்தா செத்துப்போயிருக்கமாட்டார்'எனஎண்ணுகின்றான். அந்தச்சம்பவம் அவனதுதூக்க ராத்திரிகளைசலனமுறச்செய்கிறது. அடுத்தநாள் சின்னா ரியுசனுக்குப் போகும் வழியில்அவனதுநண்பன் ஒருமூக்குப்பேணியுடன் பழையபொருள் வாங்கும் வியாபாரிக்காகக்காத்திருக்கிறான். அதைக்கண்ட சின்னாதன்னிடமுள்ளவிளையாட்டுத்துப்பாக்கியை அவனிடம்கொடுத்துவிட்டு அவனிடமுள்ள மூக்குப்பேணியைத் தான் வாங்கிக்கொண்டு செல்கிறான். 'தாத்தாக்குத் தண்ணி குடுக்க மூக்குப்பேணி இருக்கு' எனத்தனக்குள்சொல்லிக்கொண்டுசெல்ல திரை கருமை நிறங்கொண்டு இருளடைகிறது.

### பொறுப்புணர்வும் அழகியலும்

மூக்குப்பேணியின் பயன்பாடு மலையேறிக்காலங்கடந்துவிட்டபிறகும்எமதுமூதாதையரின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லும் அடையாளப்பொருள்களில் மூக்குப்பேணியும் ஒன்று. அதைப் பழையபொருளாகப் பரணில் கட்டிப்போடும் பெரியவர்கள் அவை பற்றி அடுத்த தலைமுறைக்குத் தெரிவிக்க தவறிவிடுகின்றனர். நம்மில் எத்தனை பேர் எமது மூதாதையர்களின் அடையாளங்களைச்சேகரித்துவைத்திருக்கிறோம். குறைந்தபட்சம்எத்தனைபேர்எம்முடைய நாலாம் தலைமுறையினரின் ஒன்றிரெண்டு பெயர்களையாவது தெரிந்து வைத்திருக்கின்றோம். அப்படியான கேள்விகளுக்கு கிடைக்கும் திருப்தியில்லாத பதில்களைஎதிர்காலத்தில்திருப்தியானதாக மாற்றமுயற்சித்திருக்கிறது மூக்குப்பேணி. பேசவேண்டிய முக்கியமான கருப்பொருளைத் தெரிவுசெய்த இயக்குநர் அதைத் திரைக்கதையாக மாற்றுவதில் சரியான திருப்பங்களைக்கொடுக்கத்தவறிவிட்டார். குழந்தையின்(சிறுவனின்)எண்ணத்திலிருந்து பார்க்கும்போது மூக்குப்பேணி இல்லாததால் தாத்தா இறந்ததையும், அதன் தேவையையும் சுட்டியிருப்பதை ஏற்றுக்கொண்டாலும் அதைவிட வேறொரு(பெரியவர்களுக்குமான) முக்கியமான திருப்பத்தைகதையில்இணைத்திருக்கலாமோ! என எண்ணத் தோன்றுகிறது. ஆனாலும் பழையவர்களதுபேச்சுவழக்கில்'தண்ணி கொண்டு வா' என்பதை விட 'மூக்குப்பேணியில் தண்ணிகொண்டு வா' எனும் சொல்லாடல்கூடுதலாகப்புழக்கத்தில் இருப்பதாலும், சிறுவர்களும்சொல்லும்செயலை மாத்திரம்செய்யும்பண்புகொண்டவர்கள் என்பதனாலும் இதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஈழத்திலிருந்து வெளிவருகின்றதிரைப்படங்களின்வரிசையில் இது ஒரு புதிய கதைக்களமாகவும், புதிய அழகியல்பார்வைகொண்டதாகவும் இருக்கின்றது. இதுவே படக்குழுவின் வெற்றியாகவும் அமைந்துள்ளது.

### ரசனையுண்டாக்கும் உழைப்பு

படமாக்கப்படிருக்கும் சூழல் பார்வையாளனைக் கதைக்குள் இழுத்துச்சென்றுவிடுகிறது. பாத்திரங்களின் இயல்பும், உரையாடலும், உடைகளும்எந்தவொரு இடத்திலும் உறுத்தாமல் மிக இயல்பாக ஒட்டிவிடுகின்றன. பழைய வீட்டின் அமைப்பு, பரண், அதன்மேல்இருக்கும்பழையபொருள்கள், கொல்லை, கொல்லைப்புறக் கொட்டில், மணிக்கூடு, விளக்கு, படிக்கும்அறைஎனக் கலை இயக்குநரின் நேர்த்தி படத்தைத் தூக்கி நிறுத்துகிறது.

சமையல் அறைக்குள் வரும் ஒளி, வீடடின் நடு அறைக்குள் வரும் ஒளி, பசுமையாகக் கிராமத்தைச் சித்திரிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஒளி எனப் பல இடங்களில் இரசிக்க வைக்கின்றது ஒளிக்கலவையுடனான ஒளிப்பதிவு. கிராமத்துச் சிறுவன் தாயைத் திட்டும் மிகையில்லாத வசனங்கள் கவனிக்க வைக்கின்றன. ஒவ்வொரு சட்டகத்தையும் அழகாக்குவதில் ஒளிப்பதிவாளரின் உழைப்புத் தனித்துத் தெரிகிறது.

இத்தனை முழுமைகளையும்சரியாகவும் நேர்த்தியாகவும் செய்த இயக்குநர் கதையில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். ஆனாலும்குறைகளால்உறுத்தாது இரசிக்வைக்கிறது படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ. பரமேஸ்வரி

# ஒரு ஆடு அசைவமாகிறது...!



ஒரு காலத்தில் நான் தாவர உண்ணியாயிருந்தேன்
என்னுடைய அப்போதைய கோட்பாட்டில்
குருத்து, பிஞ்சுகள் உண்பதில்லை என்பதும்
கொப்புமுறித்துக் குடிகெடுப்பதில்லையெனவும்
குறிப்பிடப்பட்டிருந்தது.

திடீரென ஏற்படுகின்ற அசம்பாவிதங்களால்
வீங்கி முட்டித் தின்னவும்
அருட்டானம் காட்டவும் கூடியதாயிருக்கும்.
எப்போதாவது இயற்கை அதற்கு ஒத்துழைக்கும்.
கொட்டைகளைத் தின்று செமிபாட்டுச்சிக்கல்
ஏற்பட்டதில்
அறுகம்புல்லுக்கலைந்த காலங்களும் உண்டு.

இப்போது நான் மாறிவிட்டேன்
முற்றிலுமாக மாறிவிட்டேன்
ஒரு நீண்ட வரலாறுகொண்ட அசம்பாவிதந்தான்
நான் மாறக்காரணம் என எல்லோரும் நம்புகிறார்கள்
என்னோடு சேர்த்து.

அது ஒரு கனவு
அது ஒரு விபத்து
அது ஒரு விளையாட்டு
அது ஒரு பகிடிவேலை.

சிலபேர் அதை வேறுமாதிரிச் சொல்கிறார்கள்
அது ஒரு யாகமாம்
அது ஒரு அடையாளமாம்
அது ஒரு வரலாறாம்!
அது ஒரு பெருமையாம்.

இன்னும் சிலர்
அதை வெற்றி எனவும்
அதைப் போர் எனவும்
அதைப் பயங்கரத்தனமெனவும்
அதை விடியல் எனவும்
சொல்கிறார்கள்.

ஒரு அதிகாலை
ஒரு பெருஞ்சத்தம்
பல அவலக்குரல்கள்
நான் நெருங்கியபோது அங்கு எவருமில்லை.
நான் தின்னத் தெரிவுசெய்து வைத்த
தாவரக் குருத்தின்மேல் குருதிச் சிதறல்கள்
அன்றுதான் நான்
முதன்முதலாக மாமிச உண்ணியானேன்
என்னைப்பொறுத்தவரையில்
அது ஒரு திட்டமிட்ட செயல்
அது ஒரு நயவஞ்சகம்
அது ஒரு கொடூரம்
அது அதிபயங்கரத்தனம்.
பின்னே.... எப்படிச்சொல்வதாம்!
என்னை வளர்த்த இனத்தின் அடையாளத்தையே
அழித்துவிட்ட அந்தச் சம்பவிப்பை...?

---

அலலிதேவி

# பன்முக ஆளுமையுள்ள பெண்ணொருத்திக்குத் தையல் இயந்திரமா...?

பூகோள விருத்தி என்பது தொழிலாளர்களை வேகமெடுக்கச்செய்திருக்கின்றது. அதில் ஆண் பெண் எனும் சமூக அரசியலும் பொதிந்துள்ளது. ஆண் மாத்திரம் உழைத்துக் குடும்பத்தைக் கொண்டு நடாத்துவதாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் காலம் வெகுவாக மாறிக் கொண்டிருக்கின்றது. இப்போது பெண்ணும் அவனுக்குச் சமாந்தர வேகத்தில் பயணிக்கத் தலைப்படுகின்றாள். இதன் அறுதியான முடிவு மீளவும் அவளைத் தாய்வழிச் சமூக உயர்த்திக்குக் கொண்டு செல்லலாம்! அதன் தோற்றுவாயின் இடைத்தரத்தில் நிகழும் செயற்பாடுகளாகத் தற்போதைய மாற்றங்களைக் குறிப்பிடலாம். ஆனாலும் இதுவரை இருந்துவந்த ஆண் சமூகத்தைச் சார்ந்திருக்கும் அவளுடைய விடுவிப்புஒருபோதும்முழுமையாகச் சாத்தியப்படவில்லை.

**பெண் பின்னிலைப்படக் காரணங்கள்**

அடிப்படையிலிருந்து நோக்கின் குடும்பத்தின் பொருளாதாரத்தைக் கைப்பற்றிக் கொள்பவர்களே சமூகத்தின் மிகச்சிறிய கட்டமைப்பான குடும்பம் தொடங்கி பூரண சமூகத்திலும் முன்னிலை வகிக்கின்றனர். அதாவது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் பணத்தைக் கையாளும் தந்திரோபாயம் ஆண் தலைமையால் செயற்படுத்தப்படுவதையே எமது சமூகம் வழக்கமாகக் கொண்டிருக்கின்றது. இதனால் இயல்பாகவே பெண் பின்னிலைப்படுத்தப்படுகின்றாள். ஆணுடன் ஒப்பிடுகையில் அங்கங்கள் ரீதியாக அவளிடமுள்ள இயல்பான பலவீனத்தை உச்சமாகப் பயன்படுத்தி அவளை ஆண் எனும்தகுதிப்பாட்டுக்கு அடுத்தநிலையில் கட்டமைக்கும் போக்குத் தகர்க்கப்படாமல் இருக்கும் அதே சமயத்தில்தான் பொருளாதாரத்திலும் அவளைப் பின்தள்ளும் கைங்காரியங்கள் நிகழ்கின்றன. இப்படியாகத் தன்னை பின்தள்ளுகின்ற ஏராளம் திணிப்புக்களில் உடைப்புக்களை ஏற்படுத்த வேண்டிய தேவை இன்றைய பெண்சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

**பொருளாதாரத்தில் தமது கைகளைப் பலப்படுத்துதல்**

ஆண்மயமாகவிருந்த தொழில்துறைகள் அனைத்துக்குள்ளுமே இப்போது பெண்களும் தமது நிலைகளைத்தக்க வைக்க எத்தனித்துக் கொண்டிருக்கின்றனர். வீட்டுக்குள் குடும்பத்தின் சுமையாளாகவும் ஆணின்திருப்திப்படுத்தலுக்கும்இன்னும்பலதேவைகளுக்குமாக ஒடுக்கப்பட்டிருந்த அவள் இன்று அதிலிருந்து ஓரளவாவது மீண்டு வந்தவளாய் சமூகத்தின் பல துறைகளோடும் கைகோர்த்துப் பயணிக்கத் தொடங்கியுள்ளாள். இதுவரைக்கும் தான்சார்ந்த பொருளாதார நிறைவேற்றல்களுக்கு இன்னொருவரில் தங்கியிருக்கக் கடைப்பட்ட சூழல் இதனால் மெல்ல மெல்ல மாற்றமுறலாம். அப்போது பெண் தனக்கான ஒரு பகுதி விடுதலையைப் பெற்றுக் கொள்வாள்.

ஆணின் சம்பாத்தியத்தின் ஒழுங்குபடுத்தலில் வாழ்தல், குடும்பம் மற்றும் தன்னுடைய தேவைகளுக்கு அவனில் தங்கியிருத்தல் போன்ற குடும்பப் பொருளாதாரத்தைத் தானும் கையாளும் நிகர் ஏற்படும் காலத்தில் பெண்வாதம் பற்றிய குரல்கள் நிச்சயமாக ஓய்ந்தே போகும்.

**தகமை, திறமை அறிந்து செயலாற்றுதல்**



தொழில் துறைகளில் மாத்திரமன்றி ஆணோடான சகல துறைகளிலும் அவனுக்கு நிகராகத் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டிய தேவை பெண்ணுக்குக் கட்டாயமானது. அது ஆண் - பெண் எனும் நிகர் நிலைக்கு மேலாகப் பயணித்துப் பிற்காலத்தில் ஆண் உரிமைக் கோஷங்களை ஓங்கச்செய்யாதவகையில் இந்தப் போக்கைக் கொண்டு செல்வதும் அனைத்துப் பெண்கள் முன்பும் இருக்கின்ற'கடினமான பணியாகும். அத்துடன் சம நேரத்தில் தாம் வென்றெடுப்பவற்றை ஊதாசீனப்படுத்தவோ பக்க விளைவுகளைத் தோற்றுவிக்கவோ வழி செய்யாமலிருப்பதுவும் பெண்களின் கைகளிலேயே உள்ளது. அத்துடன் ஆண்களைப் புதினப் பிறவிகளாகச் சித்திரித்து அவர்களைத் தெரிந்து கொள்வோம், அவர்களைப் புரிந்து கொள்வோம் எனும் இயல்பு மீறிய சித்திரிப்புக்களால் ஆண் எனும் பிம்பத்தைப் பிரமாண்டமாக்குவதையும் தவிர்த்துக் கொள்வது சிறந்தது. சரி நிகராகத் தன்னை நிறுவப் புறப்படும் பெண், தனக்கெற்ற துறைகளைத் தானே தெரிந்து அதில் திடமாகப் பயணிக்க வேண்டும். நல்லதொரு நிர்வாகத் திறனுள்ள ஒருத்தி, முகாமை செய்யும் ஆற்றலுள்ள ஒருத்தி, ஆளுமையுள்ள ஒருத்தி தையல் இயந்திரத்துடன் வீட்டுக்குள் முடக்கப்படுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல் வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

தி.இராஜநாயகி

## சிரித்திரன் சிவஞான சுந்தரம்



யாழ்ப்பாணம் - கரவெட்டியில் பிறந்தவர் சி. சிவஞானசுந்தரம். இவருடைய தந்தை இலங்கையின் முதலாவது அஞ்சல்மா அதிபர்(வி. கே. சிற்றம்பலம்). கேலிச்சித்திர விற்பன்னரான சிவஞானசுந்தரம் கிட்டத்தட்ட 45ஆண்டுகள் வரையில் கேலிச்சித்திரத் துறையின் ஆளுமையாகத் திகழ்ந்தவர். அதற்குள் பல்லாயிரக்கணக்கான சித்திரங்களைத் தீட்டினார். தினகரன், வீரகேசரி, மித்திரன் நாளிதழ்களிலும் இவரது கேலிச் சித்திரங்கள் வெளிவந்தன. அப்போது தினகரனில் இவர் வரைந்த சவாரித்தம்பர் தொடர் கேலிச் சித்திரம் பெருமளவில் பேசப்பட்டது.

1964ஆம் ஆண்டில் அவர் ஆரம்பித்த 'சிரித்திரன்' என்ற மாத இதழ் அவரது மறைவு வரை ஏறத்தாழ 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்தது. முதன்முதலில் கொழும்பில் பல சிரமங்களுக்கு மத்தியில் அவர் சிரித்திரனை ஆரம்பித்தார். 7ஆண்டுகள் வரை அதில் இயங்கிய பின்பு யாழ்ப்பாணத்திலிருந்து அதை வெளியிட்டார். வெறும் சிரிப்புச் சஞ்சிகையாக மட்டுமல்லாமல் சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் பல சிறந்த ஆக்கங்களைச் சிரித்திரனில் பதிப்பித்தார்.

1987களில் இந்திய அமைதிப் படையினரின் ஆக்கிரமிப்புக் காரணமாக சிரித்திரன் அச்சகத்தின் சொத்துக்கள், அச்சகப் பொருட்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. அத்துடன் அவரை நோயும் பற்றிக் கொண்டது. வலது கரம் இயங்க மறுத்த நிலையில் இடது கரத்தால் எழுதித் தொடர்ந்தும் சிரித்திரனை வெளியிட்டார். பின்னர், நோயின் கடுமையால் 1996இல் காலமானார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் மாமனிதர் விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவர் சிவஞானசுந்தரம்.

# கருவும் உருவும்

உலக அரசியல் தலைவர்களுக்குச் சிரிக்கத் தெரிந்திருந்தால், இன்று உலக சரித்திரமே வேறாக இருந்திருக்கும். வரலாற்று ஏடுகளின் குறிப்புக்கள் யமதர்மராஜனது தர்பார் குறிப்புகளாகவே நிறைந்திருக்கின்றன. மானிடப் பிறவிக்கு மட்டுமே உரித்தான சிரிப்பொலி இன்று ஒலிப்பதில்லை. யுத்தத்தின் முரசொலியே இன்று எமது காதுகளை அதிர வைக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் கனரக இலக்கியங்கள் மக்களுக்கு ஆறுதல் அளிக்கமாட்டாது.

நான் வரைந்த கருத்தொவியங்களை இரை மீட்டு 'கருவும் உருவும்' எனும் தலைப்பில் இங்கு எழுதலாம் என நினைக்கின்றேன். அநேகமான எனது கார்ட்டூன் கருவூலங்கள் மக்கள் மத்தியிலிருந்து உதயமானவையே.

ஒரு சமயம் நான் கொட்டாஞ்சேனை மேபீல்ட் வீதியில் போய்க் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் தலையில் வெற்று மாவுத் தகர டப்பாக்களைச் சுமந்து வந்தார். அக்காட்சியைப் பார்த்ததும் மின்னலாக ஒரு கருத்தோவியம் பளிச்சிட்டது. வீடு விரைந்து வரைந்து அதற்கு உருக்கொடுத்தேன். அது இது தான். சவாரித்தம்பரும் அவரது சகபாடி சின்னக்குட்டியும் வீதியால் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தலையில் குழந்தைகளின் பால்மா வெற்று ரின்களைச் சுமந்து கொண்டு வருகின்றார். சவாரித்தம்பி அவரைப் பார்த்து "உந்த வெறும் தகர டப்பாக்களை எங்கே வாங்கினாய்...?" எனக் கேட்கின்றார்.

அதற்கு அவர், "யாரையா இந்தக்காலம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கின்றார்கள்?" எல்லோரும் மாப்பால் மயம் தானே? என்கிறார். இதனைக் கேட்டுத் தம்பர் சின்னக்குட்டி அண்ணனைப் பார்த்து, "அன்றைய தமிழ்த்தாய் போர்க்களத்தில் மகனின் முதுகில் அம்பு பாய்ந்ததைப் பார்க்க நேர்ந்தால் தான் பாலூட்டிய அங்கத்தை வாளால் வெட்டி எறிவாள்...! இன்றைய தமிழ்த் தாயோ மகனின் முதுகில் குண்டு பாய்ந்ததைப் பார்க்க நேர்ந்தால் தகர டப்பாவை உடைத்தெறிவாள்...!" எனக்கூறிப் பெருமூச்சு விடுகின்றார்.

கலாநிதி கைலாசபதி அவர்கள், வீரத்தாய் பற்றி இலக்கிய வகுப்பில் படிப்பிக்கும்போது இக் கார்ட்டூனைத் தான் மேற்கோள் காட்டியதாக ஒரு சமயம் கூறினார்.

இன்னும் ஒரு கார்ட்டூன் நினைவில் வருகிறது. இதுவும் நான் வீதியால் போய்க் கொண்டிருந்தபோது தரிசித்ததுதான்.

மது போதையில் வீதியில் வந்த ஒருவர் என்னைக் கண்டதும், "தம்பி நில்...! நானும் உன்னோடு வருகிறேன். அதில் நிற்கும் இரண்டு நாய்களும் கடி நாய்கள் போலத் தெரிகின்றன." என்றார். போதையில் அவருக்கு முன்னே நின்ற ஒரு நாய் இரு நாய்களாகவே தென்பட்டன. இச்சம்பவம் கார்ட்டூனுக்கு நல்லதொரு கருவாக அமைந்தது.

சின்னக்குட்டி அன்று நல்ல மது போதையில் வீட்டுக்கு வந்து புயலில் ஆடும் தென்னை மரம்போல ஆடிக் கொண்டு நின்றார்.

சவாரித்தம்பரின் மனைவி, "பாம்பு வீட்டுக்குள் படமெடுத்து ஆடுகிறது... அறுவான் குடித்துவிட்டு வெறியில் ஆடிக் கொண்டு நிற்கிறான்... ஒரு தடியை எடுத்துப் பாம்பை அடியன்!" என்கின்றார். சின்னக்குட்டியோ தடியை எடுத்து வந்து பாம்பைப் பார்த்துவிட்டு, "அக்கா ! இரண்டு பாம்புகள் தெரியுது எதை அடிப்பது" எனக் கேட்கின்றார்.

"அறுவான் ஒரு பாம்மை அடி இரண்டும் சாகும்" எனக் கூறுகின்றார் சவாரித்தம்பரின் மனைவி.

வீதியில் கிடைத்த இன்னுமொரு கருவூலத்தைப் பற்றியும் இங்கு எழுதுவது சுவையாக இருக்கும் என நினைக்கின்றேன். இம்முறை நான் வீதியில் சந்தித்தது ஒரு பாடசாலை ஆசிரியரை!

அவர் சேகமே உருவாகக் காட்சியளித்தார். அதைப் பார்த்ததும் மிக இரக்கப்பட்டு 'என்ன ஆசிரியர் முகம் வாடியிருக்கே? என்ன காரணம்? என விசாரித்தேன்.

அதற்கு அவர் மிகவும் பரிதாபமாகப் பதில் கூறினார். "வழியிலே ஒருவன் மறைந்திருந்து கல்லால் எறிந்து விட்டான். அவன் எனது பாடசாலை மாணவனாகத்தான் இருக்கவேண்டும்." இதைக் கேட்ட எனக்கோ மனது எங்கோ பறந்தது. தோன்றியது கரு! உருவானது கார்ட்டூன்!

ஒருவர் தன்னைவிட முதியவரான ஒருவரைக் கண்டு ஒளிந்து நிற்கிறார். சவாரித்தம்பர் அவரை அணுகி "பெரியவரே ஏன் மரத்துக்குப் பின்னால் நிற்கின்றீர்கள்?" எனக் கேட்கின்றார். அவரே, "உஸ்... சத்தம் போடாதையும் எனக்குப் படிப்பித்த ஆசிரியர் வருகின்றார். இப்பவும் அவரைக் கண்டால் ஒரு பயம்" என்கிறார்.

அடுத்த கட்டத்தில் களிசான் அணிந்த இன்றைய ஆசிரியர் ஒருவர் மரத்துக்குப் பின்னால் பதுங்கி நிற்கின்றார். சவாரித்தம்பர் அவரிடம் "என்ன மாஸ்ரர் மரத்துக்குப் பின்னால் நிற்கின்றீர்களே?" எனக் கேட்கின்றார். ஆசிரியர் பயத்துடன் "சத்தம் போடாதையுங்கோ, என்னுடைய மாணவன் வருகிறான். பட்டம் சொல்லிக் கூப்பிடுவான்" என ஈனஸ்வரக் குரலில் கூறுகின்றார்.

இனி மும்பையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கின்றேன். அது நான் மும்பையில் 'conch' என்ற பத்திரிகையில் கார்ட்டூன் வரைந்த காலம். அப்போது ஒருநாள் அப்பத்திரிகை ஆசிரியர் என்னைப் பார்த்து "பெண்களுக்கு பஸ் நடாத்துனர் வேலை வழங்கப் போகின்றார்கள். அதற்கு ஒரு கார்ட்டூன் வரைந்தால் நல்லது" என வேண்டிக் கொண்டார். நான் சிந்தித்தேன். சிகரட் புகைத்தேன். தலையைப் பிய்த்தேன். ஆனாலும் ஒன்றும் தென்படவில்லை.

"ஐடியா ஒன்றும் தோன்றவில்லை" என ஆசிரியிரிடம் போய்க் கூறுவதற்காக, மறு நாள் பஸ் ஏறினேன். என் முன்னால் அமர்ந்திருந்த பெண் டம்பப் பையிலிருந்து முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்துத் தனத முகத்தைப் பார்த்தாள். அக்கணமே எனக்குக் கருத்தோவியத்துக்குரிய கரு ஜனித்தது. உடனே பஸ்ஸைவிட்டு இறங்கி நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போனேன். கார்ட்டூனை வரைந்தேன்.


ஆறு கைகளையுடைய ஒரு அழகி அவள். ஒரு கரத்தால் கண்ணாடி ஏந்துவதாகவும், ஒரு கரத்தால் திலகமிடுவதாகவும், ஒரு கரத்தால் கொண்டைப் பூவைச் சரி செய்வதாகவும், ஒரு கரத்தால் டிக்கட் கொடுப்பதாகவும் வரைந்து 'The return of apsasra' எனத் தலைப்பும் இட்டேன். ஆபீஸ் வந்து அதை ஆசிரியரிடம் கொடுத்தபோது 'சபாஸஷ்' என்றார். கரு எனும் பொறி தேடுவதில் ஒரு இன்பம். அதை ஊதிக் கலைச்சுடராக்குவதில் இன்னுமோர் இன்பம். இந்தக்கால சிருஷ்டி இன்பத்துக்கு ஈடான இன்பம் இவ்வுலகில் இல்லை என்றே கூறலாம்.

சிரித்திரன் சிவஞானசுந்தரம்

கருத்துக்கள் பல நிறைந்த சிரித்திரன் சிவஞான சுந்தரம் அவர்களின் கருத்துச் சித்திரங்கள்.











(நன்றி- சிரித்திரன் சிரித்திரக் கொத்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகை வீடு

கே.எஸ். சிவஞானராஜா

"உங்களுக்குத் தெரியும்தானே! இந்த வீட்டிலே இருந்தவை எல்லாம் சொந்த வீடு கட்டி, இப்ப நல்லாய் இருக்கினம். அது மட்டுமில்ல குமருகளுக்கும் நல்ல மாப்பிள்ளை கிடைச்சிருக்குது பாருங்கோ! நாலு பேரிட்டை விசாரிச்சுப் பாருங்கோ. ராசியான வீடு. வடக்கு வாசல் வீடு. மோட்டர் தண்ணி, மாபிள், லைற், கொமேட் உள்ளுக்கும் போகலாம் வெளியிலையும் போகலாம்! கனபேர் வந்து வந்து கேக்கினம். நான் நல்ல ஆக்கள் வரட்டுமன் எண்டு பாத்துக் கொண்டிருக்கிறன். நல்ல வேளையா நீங்களும் வந்திட்டியள்!" வழமையான தனது பல்லவியோடு சங்கதி சொன்னாள் வடிவாம்பாள். அவளுடைய கதையில் விழுந்தாள் கண்மணி. எப்படியாவது வீட்டைக் கொடுத்து விடவேண்டும் என்று வடிவு, கண்மணிக்குத் தடம் போட்டாள். கண்மணியும் வடிவை விழுத்தத் தன் உருவத்தைக் காட்டத் தொடங்கினாள்.

"வாடகை என்ன மாதிரி?"

"பத்தாயிரம் ரூபா, அதுவும் உங்களுக்கு மட்டும்"

"குறைக்க மாட்டியளோ?"

"எப்படிப்பாருங்கோ குறைக்கிறது...? வேணுமெண்டால் கொக்குவில் வீட்டைப் பாருங்கோ. அதுக்கு முற்பணம் இல்லை. ஆனால் ரெண்டு வருச வாடகையை ஒரேயடியாய்த் தரவேணும். அதோட தேங்காய், மாங்காய், பிலாக்காய், வாழை வருமானம் எல்லாம் நாங்கள் தான் எடுப்பம். கொமேட் இல்லை. வெளியிலை தான் போகவேணும். கிழக்கு வாசல் வீடு. அது கோயில் தான்" என்றாள் வடிவு.

"வாடகை எவ்வளவு?"

"ஒன்பதாயிரம்! அதுவும் உங்களுக்கு மட்டும். ரெண்டு வருச வாடகையை மொத்தமாகத் தரவேணும். குறைக்க மாட்டன்"

"எங்களுக்குச் சரிவராது பாருங்கோ. அவருக்குப் பென்சன். பிள்ளையள் பேரப்பிள்ளையள் மாமன், மாமி, பெரியகுடும்பம். மூன்று, நாலு அறைகள் வேணும் பாருங்கோ! சம்பளமும் வாழ்க்கையும் தான். ஒரே கடன். அதுக்கெல்லாம் வட்டி கட்டச் சரி"

"மருமக்கள், பிள்ளையள் வேலை செய்யினையோ?"

'ஓமோம்! எல்லாரும் அரச வேலை' என்றாள் கண்மணி.

"அப்ப ரெண்டு வீட்டையும் எடுங்கோவன் மாதம் இருபதாயிரம் தாங்கோ! இரண்டு வருசத்துக்கு எழுதித்தாறன். முற்பணம் ஐஞ்சு லச்சம். உங்களுக்கு லாபம் பாருங்கோ!" வடிவு நல்ல புறோக்கரானாள்.

"நாங்கள் இடம்பெயரத் தொடங்கின தொண்ணூறாம் ஆண்டில ஆரம்பிச்சு ஒவ்வொரு வருசமும் வீடு தேடுற படலம் தான் நடக்குது. இன்னுமே சொந்த மண்ணுக்குப் போக முடியேல்லை! எங்களை வைச்சே இஞ்ச வியாபாரம் நடக்குது."

"என்ன செய்யிறது? அவரவரின்ரை தலைவிதி. தாவடியிலை ஒரு வீடிருக்கு. மேல்வீடும் கீழ்வீடும். ஆனால் ஒன்று... சின்னப்பிள்ளையோ, வயது போன ஆக்களோ இருந்தால், வீட்டைப் பழுதாக்கிப் போடுவினை பாருங்கோ! நீங்களும் அவரும் மட்டும் என்றால் கீழ்வீடு தரலாம்"

"பிள்ளையள், பேரப்பிள்ளையள் எங்களை நம்பித்தானே இருக்கினம்! அவையள் வளர்ந்திட்டால் நாங்கள் சந்நிதியிலை போய்த் தங்கலாம்! இல்லாட்டித் திருக்கேதீஸ்வர மடத்தில தங்கலாம்! இல்லாவிட்டால், 'அம்மை அப்பன் மடம்' உண்டு இல்லாவிட்டால், 'அம்மா' இல்லம் உண்டு. ஆனால் எல்லாருக்கும் சுடலை எண்ட ஒண்டுதான் கடைசி எண்டு தெரியாமல் போகுதே... அதுதான் கவலையாய்க் கிடக்குது" கண்மணியோ வடிவை வாழ்க்கையின் முடிவுக்கு அழைத்துச் சென்றாள். வடிவு சற்றும் கிறுங்கியதாகத் தெரியவில்லை.

கண்மணியும் விட்டபாடில்லை.

"உங்களின்ரை பிள்ளையள் என்ன வேலை செய்யினை பாருங்கோ...? பெரிய பெரிய வேலைபோல...! நல்ல கடவுள் பக்தி உங்கட முகத்திலை தேனாய் ஒழுகுது"

"என்ன நீங்கள், இப்பிடிக் கேட்டிட்டியள்! எனக்கு இப்ப நாற்பத்தஞ்சு வயசெண்டு சொல்லுவியளோ! நான் இருபத்தெட்டு வயசிலை கலியாணம் செய்தும் இண்டு வரைக்கும் குழந்தைப் பாக்கியம் இல்லை. என்ரை மனுசனுக்கு அதுதான் ஒரேயொரு கவலை! அதால அவர் பாருங்கோ ஒரே கோயிலோடைதான். கோயில் கட்டிறதும், கோபுரம் கட்டிறதும், மதில் கட்டிறதும், றோட்டுப் போடுறதும் எண்டு சம்பளத்துக்கு ஆக்களை வைச்சுச் செய்விக்கிறார். ஒவ்வொரு வேலையும் முடிய முடியக் காணியோ, வீடோ வாங்கிப் போடுவார். அதாலை இவர்தான் எல்லாத்திலையும் தலைவரா இருக்கிறார். என்னதான் செய்தும் பிள்ளை இல்லையென்றால் எவ்வளவு துன்பம்"

வடிவாம்பாளின் கண்கள் குளமாகி உடைப்பெடுத்தன! வீடுகளும் பாவத்தால் களையிழந்தன. கண்மணி மௌனமாகித் தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். "போன பிறப்பிலை அட்டூழியம் செய்தவர்களே மறுபடியும் பிறக்கிறார்கள் என்பது உண்மைதான்! இந்தப் பிறப்பிலும் இவர்கள் இப்படியாக அட்டூழியம் செய்தால் நிலமை என்ன...?"

> "எப்படிப் பாருங்கோ குறைக்கிறது ? வேணுமெண்டால் கொக்குவில் வீட்டைப் பாருங்கோ. அதுக்கு முற்பணம் இல்லை. ஆனால் ரெண்டு வருச வாடகையை ஒரேயடியாய்த் தரவேணும். அதோட தேங்காய், மாங்காய், பிலாக்காய், வாழை வருமானம் எல்லாம் நாங்கள் தான் எடுப்பம். கொமேட் இல்லை. வெளியிலை தான் போகவேணும். கிழக்கு வாசல் வீடு.



கோயில் ஒரு வாழ்வியல்! அது உழைப்பல்ல! அது சிவன் சொத்து மற்றும் சீதனச் சொத்து, பொயிலைச் சொத்து, போதைச் சொத்து, பெண்ணின் கண்ணீர்ச் சொத்து, பொதுச் சொத்து, தருமசாதனச் சொத்து, களவுச் சொத்து, கடமை தவறிய சொத்து, வட்டிச் சொத்து, வாட்டிய சொத்து, அடிமைச் சொத்து, பிறர்மனை புகுந்த சொத்து, கள்ளக் கணக்குச் சொத்து இவையனைத்துமே ஒருபோதும் வாழ்க்கையகாதே, வாழவும் விடாதே. தன் உடல் உழைப்பில் கிடைக்காத ஒரு சதம்கூட உடம்பில் சுவறாது. சுவறினாலும் அது சும்மா விட்டு வைக்காது. பாவம் துரத்திக் கொண்டேயிருக்கும். நம்மட நாட்டிலை சிலரல்ல, பலர் பொதுச் சொத்திலை தான் சவாரி செய்யினம். கோயில் சொத்திலை வழ்க்கை, கோயில் சொத்திலை விடுதிகள், தங்குமிடம் இவை ஆகவே ஆகாது! நல்ல ஒரு கோயில் முன் மாதிரியாக வழிகாட்டும்போது அதைப் பின்பற்றியாவது வாழக் கூடாதா? வாடகைப் பணத்தைக் குறைக்கக் கூடாதா? பேய், பிசாசுகள் கூட இப்படி ஆசைப்படாதுகள். பிள்ளையளும் இல்லை ஆனா இதுகளின்ர ஆசை...! இதேபோலத்தான் பிரம்மச்சாரிகளுக்கும் எல்லத்திலையும் ஆசை, பேராசை!" எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

"வடிவம்மா...! உங்களின்ரை தலைவிதி இப்படியாய் போய்ச்சுதே ஒன்று மட்டும் உண்மை. உங்களுக்கு வீடு இருக்கு ஆனால் பிள்ளை இல்லை."

கோடியிருந்தென்ன? மாடியிருந்தென்ன? கூடி வாழ ஒரு குழந்தையாவது வேணுமா? கல் இருந்தென்ன! மண் இருந்தென்ன! சுட்ட சீமெந்து இருந்தென்ன? கடவுளோ வழக்கில் இருக்கும்போது கோபுரம் ஏதுக்கடி 1995ஆம் ஆண்டு வீட்டை விட்டு, ஆடு, மாடுகளைவிட்டு, பயிரை விட்டு, பெட்டி படுக்கையை விட்டு வாகனத்தைவிட்டு பெட்டகத்தையும் விட்டுப்போன நாங்கள் கொட்டிலுக்கை இருந்து, குளத்திலை கழுவி, கோயில்லை படுத்து, பிச்சை எடுத்து அல்லல்படவும் இன்னுமே எங்கட ஆக்கள் திருந்தினபாடில்லை. பணத்தாசை பிடித்த திமிர்த்தனத்தோடு சீவிக்கப் பழகிவிட்டார்கள். விடுதலைப் புலிகள் இருக்கும்பொழுது உந்தச் சமயங்கள் எல்லாத்திலையும் சமத்துவம் இருந்துது. இப்ப, இஞ்ச கெம்பிக் கொண்டு நிக்கிறவை எல்லாரும் அப்ப பம்மிப் பதுங்கி இருந்திச்சினம். இப்ப என்னடா எண்டால், அவர்கள் இல்லை என்ற துணிவிலை எல்லாரும் தலைவராகி விட்டினம். மேடையை விட்டிறங்க முடியாமல் இருக்கினம். பழையபடி, 'நான்' பெரிது...! 'நீ' குறைவு...!

வீடில்லாமல், காணியில்லாமல், மனுசன் இல்லாமல், மனிசி இல்லாமல், சாப்பாடு இல்லாமல், பிள்ளை காணாமல், குடும்பமே...! காணாமல் இந்த மண்ணில் வாடும்போது வாடகை வீட்டுக்கு இந்தளவு முற்பணமும் மனச் சாட்சியேயில்லாத வாடகையும் என்ன கொடுமை. செத்தபிறகு இதுகளுக்குச் சிவலோகம் கண்டிப்பாக இல்லை. நரகலோகந்தான்.

வலிவடக்கிலே வீடெல்லாம் தரைமட்டம் 1990ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கண்ணீரோடைதான் மக்கள் வாழுதுகள். அவையளை மனிசர்கள் எண்டு நினைக்காமல் அதுகளிட்டை மிஞ்சியிருக்கிறதுகளையும் பிடுங்கித் தின்னுகின்ற ஒரு கூட்டம், அதுவும் தமிழர்கள் என்று நினைக்கும் போது யாழ்ப்பாணம் இன்னும் சோதனைகள் பல வற்றைச் சந்திக்கப் போகிறது. இந்த உடம்பும் வாடகையான ஒரு வீடுதானே.

நடையைக் கட்டினாள் கண்மணி

"அம்மா என்னவாம் வீடு?"

"அந்த வீடு சரிவராதப்பா!"

"அம்மா வாடகையைக் கூட்டித் தாறம் என்று சொல்லி இப்ப இருக்கிற வீட்டையே கேட்டுப் பாப்பமே?"

"ஓமடி! நீ சொன்ன மாதிரி ஒருக்கால் கேட்டுப்பாத்திட்டு வாறன் பிள்ளை"

"தம்பி தம்பி நாயைப் பிடியுங்கோ! ஐயோ! நாயைப் பிடியுங்கோ! நாயே எங்களை வீட்டாலை எழுப்பும்போல கிடக்குது" "யாராது? பயமில்லாமல் வாங்கோ!"

"கண்ணன் தம்பி நிற்கிறாரோ" 'ஓமோம் நில்லுங்கோ வாறன்"

"சொல்லுங்கோ என்ன விசயம்?"

"தம்பி வீட்டு விசயமாகத்தான். வந்தனான் வீடு தேடிக் களைச்சுப் போனேன் தம்பி! வாடகைக்காசைக் கூட்டித்தாறன் இன்னுமொரு வருசம் இருக்க விடுங்கோவன்"

"கண்மணி அக்கா ரெண்டு வருசத்துக்கு மட்டுந்தான் உங்களுக்கு எழுதித் தந்தனான். வீடு பழுதாப் போச்சுது. பெயின்ற் அடிக்காமல் வீட்டைப் பாழாக்கி வைச்சிருக்கிறியள். அதுதான் சின்னப்பிள்ளையள் இருக்கிற குடும்பங்களை இனிமேல் இருத்தவே கூடாது. மாபிள்கள் உடைஞ்சு போய்க்கிடக்குது. கேற் கம்பிகளும் உக்கிப் போய்க்கிடக்குது. நீங்க மட்டும் இருக்கிறதுக்குத்தான் வீடு தந்தது. நீங்கள் என்னடா எண்டால், மூண்டு குடும்பத்தையும் சேர்த்து இருத்தி, வீடு முழுக்கலையும் குப்பையாக்கி வைச்சிருக்கிறியள். வீட்டைத் திருத்தி, பெயின்ரும் அடிச்சு, உடைஞ்ச மாபிள்களையும் போட்டு கேற்றையும் திருத்தி, வாடகையும் பத்தாயிரமாய்த் தருவீங்களெண்டால் தொடர்ந்து இருக்க விடுவன். இல்லாட்டி இந்த மாதத்தோட வெளிக்கிடுங்கோ...!"

வீடு வீடாக அலைந்து திரிந்த கண்மணியின் கண்களில் இருந்து வியர்வை கசிந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பொன்மொழிகள்

1. ஒரு கடிகாரம் கொண்டோனுக்கு சரியான நேரம் தெரியும். இரு கடிகாரம் கொண்டோனுக்கு எப்போதுமே சந்தேகம்தான்.
2. எங்கே விழுந்தாயெனப் பார்க்காதே, எங்கே வழுக்கினாயென்று பார்.
3. பின் கண்ணாடி வழியே நடந்ததைப் பார்ப்பதைவிட, முன் கண்ணாடி வழியே எதிர் வருவதைப் பார்.
4. நீ சொல்வதை வேண்டுமானால் சந்தேகப்படுவார்கள். ஆனால், நீ செய்வதை மக்கள் நம்பித்தான் ஆகவேண்டும்.
5. முன்னோக்கிச் செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்னோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.
6. மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாமே வீணானவையல்ல.
7. பயமில்லாமை என்பது தைரியமல்ல. எல்லாநேரங்களிலும் சரியாய் செயல்புரிவதே உண்மையான தைரியம்.
8. எதிர்காலத்தைச் சரியாகக் கணிக்க அதை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

# பழங்களின் நிறங்களும் குணங்களும்

இயற்கை எமக்களித்த கொடைகளுள் பழங்களும் தனித்துவமானவை. பழங்களை சமைக்காத உணவு என்பர் நம் முன்னோர்கள். உடலுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும், புத்துணர்வையும் ஒருசேரத் தரவல்லவை பழங்களே. தினமும் ஏதாவது ஒரு பழத்தை உண்டு வந் தால், நீண்ட ஆரோக்கியம் பெறலாம். அனைத்துப் பழங்களும் சத்துக்கள் நிறைந்தவை. இப்பழங்களின் நிறத்துக்கு ஏற்ற வண்ணமே அவற்றின் சத்துக்கள் இருக்கின்றன.





கேதீசன் அக்ஷிதா,
வளர்மதி முன்பள்ளி கொக்குவில்



ஜெ.ஜெக்சன்,
தரம் - 1
வ/தாலிக்குளம் அ.த.க.பாடசாலை.

# அறிவோம் அறிவை!

1. 23 நொடிகள் மட்டுமே பறக்கும் திறனைக் கொண்ட பறவையாக கோழி விளங்குகிறது.
2. யானையின் தும்பிக்கையில் 4 லட்சம் தசைகள் உள்ளன.
3. சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் தேவைப்படும்.
4. திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து ஔ.
5. மிக நீண்டகாலம் உயிர்வாழும் பிராணி ஆமை.
6. சிறுத்தைகள் மணிக்கு 76 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக் கூடியன.
7. மரங்கொத்திப் பறவைகள் ஒரு விநாடிக்கு 20 தடவைகள் மரத்தைக் கொத்துகின்றன.
8. எறும்புகள் தமது மோப்ப சக்தியை இழந்துவிட்டால், இறந்து விடுகின்றன.
9. விலங்குகளில் மிகச் சிறிய இதயத்தைக் கொண்ட மிருகம் சிங்கம்.
10. வண்ணத்துப்பூச்சிகள் தமது கால்களால் சுவை [illegible]ந்து கொள்கின்றன.

# இலக்கப் பாடல் கூறும் இணக்கப்பாடு



ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒன்றுமில்லாததற்கு இருக்காதே முரண்டு

இரண்டும் இரண்டும் நாலு
இருக்கணும் வாழ்க்கையில் சவாலு

மூன்றும் மூன்றும் ஆறு
முன்னேறிப் படைக்கணும் வரலாறு

நான்கும் நான்கும் எட்டு
நல்லது அல்லாததை விரட்டு

ஐந்தும் ஐந்தும் பத்து
ஐம்புலன் அடக்கினால் இல்லை ஆபத்து

ஆறும் ஆறும் பன்னிரண்டு
ஆறுவது சினம் எனப் பழகிவிடு

ஏழும் ஏழும் பதினான்கு
ஏழைக்கு என்றும் மனமிரங்கு

எட்டும் எட்டும் பதினாறு
எட்டும் வரையில் எதிலும் போராடு

ஒன்பதும் ஒன்பதும் பதினெட்டு
உண்ணும் போது அமைதியை நிலைநாட்டு

பத்தும் பத்தும் இருபது
தித்திக்கும் திருப்புகழ் தினமோது

## சிந்தனைக்கு

பூமியில் பிறந்த ஒவ்வொருவருமே, தம் பங்குக்கு ஏதாவது செய்யவேண்டும். அப்போதுதான் பிறந்த பயன் கிடைக்கும்.



# முருகேசுத் தாத்தாவின் பிள்ளைகள்

கிருபாவும் கீர்த்தியும் அண்ணன் தங்கையர். புதிய விடயங்களை அறிந்துகொள்வதிலும் அது சார்ந்த தேடலிலும் பேரார்வம் கொண்டவர்கள். ஒருநாள் இருவரும் வீட்டுக்கு அண்மையில் உள்ள சிறு காட்டுக்குச் சென்றனர். அங்கே வழமை போன்று அயல் வீட்டு முருகேசுத் தாத்தா மரக்கன்றுகளை நட்டுக் கொண்டிருந்தார். 8 வயதுடைய கிருபாவுக்கும் 5 வயதுடைய கீர்த்திக்கும் முருகேசுத் தாத்தாவின் செயல் ஆச்சரியத்தைதந்தன. ஏனென்றால், தினமும் அவர் மரக்கன்றுகள் நடுவதனை ஒரு வேலையாகக் கொண்டிருந்தார்.

இருவரும் முருகேசுத் தாத்தாவுக்கு அருகே சென்றனர். "தாத்தா, ஏன் தினமும் மரக்கன்றுகள் நடுகின்றீர்கள்? இதுவரை நட்டவை போதாதா?" என்று கேட்டாள் கீர்த்தி. "அம்மாக்குட்டி! இந்த மண்ணில பிறந்த நாங்கள், மண்ணுக்கு ஏதாவது செய்துவிட்டுப் போகணும். பெரியளவில் என்னால எதுவும் செய்ய முடியாது. தினமும் இரண்டு மரக் கன்றுகளாவது நடவேணும் என நினைத்து இன்றுவரை அப்பணியைச் செய்துகொண்டிருக்கிறேன்" என்றார். "இதனால் உங்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது தாத்தா?" என்று கேட்டான் கிருபா. "அப்பு! கடமையைச் செய், பலனை எதிர்பாராதே என்று கீதையில் கண்ணன் சொல்லியிருக்கிறான். அதனையே நானும் செய்கிறேன். மரங்கள் வளர்ப்பதால், வெப்பம் குறையும். மழை வீழ்ச்சி அதிகம் கிடைக்கும். பூமி பசுமையாக இருக்கும். மரங்கள் வீடு கட்ட, தளபாடங்கள் செய்ய, விறகுக்குப் பயன்படும். இந்தச் சிறிய காடு நான் உருவாக்கியதுதான். சொல்லப்போனால், இந்த மரங்கள்தான் என் பிள்ளைகள்" என்று கூறியவாறு தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தார் முருகேசுத் தாத்தா.

"தாத்தா, மரம் வளர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி அறிந்துகொண்டோம். இனிமேல் நாங்களும் மரக்கன்றுகள் நடுவோம்" என்று கிருபாவும் கீர்த்தியும் கூறினர். "நல்லது பிள்ளைகளே! என்னுடன் வாங்கோ, உங்களுக்குச் சாப்பிட ஏதாவது பழம் பறித்துத் தருகிறேன்" என்றார் முருகேசுத் தாத்தா. இருவரும் அவருக்குப் பின்னே சென்றனர். முருகேசுத் தாத்தா, தாய்மையின் பரிவுடன் மரங்களைத் தடவி அரவணைத்துக் கொண்டு முன்னே செல்கிறார்.

**நீதி : மரத்தை நீ பாதுகாத்தால், மரம் உன்னைப் பாதுகாக்கும்.**

# சிவப்பு நிறப் பழங்கள்

இப்பழங்கள் உடலுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கவல்லவை. அப்பிள், பிளம்ஸ், செவ்வாழை, மாதுளம்பழம், இலந்தை, செர்ரி போன்றவை சிவப்பு நிறப் பழங்களில் அடங்கும்.




இவை உயிர்ச்சத்து 'ஏ' அதிகம் கொண்டமைந்த பழங்கள். குருதியில் உள்ள சிவப்பணுக்களை அதிகரிக்கும் தன்மை கொண்டவை. கலந்துள்ள கொழுப்புப் பொருள்களைக் கரைக்கும் குணமுடையவை. சிறுநீரகக் கோளாறுகளை நீக்கும் தன்மை கொண்டவை. தசைகளின் இறுக்கத்தைக் குறைத்து மென்மையடையச் செய்யும். நரம்புகளுக்கு ஊக்கத்தைக் கொடுத்து மூளை நரம்புகளுக்கு அதிக பலம் கொடுக்கும். மன அழுத்தத்தைப் போக்கும். பதற்றத்தைக் குறைக்கும். நினைவாற்றலைத் தூண்டும். கண் பார்வையை தெளிவுறச் செய்யும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். எலும்பு மச்சைகளைப் பலப்படுத்தும். இதயத்துக்குச் சிறந்த "ஊட்டமாக" இந்த சிவப்பு நிறப் பழங்கள் விளங்குகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பற்று - வன்னியில்



# 2000 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சிவன் கோவில்

(கடந்த வாரம் இதே தலைப்பில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

அருணா செல்லத்துரை

வவுனிக்குளத்துச் சிவன் கோவிலில் கிடைத்த தொல்பொருட்களில் உள்ள தமிழ்ப் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்டிருந்த பெயர்களை பேராசிரியர் அடையாளம் கண்டார். அதன் பயனாக ஏறக்குறைய 2100 வருடங்களுக்கு முன்பு அந்த இடத்தில் நாகர், சிவன் கோவிலொன்றை அமைத்திருந்தனர் என்பது தெளிவாகியது. இது ஒரு புதிய கண்டு பிடிப்பாகும். இதைப் போன்ற சிவாலயங்கள் அடங்காப்பற்று வன்னியில் உள்ளமைபற்றி பல இடங்களிலும் நாம் குறிப்பிட்டுள்ளோம்.

**இலிங்கம்**

கோயிலில் காணப்படும் இலிங்கம் நாகரால் அமைக்கப்பட்டது. அதில் அவர்களுடைய வழமைப்படி 'மணிணாகன்' என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் தமிழ் பிராமி வடிவங்களால் ஆனவை. அவை 2000 வருடங்களுக்கு முற்பட்டவை.



**பரவுகற்கள்**

கோயில் மண்டபத்துக்கு முன்பாகவும் வடபுறத்தில் ஒரு பகுதியிலும் செங்கட்டிகள் பரவுகற்களாக நிலத்திலே பதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அமைப்பு மட்டக்களப்பிலே படுவான்கரையிலுள்ள பாலாமடு வயல்வெளியில் சிறிய திடரொன்றில் காணப்படுவதாகப் பேராசிரியர் குறிப்பிட்டார். அங்கு 'மணிணாகன் பள்ளி' என்ற கோயில் 2000 வருடங்களுக்கு முன்பு இருந்தது. இலங்கையிலே கட்டுமானங்களைச் சுற்றிச் செங்கட்டிகள் பரவுகற்களாக அமைக்கும் முறை நாகரின் மரபுகளைக் கொண்டதென்று கருதலாம். வவுனிக்குளத்துக் கோயிலில் காணப்படும் பரவுகற்கள் ஒவ்வொன்றிலும் 'மணிணாகன்' என்ற பெயர் பதிக்கப்பட்டுள்ளது.



**ஆதாரக்கற்கள்**

இவ்றறைத் தூண்தாங்கு கற்கள் என்று பேராசிரியர் குறிப்பிடுவார். இதுவரை நாம் பார்த்த வன்னியிலுள்ள தொல்லியல் தலங்களில் இங்குதான் அவ்வகையான கற்கள் ஆதியில் வைக்கப்பட்ட நிரையிலேயே இன்றுவரை அமைந்து காணப்படுகின்றன.

கோயில் மண்டபத்துக்கு முன்னால் நான்கு நிரைகளில் இந்தக் கற்களை வைத்துள்ளனர். கிழக்கு மேற்காக ஒவ்வொரு நிரையிலும் மும்மூன்று கற்கள் வைக்கப்பட்டுள்ளன. நடுவிலுள்ள நிரைகளில் மேலதிகமாக இரண்டு கற்கள் காணப்படுகின்றன. இங்கு எல்லாமாக 14 ஆதாரக் கற்கள் உள்ளன. அவை நிலத்துக்குள் பெருமளவுக்குப் புதைந்து விட்டன. மேற்பாகங்கள் மட்டும் நிலத்தின்மேல் தெரிகின்றன.





**தூண்கள்**

ஆதாரக்கற்களின் நடுவிலே ஆழமாகக் குடையப்பட்டுள்ள குழிவுகளிலே நேராக நிமிர்த்தித் தூண்களை நிறுத்த முடியும். அவற்றில் கல்லிலே பொளியப்பட்ட தூண்களையும் செதுக்கிய மரத்தூண்களையும் நிறுத்தி வைக்க முடியும்.

இவ்வாறான தூண்களை ம்ண்டபத் தூண்களாகவே கொள்ள முடிகின்றது. நாகரின் குடியிருப்புகளும், கோயில்கள் போன்ற கட்டுமானங்களும் இருந்த இடங்கள் எல்லாற்றிலும் ஆதாரக்கற்கள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றிலும் மன்னரின் பட்டப் பெயர்கள் அமைந்திருக்கும். மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த நாகரின் பட்டப்பெயர்கள் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கும்.

'வேள்ணாகன் மகன் வேள்கண்ணன், வேள்கண்ணன் மகன் வேள்கணாகன்'

தூண்கள் எல்லாற்றிலும் நாக மன்னரின் பட்டப்பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. சில தூண்களில் அவற்றோடு வேறு தூண்களைக் கொழுவுவதற்கு ஏற்ற வகையிலும் குழிவுகள் குடையப்பட்டுள்ளன. அவை கதவு நிலைத் தூண்கள் போன்றவை. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் கர்ப்பக்கிருகமும் அதன் கதவு நிலைகளும் உயரம் குறைந்தனவாய் அமைக்கப்பட்டவை எனக்கருதலாம்.

**கோமுகி துண்டங்கள்**

கோயில் வளாகத்தின் மிக நீளமான கோமுகியின் உடைந்த துண்டங்களும் பத்துக்கும் மேற்பட்ட கற்றூண்களும் காணப்படுகின்றன.

வவுனிக்குளம் சிவாலயத்தின் தொல் பொருள்சின்னங்கள் அடங்காப்பற்று வன்னியில் வாழ்ந்த ஆதிகாலத் தமிழரின் பண்பாட்டுச் சின்னங்கள். அவை மிக முக்கியமான வரலாற்றுச் சின்னங்கள். ஆதிகால வரலாற்றுக் காலத்து குடிச்செறிவுகளினதும் அதிலே சைவசமயம் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினதும் அடையாளங்கள். இவை கல்லூரி மாணவர்களினதும், சுற்றுலாப் பயணிகளினதும் பார்வைக்குரியவை, ஆய்வாளரின் கவனத்திற்குரியவை என்று பேராசிரியர் சி.பத்மநாதன் கருத்து வெளியிட்டுள்;ளார். அவற்றைத் தலத்திலே பேணிப்பாதுகாப்பதற்கும் தென்மையான வரலாற்றைக் கட்டிக் காப்பதற்கும் வழி பிறக்குமா....?





வவுனிக்குளத்துச் சிவன் கோவிலில் கிடைத்த தொல்பொருட்களில் உள்ள தமிழ்ப் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்டிருந்த பெயர்களை பேராசிரியர் அடையாளம் கண்டார். அதன் பயனாக ஏறக்குறைய 2100 வருடங்களுக்கு முன்பு அந்த இடத்தில் நாகர், சிவன் கோவிலொன்றை அமைத்திருந்தனர் என்பது தெளிவாகியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றமும் தண்டனையும்





## தடுக்கப்பட வேண்டிய மிருகபலி

குணசேகரன் சக்தீனா

"நீங்கள் என்ன நேர்ந்து விட்டிருக்கிறீங்கள்...?"

"இந்த வருத்தத்துக்கு என்னத்த நேர்ந்து விடுறது நல்லம் ஐயா...?"

இவ்வாறான உரையாடல்களை அந்தப் பகுதிகளில் நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அப்படி நேர்த்தி(வேண்டுதலின் பொருட்டு வழங்கப்படும் காணிக்கை) வைக்கப்பட்ட வளர்ப்பினங்கள் உரிய முறையில் அந்தந்தக் கோயில்களுக்கு ஒப்படைக்கப்பட்டும் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தினரிடையேயும் வெவ்வேறு வகையில் தாம் கொண்ட இறை நம்பிக்கையின் பொருட்டு நேர்த்திக்கடனை நிறைவேற்றுதல் எனும் நடைமுறை இருப்பது வழமை. கிராமங்கள் தோறும் இவ்வாறான நடைமுறைகள் இருப்பதைக் கண்ணூடாகக் காணுகின்றோம். ஆனால் யாழ்ப்பாணம் கவுணாவத்தையில் நடந்த சம்பவம், யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்களில் மிருகபலியிடலுக்கான தடையுத்தரவை வழங்கியிருக்கின்றது. நீதிமன்றம் ஏதும் ஒரு விடயம் தீர்வின்றி நிறைவு பெறாது என்பதும், தீர்க்கப்படாத பிரச்சினைகள் மன்றுக்குள் போனதும் சமரசம் செய்யப்படுவதென்பதுவும் வழமையான ஒன்றுதானே...? அதன் வழிதான் தீர்க்கப்பட்டது இந்த மிருகபலியிடல் பிரச்சினையும்.

• • •

கடந்த 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இந்த வழக்கு முதல்முதலாக மன்றுக்குக் கொண்டுவரப்பட்டது. அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தடையீட்டு எழுத்தாணை மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதன் விளைவாகச் சட்டம் தீர்ப்பிட்டிருந்தது.
ஆலயங்களில் நேர்த்திக்கடனுக்காக மிருகங்களைப் பலியிடுதல் தடை செய்யப்படவேண்டும் என்று தொடரப்பட்ட அந்த வழக்கு ஆட்சேபனை மனுத் தாக்கலுக்காக ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் மிருகபலியிடலுக்கான தடையுத்தரவு தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் என்று நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது. இப்பொழுதும் அந்த மிருக பலியிடல் தடையுத்தரவுடன் தான் இருக்கின்றது.

• • •

1- 01.04.2016அன்று இடைக்காலத்தடையுத்தரவு நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது. அது 20.04.2016 வரை நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.
2- 20.04.2016ஆம் ஆண்டு அன்று கூடிய மன்று, இந்து ஆலயங்களில் மிருகபலி, வேள்விக்கு இடைக்காலத் தடையுத்தரவை மீண்டும் பிறப்பித்தது. அது 29.06.2016வரை நடைமுறையில் இருக்கும் என்று உத்தரவும் பிறப்பித்தது.
3- 22.06.2016ஆம் ஆண்டு மீண்டும் கையிலேடுக்கப்பட்ட அந்த வழக்கின் தடையுத்தரவை மன்று 12.07.2016ஆம் ஆண்டு வரை நீடிக்கச் செய்தது.
4- அதன்பின்னர் 13.07.2016இலும் இடைக்காலத் தடையுத்தரவு மீண்டும் பிறப்பிக்கப்பட்டு 10.08.2016 வரை அது நீடிக்கப்பட்டது.
5- 10.08.2016இல் மன்றுக்கு வந்தபோது, மேல் நீதிமன்றில் இந்த வழக்கு முடிவடையும் வரை வேள்வி, மிருகபலி இடுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு நடைமுறையிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.
6- கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத் தலைவர் இந்த வழக்கில் இடைபுகு மனுதாரராகச் சேர்வதற்கு 25.01.2017 அன்று நீதிமன்றம் அனுமதித்தது.
7- 10.08.2016அன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு இந்த வழக்கு முடிவடையும் வரையும் நடைமுறையில் இருக்கும் என்பதைத் திறந்த நீதிமன்றில் மன்று அறிவுறுத்தியது. கோவில் வளாகம், கோவில் சுற்றாடல்கள், பொது இடங்கள், அரச காணிகள் மற்றும் ஏனையவர்களின் காணிகளிலோ மிருக பலி நடைபெறக்கூடாது எனவும் மன்று கட்டளையிட்டது.

• • •

இதுவரை இருந்துவந்த பாரம்பரிய நடைமுறைகளின்படி கோவிலில் ஆடு, கோழி மற்றும் வேள்விக்கு நேர்ந்து விடப்பட்ட மிருகங்களை வைத்துப் பூசை செய்யலாம். ஆனால் அவற்றைச் சாவடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. வழக்கு முடிவடையும் வரை இது நடைமுறையில் இருக்கும் என்றும் மன்றால் உத்தரவிடப்பட்டது.
ஆலயத்தில் ஒரு துளிக் குருதி கூடச் சிந்தக்கூடாது. அப்படி நடந்தால், கோவில் பூட்டப்படும். பூசை செய்த குருக்கள் அல்லது பூசாரி மற்றும் கோவில் தர்மகர்த்தா சபைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தில் கைது செய்யப்பட்டுச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று இறைச்சியாக்குதல் சட்டத்தின்கீழ் அனுமதி பெறப்படாமல் மிருகங்களை இறைச்சிக்கு வெட்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மன்று தெரிவிக்கின்றது. அத்துடன் பூசை முடிவடைந்தபின்னர் நேர்த்திக்குரிய ஆடு, கோழி மற்றும் மிருகங்களை உரியவர்கள் தங்கள் வீடுகளுக்குப் பத்திரமாக எடுத்துச்செல்ல வேண்டும்.

• • •

சமயநம்பிக்கை என்பது ஒவ்வொருவருக்கும் அவசியமானது 300ஆண்டு கால சமய நம்பிக்கை எனக்கூறி தற்சமயம் உள்ள சட்டத்தை மீற முடியாது. எனவே சமய நம்பிக்கை என்ற அடிப்படையில் கோவிலில் வேள்வி என்ற பூசையை நடத்துவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு. மிருகபலியி டுவதற்கு அனுமதியில்லை என மன்று தெரிவித்தது. அதாவது எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து ஆலயத்தில் மிருகங்களைச் சாவடிப்பதற்கு அனுமதியில்லை. என்பதே அதன் அர்த்தம்.
ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் எந்தவொரு இடத்திலும் பலியிடுவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. ஏற்கனவே 10.08.2016 வழக்கு முடிவடையும் வரை ஆலய தர்மகர்த்தா சபையினருக்கு நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கோவில் வளாகத்திலோ அல்லது கோவிலுக்கு வெளியிலோ கூட்டாக மிருகபலி வேள்வியில் எவராவது ஈடுபட்டால் அவர்கள் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்கு ஆளாக வேண்டி வரும் என்றும் அந்த உத்தரவு முடிவடைந்தது.
நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு இங்குள்ள ஏனைய ஆலயங்களுக்கும் எச்சரிக்கையாக அமைந்தது.

• • •

இந்த வழக்கில் நல்லதொரு விடயம் வெளிக்கிளம்பியிருக்கின்றது. மிருகவதையை மிகவும் பிற்போக்கான சிந்தனையின் அடிப்படையில் வைத்துக் காப்பாற்றி வருபவர்களுக்கு தகுந்த பதில் அளிக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு உயிர்களைக் கொல்லுதல் என்பது தவிர்க்கப்பட வேண்டியது.
"ஏன் ஐயா...! எங்கட முப்பாட்டன் காலத்திலயிருந்தே இந்தப் பலியிடல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது தானே. ஏன் இப்ப மட்டும் புதிதாய் ஒரு சட்டத்தைக் கொண்டு வாறீங்கள்...?" என்று யாராவது கேட்டால் நிச்சயம் அவர்களுக்குத் தக்கபதிலடி கிடைக்கும்.
"இனித்தான் எங்கட வீட்டு ஆட்டுக்குட்டி சுதந்திரமாக வளரும், நிம்மதியாக நிறையச் சாப்பிடும், வீரத்துடன் விளையாடும்" தன்பாட்டில் இந்தக்கருத்தைக் கூறிய குட்டித் தம்பிக்கு உயிர்கள் மீது இருக்கும் அன்புக்குள் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன. அவனை மிருகங்களைக் கொல்லும் அந்தச் சமூகம் தாம் நிமிர்ந்தால் மாத்திரமே பார்க்க முடியும்.
இனி எந்தக்கோயிலிலும் மிருகவதை இருக்காது.

## நீயாகிய நான்...

எங்கோ நிர்ணயிக்கப்பட்ட
பாதையும் பயணமும்
பயணியாக நீயும்
இருக்கும்போது
பயணத்தில்
வந்திணையும்
உனது வழித் துணையை
எப்படி நிராகரித்திட
முடிந்தது – உன்னால்?

உன்னை நினைக்கக் கூடாது
என்று நினைத்த போதெல்லாம்
உன் ஞாபகங்கள்
குந்திக் கொண்டிருக்கின்றன
எனக்கு முன்னால்...

நீயொரு கைது
செய்யப்படாத
குற்றவாளி – என்
வண்ணமயமான வாழ்க்கையை
கறுப்பு – வெள்ளை
ஆக்கிவிட்டாய்


காதல் முடிவற்ற வார்த்தை
என்று தெரிந்த எனக்கு
காதல் இரக்கமற்ற
வார்த்தையொன்று
புரிய வைத்தது நீதானே!

எஸ். தார்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அதிசயமா உலகின் அதிசயமா?



ஜோதா

> தற்போது வரை உலக அதிசயங்கள் பட்டியலில் இடம்பிடித்திருப்பவை மனிதர்களால் கட்டமைக்கப்பட்ட பெரு முயற்சி களே. இதுபோன்ற இயற்கையோ, பூமியின் பிரமாண்டமோ அவற்றுக்குள் இல்லை.

பூமியின் வயதை 4.543 பில்லியன் வருடங்கள் எனக் கணக்கிட்டிருக்கும் மனிதன் தன்னுடைய தோற்றம் பற்றி ஆராய்ந்ததில் தான் 2இலட்சம் வருடங்களுக்கு முன்னராகப் பூமியில் தோன்றியவன் என்று கணித்திருக்கின்றான். பூமி, சூரியனில் இருந்து உடைந்து பிரிந்த துகள் என்றும், விண்வெளித் தூசு, துணிக்கைகளின் சேர்க்கை என்றும் கொள்ளப்படும் அதேவேளை அது தோன்றிய ஒரு பில்லியன் ஆண்டுகளுக்குள் அதன் மேற்பரப்பில் உயிரினங்கள் தோன்றிவிட்டன(உயிர்க்கோளம்) என்று கொள்ளப்படுகின்றது. உயிரினங்களின் தோற்றத்துக்கு விண்வெளியிலிருந்து வளிமண்டலம் வழியாகப் பூமியை வந்தடைந்த நுண்ணுயிர்களை ஆதாரமாக்கும் மனிதன், அதிலிருந்து தான் தோன்றியதற்கு பரிணாம வளர்ச்சி, கூர்ப்புக் கொள்கை என்பவற்றைக் குறிப்பிட்டு விளக்கம் தருகின்றான். இவை அனைத்தும் பிரமிப்பூட்டுபவை. அற்புதமானவை. அத்துடன் நம்பக்கூடிய விதத்தில் கோட்பாடுகள், கொள்கைகளாக நிறுவப்பட்டிருக்கின்றன.

## பூமி எனும் அதிசயம்

பிரபஞ்சத்திலே உயிரினங்கள் வாழத்தக்க சாத்தியமுள்ள ஒரே ஒரு கோள் என்பதால் பூமி ஒரு அதிசயம் தான். ஆனாலும் அந்த அதிசயத்தில் தோன்றியிருக்கும் மனிதர்கள் தாம்மைத் தாங்கிக் கொள்ளும் பூமியில் நிகழ்த்திவிட்டிருக்கும் பிரமிப்புக்க ளையே அவர்கள் தாம் உலக அதிசயங்கள் என்று குறிக்கின்றார்கள். பிரமாண்டமான பூமி கொண்டிருக்கும் பிரமிப்புக்கள் தவிர்ந்தவை அவை. இயற்கையான பூமியின் அந்தத் தோற்றப்பாடுகள் இவற்றுக்கு விதி விலக்கு. இமயமலைச் சிகரமோ மரியானா அகழியோ உலக அதிசயங்களல்ல. அவை பூமி கொண்டுள்ள பிரமிப்பூட்டும் இயற்கைகள். பூமியின் அதி கூடிய உயரமும், அதி ஆழமான பகுதியும் அவை. இவை போன்றே மேட்டு நிலங்கள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள், பாலைவனங்கள், கடல் படுக்கைகள், பனிமலைகள், எரிமலைகள், இயல்பான தரைத்தோற்றங்கள், இயற்கைகள் என அனைத்துமே பூமியின் பல அங்கங்கள். அவற்றை ஒருபோதும் மனிதர்கள் உலக அதிசயங்கள் என்று தாம் குறிப்பிட்டிருக்கும் பட்டியலுக்குள் உள்ளடக்குவதில்லை. மாறாக மனிதர்கள் தாம் உருவாக்குகின்ற, தம்மால் உருவாக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றவையையே உலக அதிசயங்கள் என்று பட்டியல் படுத்துகின்றனர். இதுவரை இரண்டு தடவைகள் அந்தப் பட்டியல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவை ஏழு எனும் அடிப்படை எண்ணிக்கையிலிருந்தும் மாறுபடவில்லை. 'கிசா' என்று குறிப்பிடப்படும் எகிப்திலுள்ள மிகப்பெரிய பிரமிட், பாபிலோனின் தொங்கு தோட்டம், ஒலிம்பியாவின் 'சேயுஸ்' சிலை, எபிசஸ்லில் உள்ள ஆர்ட்டிமிஸ் கோயில், மௌசோல்லொஸின் மௌசோலியம், ரோடொஸின் கொலோசஸ் மற்றும் அலெக்சாந்திரியாவின் கலங்கரை விளக்கம் ஆகிய ஏழுமே ஆரம்ப காலங்களில் உலக அதிசயங்களாகக் குறிப்பிடப்பட்டன. அவை மனிதரால் உருவாக்கப்பட்ட அமைப்புக்களாகும். இவற்றைப் பட்டியலிட்டவர், 'சிடோனின் அண்டிப்பேற்றர்' எனும் மனிதர் என்பது பொதுவான கருத்து. இவரால் கி.மு 140ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட கவிதையொன்றில், இந்த அமைப்புக்களை மனிதர்கள் நிகழ்த்தியிருக்கும் பெரும் சாதனைகளாகக் குறித்துள்ளார். இவருக்கு முன்னரும், 'ஹீரோடோத்தஸ்' என்பவரும், 'சைரீனின் கல்லிமாச்சுஸ்' என்பவரும் இதுபோன்ற அதிசயப் பட்டியல்களை உருவாக்கியிருந்தார் என்று கருதப்படுகின்றது, அதைக் கணித்துக்கொள்வதற்குச் சில குறிப்புக்கள் கிடைத்திருந்தாலும், நிறுவுவதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை.


அலெக்ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கத்தை உள்ளடக்கிய, ஆரம்பகாலத்தில் இணங்காணப்பட்ட இந்த ஏழு உலக அதிசயங்களின் பட்டியல் போன்றது அவர் குறிப்பிடுவதற்கு முன்பான காலத்திலிருந்தே வழக்கிலுள்ளதாக நம்பப்படுகின்றது. அதாவது இத்தகைய பட்டியல் படுத்தும் முறைமை மத்திய காலத்திலேயே ஏற்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் அண்டிப்பேற்றர் குறிப்பிட்ட பட்டியலில் இருந்த அலெக்ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கத்தைத் தவிர்த்து அதற்கு முந்தைய பட்டியலில் பபிலோனின் சுவர்களே இருந்துள்ளன.

## அன்றைய உலக அதிசயங்கள்

'கிசா' எனும் பெரிய பிரமிட், பழங்கால எகிப்திய அரசர் கூபு என்பவரின் சமாதியாகும். இது. கி.மு 2680இல் கட்டிமுடிக்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பபிலோனின் தொங்கு தோட்டம் மற்றும் பபிலோனின் சுவர் ஆகிய இரண்டும், நெபுச்சட்னெஸ்சார் என்பவரால், கி.மு 600இல் ஈராக்கில் கட்டப்பட்டது. ஒலிம்பியாவின் சேயுஸ் சிலை, இன்றைய கிரேக்கத்தில், கி.மு 5ஆம் நூற்றாண்டில், கிரேக்கச் சிற்பி, பீடியாஸ் என்பவரால் செதுக்கப்பட்டது. ஆர்ட்டெமிஸ் கோயில், கி.மு 350இல், இன்றைய துருக்கியின் எபேசஸ் எனுமிடத்தில் கட்டப்பட்டது. மௌசோல்லொஸின் மௌசோலியம், ஹலிகர்னாசஸ் என அழைக்கப்பட்ட, இன்றைய துருக்கியின் போட்றம் எனுமிடத்தில் கட்டப்பட்டது. ரோடொஸின் கொலோசஸ், ஹெலியோசின் பிரமாண்டமான சிலை, தற்கால கிரேக்கத்தில், கி.மு 280இல் உருவாக்கப்பட்டது. அலெக்சாந்திரியாவின் கலங்கரை விளக்கம், இன்றைய எகிப்திலுள்ளது. அது கி.மு 3ஆம் நூற்றாண்டில், சொஸ்த்திராட்டஸ் என்பவரால் கட்டப்பட்டது. அவை இன்றைய எகிப்தில் இரண்டும், கிரேக்கம், துருக்கி ஆகிய நாட்டு எல்லைகளுக்குள் இரண்டும். ஈராக்கில் ஒன்றுமாக அமைந்திருந்தன. இவற்றில் இன்றுவரை தப்பியிருப்பது எகிப்தின் 'கிசா' பிரமிட் மாத்திரமே. இவற்றுள்ளும் மிகக் குறைந்த காலங்கள் வரை நிலைத்திருந்தது, ரோட்ஸின் கொலோசஸ் ஆகும். நிமிர்ந்த நிலையில் இது 56ஆண்டுகள் மட்டுமேயிருந்தது. பின்னர் பூமியதிர்வு ஏற்பட்டதால் தரையில் சரிந்து சிதைந்துவிட்டது. அத்துடன் இந்தப் பட்டியலில் இருக்கும் 'கிசா' பிரமிட் தவிர ஏனைய அனைத்துமே இன்றைக்கு அழிந்து செல்கின்றன. அதன் பின்னர், இப்போது காலவரிசையில் புதியதாக 7 உலக அதிசயங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

## புதிய உலக அதிசயங்கள்

சுவிற்சர்லாந்தைத் தலைமையாகக் கொண்ட 'நியூ 7 வேண்டர்ஸ் அறக்கட்டளை' எனும் தனியார் நிறுவனம் புதிதாக 07 உலக அதிசயங்களைத் தெரிவு செய்வதன் பொருட்டு கருத்துக்கணிப்பு ஒன்றை ஏற்பாடு செய்தது. அதில் தெரிவு செய்யப்பட்டன. 2007 ஜூலை 7ஆம் திகதியிலிருந்து புதிய உலக அதிசயங்களாக அறிவிக்கப்பட்டன. போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் இந்த அறிவிப்பு இடம்பெற்றது. இதன்படி சிச்சென் இட்சா, மீட்பரான கிறிஸ்து சிலை, சீனப் பெருஞ்சுவர், மச்சு பிச்சு, பெட்ரா, தாஜ்மகால், கொலோசியம். போன்றனவே புதிய உலக அதிசயங்களாகின. இதில் கிசாவே மிகவும் பழமையானது. கிமு 2589களில் அமைக்கப்பட்டது. சீனாவி லுள்ள பெருஞ்சுவர், கி.மு 700களில் கட்டப்பட்டது. ஜோர்தானிலுள்ள பெட்ரா, கி.மு 312களில் கட்டப்பட்டது. இத்தாலியிலுள்ள கொலோசியம் (உரோம்), கி.பி 70களில் கட்டப்பட்டது. மெக்சிக்கோவிலுள்ள சிச்சென் இட்சா, கி.பி 600களில் கட்டப்பட்டது. பெருவிலுள்ள மச்சு பிச்சு கி.பி 1438களில் கட்டப்பட்டது. இந்தி யாவின் தாஜ்மகால் கிபி 1632களிலும் பிரேசிலிலுள்ள கிறிஸ்து சிலை கி.பி 1926களிலும் மனிதர்களால் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன இவையே புதிய உலக அதிசயங்களாக வகைப்படுத்தப்பட்டும் இருக்கின்றன.



## எட்டாவது அதிசயம் சாத்தியமானதா...?

நியுசிலாந்து நாட்டிலே 'மவுண்ட் றறவெறா' எனும் எரிமலை இருக்கின்றது. இது 1886களில் கண்டுபிடிக்கப்பட்டது. 25கிலோ மீற்றர்கள் வரையான நீளத்தையும் கிட்டத்தட்ட 17கிலோ மீற்றர்கள் வரையான அகலத்தையும் கொண்டது. முந்தைய காலத்தில் இந்த எரிமலை அதிக நெருப்புக் குழம்பை வெளியேற்றியிருந்தது. இந்த எரிமலை தற்போது உறங்கு நிலையிலுள்ளது. அதன் செயற்பாடு காரணமாக அந்தப் பகுதியில் சேறு மற்றும் சாம்பல்கள் ஒன்று சேர்ந்து மென் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்திலான அழகிய தரைத்தோற்ற அமைப்புக்கள் தோன்றியுள்ளன. இந்தச் செயற்பாடு கிட்டத்தட்ட 130 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்திருந்தது. இப்போது உறங்கு நிலையிலிருக்கும் அந்த எரிமலையைச் சுற்றியுள்ள அந்தப் பகுதிகள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன. இதனால் அதை உலகின் 8ஆவது அதிசயமாகப் பிரகடனப்படுத்தும் குரல்கள் எழுந்துள்ளன.

ஆனால் தற்போது வரை உலக அதிசயங்கள் பட்டியலில் இடம்பிடித்திருப்பவை மனிதர்களால் கட்டமைக்கப்பட்ட பெரு முயற்சிகளே. இதுபோன்ற இயற்கையோ, பூமியின் பிரமாண்டமோ அவற்றுக் குள் இல்லை. இதனால் தான் போலும் இந்தப் பகுதியை நியூசிலாந்து அரசு இதுவரைக்கும் பாதுகாப்பான இடமாகக்கூட பிரகடனப்படுத்தாமல் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவையின் விழிகள்

01



## பண்டாரவன்னியன்



இராம. இராகவா

மண்
பொன்
பெண்
புகழ்
உலகத்தில் இவைக்கு
ஒரு தரம் உண்டு.

மண்ணைத் தன்
தெய்வமாக்கியவனின்
உள்ளத்துறைந்தவளின்
காதலை,
கண்ணீரை,
சிறகடித்த சந்தோசத்தை,
இது வரை
கோடிடப்படாத நியாயங்களை,
வரிகளாக்கினால்...

சல சலத்தோடுகிறது
ஆறு
அந்தி சாய்கையிலும்
தன் சதிராட்டத்தை
இம்மியளவும் குறைக்கவில்லை
ஆற்றோரத்து மருதமரம்

நிலவு, வான் ஏறாத
அந்தரிக்கும் இரவு
அந்தப் பிராந்தியத்தைச்
சுற்றி அடித்து விட்டிருக்கிறது
இருள்

அடிக்கின்ற காற்றிலும்
அசையாது எரியத் துடிக்கிறது
அந்தப் பந்தம்!

பந்தம் மட்டுமல்ல
அந்த மருதமர வேரில்
இருக்கின்ற
பெண் சிலையும் அப்படித்தான்.

அள்ளி முடித்த கொண்டையும்
இறுக்கி வரிந்து
கட்டப்பட சேலையும்

வாள்போல் ஜொலிக்கும்
அவள் விழிகளும்

ஆம்!
அதுவெங்கள் நாச்சியார்
குருவிச்சை நாச்சியார்

சிந்தனை பல தூரம்
போய் விட்டது போல
பக்கத்து வேரில்
கட்டப்பட்ட குதிரையின்
கணைப்பு
அவளை மீண்டும்
நிகழ் காலத்தில்
தள்ளி விட்டது

சற்றே
எழுந்து கொண்டு
தூரத்தே தன் பார்வையை
எறிய முயல்கின்றாள்
எங்கே...?
வருகின்றேன் என்ற
என்னவன் வராது போனானா...?

தனிமையில் சந்திக்க
தோழியை விரட்டியும்
இனிமையின் சுகம்
இன்னும் கிடைக்கவில்லை
கண்ணில் ஒரு விதக்
கவலை வாட்ட
தன் பரியை நோக்கிற்று
பாவையின் விழிகள்

பனங்காமத்து அரசன்
அடங்காத வீரன்
அடங்காப் பற்றோன்
பண்டார வன்னியனுக்குப்
பத்தினியாவது என்றாள்
படத்தானே வேண்டும் என்று

பாவையைக் கொழுப்பெடுக்கப்
பார்க்கிறது பரி

தூரத்தே ....
தட் தட் தட்
சீரான குளம்படியோசை
வருகிறான்...
இருப்புக் கொள்ளவில்லை
நாச்சிக்கு
இந்த இராப்பொழுதேனும்
காதலர் சந்திப்பு
இதமாய் முடியுமென்ற நினைப்பு.

சென்ற சந்திப்பின்
சேதங்கள்
வந்துபோயின
அவள் விழிகளில்

காற்றலை மெல்லத் தழுவும்
நந்திக் கடலதன் ஓரத்தில்
பச்சைப் புல்லில்
சாய்ந்திருந்த
அந்திப் பொழுதொன்றின்
நினைவுகள்
நெஞ்சை முட்டி
அடைத்துக் கிடந்தன.

மெல்ல அரும்பிய விழிநீரைக்
கைகளால் துடைத்துக் கொண்டு
இருளை மெல்லத் துழாவினால்
தன் கூரிய கண்களால்..

குளம்படியோசை
இன்னும்
சிறுநேரத்தில் என்
இறுமாப்பழகனை
அருகில் கொண்டு
வந்து விடும்...

நினைப்புத்தான்
நிலவாய்க் கிடக்குது நெஞ்சில்..

ஆங்காங்கு
கலைந்து போய்க் கிடந்த
முடிகளைச்
சீர்படுத்தினாள் நங்கை..
நாச்சியின் பரி
தன்னினத்தைக்
கண்ட மிதப்பில்
தலையை ஆட்டிக்
கனைத்துக்
கொள்கிறது.

என்ன பேசுதல்?
எப்படிப் பேசுதல்?
ஒருமுறை
ஒத்திகை
பார்த்துக்
கொள்கிறாள்

எல்லாம் சரி
நிமிர்ந்து மிடுக்காக
நிற்கிறாள் நாச்சி

பாழாய்ப் போன மனசும்
காரிருள் போர்த்த பொழுதும்
மூளாத எண்ணங்களுக்குத்
தீ மூட்டிப் போகின்றன.

அதோ
வந்து விட்டான்
அருகில் நெருங்கி,
முகம் தூக்கி,
முன்னங்கால் உயர்த்தி
பிடரி சிலுப்பி நிற்கிறது
வெண்புரவி

நாச்சி தன்
இருவிழி வேல் உயர்த்தித் தன்
படையெடுப்பைத் தொடங்கினாள்
தரையிலிருந்து...

(தொடரும்)

# அளவுக்கு மிஞ்சினால் அறிவு மட்டுமா போகும்...!

டிலான்



'கள்' என்பது தென்னை, பனை மரங்களில் இருந்து தருவிக்கப்படும் போதையை ஏற்படுத்தும் ஒரு வகைத் திரவம்(பானம்). அதிலும் தென்னையை விட பனை மரத்திலிருந்தே அதிகளவில் அது பெறப்படுகின்றது. அத்துடன் எமது மண்ணில் அதிகளவில் பரவிக்கிடப்பவை தென்னைகளைக் காட்டிலும் பனைகளே. எமது மண்ணின் குறியீடும் அந்தப் பனைகளே. அதனாலேயோ, என்னவோ! 'கள்' என்றவுடன் அது பனைகளில் இருந்து கிடைப்பது என்றே எம்மவரின் பொதுப்புத்திக்கு உறைந்துவிட்டது.

எமது தேசம் கொண்டுள்ள பனை வளம் என்பது எமது மண்ணின் இயற்கை என்பதற்கு அப்பாற்பட்டு, எமது பண்பாடு, வாழ்வியல் என்பவற்றோடும் ஆழ வேரூன்றியிருக்கின்றது. இதன் பிரதிபலிப்பை நமது மூதாதையர்களின் வாழ்க்கை முறையூடே எமது வெற்றுக் கண்களால் பார்க்க முடிந்தது. ஆனாலும் இந்தப் பனையின் பாதிப்பு இன்று வரை பேசப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்ப் புலைமையாளர்கள் பலரிடமும் இருந்திருக்கின்றது.

**ஔவையும் அதியமானும் அருந்திய மது**

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் அதியமானையும் தன்னையும் குறித்து ஔவை விவரிக்கும்போது, அதியமான் மரத்திலிருந்து தருவிக்கப்பட்ட மது அருந்தியதையும், தானும் மது(கள்) பருகியதையும் கூறிவிடுகின்றார்.

*சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே!*
*பெரிகட் பெறினே யாம் பாடத் தான் மகிழ்ந்து*
*உண்ணும் மன்னே!*
*சிறு சோற்றானும் நனி பல கலத்தன் மன்னே!*
*பெருஞ்சோற்றாலும் நனி பல கலத்தன் மன்னே!*
*என்போடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே!*
*அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான் நிற்கும் மன்னே!*

இந்தப் பாடலின் பொருட் பொதிவை நாம் கீழ்வருமாறு கொள்ளலாம். அதாவது ஔவையார் அதியமானை விளித்துக் கூறுகின்றார், அதியமானுக்குச் சிறிய அளவு மது கிடைத்தால், அதை எங்களுக்கும் அருந்தக் கொடுத்துப் பின்பு போர்க்களத்துக்குச் செல்வான். அதிக, கள் கிடைத்தாலும், எங்களுக்கும் கொடுத்துத் தானும் பகிர்ந்து உண்பான் என்கிறார். இதிலிருந்து ஔவைப் பிராட்டி, அதியமான் உட்பட அனைத்துச் சான்றோர்களும் 'கள்' அருந்தியுள்ளார்கள் என்பது தெளிவு.

இதில் ஔவை கூறுவது மரவகையிலிருந்து பெறப்பட்ட மதுவையே. அன்றைய அரசர்கள், நமது கவிஞர்கள், இன்னும் பல சான்றோர்கள் வழக்கமாகவே இந்த மது அருந்தும் பண்பைக் கொண்டுள்ளனர். ஆனால் இவர்கள், வெறித்தனமோ, குரோத எண்ணமோ கொண்டிருக்கவில்லை. அவர்கள் உட்[illegible] மதுவின் அளவு மற்றும் பாவனை [illegible]வே [illegible] இருந்து எடுத்தவுடனேயே அருந்தினால், அது போதை தராது என்பதையும் பல மரங்களிலில்(பனை) இருந்து எடுக்கப்பட்டவற்றை ஒன்றாகக் கலந்து அருந்தினால், அதிக போதை தரும் என்பதையும் இன்றைக்கும் நம் மூதாதையர்கள் சொல்கின்றார்கள் தானே. இதனால் தான் போலும் சான்றோர்கள் அதன் போதையை அனுபவிக்காமல் நிறைந்துள்ள பயனை அனு பவித்திருக்கின்றார்கள்.

> 'கள்' எனும் பதம் 'கள்ளு' என்றே வழக்கிலுள்ளது. 'கள்' என்பது பனை மரத்திலிருந்து எடுக்கப்படும் திரவம் ஆயினும் அது ஒருமையில் உள்ள எண்ணப்படக்கூடிய பெயர்ச்சொற்களைப் பன்மையாக்கப் பயன்படும் இடைச் சொல்லாகவும் இருக்கின்றது.

**கள்ளின் பயன்கள்**

*விந்துதிர மூறுமதி வெப்புடனே தாகம் போம்*
*பந்தமாந் தாதுவுமோ பாரிக்கும் உந்துபித்தந்*
*தோன்றும்பா டாணங்கள் சுத்தியமாந் தோகைமின்னே !*
*என்ற பனைமது விற்கே.*

தினமும் காலையில், மரத்திலிருந்து தருவிக்கப்பட்ட உடன் கள்ளை 25நாள்கள் வரையில் தொடர்ந்து அருந்திப் பின்னர் பத்து நாள் இடைவெளியில் மீண்டும் அருந்த வேண்டும். அதன் அளவோ ஒருவேளைக்குப் பத்து அவுன்ஸ்க்கு மிகையாகாமல் இருக்க வேண்டும். புளிப்பேறிய, பழைய மதுவை அருந்தக்கூடாது. அருந்தினால் அறிவு கெடும். உடலுறுப்புக்கள் பாதிக்கப்படும். அளவாக அருந்தினால் மாத்திரம் சொறி, சிரங்குக்குச் சிறு மருந்தாகும் என்கின்றது பாடல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ப்ரியமதா பயஸ்

# செல்லும் வழியின் தூரம்...

தேவிபுரம் பகுதி பாதுகாப்பு வலையமாக அறிவிக்கப்பட்டதை அறிந்ததும் மக்கள் மிக மிக நெருக்கமாக அந்தப் பகுதிக்குள் குடியேறுகின்றனர். தென்னை மரங்களுக்குக் கீழும், வாகனங்களுக்குக் கீழும் அவர்களின் இருப்பிடங்கள் அமைகின்றன.

**தேவிபுரத்தில் நோய்த் தாக்கம்**

அதிகரித்த வெயில், போதிய உணவுகள் இன்மை, நெருக்கமாகக் குடியிருந்தமை, சுகாதாரம் பேண முடியாத தன்மை காரணமாக எல்லோருக்கும் வயிற்றோட்டம் ஏற்பட்டுவிடுகிறது. அவலத்துக்கு மேல் அவலமாக அந்த நிலைமை மாறுகின்றது. பயத்தாலும், செய்வதறியாத அவஸ்தை நிலையாலும் மக்கள் தாம் சுகாதாரம் பேணும் நிலையில் இருக்கவில்லை. நோய் காட்டுத்தீயாகப் பரவுகின்றது. எல்லோருக்கும் வயிற்றோட்டம் தொற்றிவிட்டது. சிகிச்சைக்கான மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. சின்னச்சின்ன மருத்துவ கிளினிக்குகளில் எஞ்சியிருந்த மருந்துகள்கூடத் தீர்ந்துவிட்டன. இனி எதுவும் செய்யமுடியாது என்ற நிலைமை தேவிபுரத்திலேயே ஏற்பட்டுவிட்டது.

**தஞ்சம் தந்தது இயற்கை**

ஓங்கி வளர்ந்து பயன்தந்து கொண்டிருந்த தென்னைகள் யாருடையவை, எவருடையவை என்ற பேதம் இல்லாமல் தறிக்கப்படுகின்றன. அவற்றைக் கொண்டு பதுங்குக் குழிகள் அமைக்கப்படுகின்றன. எவரும் எப்போதும் சாவடிக்கப்படலாம் என்ற நிலைமை. அந்த நேரம் வாழ்வின் உச்சபட்ச சோதனைக் காலமாக இருந்தது. அதையும் தாண்டிய வேதனைகள் இன்னும் உள்ளன என்பது அப்போது நாம் அறியாதது. எப்படியும் இந்தப் போர் முடிவுக்கு வந்துவிடும் என்பதே எல்லோரது நம்பிக்கையும். தேவிபுரத்துக்குரிய அழகும் வனப்பும் என்றைக்கும் மாறாதது. முற்காலங்களில் பயஸை அழ கிய தென்னஞ்சோலைகளும், வாழைகளும் நிறைந்த அமைதியான வனப்புடன் கூடிய இந்த ஊரில் சந்தித்துப் பேசியது எனக்குப் பிடித்தமான ஒன்றாயிருந்தது. பசுமைகள் நிறைந்து வனப்புற்றிருந்த தேவிபுரத்துக்குள் இப்போது மக்கள் தஞ்சமடைந்து விட்டனர்.

**போர் பற்றிய புரிதல்**

போர் உக்கிரமானது. ஆனால் வன்னிக்குப் போர் புதிதல்ல. வள்ளிபுனம் பகுதியில் 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாம் குடியேறும்போது ஆங்காங்கே சிறிய சிறிய ஒன்றிரண்டு குடிசைகள், பெரும் புழுதிமயமான வீதிகள் குன்றும் குழியும், மழை வெள்ளமுமாக இருந்தன. இப்போது அவை அனைத்தும் மக்கள் வாழும் அழகான ஊராக மக்களாலேயே மாற்றப்பட்டிருந்தது. போக்குவரத்துக்கு அடிக்கடி பஸ் இருக்காது. எங்கே போவது என்றாலும் நடந்துதான் போகவேண்டும். அல்லது வீதியால் போகும் எந்த வாகனத்தையாவது கைகாட்டி மறித்து அதில் ஏறிப் பயணம் செய்வர். வள்ளிபுனத்தில் இருந்து ஒட்டுசுட்டானுக்குத் தனிமையாகச் சைக்கிளில் சென்று நிவாரணப் பொருள்களை வாங்கிக் கட்டிக்கொண்டு அத்தனை மேடு, பள்ளங்களையும் தாண்டி லாவகமாக திரும்பவும் வள்ளிபுனம் வந்து சேரும் நான், ஒருபோதும் காடு, மேடுகளைத் தாண்டிப் பயணிக்கப் பயந்ததில்லை. கிபிர்களின் குண்டுகளுக்கும் இலக்கில்லாமல் வரும் ஏவுகணைகளுக்கும் கண்ணில்லையே... அதனால் என் கண்கள் அவற்றை அவதானமாக நோக்கும். எங்கே வருகின்றன... எங்கே வீழ்கின்றன... என்று நோட்டம்விட்டு அவற்றுக்கு இலக்காகாமல் தப்பிக்க வழிதேடுவேன்.

**மக்களைக் கொல்வதற்கு அரசு விரித்த பொறி**

தேவிபுரம் இப்போது அரசால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு விட்டது. தரைகள் முழுவதுமாகப் பதுங்குக் குழிகள், பதுங்குக் குழிகளும் அவையருகே தறப்பாள்களும் கட்டப்பட்டன. தறப்பாளுக்குள் சமைப்பதுவும் குண்டுச் சத்தம் கேட்டதும் பங்கருக்குள் இறங்குவதும் சில நாள் வாழ்க்கையானது. பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட தேவிபுரத்துக்குள் குண்டு மழைபொழியும் படலம் ஆரம்பமானது. அங்கு மக்கள் நெரிசலில் விழும் குண்டுகள் உயிர்களை அதிகமாகப் பலியெடுத்தன. அங்கிருப்பது நல்லதல்ல என நாம் முடிவெடுத்தோம். பாதுகாப்பு வலயம் என அறிவித்த பகுதிகளில் அதிகமாகப் பல்குழல் எறிகணைகள் வந்து விழுந்தன. ஒவ்வொரு குண்டிலும் நூற்றுக்கணக்கானோர் மடிந்தனர். அவர்களுக்கான எந்தச் சடங்குகளையும் யாரும் செய்யவில்லை. முடிந்தவரை மயா னங்களை நாடி எரித்தோம், புதைத்தோம். அதுவும் முடியாதபோது சடலங்களைக் கைவிட்டு நாம் ஓடினோம்.


நாம் எமக்குத் தஞ்சமளித்த இந்தத் தாய் மடியில் இருந்தும் புறப்பட வேண்டியதாயிற்று. பாதுகாப்பு வலயம் என அறிவித்து அரசு விரித்திருந்த கொலைத் தடத்துக்குள் காலை நுழைக்காமல் மெல்ல நகர்ந்தோம்.

பயஸ் அப்போது சிரித்துக் கொண்டே வேறிடம் நகர ஆயத்தமானார்.

**இறுதிப் பயணம் ஆரம்பமாயிற்று**

எல்லாப் பதுங்குக் குழிக்குள்ளும் எமது வீட்டில் இருந்த அத்தியாவசியமான பொருட்களை அள்ளிப்போட்டோம். பயஸின் ஓவியங்கள், விலைமதிப்பற்ற படைப்புக்கள், ஞாபகச் சின்னங்கள், நினைவுப்பரிசுகள், விருதுகள், ஒவ்வொரு நாளும் வியர்வைசிந்தி உழைத்துத் தேடிய பொருள்கள் என்று ஏராளமானவற்றைப் பதுங்குக் குழிகளுக்குள் புதைத்தோம். ஆனால் தன்னம்பிக்கையைக் கையில் எடுத்துக்கொண்டோம். ஒன்றிரண்டு முக்கியமான பொருள்கள், இரண்டு உடைகள் இவற்றைவிட எதையும் எடுக்கவில்லை.

7



அது நாம் திருமணமான பின்னர் ஆயத்தம் செய்யும் முதலாவதும் இறுதியுமான நெடும்பயணம். எம்மோடு எல்லோரும் புறப்படுகின்றனர். தலையை நிமிர்த்த முடியாத அரைமண்டிப் பயணம். முதுகை வளைத்துக் கூனிக்கொண்டே நடந்தோம். குறிப்பிட்ட தூரத்துக்குப் பின் படுத்துக்கொள்வோம். பக்கத்தில் எறிகணை வீழ்ந்து வெடிக்கும். அடுத்தகட்டம், நகருவதற்குத்துணிவோம். எம்மோடு ஓடி வந்த குடும்பமோ, குடும்பத்தில் ஒருவரோ, இருவரோ துரத்தி வந்து விழும் குண்டுகளில் மடிந்திருப்பர். மனது கனத்து, கண்கள் குருதி சொரியும். ஆனாலும் ஓட்டமும் நடையும் தொடரும். கையில் எதுவுமே அறியாத பச்சை பாலகன் இருக்கின்றான். அவனைக் காப்பாற்ற மனது ஏங்கும். ஒரு கட்டத்துக்கு மேல் என்னால் ஓடமுடியவில்லை. பயஸின் மடியில் சாய்ந்து "என்னால் முடியாது" என்றுவிட்டேன்.

**பயஸைப் பதம் பார்த்தது கைக்குண்டு!**

"புதுக்குடியிருப்புப் பக்கம் போவம் இரணைப்பாலையில் சிவகரன் இருக்கிறார் அவரின் வீட்டுக்குப் போவம் கொஞ்சத் தூரம்தானே நடந்து வா" என்றார் பயஸ். ஏதோ ஒரு நம்பிக்கை, இடையில் இறந்துவிடுவோம் என்ற எண்ணம் எல்லாவற்றையும் தாண்டி புதுக்குடியிருப்புக்குப் போகலாம் என எண்ணினோம். தேவிபுரம் பகுதியில் இருந்து முற்றாக மக்கள் வெளியேறி இரணைப்பாலை, புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்குச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களைக் குண்டு மழை பொழியும் தேவிபுரத்திலிருந்து அப்புறப்படுத்துவதில் போராளிகள் பெருமளவில் உதவிக் கொண்டிருந்தனர். நாம் புதுக்குடியிருப்பு நோக்கி நகர்கிறோம். பரந்தன் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியை 'விக்கி' குடியிருப்புப் பகுதி ஒழுங்கையில் சந்திக்கத் திட்டமிட்டு அந்த வழியாக நகர்கின்றோம்.

எமது சத்தம் கேட்டதும் மிக அருகிலிருந்து சில கைக்குண்டுகள் எம்மை நோக்கி வீசப்பட்டன. இலக்குப் பிசகிய அந்தக் குண்டுகள் பயஸின் கால்களைச் சிராய்த்துக் காயங்களை ஏற்படுத்திவிட்டன....

(தொடரும்)

# சடங்குகள் புனைந்த குழப்பங்கள்

வானவன்



கடவுளின் வாழ்வு
கதைகளால்
புனையப்பட்டிருக்கிறது.

புனைவு என்பதை
வெறுவெளியில் எழுதப்படும்
கற்பிதங்கள் என்றோ
பிரமிப்புகளென்றோ
கொள்ளமுடியும்.

கொள்ள முடிந்த அளவுக்கு
இட்டு நிரப்பப்பட்டிருக்கின்றன
கதைகள்.

கதைகள் எப்போதுமே
சுவாரசியமானவை. எனினும்
கதைசொல்லியின்
முடிபுகளால்
பின்னப்பட்டிருக்கின்றன.

பின்னப்பட்ட
கதைகளுடன்
ஊடு இழைந்தோடும்
ஆதங்கங்களும்
அதற்காயமைந்த
ஆறுதல்களும்.

ஆறுதல்
எல்லோருக்குமானது.
உணர்வுகளாலான
ஒவ்வொன்றுக்கும்
ஒவ்வோர் வடிவில்
அவை தேவைதான்.

தேவைகள்
யாருக்குத்தானில்லை?
கடவுளுக்கும்தான்.
கற்பிதங்களுக்கும்தான்.
எல்லாவற்றுக்கும்தான்.
எல்லாமிருத்தல் என்பதுகூட
ஒருவித அபத்தம்தான்.

ஒருவிதமாயும் ஒரேவிதமாயும்
யோசிக்கவும் பல்வேறு விதமாய்
பேசிக்கொள்ளவும்
அவகாசமற்றுப்போன உலகில்
கடவுள்பற்றிய கதைகளால்
சடங்குகளைப் புனைந்து
புதுக்குழப்பங்களைக்
கொண்டாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'வொண்டர் வொமன்'

## பெண்ணைக் கொண்டாடும் ஹொலிவூட்

பெண்களைச் 'சுப்பர்ஹீரோ'க்களாகக் கொண்டாடுவது ஹொலிவூட்டுக்குப் புதிதல்ல. 'சார்ளீஸ் ஏஞ்சல்ஸ்', 'லாரா க்ரொவ்ட் ரொம்ப் றைடெர்', 'கற்வுமன்' எனப் பல படங்களை இதற்குச் சான்றாக் கலாம். அவை பெண்களைத்தான் கொண்டாடுகின்றனவா? என்பதை உற்றுப் பார்த்தால், அவை பெண் உருவங்களுக்கு ஆண் சிந்தனையைப் போர்த்திய படங்கள் என்பது புலனாகும். பலம் வாய்ந்தவர்களாகவும் துணிச்சல்மிக்கவர்களாகவும் பெண்களைச் சித்திரிக்கும் அதே வேளை, ஈவிரக்கமற்றவர்களாவும், சுயபுத்தி இல்லாமல் ஆணால் இயக்கப்படுபவர்களாகவும், கவர்ச்சிப் பண்டங்களாகவுமே இந்தச் சினிமாக்கள் அவர்களை உருவகப்படுத்தியிருக்கும்.

இத்தகைய பண்பிலிருந்து மாறுபட்டு நிற்கிறார் பெண் இயக்குநர் 'பேட்டி ஜென்கின்ஸ்'. இவர் இயக்கிய 'வொண்டர் வொமன்'இல் 'கால் கேடெற்' நாயகியாகத் திரையில் தோன்றியிருக்கின்றார். இந்தப்படம் கடந்த வாரம் வெளியாகியிருந்தது.

### கதைப்பார்வை

வன்மம் நிறைந்த குணத்துடன் ஆண்களைப் படைக்கிறார் போர்க் கடவுளான ஏரிஸ். ஏரிஸிடமிருந்து ஏனையவர்களை மீட்க ஆண் இனமற்ற தீவை உருவாக்குகிறார் செயுஸ். இந்தத் தீவில் 'அமேசான்' என்ற இனத்தைச் சேர்ந்த போர் வீராங்கனைகள் மட்டுமே பிறக்கின்றார்கள், வாழ்கிறார்கள். அவர்களின் இளவரசி டயானா(கால் கேடெற்).

மறுபுறம், உலகை ஆக்கிரமிப்பதற்காக அபாயகரமான ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது ஜெர்மனி. அதன் சதித் திட்டங்களை முறியடிக்க பிரிட்டிஷ் படைத் தளபதி முயல்கிறார். போரைத் தடுக்க எத்தனிக்கும் அவருடன் கைகோத்துப் போர்க் கடவுளையும் அழிக்கும் காரியத்தில் இறங்குகின்றார் டயானா. கிரேக்க புராணத்தையும், உலகப் போர் சரித்திரத்தையும் இழையோடிவிட்டு அதனூடே பெண்ணியத்தைத் திரையில் விரிக்கின்றது கதை.



### ஆணாதிக்கம் தகர்க்கப்பட வேண்டியதே

பெண்களை ஏற்றத்தாழ்வுடன் நடத்தும் ஆணாதிக்க சிந்தனையைக் கேலியாகவும் தீவிரமாகவும் சாடுகிறது படம்.

"ஆண்களின் உலகில் எச்சரிக்கையோடு இரு. உன்னை அடையும் தகுதி அவர்களுக்குக் கிடையாது" டயானாவுக்கும் அவருடைய தாயாருக்கும் இடையான உரையாடல்கள். போரை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைக் கூட்டத்தில் டயானா நிற்பதைக் கண்டு, "இந்தப் பேச்சுவார்த்தையில் பெண்ணுக்கு என்ன வேலை?" என்று பிரிட்டிஷ் தளபதியை இராணுவத் தலைவர் கடிந்து கொள்வது, ஆயிரக்கணக்கான மொழிகள் அறிந்த டயானாவின் அறிவைக் கண்டு, "ஒரு பெண்ணுக்கு எப்படி இவ்வளவு புத்திக்கூர்மை?" என்று ஆச்சரியப்படும் காட்சிகள் போன்றவை பெண்ணியத்தைக் கூறுபவை. ஆடை, பழக்கவழக்கம் என ஒவ்வொன்றிலும் பெண் எப்படியெல்லாம் கட்டுப்படுத்தப்படுகின்றாள் என்பதுவும் கிண்டலான தொனியில் ஆங்காங்கே விமர்சிக்கப் படுகின்றது.

"நீ அற்புதமானவளாக இருக்கலாம், ஆனால் எனக்கு ஈடாக முடியாது" என்கிறார் ஜெர்மனியப் படைத்தலைவர். அதற்கு அடுத்த காட்சியில் அவர் கொல்லப்படுதல் என்பது ஆணாதிக்கம் நொருங்கிப் போவதன் குறியீடு.

### பெண் தன்னை முழுமையாக உணரும் தருணம்

'ஏரிஸ்' உடன் டயானா சண்டையிடும் காட்சி பெண்ணியத்தைப் பறைசாற்றுகிறது. தன்னுடைய வாளால் மட்டுமே ஏரிஸை அழிக்க முடியும் என அதுவரை நம்பியிருந்த டயானாவின் வாளை ஏரிஸ் உடைத்து விட்டதும், தனித்துப்போகும் டயான, அதன் பிறகு கொள்ளும் தன்னம்பிக்கை ஒரு பெரும் பலம். தன்னுடைய முழுமையான பலத்தை டயான்ா உணர்ந்து அவனை அழிக்கிறாள். நிதர்சன வாழ்விலும் பெண்ணின் ஆற்றல்கள் இத்தகைய(வாள் குறியீடு) கண்ணுக்குத் தெரியாத பிம்பங்களால் காலங்காலமாக மட்டுப்படுத்தப்பட்டு வருவதை இல்லாமல் செய்ய வேண்டும் என்பது இதன் வெளிப்படை. இது போன்ற சிலவே பெண் தன்னுடைய ஆற்றலை அறியாமல் இருப்பதற்கு வழி செய்கின்றன என்பதும் இன்னொரு செய்தி.

இந்தப் படத்தில் நாயகி, எதிரியை அழித்தொழிக்க மட்டும் புறப்படவில்லை. "உலகில் ஆண்களுக்கிடையில் புரிந்துணர்வை உருவாக்கும் பாலமாகத் திகழ்பவர்கள் நாம்தான்" என்கிறாள்.

ஆக்ரோஷமாகப் போரிடும்போது பிற உயிர்களை அழிக்க அவள் மறுக்கிறாள். காயமடைந்த போர் வீரர்களையும் அப்பாவி மக்களையும் கண்டு நெகிழ்கிறாள். இந்த உலகில் ஆண் - பெண் பேதமற்ற அன்பே சிறந்தது என்பதை அவள் போதிக்கவும் செய்கின்றாள்.

# பரவாயில்லை ரகம்




### கதைப்பார்வை

விலை மதிப்புமிக்க ஒரு மரகத நாணயத்தைச் சுவீகரிப்பதன் பொருட்டு பல சிக்கல்களைக் கடந்து செல்லும் இரண்டு நண்பர்களின் கதைதான் மரகத நாணயம். 40 இலட்சம் ரூபா கடனை அடைப்பதற்காக நண்பன் டானியலின் வழிகாட்டலில் ராம்தாசிடம் வேலைக்குச் சேர்கின்றான் ஆதி. சின்னச் சின்னக் கடத்தல்களைச் செய்து கடனை அடைக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்ட ஆதி பெரிதாக ஏதாவது செய்யலாம் என்கிறான். ராமதாஸ் அதற்கு உடன்படாத நிலையில், மரகத நாணயத்தைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்தால் 10கோடி ரூபா தருவதாகச் சீனாக்காரர் ஒருவர் வாக்குறுதி அளிக்கிறார். அந்த மரகத நாணயத்தைத் தொட்ட 132பேர் சாவடிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்தும் ஆதியும் டானியலும் அந்த ஆபத்தை அடைய முயற்சிக்கிறார்கள். அதற்கு ஆவிகள் சிலவும் உதவுகின்றன. அவர்களின் முயற்சி வெற்றி பெற்றதா? இல்லையா? என்பதே மரகத நாணயத்தின் கதை.

### பாத்திர வார்ப்புக்கள்

நாயகன் ஆதி தனது பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். ஆனால், படத்தின் உண்மையான நாயகன் ராம்தாஸ்தான். சிறு கடத்தல்காரன் ராமநாதன் வித்தியாசமான நடிப்பைத் தந்திருக்கிறார். இறந்த பிறகு அவரது உடல் ஆவி புகுந்த கூடாக நடித்திருக்கிறது. ஆக இரட்டை வேடத்தில் அவர் பின்னியெடுத்திருக்கிறார்.

நிக்கி கல்ரானி, கதாநாயகியாக ஒரு காட்சியில் அறிமுகமாகி அடுத்த காட்சியிலேயே வேறு ஒருவரை மணம் முடித்து வெளியேறி விடுகிறார் அவர். ஆனால் மரகத நாணயத்தைத் தேடும் படலம் உச்சமடையும்போது புதிய அவதாரத்துடன் மீண்டும் வருகிறார். இறந்துபோன நிக்கி கல்ராணியின் உடலுக்குள் ஒரு ரவுடியின் ஆவி புகுந்துகொள்கிறது. அதற்கு ஏற்ப உடல்மொழியைச் சிறப்பாக மாற்றி நடித்திருக்கிறார் நிக்கி கல்ராணி.

ஆதியின் நண்பனாக வரும் டானியல், ரவுடிக் கும்பலின் தலைவன் ஆனந்த்ராஜ், அவரது அடியாள் முருகானந்தம், ஆவியாக வரும் சங்கிலி முருகன், சாமியாராக வரும் கோட்டா சீனிவாசராவ், தொல்லியல் துறை அதிகாரியாக எம்.எஸ்.பாஸ்கர் என்று ஒவ்வொருவரும் கதைக்கு வலுச் சேர்த்துள்ளனர். சிறு சிறு வசனங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு திரையரங்கைச் சிரிக்கவும் வைத்திருக்கிறார்கள்.

### இசை, ஒளிப்பதிவு, காட்சியமைப்பு

வசனம் படத்துக்குப் பெரும் பலம் சேர்க்கிறது. பாடல்கள் கதையை ஒட்டிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. திபு நினன் தாமஸின் இசையும், பி.வி.ஷங்கரின் ஒளிப்பதிவும் படத்துக்குப் பொருத்தமாக இருக்கின்றன.

அரங்குகள், வெளிப்புறப் படப்பிடிப்பு என அனைத்திலுமே ஒருவகைப் பச்சை நிறம் வருவது போன்று ஒளிப்பதிவு செய்துள்ளார் பி.வி.ஷங்கர். பின்னணி இசை படத்துடன் பொருந்திப் போகிறது. பாடல்கள் உறுத்தாமல், படத்தின் காட்சிப் பின்னணியை ஒட்டியே அமைந்திருப்பது சிறப்பு.

முதல் பாதியில் சில காட்சிகளை நீக்கியிருக்கலாம்.

நாணயத்தைத் தேடும் பயணம் தொடங்கும்போது அதில் ஒரு தொய்வு இருக்கின்றது. பின்னர் நாணயத்தை நெருங்கும் பகுதியில் அதே தொய்வை மீளவும் உணர முடிகிறது. சக்திவாய்ந்த அரசனின் ஆவி ஆதியையும் டானியலையும் கொல்லுவதற்காக வண்டி எடுத்துக்கொண்டு சுற்றுவது நம்பும்படியாக இல்லை. இதுபோல சில குறைகள் இருந்தாலும் இப்போது வந்து கொண்டிருக்கும் படங்களுக்குள் மரகத நாணயம் பரவாயில்லை. ரகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது?

அ. அஜந்தன்

அண்மைக்காலத்தின் கல்வியில் எமக்கு கிடைத்த பின்னடைவு எந்த அளவுக்கு உண்மையோ அந்தளவுக்கு வாழ்வின் சவால்களையும் தோல்விகளையும் எதிர்கொள்வதிலும் நாம் நன்கு பின்தங்கியுள்ளோம் என்பதும் உண்மையே. இங்கு கற்றறிந்த பலரும் கூட தமது வாழ்வில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள முடியாமல் அல்லது தமக்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாமல் தமது உயிரை மாய்த்த சம்பவங்கள் நிறையவே உண்டு. இதற்கான காரணங்கள் அவர்களது கல்வி, பரீட்சையை அல்லது வேலைவாய்ப்பை மையப்படுத்தியதாக அமைந்திருப்பதே கவலைக்குரியது ஆகும்.

**கடிதங்கள் கற்பிக்கும் வாழ்வியல்**

வாழ்வதற்கான கற்றல்களையும், சுய விழிப்பு ணர்வையும், சுயமதிப்பையும், தற்துணிவையும், வெற்றி தோல்வியின் சமநிலைத்தன்மையையும், இயற்கையின் இயல்பு நிலையையும் கற்றுக் கொள்ளாமல் போதல் ஏட்டுக்கல்வியின் ஸ்திரத்தன் மையை கேள்விக்குறியாக்கிவிடுகிறது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், தனது மகனின் ஆசிரியருக்கு எழுதிய ஒரு நெகிழ்வான கடிதத்தின்மூலமும், சிறந்த கண்டுபிடிப்பாளராக விளங்கிய தோமஸ் அல்வா எடிசன் அவர்களின் தாயாருக்கு ஆசிரியரால் எழுதப்பட்ட கடிதமும் அதற்கு அவரது தாயார் நேர் சிந்தையாக அதை மாற்றியமைத்தமையையும் நாம் நினைவிருத்தல்வேண்டும். கற்றல், கற்பித்தலின் மேன்மையையும் நேர்த்தியையும் பெற்றோர் ஆசிரியர்கள் பிள்ளைகள்மீது வைத்துக்கொள்ளவேண்டிய நம்பிக்கையையும் இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

அடித்தர வர்க்கத்திலிருந்து நாட்டின் அரசதலைவராகிய தன்னுடைய கடும் உழைப்பையும், வாழ் வில் தான் கடந்து வந்த பாதைகளின் அனுபவத்தையும், பக்குவத்தையும் தனது மகனும் கற்றுக் கொள்ளவேண்டும்என்றதனது நோக்கத்தைத் தனது மகனின் ஆசிரியருக்கு விளக்கிக் கூறுவதற்குக் கடிதம் ஒன்றை வரைந்தார் ஆபிரகாம்லிங்கன்.

**மகனை நல்ல மனிதனாக்குங்கள்!**

"அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்க மாட்டார்கள் என அவனுக்குச் சொல்லித் தாருங்கள். பகைவர்களுக்கு நடுவில் அன்பான, நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்குத் தெரிவியுங்கள்"

"பொறாமை அவன் மனதைச் சூழாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவதுகோழைத்தனம் எனப் புரிய வையுங்கள்"

> இன்றைய பெற்றோர்களைப்போல் வைத்தியராவதற்கு அல்லது பொறியியலாளராவதற்குக் கற்பியுங்கள் என்பதை விடுத்து நல்ல மனிதனாகவும், சுயமாகத் தனது பகுத்தறிவாலும் பட்டறிவாலும் இயல்பு வாழ்வை மகிழ்வுடன் வாழ கற்றுக்கொடுக்க வேண்டும்.



"புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்" "வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரியஒளியில்மின்றும் தேனீக்களின் துரிதத்தையும், பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் இரசிக்கக் கற்றுத்தாருங்கள்."

"ஏமாற்றுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்"

"மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும்கூட சுய சிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்"

"மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும் முரட்டுக் குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனைத் தயார்படுத்துங்கள்"

"அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள் எனினும் உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்கசும் கற்றுக் கொடுங்கள்"

"துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக்கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குப் புரிய வையுங்கள்."

"போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்று புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்"

"அவனைக் கனிவாக நடத்துங்கள் அதிகம் செல்லம் கொடுத்து உங்களைச் சார்ந்திருக்கச் செய்ய வேண்டாம்."

"சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை "அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்"

இது ஒரு மிகப் பெரிய பட்டியல்தான் இதில் உங்களால் சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள் அவன் என் அன்பு மகன். இப்படிக்கு ஆபிரகாம் லிங்கன்.

இதுவே அவர் வரைந்த கடிதம். இதில் நெகிழ்வுப் போக்குடனும் மிக மிக நிதானமாகவும் தனது வாழ்நாளின் வடுநிறைந்த அனுபவத்தின் செதுக்கல்களைக் குறிப்பிட்டுள்ளார். இன்றைய பெற்றோர்களைப்போல் வைத்தியராவதற்கு அல்லது பொறியியலாளராவதற்குக் கற்பியுங்கள் என்பதை விடுத்து நல்ல மனிதனாகவும், சுயமாகத் தனது பகுத்தறிவாலும் பட்டறிவாலும் இயல்பு வாழ்வை மகிழ்வுடன் வாழக் கற்றுக்கொடுக்கவே அவர் வலியுறுத்தியுள்ளார். இதுவே ஏட்டுக்கல்விக்கு எட்டாதிருக்கும் அனுபவ, வாழ்வி யல் கல்வியாகக் கருதப்படுகிறது.

> "ஏமாற்றுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்"
>
> "மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும்கூட சுய சிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்"
>
> "மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும் முரட்டுக் குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனைத் தயார்ப்படுத்துங்கள்"
>
> "அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள் எனினும் உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்கவும் கற்றுக் கொடுங்கள்"

**எடிசன் மூலம் ஒரு எடுத்துக்காட்டு**

இன்று பாவனையிலுள்ள பல பொருட்களைக் கண்டுபிடித்து மிகச் சிறந்த கண்டுபிடிப்பாளன் என்ற பட்டத்தை வென்றவர் தோமஸ் அல்வா எடிசன். சிறுபராயத்தில் அவருடைய அளவுகடந்த அதீத குறும்புத்தனங்களில் சினம் கொண்ட அவனது ஆசிரியர் மிகுந்த கோபத்தோடு ஒரு கடிதத்தை வரைந்து அவனது கைகளில் கொடுத்து அதை அவனது தாயிடம் கொடுக்கும்படி கூறினார். பள்ளியிலிருந்து வீடு வந்த எடிசன் கையில், கவரில் அந்தக் கடிதத்தைத் தனது அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என ஆசிரியர் கூறியதா கச்சொல்லி அதைத் தாயிடம் கொடுத்தான். அந்தத் தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும்படியாக அதைப் படித்தாள்.

"உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன்னால் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்குக் கற்பிக்குமளவுக்குத் திறமையான ஆசிரியர்கள் எங்களிடம் இல்லை. அதனால் தயவுசெய்துநீங்களேஉங்கள்மகனுக்குக்கற்பிப்பதுநல்லது"

பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாய் இறந்துவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகக் கண்டுபிடிப்பாளராக ஆனார். இப்படி இருக்கையில் ஒருநாள் தனதுவீட்டின் பழையசாமான்களை எடுத்து ஒதுக்கி வைத்துக்கொண்டிருந்தபோது அவர் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டுவந்து கொடுத்த அந்தக் கடிதம் எதேச்சையாகக் கண்ணில்பட ஆவலுடன் அதை எடுத்துப் படித்துப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்பவேண்டாம்"

இதைப் படித்த எடிசன் அழுதார். தனது நாட்குறிப்பேட்டில் "மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்" என்று குறித்து வைத்துக்கொண்டார். எம் மீதுள்ள எதிர்மறையான சிந்தனைகளை எப்படி நேர் சிந்தனைகளாக மாற்றி வெற்றி கொள்வது என்பதற்கும். பிள்ளைகளின் மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது என்பதற்கும் இந்தச் சம்பவம் மிகச் சிறந்தஉதாரணம். ஆபிரகாம் லிங்கனின் வேண்டுகோளை நிறைவேற்ற வல்ல ஆசிரியர்களும் தோமஸ் அல்வா எடிசனின் தாயாரைப்போல் தன் பிள்ளைமீது நம்பிக்கைவைத்து 'உன்னால் முடியும்' என்ற உந்துதலைக் கொடுக்கும் பெற்றோரும் அமைந்தால், ஒவ்வொரு மாணவரும் வாழ்வில் உயர்நிலை அடைவர் என்பதில் எவ்வித விவாதத்துக்கும் இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையில் இருந்து...

அனார்கலி



## மீன்பிடி ஆரம்பம்!

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் பலமாத காலங்களாகத் தடைப்பட்டிருந்த கடல்நீர் மீன்பிடி இந்த வாரம் முதல் ஆரம்பமாகியுள்ளது.
குறிப்பாக மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளினக் காடு, நிந்தவூர் போன்ற பிரதேசங்களில் தற்சமயம் மீன்பிடிக் கும் பருவகாலம் ஆரம்பமாகியுள்ளதால் வருமானமின்றி முடங் கிக் கிடந்த கடற்றொழிலாளர்கள் தினமும் ஆர்வமுடன் மீன்பிடி யில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். கீரிச்சாளை, சூரை, பாரை போன்ற இன மீன்கள் அதிகளவில் பிடிக்கப்பட்டு வருவதால் மீன்விலை சற்றுக் குறைவடைந்துள்ளது என்பது மகிழ்ச்சிதான்

## புதிய உத்வேகத்தில்

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்ட தாரிகள் முன்னெடுத்து வரும் காலவ ரையறையற்ற அறவழிப் போராட் டத்தை எத்தகைய பின்னடைவுமின்றி புதிய உத்வேகத்தில் முன்னெடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.
காரைதீவு விபுலானந்தா சதுக்கத்தில் இன்றுடன் 119ஆவது நாள்களாகியும் தொடரும் பட்டதாரிகளின் நியமனம் கோரிய இந்தச் அறவழிப் போராட் டத்தை "எமக்கு நியமனங்கள் கிடைக் கும்வரைக்கும் உறுதியுடன் தொடரப் போகின்றோம்" என அவர்கள் அறிவித் திருக்கின்றனர்.
குறித்த வேலையற்ற பட்டதாரிகளின் சிறப்பு ஒன்றுகூடலொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் பட்டதாரிகள் சங்க இணைத்தலைவர்களான ஏ.எச். ஜெசீர், எம்.திலீபன் ஆகியோர் தலை மையில் நடைபெற்றபோதே மேற்படி திடசங்கங்பங்கள் பூணப்பட்டன.
நாம் கடைசிவரைக்கும் போராடுவோம். நிச்சயம் வெற்றிகிடைக்கும். நாம் அனை வரும் இந்தப் போராட்டத்தை ஒற்றுமை யுடன் முன்னெடுப்போம். இப்படியாக மேற்படி ஒன்றுகூடலின்போது இணைத் தலைவர் ஜெசீர் கூறினார்.

## நன்றிகள்...! நன்றிகள்...!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முஸ்லிம் மக்களுக்காகத் தொழுகை அறை ஒன்றை வழங்கியுள்ளமைக்குப் பெருமகிழ்ச்சி தெரிவித் துள்ள அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு, இதற்கு ஆவண செய்த வைத் தியசாலையின் பணிப்பாளர் உட்பட அது சாத்தியப் பட முன்னின்று செயலாற்றியவர்களுக்கு பெரு நன்றிகளைத் தெரிவித்துள்ளது.
அண்மைக்காலமாகக் கிழக்கிலிருந்து, குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலிருந்து கணிசமான முஸ் லிம் மக்கள் இருதய நோய் போன்ற பல நோய்க ளுக்குச் சிகிச்சை பெறவென யாழ் போதனா வைத் தியசாலையை அதிகம் நாடி வருகின்றனர் எனச் சுட்டிக் காட்டியுள்ள அந்த அமைப்பு, அவர்கள் தொழுகை செய்து தமது மனப் பாரங்களை ஆற்றிக் கொள்வதற்காக அங்கு தொழுகை அறை அமைக் கப்பட்டது வரவேற்புக்குரியது என்றுள்ளது. அத்து டன் அந்த அறை திறப்பு விடயத்தில் இணைந்து செயலாற்றிய யாழ்ப்பாண முஸ்லிம் பிரமுகர்களை யும் அது பாராட்டியுள்ளது.

## கூட்டு சேர முடியாது...!

கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைவதற்குரிய காலம் நெருங்குவதால் கட்சிகள் உஷாரடையத் தொடங்கியுள்ளன. அதன் பிரதி பலிப்பாக மக்களுக்கும் தமக்குமிடையில் சுமூகமான உறவை ஏற்படுத் துவதற்கு அந்தக் கட்சிகள் பலவும் பேராளர் மாநாடுகளை நடத்தத் தொடங் கியிருக்கின்றன. அது மட்டுமன்றி ஏட்டிக்குப் போட்டியாக நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வுகளையும், ஏன் விடுதி திறப்பு விழாக்களை யும்கூட நடத்தி வருகின்றன.
இந்த நிலையில் தான் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் எந்தவொரு கட் சியுடனும் கூட்டமைத்துப் போட்டியிட வேண்டிய தேவை அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கு இல்லையென அந்தக் கட்சியின் பதில் தலைவர் கலாநிதி ஏ.எம். ஜெமில் சூளுரைத்துள்ளார்.



## இனச்சுத்திகரிப்பா...?

3ஆம் தரத் தபால் அதிபர்களுக்கான போட்டிப்பரீட்சை யில் மூன்றாவது தொகுதி வாரியாகச் சித்தியடைந்த வர்களுக்கு யாழ்ப்பாண அஞ்சல் பயிற்சி நிலையத்தில் மூன்று வார பயிற்சி வழங்கி அண்மித்த காலங்களில் நியமனங்களும் வழங்கப்பட்டன.
இதில் நியமனம் வழங்கப்பட்ட வடகிழக்கைச் சேர்ந்த தமிழ் பேசும் 15பேருக்கும் வடகிழக்குக்கு வெளியே, திட்டமிட்டு, குறித்த 3ஆம் தரத் தபால் அதிபர்கள் நியமனம் வழங்கப்பட்டுள்ள தாக அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.
சங்கப் பொதுச்செயலாளர் யூ.எல்.எம்.பைஸர், பதில் தபால்மா அதிபர் டபிள்யூ.ஏ.ஜி விக்கிரமசிங்க (நடைமுறைகள்) விடம் இது தொடர்பான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.
இதன்படி வடகிழக்கைச் சேர்ந்த 15பேருக்கு (தபால் அதிபர்கள்) கெக்கிராவ, பத்திரமுல்ல, இராஜகிரிய போன்ற பிரதே சங்களில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ள பொதுச் செயலாளர் பைஸர், சிங்கள மொழி தெரியாத தமிழ் பேசும் அலுவலர்களுக்கு ஏன் இப்படிச் சிங்களப் பிரதேசங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டன எனவும், இது குறித்த திணைக்களத்தின் இனச் சத்திகரிப்புக்கான, திட்டமிட்ட, மறைமுகச் செயற்பாடா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.




## 'தேவதை' வெளியீடு

'கல்முனை நெற்' ஊடகவலையமைப் பின் ஏற்பாட்டில், 'தேவதை' குறும்பட வெளியீடு கல்முனையில் இன்று 25ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.
கல்முனை உருவஸ்லி உயர்தரப்பாட சாலை மண்டபத்தில் ச.சபேசன் தலை மையில் நடைபெறவிருக்கும் இந்தக் குறும்பட வெளியீட்டு நிகழ்வில் மட்டக்க ளப்பு மாநகரசபை ஆணையாளர். வீ. தவராஜா முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு 'தேவதை' குறும்பட இறு வட்டை வெளியிட்டு வைக்கவிருக்கின்றார். கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் ஆர். முரளீஸ்வரன் இறுவட்டின் முதற்பிரதி யைப் பெற்றுக் கொள்ள இருக்கின்றார்.
ஜோயல் ஜே.ஆர்.இன் இந்த 'தேவதை' குறும்படம் ரொமிஸ்ஸின் தயாரிப்பில் உருவாகியுள்ளது.




## காப்பாற்றப்படுமா?

"சிறுபான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குக ளைப் பெற்று ஆட்சிக்கு வந்த கூட்டாட்சி அரசு முஸ் லிம் மக்களின் உயிர், உடமைகள், பொருளாதாரம் என்பவற்றை வாக்குறுதியளித்தபடி பாதுகாக்க வேண்டும்" இவ்வாறாக அரசைக் கோரும் தீர்மா னம் ஒன்று தேசிய காங்கிரஸின் பேராளர் மாநாட் டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
தேசிய காங்கிரஸின் 13ஆவது வருடாந்தப் பேராளர் மாநாடு அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் நிறை வேற் றப்பட்டது.
நல்லாட்சி அரசு முஸ்லிம்களைப் பாதுகாப்பதில் எடுத்துவரும் அலட்சிய நடவடிக்கைகளின் பிரதிபலிப்புக்களைக்கூட இப்போது கண்டு முஸ்லிம் மக்கள் விசனப்படத் தொடங்கிவிட்டார்கள்.

## வட மாகாணசபை பற்றி... கிழக்கு மக்கள்

வடமாகாண சபையில் நடந்து ஓய்ந்திருக்கும் சம்பவங்கள் தொடர் பான தகவல்களை அறிவதில் கிழக்கு மாகாண மக்களிடையேயும் ெ...ம் ஆர்வம் ஏற்பட்டு தணிந்தது.
...ு வடமாகாண ...பை விவகாரங்கள் ஓரளவாவது சுமூக வந்துள்ளமை... ...ல் தாம் மன நிறைவடைவதாகக் கிழக்கு மக்களின் உணர்ச்சி வெளிப்பாடுகள் அமைகின்றன.
அத்துடன் வட மாகாணசபைக்குள் நீயா, நானா? போட்டி மனப் பாங்கு இனியும் துளிர்விடக் கூடாதென வலியுறுத்துகின்றனர் அவர்கள்.
இது உரியவர்களுக்குப் புரிந்தால் சரிதான்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொள்ளைக்காரனை விரட்டினார் பதில் அமைச்சர்



அரசிடமிருந்து மக்களுக்குச் செல்ல வேண்டியவற்றில் அதிகமானவை சில அரசியல்வாதிகளால் தமக்கு நெருக்கமானவர்களுடைய கைகளுக்குச் செல்வதை நாம் அறிவோம். அரசியல்வாதியின் வெற்றிக்காக அவரைச் சுற்றி நின்று உழைக்கும் அவர்களுக்குக் கூலியாகப் பல சலுகைகளை அந்த அரசியல்வாதியும் செய்து கொடுப்பார். அதுவும் அரச செலவுடனேயே. இவற்றின்போது ஏழை மக்கள் பாதிக்கப்படுவதுதான் கவலைக்குரிய விடயம்.

இவ்வாறான அரசியல் பின்னணியைப் பயன்படுத்தி மக்கள் உடமையைச் சுருட்ட முனைந்த ஒருவரை அவர் கொண்டாடிய அமைச்சரே விரட்டியடித்தார். இந்தச் சம்பவம் குருநாகலில் இடம்பெற்றது.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பதில் அமைச்சர் அசோக அபயசிங்க அவரது வெற்றிக்காக உழைத்தவர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார். அந்தச் சந்திப்பில் பலரும் பல்வேறு வகையான உதவிகளை அமைச்சரிடம் கேட்டனர். அவர்களுள் ஒருவர் தனக்குச் சமுர்த்தி நிவாரணம் தந்தால் மட்டும் போதும் என்றார். அவர் யார் என்று அமைச்சர் திரும்பிப் பார்த்தார். அமைச்சருக்கோ அதிர்ச்சி. சமுர்த்தி நிவாரணம் கேட்டவர் இரண்டு அரிசி ஆலைகளுக்குச் சொந்தக்காரரர்!

சமுர்த்தி நிவாரணம் நாளொன்றுக்கு 300ரூபாவுக்கும் குறைவான வருமானம் கிடைக்கும் குடும்பங்களுக்கு வழங்கும் நிவாரண உதவியாகும். வசதி படைத்த நீங்கள் அதைக் கேட்பது எந்த வகையில் நியாயம் என்று அமைச்சர் அந்த நபரிடம் கேட்டார்.

அமைச்சரின் வெற்றிக்காக உழைத்தவர் என்ற மமதையில் இருந்த அந்த நபர், அமைச்சரின் எந்தவொரு விளக்கத்தையும் கேட்க மறுத்து தர்க்கம் புரிந்தார். இறுதியில் அந்த நபரை அங்கிருந்து விரட்டுவதைத் தவிர



## 'இவர்தான் தங்கத் தம்பி'


கலகலப்புடன் கிண்டலும் கேலியுமாகப் பேசுபவர்தான் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்கூட அவருடைய கலாய்ப்பில் இருந்து தப்பியது கிடையாது. இவரிடம் சிக்கினால் அதோ கெதிதான்.

இவர் இப்போது கலாய்த்து வரும்நாடாளுமன்றஉறுப்பினர்களில் ஒருவர் ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் காவிந்த ஜயவர்தன. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனவின் புதல்வர்.

இவர்கள் இருவரும் தொலைகாட்சி விவாதங்களுக்கு வந்துவிட்டால் காவிந்தவை மகிந்தானந்த 'சின்னத் தம்பி, தங்கத் தம்பி' என்று கிண்டலோடுதான் அழைப்பார். தனிப்பட்ட சந்திப்புக்களை மேற்கொண்டாலும் இதே கலாய்ப்புத்தான். ஆனால் காவிந்தவோ அவரது கலாய்ப்புக்கு ஈடுகொடுத்து சமாளித்துவிடுவார். மகிந்தானந்த, 'சின்னத் தம்பி' என்று அழைக்கும்போது காவிந்த பதிலுக்குப் 'பெரிய அண்ணா' என்றுதான் கூறுவார். அரசியலில் எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியும் மோதிக்கொள்வது மக்களுக்குக் காட்டும் படம்தான் என்பதற்கு இதைப்போல பல உதாரணங்கள் உள்ளன.

## 6 மாதங்களில் 3 பதவி உயர்வுகள்

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்ற பழமொழிக்கு ஏற்ப நடந்துகொள்ளும் அரச அதிகாரிகள் குறுகிய காலத்துக்குள் உயர்ந்த இடத்துக்கு வந்துவிடுகின்றனர். ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்தால் மாத்திரம் போதும். தாம் நினைத்தது நடக்கும். ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து மகிந்த காலத்து அமைச்சர்கள், அதிகாரிகளை ஊழல், மோசடிக் குற்றச்சாட்டின்கீழ் கீழ் விரட்டி, விரட்டி வேட்டையாடிய அதிகாரிகள் பலரும் அவ்வாறான உயர் பதவிகளை பெற்றுக்கொண்டனராம். குறிப்பாகச் புலனாய்வுப் பிரிவில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் குறுகிய காலத்துக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பதவி உயர்வுகளைப் பெற்றனராம். அதாவது,ஆறு மாதங்களுக்குள் உதவிப் பொலிஸ் அத்தியேட்சகர், பொலிஸ் அத்தியேட்சகர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் ஆகிய மூன்று பதவி உயர்வுகள் சில பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்தன என்கிறது மகிந்த அணி வட்டாரம்.



## நல்ல வேளை...! அஸ்வர் ஹாஜியார் இல்லை.

"நாடாளுமன்றில் அதிகம் அதிகமாகத் தகாத வார்த்தைகளைப் பாவிப்பவர்".

"தனது வயதுக்கு எந்தவகையிலும் பொருந்தாத வார்த்தைகளை மாத்திரம் தெரிவு செய்து பேசுபவர்".

"பொறுமையைச் பூச்சிய நிலையில் வைத்திருப்பவர்".

"கெட்டபெயரை அதிகம் சம்பாதிக்கும் மனிதர்" நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவைப் பற்றி வளர்ந்து வரும் எம்.பிக்கள் கொண்டுள்ள எண்ணங்கள் இவைதான்.

ஆம்...! சில எம்.பிக்கள் அவர்களது வாயால் கெட்டுவிடுகின்றனர். மற்றவர்களிடம் கெட்ட பெயரைச் சம்பாதித்துவிடுகின்றனர். மகிந்த ஆட்சியில் மேர்வின் சில்வா மற்றும் அஸ்வர் ஹாஜியார் ஆகியோர் இவ்வாறான பெயர்களைச் சம்பாதித்திருந்தனர்.

அவர்கள் இருவரும் இல்லாத குறையை இப்போது வாசுதேவ தான் நிறைவேற்றி வருகின்றாராம். எம்.பிக்கள் பலருக்கும் இவரது செயற்பாடுகள் அறவே பிடிக்காதாம்.

வாசுதேவவின் பெயரை இழுத்தாலே குருநாகல் மாவட்ட எம்.பி துசார இந்துனில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அந்தக் குறிப்புக்களைக் கொண்டுதான் வாசுதேவவை வர்ணிப்பாராம்.

நல்லவேளை அஸ்வர் ஹாஜியார் நாடாளுமன்றத்தில் இல்லை. இருந்திருந்தால் வாசுதேவவுக்கு கிடைத்து வரும் இந்த அழகிய வர்ணிப்புக்களை அவரே தட்டிச் சென்றிருப்பார்.




எம்.ஐ.முபாறக்



## கோத்தாபாயவின் காலை வாரும் குடும்பம்



மைத்திரி - ரணில் அரசு ஆட்சிப்பீடமேறியதும் மகிந்தவுக்கு வைத்த மிக முக்கியமான ஆப்பு, ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடலாம் என்றிருந்த அரசமைப்பின் 18ஆம் திருத்தச் சட்டத்தை மாற்றியதுதான்.

இருந்தாலும், அவரது குடும்பத்தில் மூன்றுபேர் அந்தப் பதவியை அடைவதற்குக் காத்துக்கொண்டு இருக்கின்றனர். ஒருவர் நாமல் ராஜபக்ச, இன்னொருவர் பசில் ராஜபக்ச அடுத்தவர் கோத்தாபாய ரஜபக்ச.

இந்த மூவரும் தங்களின் இலக்கை நோக்கி இரகசியமாகப் பயணித்துக்கொண்டு இருக்கின்றனர். மகிந்த ஆட்சியில் இருந்தபோது நாமலுக்கும் பசிலுக்கும் இடையில் இது தொடர்பில் பனிப்போர் ஒன்று இடம் பெற்றுக்கொண்டிருந்தது. மஹிந்த தனது மகன் நாமலை அரசதலைவராக்குவதற்கான திட்டங்களை மேற்கொண்டிருந்தார். பசிலோ அந்தத் திட்டத்தை உடைக்கும் வகையில் காய் நகர்த்திக்கொண்டிருந்தார். இந்தப் போட்டிக்குள் அப்போது கோத்தாபாய சிக்கி இருக்கவில்லை. ஆனால் அதன் பின்னர், ஆட்சி கவிழ்ந்ததும் அவரும் இந்தப் போட்டியில் இணைந்துள்ளார்.

இதனால் நாமல் இரண்டு தலையிடிகளை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளார். மகிந்தவோ நாமலை அரச தலைவராக்கும் திட்டத்துடன்தான் அரசியலுக்குள் திரும்பி இருக்கின்றார். இப்படியானதொரு நிலையில் கோத்தாபாயவின் பிரவேசத்தை விரும்பாத நாமலின் குடும்பம் கோத்தாபாயவின் காலை வாரும் வேலையைச் செய்து வருகின்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதம் தரும் ரமழான் நோன்பு

அக்பர்

ஒரு மாத காலத்தை உள்ளடக்கியதாக இஸ்லாமியர்கள் கடைப்பிடிக்கும் நேன்பு - ரமழான் இந்த மாதத்தைப் புனிதமாக்குகின்றது. கடைப்பிடிக்கவேண்டிய ஐந்து கடமைகளுக்குள் ஒன்றாகத் திகழும் இந்த நோன்பு அதி முக்கிய மானதாகவே அவர்களால் கொள்ளப்படுகின்றது. ரமழான் நோன்பின் போது, சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம்வரைஉணவு மற்றும் நீர் அருந் தாமல் இஸ்லாமியர்கள் இந்த நோன்பைக் கடுமையாகக் கடைப்பிடிக்கிறார்கள்.

இந்த நோன்பு முடிவை அவர்கள் தாம் இறையாக வழிபடும் நிலவைக் கொண்டே நிர்ணயிக்கின்றனர். சந்திரனின் நிலைகளை அடிப்படையாகக் கொண்ட சந்திர நாட்காட்டியையே இதன் நிமித்தம் அவர்கள் பின்பற்றுகின்றனர். அதில் குறிக்கப்பட்டுள்ளவாறு 'ஒன்பதாம் மாதத்தில்' ரமழான் ஆரம்பிக்கின்றது.

சந்திரனை வைத்தே ரமழான் நோன்பின் முடிவும் நிர்ணயிக்கப்படுகின்றது. முடிவன்று மூன்று பேரீச்சம் பழங்களுடன் நீர் அருந்தி நோன்பை முடிக்கின்றனர். மறுநாள் உறவினர்கள் சகிதம் பெருவிருந்துண்பதும் அவர்கள் வழக்கம். உலகம் முழுவதுமுள்ள இஸ்லாமியர்களுள் ஒருவர் தவறாது கடை பிடிக்கும் முக்கிய நோன்பு இது. இறை வேதமான அல்குர் ஆன் அருளப்பட்ட மாதத்தையே இஸ்லாமியர்கள் றமழான் நோன்புக்குரிய மாதமாகவும் தொடர்கின்றனர். இதில் பகற்பொழுது முழுதும் நேன்பிருந்து இராப் பொழுது முழுதும் இறைத் தொழுகை செய்வதும். பரஸ்பரம் அவர்களுக்குள்ளே அன்புப் பரிமாற்றம் செய்வதும் வழமை.

### தலைப்பிறை காண வேண்டியது கடமை

ரமழான் நோன்பின் இறுதி நாளை 'ஹஈத் அல் பித்ர் ஹ' என்ற முக்கியமான நாளாகக் குறிப்பிடும் அவர்கள் அந்த நாளையும் நீண்ட தமது நோன்பை முடித்துக் கொள்ளும் நாளிகையையும் பிறை வடிவில் பூமிக்குக் காட்சியளிக்கும் சந்திரனை வைத்தே அறுதியிடுகின்றனர்.

இந்த நாளில் நோன்பு இருந்த அனைத்து இஸ்லாமியர்களும் சிறந்த உடைகளை உடுத்தி, உணவு விருந்துகளை நடத்துவார்கள் . ஆனால் உலகின் மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்றான இந்த நாள் எப்படியாக அறுதியிடப்படுகின்றது என்பது சிக்கலான விடயமாகவே இருக்கின்றது. அது என்றைக்கு, எக்கணத்தில் தமது கண்களுக்குப் பிறை(தலைப் பிறை) தென்படும் என்பதைப் பொறுத்தே அமைகின்றது.

இஸ்லாமியர்களின் கட்டாய நோன்பான ரமழானின் இறுதி நாள்கள் நெருங்கும்போது, வானத்தில் தோன்றவிருக்கும் பிறையை உலகம் முழுவதும் உள்ள 1.8 பில்லியன் இஸ்லாமியர்கள் கண் இமைக்காமல் காணும் வியப்பில், எதிர்பார்ப்பில் இருப்பார்கள்.

### பிறை காண்பதில் சிக்கல்கள்

பூமி முழுவதிலும் இஸ்லாமியர்கள் பரந்து வாழ்கின்றனர். ஆனால் பூமியிலிருந்து தொலைவிலிருக்கும் சந்திரன் ஒரே நேரத்தில் பூமியின் அனைத்துப் பகுதிகளுக்கும் காட்சி கொடுப்பது சாத்தியமற்றது.

இதனால் உலக இஸ்லாமியர்களுக்கிடையில் 'தலைப்பிறை' காண்பதில் கால வேறுபாடுகள் காணப்படும். அது அவர்களின் நேன்பு முடிவுக் காலத்திலும் செல்வாக்குச் செலுத்தும்.

நிலவு நாள்காட்டியின் பத்தாவது மாதமான ஷாவ்வாலின் முதல் நாள் றமழான் நேன்பு முடிவடைகின்றது.


ஆனால் அந்த நாள் குறித்துக்கூட இஸ்லாமுக்குள் விவாதங்கள் இருந்து வருகின்றன. பெரும்பாலான நாடுகளில் உள்ள இஸ்லாமியர்கள், வானில் நிலவைப் பார்ப்பதற்குப் பதிலாக, நிலவு தெரிவது குறித்த அதிகாரபூர்வ தகவல் என்று செய்திகளில் கூறப்படும் தகவல்களையே நம்புகிறார்கள்.

சிலர் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நிலவு நாள்காட்டியை பின்பற்றியும் , வேறு சிலர் கோள்களின் நிலையைப் பார்த்தும், புது நிலவின் (தலைப் பிறையின்) வருகையை அறிவிக்கின்றனர்.

இன்னும் சிலர் வானில் பிறையைப் பார்த்த பின்னரே நேன்பைத் துறக்கின்றனர். இதனால் உலகம் முழுவதும் குறித்த நாள் ஒரே மாதிரியாக அமைவதில்லை. பொதுவாக ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வேறுபாடுகள் பரந்துபட்ட மக்களிடையே இருக்கின்றன.

எடுத்துக்காட்டுக்கு, இஸ்லாம் மதத்தின் பிறப்பிடமான, இஸ்லாமியர்கள் ஆதிக்கம் நிறைந்த, சவுதி அரேபியாவில் , கண்களால் நிலவைப் பார்த்து உறுதி செய்யப்பட்டு, அரசு வெளியிடும் அறிவிப்பை மக்கள் சார்ந்திருக்கின்றனர்.

சிலர், தொலைநோக்கிகளைப் பயன்படுத்திப் பிறையைக் காண்டு நோன்பு துறக்கின்றார்கள். சிலர் தங்கள் மத குருக்களின் அறிவிப்பைப் பின்பற்றுகின்றனர். மதகுருக்களானவர்கள் வானியல் கணக்கீடுகளைக் கொண்டு ரமழானின ஆரம்பம் மற்றும் இறுதி நாள்களை முடிவு செய்கின்றனர் என்பதும் பொதுவான நம்பிக்கை.





## உத்தம தருமம் நோன்பு

இஸ்லாம் மதத்தவரின் இனிய நல்நோன்பு
இந்த மண்ணில் மக்களுக்குத் தந்திடும் மாண்பு
நான்கா்ம் பெருங்கடமை றம்ழான் விரதம்
நல்ல செய்தி தந்திடும் உத்தம தருமம்

புனித றமழானை மூன்றாக வகுப்போம்
அல்லாஹ்வின் அருளைப் பெற்றிடும் றஹ்மத்
பாவங்களுக்குத் தீர்வு தந்திடும் மஹ்பிறத்
நகரத்திலிருந்து காத்திடும் ஜன்னத்

பண்ணிய பாலங்களுக்க பரிகாரம் தேடுங்கள்
இன்னொருவர் மனதை நோகடிக்காதீர்கள்
நல்லதும் கெட்டதும் அல்லாஹ் கைக்கே வரும்
நல்லதை நினையுங்கள் நல்லதே செய்யுங்கள்

“ஸல் அல்லா ஹ அலைவஸல்லம்”
எல்லா வல்ல எமக்கான இறையே!
திக்கற்றுத் தவிக்கும் நம்மைக் காத்து
கரையேற்ற வந்தவர் அலைஹிவல்லம்

நரகத்திலிருந்து நம்மைக் காத்திடும் நோன்பு
நல்லருளை தந்து நிவர்த்திக்கும் நோன்பு
சுடுசொல் பேசாதிருப்பது நோன்பு
சொன்ன சொல் தவறாது காப்பது நோன்பு

பசித்தவர் பாத்திருக்க புசிப்பதல்ல நோன்பு
இல்லார்க்கு இல்லையென்று சொல்லாத
நோன்பு
பகட்டுக்காய் வாழாதிருப்பது நோன்பு
பாவம் வினை செய்யாதிருப்பது நோன்பு

கவிதா
ஏறாவூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மேடம்:** பெரியவர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுவதால் நன்மை நடக்கும். தொழில், வியாபாரத்தில் மேலதிக வருமானம் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள்.

**இடபம்:** அவசரப் பணி உருவாகி சிரமம் தரலாம். கருணை மனம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் இருந்த திட்டம் செயல் வடிவமாகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** வெளி வட்டாரத் தொடர்பு தொந்தரவு தரலாம். சொந்தப் பணிகளை நிறைவேற்ற நல்ல நாள். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். கடன் பணம் வசூலாகும்.



**கன்னி:** ஏழைகளுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி அடையும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் உண்டு. வெகுநாளாக வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**துலாம்:** நண்பர்கள் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரத்தில் சற்று பின் தங்கும் நிலை வரலாம். முக்கியச் செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் இருக்கும்.



**விருச்சிகம்:** அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கடுமையாக உழைப்பீர்கள். பண வரவில் தாமதம் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** தாமதமான செயல்கள் முடியும். உங்களின் தனித்திறமையை எல்லாரும் அறிந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. வாகனத்தில் கூடுதல் வசதி செய்து கொள்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் மனதில் உங்களைப் பற்றிய மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உபரி வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** உறவினர்களுக்கு நன்மை செய்தாலும் பிரச்சினை வரலாம். அடுத்தவர் விடயத்தில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை கூடும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் கூடுதல் முயற்சியால் சீராகும். செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். அதிக பயன் தரா பொருளை விலைக்கு வாங்க வேண்டாம்.



## ஜெய் – அஞ்சலி டிசெம்பரில் திருமணம்?

ஜெய்யும், அஞ்சலியும் காதலிக்கின்றனர் என, ஆரம்பம் முதல், அவ்வப்போது தகவல்கள் வெளியாகிக்கொண்டிருந்தாலும், இருவருமே இது குறித்து பிடிகொடுக்காமல் தான் பேசி வருகின்றனர்.

இந்த நிலையில், இவர்கள் டிசெம்பரில் திருமணம் செய்து கொள்ளப் போகின்றனர் என, தெலுங்கு திரையுலகில் செய்திகள் உலா வருகின்றன. ஆனால், இருவருமே இது குறித்து இதுவரையில் வாய் திறக்க மறுக்கின்றனர்.

கீச்சகப் பக்கங்களில், இருவருமே, அதிக ஈடுபாட்டுடன் அன்பை பகிர்ந்து கொள்வதை பார்த்தால், திருமணச் செய்தி உண்மையாகத் தான் இருக்கும் போலிருக்கிறது என்கின்றன கோலிவுட் வட்டாரங்கள்.

மனிதனிடம் உள்ள எல்லா திறன்களையும் விடவும் தன்னம்பிக்கை வலிமையானது

**ஊமை ராணி**

ஓலை மாளிகைகளில் வாழும்
மனித நேயம்
பெரும்பாலான
மாடிக் குடிசைகளில்
வாழ்வதில்லை



twitter

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 7 | 2 | 5 | 8 | 4 | 9 | 6 |
| 9 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 | 8 | 7 |
| 6 | 5 | 8 | 9 | 4 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 | 4 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 7 | 6 | 8 |
| 8 | 4 | 6 | 5 | 7 | 3 | 1 | 2 | 9 |
| 4 | 3 | 5 | 7 | 6 | 9 | 8 | 1 | 2 |
| 2 | 6 | 1 | 3 | 8 | 4 | 9 | 7 | 5 |
| 7 | 8 | 9 | 1 | 2 | 5 | 6 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஆத்தா தாயே நீ எங்கயோ போய்ட்ட... ஏழாம் அறிவு எட்டிப்பாக்குது!



இவரால் ஒரு செருப்பை திருட முடியாதா என்ன?



செருப்பு இல்லை என்ற எண்ணம் இருக்குமே தவிர அடுத்தவரின் செருப்பை திருட வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் இல்லை


டேய் விட்றா... ஏற்கனவே ஸ்கூல் பீஸ் கட்டி இது ஒன்னு தான் மிச்சம் இருக்குன்னு அப்பா சொல்லிட்டார்... அதையும் கிழிச்சிடாத...



யோகா தின வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கால்கள், முழங்காலுக்கு வலுச் சேர்க்கும் ஆசனம்

வட்டாயாசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் கால் தசைகளும், முழங்காலும் வலுப்பெறுகின்றன. இந்த ஆசனம் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**செய்முறை :**

விரிப்பில் நின்று கொண்டு நெஞ்சுக்கு நேராகக் கைகளைக் குவித்து இடதுகாலை மடக்கி வலது பக்க தொடையில் வைத்து ஒரே காலில் நிற்கவும். வலது பக்க முழங்காலை மெதுவாக மடக்கி மடக்கப்பட்டுள்ள இடது பக்க முழங்கால் தரையில் படும்படி நிற்கவும்.

இந்த நிலையில் மிகச் சிறிது நேரம் நின்ற பிறகு ஆரம்ப நிலைக்கு வரவும். ஒரு காலில் நிற்கும் போது மூச்சை இழுக்கவும். உடலை கீழே கொண்டு வரும்போதும் உயர்த்தும் போதும் கும்பகம் செய்யவும்.

இறுதி நிலையில் சாதாரண சுவாசம் செய்யவும். இவ்வாறு 3 முதல் 5 முறை செய்யவும்.

**பலன்கள் :**

கால் தசைகளும், முழங்காலும் வலுப்பெறுகின்றன. பிரம்மச்சார்யத்தை கடைப்பிடிக்க இந்த ஆசனம் உதவுகிறது.

## நாளை

**ஆனி - 12**

திங்கட்கிழமை -26.06.2017

திதி: திருதியை பி.இ. 02.53 வரை

நட்சத்திரம்: பூசம் பி.இ. 02.03 வரை

சுபநேரம்:11.55-01.25 வரை

ராகுகாலம்:07.25-08.55 வரை

ரம்ழான் பெருநாள்

புதூர் நாகதம்பிரான் பொங்கல்

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 900 |
| நண்டு | 400 | 250 | 600 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 700 | 700 | – |
| சுறா | 500 | 800 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 600 | 400 |
| விளை | 500 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 400 |
| கும்பிளா | 400 | 250 | 450 | 600 |
| கிளாக்கன் | 800 | | 600 | 300 |
| ஓரா | 400 | 400 | 450 | 400 |
| திரளி | 250 | 250 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | – | 400 | 300 |
| மதனம் | 250 | 200 | 300 | – |
| கொய் | 200 | 50 | 80 | 100 |
| பாலை | 300 | 250 | 600 | – |
| வாழை | 200 | – | 500 | 400 |

## மூக்கில் தோல் உரிகிறதா? இதோ சில வழிமுறைகள்

வறட்சியான சருமம் உள்ளவர்களுக்கு, சரும அரிப்பு, எரிச்சல், அசிங்கமான சொரசொரப்பான தன்மை என்று இருக்கும். அதுமட்டுமின்றி, இந்த வகை சருமத்தினருக்கு பொதுத் தொல்லை, சுவாசக் கோளாறு, வயிற்றுப் பிரச்சினைகள் போன்றவை யும் இருக்கும். அதிலும் வறட்சியான சருமம் உள்ளவர்களுக்கு, ஒருசில இடங்களான மூக்கைச் சுற்றி, வாயைச் சுற்றி வறட்சி ஏற்பட்டு, தோல் உரிய ஆரம்பிக்கும்.



இவற்றைத் தவிர்க்க ஒருசிலவற்றை அன்றாடம் பின்பற்றி வந்தால், நிச்சயம் வறட்சியைத் தவிர்க்கலாம். இப்போது மூக்கைச் சுற்றி வறட்சி ஏற்படுவதை தவிர்க்க சில வழிகளைப் பற்றி பார்ப்போம்.

★ சருமத்தின் வெளிப்புறத்தில் அழகு சாதனப் பொருட்களைக் கொண்டு பராமரித்தால் மட்டும் போதாது. உட்புற பராமரிப்பும் தேவை. அதற்கு தினமும் குடிக்கும் தண்ணீரின் அளவை அதிகரிக்க வேண்டும்.

★ வறட்சி அதிகமானால் அரிப்பும், வலியும் அதிகமாகும். ஆகவே வறட்சியான சருமம் உள்ளவர்கள், பாதாம் எண்ணெயை கற்றாழை ஜெல்லுடன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி மசாஜ் செய்து உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், வறட்சி நீங்கும்.

(தொடரும்)



பெண்களுக்கான தலை அலங்கார வூல்பான்ட்கள் தற்போது நவீன வடிவில் வந்துள்ளன. இவை 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகின்றன.

இது புதுசு

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 120 | 100 | 100 | 140 | 80 |
| கரட் | 300 | 300 | 260 | 240 | 280 |
| மரவள்ளி | 80 | 80 | 50 | 60 | 50 |
| பயிற்றை | 100 | 120 | 60 | 100 | 60 |
| பாகல் | 120 | 160 | 140 | 140 | 120 |
| கருணைக்கிழங்கு | 140 | | 110 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 75 |
| சி.வெங்காயம் | 250 | 320 | 260 | 300 | 250 |
| பூசணி | 80 | 80 | 75 | 80 | 70 |
| தக்காளி | 120 | 160 | 120 | 150 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 | 70 | 40 |
| கீரை | 25 | 30 | 30 | 10 | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 350 | 400 | 250 | 400 | 320 |
| புடோல் | 100 | 80 | 60 | 80 | 80 |
| கோவா | 120 | 200 | 140 | 160 | 200 |
| வெண்டி | 100 | 120 | 80 | 120 | 50 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 280 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 220 | 80 |
| தேங்காய் | 70 | 55 | 55 | 60 | 45 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 75 | 100 | 70 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 |
| கறிமிளகாய் | 200 | | 300 | 200 | 250 |
| இராசவள்ளி | 200 | - | 280 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 260 | 300 | 240 | 200 | 240 |

## உதட்டின் வறட்சியை போக்கும் வெண்ணெய்





தினமும் இரவில் நித்திரைக்குச் செல்லு முன் உதடுகளில் வெண்ணெயை தடவி வந்தால் உதடுகள் வறண்டு போகாது, அல்லது காய்ந்து போகாது.

எமது உதடுகள் வறட்சி ஏற்படும் போது அல்லது காய்ந்து விடும்போது, நாம் எமது நாவினால், உதடுகளை ஈரமாக்கிக் கொள்கிறோம். ஆனால் இது முற்றிலும் தவறான பழக்கம்.

எமது உதடுகளில் வறட்சி ஏற்படுவதற்கு, அல்லது அடிக்கடி காய்ந்து போவதற்கு எமது உடலின் வெப்பநிலை உயர்ந்து விட்டதன் அறிகுறியே இது. ஆகவே உதட்டை நாவினால் வருடி ஈரமாக்குவதை விட சூட்டைக் குறைக்கும் மோரை அடிக்கடி நாம் பருகி வர வேண்டும்.

மேலும் வெண்ணெய் சிறிது எடுத்து அடிக்கடி சாப்பிட்டு வர வேண்டும். மேலும் ஒவ்வொரு நாள் இரவில் வெண்ணெயைக் கொஞ்சம் உதட்டில் தடவிக்கொண்டு உறக்கத்துக்குச் செல்ல வேண்டும். இவற்றின் காரணமாக நமது உடலில் ஏற்பட்டுள்ள சூடு குறையும் உதடுகளும் தானாகவே வறண்டு போகாது, அல்லது காய்ந்து போகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுமொத்த .....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

1) என்னை குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு சந்தேகநபராக அன்றி குற்றவாளி என்ற முற்கற்பிதத்துடனேயே விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றமை அவதானிக்கப்பட்டது.

2) குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சாட்சிகளின் பட்டியலின் படி பின்வரும் சாட்சிகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன.

அனந்தி சசிதரன், வடமாகாண சபை உறுப்பினர்

எஸ்.சுகிர்தன், வட மாகாண சபை உறுப்பினர்

ஆனால் குறித்த விசாரணை நடவடிக்கையின் போது இந்தப் பட்டியலில் குறிப்பிடப்படாத பின்வருவோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமைவிசாரணை அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

அ) மாகாண சபை உறுப்பினர் பசு பதி அரியரத்தினம்

ஆ) சிவபாதம் நந்தகுமார், உதவிச் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.

இ) இராசா இரவீந்திரன், செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டியலில் இருந்த மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனும், மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தனும் சாட்சியம் அளித்திருக்கவில்லை என்பது அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. விசாரணை நடைமுறைகளின் பிரகாரம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றப் பத்திரத்தில் செய்யப்படும் சகல மாற்றங்களும் அறிவிக்கப்பட்டு அது தொடர்பான தனது தயார்ப்படுத்தலை மேற்கொள்ளும் பொருட்டு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த மாற்றங்கள் குறித்து விசாரணை அறிக்கை வெளிவரும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

3)விசாரணை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அவதானிப்பதற்கான சந்தர்ப்பம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் அவரது வழக்கறிஞருக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான சந்தர்ப்பம் எதுவும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

4)முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்யும் உரிமை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பமோ உரிமையோ குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

5) குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகளை விசாரணையின் போது முன்னிலையாக்கி வழிப்படுத்தும் உரிமை குற்றஞ்சாட்டப்பட்ட வருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

6) முறைப்பாட்டாளர் தரப்பு ஆவணப்பிரதிகளைப் பார்வையிடுவதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ உரிமையும் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை.

7)குற்றஞ்சாட்டப்பட்டவர் தனிப்பட்ட முறையில் அல்லாது தான் வகிக்கும் கல்வி அமைச்சர் என்ற பதவியின் அடிப்படையில் செய்ததாகக் கூறப்படும் கருமங்கள் தொடர்பாகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனவேகுற்றஞ்சாட்டப்பட்டவரான கல்வி அமைச்சர் சார்பில் முன்னிலையாவதற்கு சட்டத்தரணி ஒருவரை நியமித்து வழங்கவேண்டிய கடமையும், பொறுப்பும் வடக்கு மாகாண சபைக்கே உரியது. ஆயினும் வடக்கு மாகாண சபை தன் பொருட்டு கடமையாற்றி நட்டாற்றில் விடப்பட்ட கல்வி அமைச்சர் பொருட்டு தனது கடமையையும், பொறுப்பையும் நிறைவேற்றத் தவறிவிட்டது.

8) குற்றஞ்சாட்டப்பட்டவராகிய என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணப்பிரதிகளைவிசாரணைக்குழு ஏற்க மறுத்துவிட்டது. ஆயினும் விசாரணை அறிக்கையில் நான் எந்தவித ஆவணப்பிரதிகளையும் சமர்ப்பிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளது. இது என்னை திட்டமிட்டு குற்றவாளியாக்கும் எண்ணத்திலேயே விசாரணைக்குழு தொழிற்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து, இந்த விசாரணைக்குழுவின் உருவாக்கம் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானதால் சட்ட வலுவற்றதென்பதும், எனவே அதன் செயற்பாடுகள் யாவும் வெறிதானதும் செல்லுபடியற்றதுமாகுமென்பதும், இங்கு சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவும் என்மீது சுமத்தப்படமுடியாதவை எனவும், விசாரணையானது முற்கற்பிதமான முறையில் பாரபட்சமாகவே நடத்தப்பட்டுள்ளதெனவும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அடிப்படை உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன எனவும், விசாரணை முறை நியமங்கள் மீறப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது. மேலும் ஆயிரம் குற்றவாளிகள் தப்பிச் சென்றாலும் ஒரு அப்பாவி தண்டிக்கப்படக்கூடாது என்னும் நீதிமுறைமையின் அடிப்படையை மீறுவதாக விசாரணை நடைமுறைகள் அமைந்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

(முற்றும்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 477

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| | | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | | 13 | | |
| 14 | | | | 15 | | | 16 |
| 17 | | | 18 | | | 19 | |
| | | 20 | | | 21 | | |
| | 22 | | | | | | |

அனுப்புபவர் பெயர்:............................................

முழுமையான தபால் விலாசம்: ............................

............................................................

கையொப்பம்:....................................................

### இடமிருந்து வலம்

1. செருக்கு
6. பிழை அல்ல
7. ஒரு திசையின் சுருக்கம்
8. கூட வேலை செய்யும் ஊழியரை இவ்விதமும் அழைப்பதுண்டு
9. ஒரு பிரபந்த வகை
11. சாமானியன்
13. வேகம்
14. ரகம்
15. ஊட்டச் சத்துக்கள் நிறைந்த நீராகாரம்
17. சிரசு
18. தாண்டு
19. வடிவம்
20. வியாபாரத்துக்கு இது அவசியம் தேவை
22. வேகம்
23. ஓர் விளக்கு வகை

### மேலிருந்து கீழ்

1. நிகழக் கூடாதது
2. யானைக்கு இப்படியும் பெயருண்டு
3. புலவன்
4. தேரிழுக்கும் கயிறு
5. விடாய்
8. சேறு
9. கை
10. வெளிச்ச வேளை
12. சிறு குழந்தை
15. படிப்பது இதனை
16. சீனித் தயாரிப்புக்கான மூலப்பொருள்
18. திருட்டு
19. பசளை
20. நறும்புகை / வாசனை
21. முக்கனிகளில் ஒன்று

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 475 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) வியாசம் (4) அசதி (7)ரசம் (8)காந்தாரி (9)தம்பதி (11)தாம்பு (12)வருமதி (14)நிம்மதி (16)உமி (17)முரசு (19)தரகு (21) அகண்ட (22)வில்லங்கம்

**மேலிருந்து கீழ்**

(1)விரதம் (2)யாசம் (3)சம்பவம் (4)அந்தாதி (5)சதாம் (6)திரிபுரா (10)திருமதி (13)மதி (14) நிமிரல் (15)முரண் (16)உதவி (17)முகம் (18)சுடலை (20) குல (21) அக

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்

3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.

4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 475 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

மனோகரராசா தனுசியா,
இல.23 அணைக்கட்டு வீதி,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**

திருமதி அ.வாமதேவன்
அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு**

அனுஷா ரவீந்திரன்,
இல.198, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

உ.துஷா,
இல. 47/9, தாஸ்தோட்டம்,
நெளுக்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**

கு.சிவகுகன்,
முதலி கோவிலடி,
கொக்குவில்

**பாராட்டுப் பெறுவோர்**

ப.ஸ்ரீஜீவரஞ்சினி,
இல. 8, பிளர்ச்சஸ் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

லோஜி செந்திலிங்கம்,
இல. 189, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

R. ராஜசந்திரன்,
இல.42, கண்ணபுரம்,
நாவாந்துறை தெற்கு,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.477 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (05.07.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.477இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 09.07.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 475 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடம்

சுக்கிரன், சூரியன், செவ்வாய், கேது அளப்பரிய நன்மை தருவர். பணிகள் அனைத்தும் நேர்த்தியாக நிறைவேறும். உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புத்திரரின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உங்களின் இதமான அனுகுமுறையால் நீண்டகால சிரமம் கூட மறையும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவா கும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியா ளர்கள், நிர்வாகத்தினரின் பரிசும், பாராட்டும் பெறுவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற் றம் காண்பர்.

## இடபம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். பேசும் வார்த்தையில் நிதானம் கடைப்பிடிப்பது நல்லது. தாமதமான பணிகள் புதிய முயற்சியால் நிறைவேறும். அறிமுகம் இல்லாதவர்க ளுக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் உங்க ளின் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவிக்குக் குடும்ப நலனில் அக்கறை அதிக ரிக்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் வெகுவாக இருக்கும். பணி யாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து நடக்க வும். பெண்கள், நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம். மாணவர்களுக்கு படிப் பில் கூடுதல் கவனம் தேவை.

## கடகம்

சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தரு வார். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது நல்லது. அடுத்தவர் விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. புத்திரரின் செயல் குறையை இதமாகச் சரி செய்யவும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது அவசியம். மனைவியின் உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு அவசியம். தொழிலில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும். பணி யாளர்கள், பணியிடத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். மாணவர்களுக்கு, படிப்பில் விடாமுயற்சி தேவை.

## மிதுனம்

சுக்கிரன், ராகு, சனீஸ்வரர் வியத்தகு நன்மையை வாரி வழங்குவர். நற்செயலில் ஈடுபட்டுப் புகழ் பெறுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். தொழிலில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு வரும். பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள், படிப்பிற்குக் கூடுதல் நேரம் ஒதுக்கவும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

## சிங்கம்

பெரும்பாலான கிரகங்கள் அதிகளவில் நன்மை தருவர். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். குடும்பத்தேவை தாராள செலவில் நிறைவேறும். வாகனப் பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர் நண்பர்களுக்கு இணையாக உங்களிடம் பழகுவர். ஆரோக்கியம் சீராக இருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்கு வர். மாணவர்கள், லட்சிய நோக்குடன் படித்து முன்னேறுவர்.

## கன்னி

பெரும்பாலான கிரகங்கள் அனுகூல அமர் வில் உள்ளனர். வாழ்வில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். புகழ்ந்து பேசுப வர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. புத்திரரை சுதந்திரமாக செயற்பட அனுமதியுங்கள். பூர்வ புண்ணி யத்தால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். ஆரோக்கியம் மேம்ப டும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் செயல்படுவார். தொழில் வளர்ச்சியால் சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள், பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள், தாய் வீட்டாரின் அன்பும், ஆதரவும் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள், படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபட்டு வருவர்.

# இந்தவாரம் உங்களுக்கு எப்படி?

**25.06.2017 தொடக்கம் 01.07.2017 வரை**

## துலாம்

ராகு, சந்திரனால் நன்மை உண்டாகும். தொடர் பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். வாகனத் தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் பிடிவாத செயல்பாட்டை மென்மையான அணுகுமுறையால் திருத்த முயல்வீர்கள். நோய்த் தொந்தரவு சிகிச்சையால் குறையும். மனைவியிடம் உறவினர்களின் குடும்ப விவகாரம் பேசுவதை தவிர்க்கவும். பயணத்தால் அசதிக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் வெகுவான லாபம் கிடைக்கும். பணியாளர் கள், பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள், சமைய லறைப் பணிகளில் பாதுகாப்பைப் பின்பற்றவும். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபட வேண்டாம்.

## தனுசு

சுக்கிரன், கேது அனுகூலமாக அமர்ந் துள்ளனர். புதிய திட்டம் நிறைவேற உறவி னர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பாதுகாப் பில் கவனம் வேண்டும். புத்திரர் பொறுப்புடன் செயல் பட்டு கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழிலில் லாபம் மிதமாக இருக் கும். பணியாளர்களுக்கு, வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள், கணவரின் அன்புக்குரியவராகத் திகழ் வர். மாணவர்களுக்கு, படிப்பில் ஞாபகசக்தி அதிகரிக்கும். புதிய நண்பரின் அறிமு கம் கிடைக்கும்.

## விருச்சிகம்

புதன், குரு, சுக்கிரனால் அளப்பரிய நன்மை உண்டாகும். அன்றாட நடைமுறை வாழ்வு சிறக் கும். வீடு வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர் தங்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பர். பூர்வீ கச் சொத்தின் மூலம் பணவரவு அதிகரிக்கும். விரும்பிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் ஆலோ சனையால் குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஆதரவால் வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள், விண்ணப்பித்த கடன் எளிதில் கிடைக்கும். பெண்கள், உறவினர்களை உபசரித்து மகிழ்வர். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

## மகரம்

பெரும்பாலான கிரகங்கள் நன்மை தரக் காத்திருக்கின்றன. உங்கள் வளர்ச்சி கண்டு மற்றவர்கள் வியப்பில் மூழ்குவர். பலரின் உதவி கிடைக்கும் .திட்டமிட்டபடி புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு. புத்திரரின் ஆர்வமிகு செயல்களை பாராட்டுவீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர்களின் குடும்ப சுபநிகழ்ச்சி நடத்த முன் நிற்பர். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து படிப்பில் முன்னேறுவர்.

## மீனம்


புதன், குரு, சுக்கிரன், ராகு ராஜயோக பலன் வழங்குவர். சமூகத்தில் உங்களின் மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். தம்பி, தங்கையின் அன்பு பாசம் நெகிழ்ச்சி தரும். புத்திரர் உற்சாக மனதுடன் செயல்படுவர். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் சொல்லும், செய லும் சிறப்பாக அமைந்திடும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி இனிதாக நடத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டியைத் திறம்பட சரி செய்வீர்கள். பணியாளர்கள், பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்களுக்கு, உறவினர் மத்தியில் மதிப்பு உய ரும். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டு தலை ஏற்று படிப்பில் முன்னேறுவர்.

## கும்பம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். இடம், சூழல் உணர்ந்து பேசுவது நன்மையளிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்க வும். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் பாசத்துடன் பழகுவர். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்ய வும். பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறையை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிரார்த்தனை நிறைவேற வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள், நன்கு படித்து கல்வியில் வளர்ச்சி காண்பர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**நோய் நிலைமையின் போது மருத்துவரினால் வழங்கப்பட்டமருந்துமுழுவதையும் பரிந்துரைக்கப்பட்டமுறையில் உள்ளெடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. நுண்ணு யிர்கொல்லி மருந்துகள் முறையாக எடுக்கப்படுமிடத்து வினைத்திறனாக தொழிற்படும் தகவுடையவை. எனவே மருந்தளவுகளையும் மருந்துநேரங்களையும் தவிர்க்காமல் பாவனை செய்யுமாறு கோரப்படுகிறது.**



# நுண்ணுயிர் கொல்லிகளுக்கான எதிர்ப்பு

## எமது பங்கும் அவசியம்!

ஸுடோ சுவாமி

இலங்கையில் டெங்கு ஆட்கொல்லி நோயினால் சம்பவிக்கும் இறப்புக்களின் எண்ணிக்கை அச்சம் தரும் வகையில் அதிகரித்து வருகின்றது. குறித்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் நோயின் பரம்பலைத் தடுக்கவும், தவிர்க்கவுமான முயற்சிகள் நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் முடுக்கி விடப்பட்டிருக்கிறன. கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்திலும் இந்தவிவகாரம் சூடுபிடித்திருந்தது. இந்த நிலையில் உலகளாவிய மருத்துவத்துறைக்குச் சவாலாக விளங்கும் மற்றொரு மருத்துவநெருக்கடியை முகங்கொடுப்பதற்கான நடவடிக்கைகளிலும் இலங்கை தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தியிருக்கிறது.

அதிகமானபாவனையுள்ள நுண்ணுயிர்கொல்லி (Antimicrobials) மருந்துகளுக்கு எதிராக உருவாகிவரும் எதிர்ப்பே அந்த உலகளாவிய சவாலாகும். மருத்துவ தரப்பினருக்குக் சங்கடமான நிலையினை உருவாக்கியிருக்கும் இந்த நிலைவரம், வளர்முக நாடுகளை அதிகம் பாதிப்பதாக குறிப்பிடப்படுகிறது.

**பாவனையிலிருப்பவை பயனற்றவையாகிப்போகும் நிலை**

நோயைஉருவாக்கும் நுண்ணங்கி நுண்ணுயிரி களின் நடவடிக்கைக்கு எதிர்ப்பாக விளங்கும் மருந்துகள். நீண்டகாலப்போக்கில் நுண்ணுயிரிகளின் இயைபாக்கம் காரணமாக எதிர்ப்பு வலுவை இழக்கின்றன. இதன் காரணமாகக் குறித்த நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோயைக் கட்டுப்படுத்துவதுகடினத்துக்குரியதாக அமைகின்றது.

அதாவது நுண்ணுயிரிகளினால் தோற்றுவிக்கப்பட்ட நோயைக் குணப்படுத்துவதற்கெனத் தயாரிக்கப்பட்டு தற்போது பாவனையிலிருக்கும் நுண்ணுயிர் கொல்லி மருந்துகள், இன்னும் சிலகாலங்களில் அதேநோயை குணமாக்குவ தற்கு உபயோகமற்றதாக ஆகிவிடுகின்றன. இந்தநிலை, ஒரு இயற்கை நிகழ்வாக உள்ளபோதும், நுண்ணுயிர்கொல்லி மருந்துகளைப் பாவனைக் குட்படுத்தும் விதத்தில் காணப்படும் கவனவீனப்போக்குக் காரணமாக பாதிப்பின் அளவு தீவிரமடைவதாக அறிவிக்கப்படுகிறது.

குறித்த நிலைவரத்தினை வெற்றிகரமாக - கையாள்வதற்கான மூலோபாய திட்டத்தினை இலங்கை கடந்த மாதத்தில் தான் தயாரித்து வெளியிட்டிருந்தது. 2017-20-22 ஆண்டு காலப்பகுதிக்கான திட்டத்தினை வடிவமைப்பதில் சுகாதார அமைச்சுடன், கிராமிய பொருளாதார அமைச்சு, மீன்பிடி மற்றும் நீரியல் வளஅமைச்சு மற்றும் விவசாய அமைச்சு என்பனவும் பங்கெடுத்திருக்கின்றன. குறித்த திட்டவரைபின் தகவலின்படி, இலங்கையின் சுகாதாரத்துறைக்கான பாதீட்டு ஒதுக்கத்தில் 12.7 வீதம் இத்தகைய நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்காகவே ஒதுக்கப்படுகிறது. இந்தத் தொகை 3.3 பில்லியன் ரூபாவாகும்.

முன்னதாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளின் பாவனை தொடர்பான தேசிய வழிகாட்டுதல்கள் தொடர்பான ஆவணமொன்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்தது.

எதிர்ப்புவலுவை கொண்டிருக்கும் நுண்ணுயிரிகளால் தோற்றுவிக்கப்படும் நோய்கள் அதிகரித்த நோயாளர்களையும் கூடிய இறப்பு வீதத்துக்கும் வழிவகுப்பதாக குறிப்பிடுகின்றார்கள் மருத்துவ வல்லுனர்கள். அமெரிக்காவில் மாத்திரம் எதிர்ப்பு வலுவுடைய நுண்ணங்கிகளால் ஏற்படும் தொற்றுக்களால் சுகாதாரத்திற்கென வருடாந்தச் செலவீட்டில் 20 பில்லியன் டொலர்களையும் மேலதிக வைத்தியசாலை அனுமதிப்பு பராமரிப்புக்காக 8 மில்லியன் டொலர்களையும் கூடுதலாகச் செலவிட நேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2050ஆம் ஆண்டளவில் ஆசியாவில் மாத்திரம் 4.7 மில்லியன் இறப்புகளுக்கு பின்னணியாக இந்த நுண்ணுயிர் கொல்லி மருந்துகளின் வலுவிழப்பு அமையும் என்று மதிப்பீடு செய்யப்படுகின்றது.

பன்னாட்டுப் பொதுச்சுகாதார பிரச்சினையாக கொள்ளப்படும் இந்தநுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கு எதிர்ப்பு உருவாகின்ற நிலைமையை உணர்ந்துகொண்ட பன்னாட்டு அமைப்புக்கள், அந்த நிலை வரத்தை சமாளிப்பதற்கான திட்டங்களை நடைமுறைக்கிடுவதில் ஆர்வம் காட்டியுள்ளன. கடந்த 2011ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜெய்ப்பூரில் ஒன்றுகூடிய உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசியப் பிராந்திய நாடுகளை சேர்ந்த 29 சுகாதார அமைச்சர்கள் 'ஜெய்ப்பூர் பிரகடனம்' ஒன்றினையும் வெளியிட்டிருந்தனர்.

**மருத்துவர்களுக்கானஅறிவுரை**

எப்.டி.ஏ. எனப்படும் உணவுமற்றும் மருந்து நிர்வாக அமைப்பு, மருத்துவரீதியாக, தேவையானால் மாத்திரமே நுண்ணுயிர் கொல்லி மருந்துகளைப் பரிந்துரைக்குமாறு மருத்துவர்களைக் கோரியிருக்கிறது. வழங்கப்படும் நுண்ணுயிர்கொல்லி மருந்துகளை முறைனவகைகளால் பயன்படுத்துவது தொடர்பில் நோயாளருக்கு அறிவுறுத்து மாறும் ஆலோசனை வழங்குமாறும் பரிந்துரைக்கப்பட்ட அளவிலே மருந்து உள்ளெடுப்பு நிகழ்வதைவலியுறுத்து மாறும் எப்.டி.ஏ. மருத்துவர்களுக்கு ஆலோசனைவழங்கியிருக்கிறது.

**மருந்து வழங்கலில் கட்டுப்பாடு**

மருத்துவரால் வழங்கப்பட்ட செல்லுபடியான மருந்துச்சீட்டின்றி நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளை நோயாளர்களுக்கு விநியோகிக்க வேண்டாம் என்று சுகாதார அமைச்சர் ராஜிதசேனாரத்ன பணித்திருக்கின்றார்.

**பொது மக்களுக்கான அறிவுரை**

நோய் நிலைமையின் போதுமருத்துவரால் வழங்கப்பட்ட மருந்து முழுவதையும் பரிந்துரைக்கப்பட்ட முறையில் உள்ளெடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. நுண்ணுயிர்கொல்லி மருந்துகள் முறையாக எடுக்கப்படுமிடத்து வினைத்திறனாகத் தொழிற்படும் தகவுடையவை. எனவே மருந்தளவுகளையும் மருந்து நேரங்களையும் தவிர்க்காமல் பாவனை செய்யுமாறு கோரப்படுகிறது. குறித்த ஒரு நோய் நிலையின் போது மருத்துவரின் ஆலோசனையுடன் எடுக்கப்பட்டு அந்த நுண்ணுயிர்கொல்லி மருந்துகள் மிகுந்துபோய் இருப்பின் அடுத்தநோய் நிலைமையின் போதுஅவற்றை பாவிப்பதை தவிர்க்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது. வேறொருவருக்குப் பிரேரித்த நுண்ணுயிர்கொல்லி மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முறையான நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் தொடர்பான பாவனை தொடர்பில் சந்தேகங்கள் இருக்குமிடத்து மருத்துவரிடமோ அல்லது உரியவர்களே கேட்டுத் தெளிவு பெற்றுக்கொள்ளும்படியும் ஆலோசனைவழங்கப்பட்டிருக்கிறது. சுகாதாரம் தொடர்பான நிகழ்ச்சிநிரலில் இந்தநுண்ணுயிர் கொல்லிமருந்துகளுக்கு வலுவடைந்துவரும் எதிர்ப்பு தொடர்பில் அதிக கரிசனை காட்டப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எடுக்கப்படும் தடுப்புநடவடிக்கைகளுக்கு இயன்றவரைக்கும். ஒத்துழைப்பதும் அனைவரினதும் கடமையாகும். இல்லையேல், தோன்றும் புதியதொற்று நோளை எதிர்ப்பதற்கு இனி வரும் காலங்க ளில் ஒரு நுண்ணுயிர்க் கொல்லிமருந்து கூடக் கிடைக்காத நிலமை மிகமிக அண்மையாகிவிடும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# அகங்காரம் கொண்ட அமெரிக்கா லாவோசுக்குக் கொடுத்த இழப்புக்கள்

சமீபத்தில் ஒரு புதிய புத்தகம் வெளியாகியிருக்கிறது. அமெரிக்கப் பத்திரிகையாளர் 'ஜோ {வா குர்லாண்ட்ஸிக்' எழுதிய 'எ கிரேட் ப்ளேஸ் டு ஹேவ் எ வோர்: அமெரிக்கா இன் லாவோஸ் அண்ட் த பர்த் ஒவ் எ மிலிட்டரி சி.ஐ.ஏ' எனும் அந்தப் புத்தகம், கம்யூனிஸத்தைக் கட்டுப்படுத்த லாவோஸில் அமெரிக்கா நடத்திய இரகசியப் போர் பற்றிப் பேசுகிறது.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்றதற்குப் பின்னர், இதுவரையிருந்துவந்த அமெரிக்கா பெரும் மாற்றத்துக்கு உள்ளாகி வருகிறது. பன்னாட்டுப் பொறுப்புகள் தொடர்பான வல்லரசின் விதிகளை மாற்றி எழுதும் ட்ரம்பின் பணி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. அதே சமயம், முந்தைய அதிபர் ஒபாமாவின் பன்னாட்டுப் பயணங்களை நினைவுகூர்வதும் முக்கியமானது.
கடந்த செப்டம்பரில் லாவோஸ் தலைநகர் வியன்டியானில் நடந்த தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த ஒபாமா, அமெரிக்காவின் கடந்தகால நடவடிக்கைகளுக்கு மன்னிப்புக் கேட்கும் தொனியில் பேசியிருந்தார்.
"லாவோசில் அமெரிக்கா நடந்துகொண்ட நிகழ்வுகளின் வரலாற்றைப் பார்க்கும் போது, லாவோஸ் நலம்பெற உதவுவது அமெரிக்காவின் தார்மிகக் கடமை என்று நம்புகிறேன்" என்றிருந்தார் ஒபாமா. அது வியட்நாம் போர்க்காலத்தில் அதன் அயல் நாட்டில் தேவையற்ற திணிப்பாக அமெரிக்கா ஏற்படுத்திவிட்டிருந்த ஏகாதிபத்தியத்தைச் சுட்டிநின்றது. அதனால் லாவோஸ் எதிர்கொண்ட இழப்புக்கள் கொஞ்ச நெஞ்சமல்ல.





### பாவம் தீர்ப்பதற்குப் பன்மடங்கில் பணம்

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் மீதும் ஜெர்மனி மீதும் வீசிய குண்டுகளைவிட அதிகமாக, 1960களிலும் 1970களின் தொடக்கத்திலும் லாவோஸ் மீது எண்ணற்ற குண்டுகளை அமெரிக்கா வீசியிருந்ததாக அவர் குறிப்பிட்டார். லாவோசின் பல பகுதிகளில் வெடிக்காமல் இன்றும் கிடக்கும் குண்டுகளை அப்புறப்படுத்தும் பணிக்காக அமெரிக்கா வழங்கும் நிதியு[illegible] வும் (கிட்டத்தட்ட ரூ. 200 கோடி, இந்திய மதிப்பில்) உறுதியளித்தார். நிலப் பகுதிகளால் சூழப்பட்ட நாடான லாவோஸ் மீது நிகழ்த்தப்பட்ட சேதங்களுக்கும், அதற்கு இழப்பீடாக இதுவரை அந்நாட்டுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உதவிகளுக்கும் இடையே இருக்கும் இடைவெளி மிக அதிகமே.

### மறைக்கப்பட்டவற்றை வெளிப்படுத்திய எழுத்துக்கள்

தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்கா நிகழ்த்திய பனிப்போரின் நீண்ட அத்தியாயம் எந்த அளவுக்கு மறக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் அதைவிட ஆச்சரியப்படுத்தும் விடயம்.
சமீபத்தில் ஒரு புதிய புத்தகம் வெளியாகியிருக்கிறது. அமெரிக்கப் பத்திரிகையாளர் 'ஜோவா குர்லாண்ட்ஸிக்' எழுதிய 'எ கிரேட் ப்ளேஸ் டு ஹேவ் எ வோர்: அமெரிக்கா இன் லாவோஸ் அண்ட் த பர்த் ஒவ் எ மிலிட்டரி சி.ஐ.ஏ' எனும் அந்தப் புத்தகம், கம்யூனிஸத்தைக் கட்டுப்படுத்த லாவோஸில் அமெரிக்கா நடத்திய இரகசியப் போர் பற்றிப் பேசுகிறது. புத்தகத்தில் 'ஜோவா குர்லாண்ட்ஸிக்' இப்படிக் குறிப்பிடுகிறார்: "சீட்டுக் கட்டுச் சரிவதுபோல், ஒவ்வொரு நாடும் கம்யூனிஸ மயமாகி வந்த நிலையில், சீனாவிலிருந்தும் வடக்கு வியட்நாமிலிருந்தும், தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளுக்குக் கம்யூனிஸம் பரவுவதைத் தடுப்பதற்கு வசதியாக, லாவோசை ஒரு தடுப்புச் சுவராக அமெரிக்க அதிபர் ஐசனோவரும் அவரது அதிகாரிகளும் கருதினர்."
உண்மையில், தனக்குப் பின்னர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்கவிருந்த ஜோன் எவ். கென்னடியிடம், "லாவோஸ் தான் உலகில் வெளியுறவுக் கொள்கை தொடர்பான மிக முக்கியமான விவகாரம்" என்று ஐசனோவர் கூறியதாகக் குறிப்பிடுகிறார் குர்லாண்ட்ஸிக். வட வியட்நாம் ஆதரவு கொண்ட 'பாதேட் லாவோ' எனும் கம்யூனிஸ இயக்கத்துக்கு எதிராக லாவோஸ் நாட்டின் மொங் பழங்குடியினத்தவருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கும் 'ஒப்ரேஷன் மொமெண்டம்' எனும் திட்டத்துக்கு சி.ஐ.ஏ (மத்திய புலனாய்வு முகமை - அமெரிக்கா) அனுமதி பெற்றது. அந்தத் திட்டத்தை விரிவாக்கி இரகசியப் போரில் ஈடுபட சி.ஐ.ஏ முடிவுசெய்தது. "அமெரிக்கவரலாற்றில் முதல்முறையாக, சி.ஐ.ஏ தலைமையில் நடத்தப்பட்ட இரகசியப் போர் அது" என்கிறார் குர்லாண்ட்ஸிக்.
லாவோஸ் போர் சி.ஐ.ஏவை பெரும் அளவுக்கு மாற்றியது என்றும், எதிர்காலத்தில் மத்திய அமெரிக்க நாடுகள் தொடங்கி, ஒபாமாவின் மேற்பார்வையில் ஆளில்லாத விமானங்கள் பயன்படுத்தப்பட்ட ஆப்கானிஸ்தான் போர் வரை பல நாடுகளில் போர் நடத்த சி.ஐ.ஏவுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்தது என்றும் குறிப்பிடுகிறார் குர்லாண்ட்ஸிக்.

### உண்மையற்ற உறுதிமொழிகள்

லாவோஸ் போரில் பங்கேற்ற சி.ஐ.ஏ. அதிகாரிகள் பலர், பின்னாள்களில் உலகின் பல பகுதிகளில் நடந்த போர்களையும் தலைமையேற்று வழிநடத்தினர். அதில் இரண்டே இரண்டுபேர் மாத்திரம் விரக்தியடைந்த நிலைக்குச் சென்றனர். ஒருவர் சி.ஐ.ஏ. அதிகாரியான பில் லேய்ர். மற்றொருவர், மொங் பழங்குடியினத் தலைவரும் கம்யூனிஸ எதிர்ப்பாளருமான வாங் பாவோ. இவர்கள் இருவர் தொடர்பாக, புத்தகத்தின் தொடக்கத்தில் சுவாரஸ்யமான தகவல் ஒன்று உண்டு. "என்ன ஆனாலும் சரி, மொங் மக்களைக் கைவிட மாட்டோம் என்று அமெரிக்கர்கள் உறுதியளித்தனர்" என்கிறார் வாங் பாவோ. ஆனால், அப்படி எந்த உறுதிமொழியும் அளிக்கப்பட்டதாகத் தனக்கு நினைவில்லை என்று பில் லேய்ர் மறுக்கிறார். இதுபோன்ற உறுதிமொழிகள் தொடர்பாக எழுத்துபூர்வமாக சி.ஐ.ஏ. எந்த ஆதாரத்தையும் தரவில்லை என்பது வேறு கதை!

நன்றி - த ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரகாஸ்

# மகேலவின் திறமையை ஏற்குமா இலங்கை?

இலங்கை அணியின் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் வீரர் மகேல நியமிக்கப்படுவாரா என்ற எதிர்பார்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

மினிஉலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெறாமல் வெளியேறியது இலங்கை அணி. இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்று தனது தலைமைப்பயிற்சியாளர்பதவியில்இருந்துவிலகியுள்ளார் கிரகம்போர்ட்.

இதனையடுத்தே மகேலவுக்கு தலைமைப் பயிற்சியாளர் நியமனம் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

துடுப்பாட்ட வீரராகவும், அணித்தலைவராகவும் தன்னை மேம்படுத்தி அதில் வெற்றி பெற்றிருந்தார் மகேல ஜெயவர்தன. தற்போது வெற்றிகரமான ஓர் பயிற்சியாளராகவும்உருவெடுத்துள்ளார். அண்மையில் முடிவடைந்த ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக மகேல செயற்பட்டார். அவரது பயிற்சியின் கீழ் மும்பை அணி சம்பியனானது.

இதையடுத்து பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் ஓர் கழகம் அடுத்த இரு வருடங்களுக்கு தனது பயிற்சியாளராகச்செயற்படமகேலவைஒப்பந்தம்செய்துள்ளது. முன்னதாக இங்கிலாந்து தேசிய அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக மகேல செயற்பட்டுள்ளார்.

இவ்வாறுஉலகஅரங்கில்மகேலஓர்பயிற்சியாளராக அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ளுமா என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்து விடும்.

# கத்துக்குட்டிகள் இனி இல்லை

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஆட்டமொன்றில் ஆப்கானிஸ்தானும், அயர்லாந்தும் களமிறங்குகின்றதென்றால் கத்துக்குட்டிகள் என்ற வார்த்தை சமூக வலைத்தளங்களில் தாறுமாறாகப் பயன்படுத்தப்படும். இந்த இரு அணிகளுக்கும்டெஸ்ட்அந்தஸ்தைவழங்கி இத்தகைய வார்த்தைப் பிரயோகங்களுக்கு நிரந்தரமாக ஓய்வு கொடுத்துள்ளது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய 10 அணிகள்மட்டுமே பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வந்தன. ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுடன் சேர்த்து இந்தத்தொகை 12ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட்ஆட்டங்களில்மாற்றத்தையும் ரசிகர்களை அதிகரம்கவரவேண்டும் என்றும் பன்னாட்டு கிரிக்கெட் சபை திட்டமிட்டது. மூன்று மாற்றங்களை பரிசீலித்து வந்தது.

முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள், இரண்டாவது டெஸ்ட் ஆட்டங்களில் நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை. இவை இரண்டும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாவதாக டெஸ்ட் அணிகளை புதிதாக இணைக்கும் முயற்சி நீண்டகாலமாக பரிசீலிக்கப்பட்டு வந்தது. இந்த அடிப்படையிலேயே இந்த இரு அணிகளும் இணைத்துக்கொள்ளப்பட்டன. மொத்தத்தில் மிக விரைவில் வெள்ளை உடையில் ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகள் களமிறங்கவுள்ளன.



# கோக்லிக்கு எதிர்ப்பலை

இந்திய அணியில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலைகளால் தனது சொந்தரசிகர்களாலேயே விமர்சிக்கப்படுகிறார் இந்திய அணித்தலைவர் விராட் கோக்லி.

இந்திய அணித்தலைவர் கோக்லிக்கும், அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் கும்ளேவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் கிரிக்கெட் உலகில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

கும்ளேக்கும், கோக்லிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் உள்ளன என்ற தகவல் மினி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிக்கும் முன்னரேயே வெளிவந்தது. எனினும் அது கோக்லியால் மறுக்கப்பட்டிருந்தது. ஓய்வறையில் நடப்பவற்றை கோக்லி கச்சிதமாக மூடிமறைத்திருந்தார். மினி உலகக்கிண்ணத்தொடரின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானிடம் அடைந்த தோல்விக்குப்பின்னர் கும்ளே தனது தலைமைப்பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகினார். அனைவரும் கும்ளே பாகிஸ்தானுடன் அடைந்த தோல்விக்குப் பொறுப்பேற்றே பதவி விலகுகிறார் என்று கருதினார். ஆனால் தனக்கும் கோக்லிக்கும் இடையில் நடந்தவற்றை கும்ளே போட்டுடைத்துள்ளார்.

கோக்லி தனக்கு ஒத்துழைக்காதமையும், வேறுசில கருத்து முரண்பாடுகளுமே தனது பதவி விலகலுக்குக் காரணம் என்று அவர் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். களத்தில் எதிரணியின் மட்டில் ஆக்ரோசமாகச் செயற்படும் கோக்லி, சக வீரர்களிடத்திலும் அதே மனநிலையில் தொடர்கிறார் என்பதை அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் சில எடுத்தியம்புகின்றன. இதனால் கோக்லி மீது தற்போது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் பயிற்சியில் ஈடுபடாமல் பொழுதுபோக்கை விரும்பும் பயிற்சியாளர்களையா கோக்லி எதிர்பார்க்கிறார் என்று கேள்வி எழுப்பியுள்ளார். கோக்லிக்கு தற்போது தனது சொந்த ரசிகர்களிடத்திலேயே எதிர்பலை ஏற்பட்டுள்ளது. துடுப்பாட்டத்தில் சில சந்தர்ப்பங்களில் டோனியைப் போலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் டோனியை விடவும் தன்னை ஓர் சிறந்த வீரராக நிலைப்படுத்திக் கொண்ட கோக்லி, தலைமைத்துவத்தில் டோனியை அண்ணார்ந்தே பார்க்கவேண்டும். ஏணி வைத்தாலும் எட்டாத நிலைப்பாடே இது.




பெண்களுக்கான உலகக்கிண்ணத்தொடர் இங்கிலாந்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்தத்தொடரில் நியூசிலாந்து, இலங்கை, அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய எட்டு அணிகள் பங்குபற்றுகின்றன. லீக் ஆட்டங்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை நடைபெறும். ஜூலை 18ஆம் திகதி முதலாவது அரையிறுதி ஆட்டமும், ஜூலைஜூலை 20ஆம் திகதி இரண்டாவது அரையிறுதி ஆட்டமும், ஜூலை 23ஆம் திகதி இறுதியாட்டமும் நடைபெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் இடம்பெற்ற ஓட்டுமடம், காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் ஆலயம் நிறுவப்பட்ட காலம் முதல் அர்ச்சகராக இருந்த பிரம்ம ஸ்ரீ சந்தானகோபால சர்மாவுக்கு இடம் பெற்ற கௌரவிப்பு நிகழ்வு.











அண்மையில் இடம்பெற்ற ஓட்டுமடம், காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் தேர்த் திருவிழா மற்றும் பூங்காவனத் திருவிழாவின் சில பதிவுகள் அத்துடன் ஆலயத்தில் தேர்த் திருவிழாவின் போது பிரத்தியேகமாக எடுத்து வரப்பட்ட ஊதுபத்தி......





வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், பிரசித்தி பெற்ற காட்டா விநாயகர் ஆலயத்திலும், வற்றாப்பளை அம்மன் ஆலயத்தலும் இடம்பெற்ற சிறப்பு வழிபாடுகளில் கலந்து கொண்டார். (ஐ)
















... ஏற்பாட்டில், பன்னபுகைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் சாதனை படைத்த வலிகாமம் கல்வி வலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலுப்பைக்கடவை கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பிலுள்ள கடற்தொழிலாளர்கள், இடைத்தரகர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட நீண்ட கால கடன் சுமையிலிருந்து விடுபட்டமைக்கான கௌரவிப்பு நிகழ்வு சோஆ நிறுவனத்தினரால் இலுப்பைக்கடவை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீன்பிடித் திணைக்கள உதவி ஆணையாளர் டீ. மிராண்டா, கடற்தொழிலாளர் கூட்டுற வுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் குரூஸ், இலங்கை வங்கி முகாமையாளர் ஏ.சிவநாதன், கொமர்சல் வங்கி முகாமையாளர் திவாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)





இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்துக்கு அனர்த்த முகாமைத்துவப் பணியாற்றுவதற்[illegible] யாழ். மாவட்டச் செயலகம்[illegible] றும் பிரதேச செயலகங்க[illegible] சார்ந்த உத்தியோகத்த[illegible] சென்றிருந்தனர். அவ[illegible] டன் இணைந்து வடபி[illegible] நல்லொழுக்க சம்மேள[illegible] லிருந்து 8 தொண்டர்[illegible] சென்று பணியாற்றினர்.




வவுனியா கணேசபுரம் விநாயகர் வித்தியாலயத்துக்க அருகில் வசிக்கும் தேவராஜா விஜயவாணி என்பவருக்கு சக்கரநாற்காலி ஒன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஶ்ரீநிவாசன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கே.வசந்தன் புன்னகை அமைப்பின் தலைவர் க.சர்மிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் பௌர்ணமி தின நிகழ்வு திருகோணமலை சிறி கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ந. பார்த்தீபன் கவிக்கோ அப்துல் ரகுமான் பற்றிய அஞ்சலி உரையை நிகழ்த்தினார். பொய்யாய் பழங்கதையாய் என்ற தலைப்பில் கவியரங்கு இடம் பெற்றது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மனித உரிமைகள் அமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக கிளை, மட்டக்களப்பு பொலிஸ் திணைக்களம், விளையாட்டு கழகங்கள் மற்றும் மண்முனை வடக்கு இளைஞர் கழகங்கள் இணைந்து 'உதிரம் வழங்கி உயிரைக் காப்போம்' என்னும் தொனிப்பொருளின் கீழ் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு புனித செபஸ்ரியார் ஆலய மேயர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஜ-40)





தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரமும் கொடி வாரமும் கடந்த திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் இடம் பெற்றது. திருகோணமலை மாவட்ட உதவி மாவட்டச் செயலர் ந.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீன கர்த்த பிரமசிறி சோ.இரவிச்சந்திரகுருக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-40)



300 வருடங்களுக்கும் மேலாக வரலாற்று சிறப்புடைய தம்பலகாமம் முத்துநகர் கானகத்தினுள் இயற்கைவளம் சூழ அமைந்திருக்கும் 'கப்பல்துறை 'கண்ணகிஅம்மன்' ஆலய வருடாந்த பொங்கல் விழா அண்மையில் இடம்பெற்றது. (ஜ-40)



வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட காலி மாவட்ட மக்களுக்கு திருகோணமலை மாவட்ட செயலகத்தால் சேகரிக்கப்பட்ட நிவாரணப்பொருள்கள் 5 பாரவூர்திகளில் அனுப்பி வைக்கப்பட்டது. காலி மாவட்ட செயலரிடம் குறித்த பொருள்கள் உத்தியோக பூர்வமாக திருகோணமலை மாவட்டச் செயலர் என்.ஏ.ஏ. புஸ்ப குமாரவினால் ஒப்படைக்கப்பட்டது. (ஜ)



சுவிஸ் அறம் நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. கிளிநொச்சி பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவிக்கும், கிளிநொச்சி மகாவித்தியாலயம் மற்றும் வவுனியா நெலுக்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவிகள் என மூவருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (ஜ-6)



திருஞானசம்பந்தர் குருபூசை தினத்தை முன்னிட்டு, முனைக்காடு இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலையில் பூசை வழிபாடுகளும், பாடசாலையில் இருந்து முனைக்காடு கொட்டாம்புலைப் பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலயத்துக்குச் சம்பந்தரின் திருவுருவ படத்தை ஊர்வலமாக மாணவர்கள் எடுத்துச்செல்லும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. (ஜ-40)



பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட தம்பலவத்தை கனிஷ்ட வித்திலயத்தில் இருந்து உதைபந்தாட்ட போட்டியில் மாகாண மட்டத்துக்கு தெரிவுசெய்ப்பட்ட மாணவர்களுக்கு இராசமாணிக்கம் மக்கள் அமைப்பினால் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டது. பாதணிகளை இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் இ.சாணக்கியன் வழங்கி வைத்தார். (ஜ-40)



'அறநெறிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திடுவீர்' என்ற தொனிப்பொருளில் நாடுமுழுவதும் கடைப்பிடிக்கப்படும் தேசிய கொடிவாரத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேசத்துக்கான கொடிவார ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஸ், உதவி பிரதேச செயலாளர் ஆ.நவேஸ்வரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பிரபாகரன், நிருவாக உத்தியோகத்தர் ந.துரைராசா ஆகியோருக்கு கலாசார உத்தியோகத்தர்கள் கொடிகளை அணுவித்து ஆரம்பித்து நிகழ்வை வைப்பதனர். (ஜ-40)



அரசடித்தீவு விக்னேஸ்வரா அறநெறிப்பாடசாலையின் ஏற்பாட்டில், தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரத்தின் இந்து சமய அறநெறிக்கல்வி [illegible] அறநெறிப்பாடசாலை அதிபர் சி.ருசகுமார் தலைமை[illegible] நடைபெற்ற நிகழ்வில், திருஞானசம்பந்தரின் குருபூசை நிகழ்வும், தொடர்ந்து ஊர்வலமும் இடம்பெ[illegible] [illegible]ஸ்வரா ஆல[illegible]த்தினை சென்றடைந்தும் அங்கு பொருளா[illegible]சாவால் கொடிவ[illegible] [illegible]பித்து வைக்கப்பட்டது. (ஜ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிச் சிறப்புடைய கல்விப் பணியாற்றி வைரவிழாக்காணும் கார்மேல்சபை அருட் சகோதரிகள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

கல்விப்பணிக்கு அரும்பணியாற்றி வைர விழாக் காணும் கார்மேல்சபை அருட் சகோதரிகளான ஸ்ரனிஸ்லஸ் மேரி, ஜெறோம், மாறிலூயிஸ், லைசா, ஜேம்ஸ் ஆகியோரை உதயன் பத்திரிகையின் ஞாயிறு சிறப்பித ழின் கிறிஸ்தவப் பகுதியின் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகின் றோம். இவ்வாக்கத்துக்கான தகவல்களை யாழ். நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க வித்தி யாலயத்தின் அதிபராக பணியாற்றும் கார் மேல்சபை அருட்சகோதரி மேரி அஞ்சலிக்கா தந்துதவியுள்ளார். இனி அவர்களின் கல்விப் பணி குறித்து இவ்வார ஆக்கத்தின் ஊடே நோக்குவோம்.

பணிவாழ்வில் வைரவிழாகாணும் கார் மேல்சபை அருட்சகோதரிகளான ஐவருமே தங்களுடைய முதல் (வாக்குத்தத்தை) இந்தியாவிலுள்ள பெங்களூரில் 1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி பெற்ற னர். இன்று கல்விப் பணியிலும் ஏனைய பணிகளிலும் தனித்துவங்கள் பல புரிந்து, வயதில் முதிர்ந்து, அனுபவத்தில் நிறைவு கண்டு ஓய்வுநிலை பெற்றுள்ளனர். இவர்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பு இளம் சிட்டுக்க ளாக சுறு சுறுப்போடும், விறுவிறுப்போடும், அர்ப் பணத்தோடும் பணிக்களம் நோக்கிப் புறப் பட்ட போது எடுக்கப்பட்ட இளமைக்கால சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புகைப்படங்கள் இங்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இவர்கள் சென். பொஸ்கோ பாடசாலையை யும், நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க வித்தி யாலயத்தினையும் நடத்திவருகின்றனர் கார்மேல் சபைக் கன்னியர்கள் தங்களு டைய சபை சார்ந்த ஏனைய பணிகளுடன் கல்விப் பணியையும் சிறப்புற ஆற்றி வரு கின்றனர். கல்விப்பணிக்குத் தனி இடம் கொடுத்தும் அதனால் சமூக வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி வருகின்றனர். அவர் கள் ஆற்றிவருவதான பணிகள் நன்றி உணர்வுடன் நோக்கப்படவேண்டியவை.

புனித பொஸ்கோ பாடசாலையை 1957 ஆம் ஆண்டு முதலாம் திகதியும், யாழ். நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க வித்தியாலயத்தினை 1978 ஆம் ஆண்டு முதலாம் திகதியும் ஆரம் பித்து இதுவரைகாலமும் சிறப்புற நிர்வகிப்புச் செய்து நடத்தி வருகின்றனர்.

இந்தப் பணிகள் வட பகுதிக்கு மட்டுமல்லாது இலங்கை முழுவதற்கும் ஆற்றப்படுகின்ற ஒரு பணியாக இருந்து வருகின்றமை சிறப் புடன் நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

**சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

குறிப்பாக இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணத்தில் புனித பொஸ்கோ பாடசா லையை 1957ஆம் ஆண்டு ஆரம்பித்து இன்றுவரை நடத்தி வருகின்றனர். வடபகுதி யின் தலை சிறந்த ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக புனித பொஸ்கோ பாடசாலை இன் றும் திகழ்ந்து வருகின்றமை இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க கல்விப்பணிக்கான சான்றாக விளங்குகின்றது. யாழ். நகரின் மத்திய பகுதி யில் கோவில் வீதியில் இருந்து தொடக்கமுறும் றக்காவீதியில் கல்வியைக் கண் என மதிக்கும் வடபகு தித் தமிழ் மக்களின் தலை சிறந்த ஆரம்பபாடசாலை யானசென். ஜோண்பொஸ்கோ வித்தியாலம்60ஆண்டுகளை நிறைவு செய்து தொடர்ந்தும் வீறுநடை கொண்டு முன்ந கர்ந்து தலை நிமிர்ந்து நிற்கி றது. பாரம்பரியமாக நரிக் குண்டு என மக்களால் அழைக்கப்படும் பகு தியில், அழகிய குளக்கரையின் அருகில் மருத மரத்தைத் தாலாட்டி வரும் குளிர்ந்த இளம் தென்றல் காற்று இனிமை தர இளை ஞர்களின் பாதுகாவலரான புனித ஜோண் பொஸ்கோ பாடசாலையாக வடிவம் கொண்டு சிறார்களுக்கு அறிவருள் பாலித்து வருகிறார். இளையவர்களின் பாதுகாவலரான புனித ஜோண் பொஸ்கோவின் பெயரில் பாங்சால் வீதியில் யாழ் ஆயரால் வளர்ந்த மாணவர் களுக்கென நிர்வகிக்கப்பட்டு வந்த ஒருபாட சாலை இட நெருக்கடி காரணமாக றக்காவீதி யில் உள்ள ஒரு கொட்டகைக்கு இடம் மாற் றம் பெற்றது என்பதே யாழ். புனித ஜோன் பொஸ்கோவித்தியாலயத்தின் ஆரம்ப வரலா றாகச் சொல்லப்படுகிறது. 1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி அப்போஸ்த லிக்க கார்மேல் சபையின் அச்சுவேலி லங் காமாதா மடத்தின் தலைவியாகிய அருட்ச கோதரி ஒழிலியா அ.காவின் ஆலோசனை யின் பேரில் இந்தப்பாடசாலையானது ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை யால் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியரிடம் ஒப்படைக்கப்பட்டது.



1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி அ.கா இப்பாடசாலையின் முதல் அதிபராகப் பொறுப்பேற்ற போது கத்தோலிக்க முகாமை யின் கீழ் கத்தோலிக்கப் பாடசாலையாகவே பதியப்பட்டு யாழ்ப்பாணம் தல்லாலை புனித ஜோண் பொஸ்கோ றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்றே அழைக் கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் ஆம் திகதி தொடக்கம் இந்தப்பாடசா லையானது யாழ். புனித ஜோண் பொஸ்கோ றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாட சாலை எனவும், பின்னர் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் எனவும் அழைக்கப்பட்டு வருகிறது.

**அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி**

அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி சில்லா லையைப் பிறப்படமாகக் கொண்டவர். ஆயுள்வேத வைத்தியப் பரம்பரைக் குடும்பத் தில் பிறந்தவர். விராசுப்பிள்ளை, அவுறுலி யாப்பிள்ளை ஆகியோர் இவரின் பெற்றோர் களாவர். 2 சகோதரர்களும் 5 சகோதரிக ளும் இவருக்கு உள்ளனர். ஆசிரியப்பணி ஆற்றத் தொடங்கியபின்னர் இறை அழைத் தல் பெற்று அர்ப்பண வாழ்வை தொடங்கி னார். இன்று வடபகுதியில் பெயர் பெற்று விழங்கும் புனித பொஸ்கோ பாடசாலையின் முதல் அதிபராகப் பணியாற்றிய பெருமை பெற்றுக்கொண்டுள்ளார். 1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி அ.கா புனித பொஸ்கோ பாடசாலையின் முதல் அதிபராகப் பொறுப் பேற்றார். இரண்டாவது தடவையாக 1968 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை மூன்றாண்டுகள் பணி யைத் தொடர்ந்து யாழ். நல்லூர் சென்பென டிக்ற் றோ.க. வித்தியாலயத்தின் முதல் அதிப ராக பொதுநிலையினரிடமிருந்து பொறுப் பேற்றுக் கொண்டார். 1978 ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆண்டு வரை பணியாற்றி னார். அதன் பின்பு மீண்டும் 5 வருடங்கள் 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி வரையான காலப்பகு தியில் புனித பொஸ்கோ பாடசாலையில் பணியாற்றி ஓய்வுபெற்றார். யாழ்ப்பா ணம், கரவெட்டி, மட்டக்களப்பு, திருகோண மலை எனப் பல இடங்களில் கல் விப்பணியாற்றிய இவர் தற்போது திருகோணமலை புனித சூசையப் பர் மடத்தில் ஓய்வின் அமை தியை அனுபவம் செய்கிறார்.



**அருட்சகோதரி ஜெறோம்**

அருட்சகோதரி ஜெறோம் அச்சுவே லியைப் பிறப்பிமாகக் கொண்டவர். ஜோசெப் பொன்னையா, ஞான பத் தன் முத்தம்மா ஆகியோர் இவரின் பெற்றோர்களாவர். இவருக்கு 3 சகோதரர்களும் 4 சகோதரிகளும் உள்ளனர். யாழ். மறை மாவட்டத் தின் பெயர் குறிப்பிடக்கூடிய குரு வான செல்வராஜா அடிகளார் இவ ரின் சகோதரர்களில் ஒருவர்.

இவர்; 1964 ஆம் ஆண்டு தொடக் கம் 1996 ஆண்டு வரையான 32 வருட காலம் கல்விசார் செயற்பாடு களில் ஈடுபட்டார். அருட்சகோதரி ஜெறோம் ஆசிரியராகப் பணியாற் றிய இடங்கள் பலவுள்ளன. மட்டக் களப்பு மறைமாவட்டத்தில் கல் முனை, திருகோணமலை, ஊவா மறைமாவட்டத்தில் பதுளை, பண் டாரவளை, யாழ். மறைமாவட்டத் தில்; யாழ்ப்பாணம் திரு இருதய கல்லூரியில் 3 வருடங்கள் ஆசிரிய ராக கடமை புரிந்தார். அதன் பிற் பாடு புனித பொஸ்கோ பாடசாலை யின் அதிபராக 9 ஆண்டுகள் பணி யாற்றியுள்ளார். இத்தனைவிடவும் மடத்தின் மேலாளராக 12 வருடங் கள் கடமையாற்றியுள்ளார். பது ளையிலும் 12வருடங்கள் கடமை செய்துள்ளார். யாழ்ப்பாணம் கார் மேல் மடம், லூர்து மடம் ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார். தற்போது யாழ்ப்பா ணம் லூர்து மடத்தில் அமைதியை அனுப வம் செய்கிறார்.

**அருட்சகோதரி மாறிலூயிஸ்**

அருட்சகோதரிமாறி லூயிஸ் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் பெற் றோர்கள் திரு.திருமதி ஏ.பி ஜோன்பிள்ளை செபமாலைமுத்துத் தம்பதியினராவர். இவர் 5 சகோதரர்களுடன் பிறந்த ஒரேயொரு பெண்பிள்ளையாவார். புலாலி ஆசிரியர் கலா சாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்ற இவர் 1966ஆம்ஆண்டுதொடக்கம்1996ஆம்ஆண்டு வரையான 33 வருட காலப் பகுதியில் கல்வி சார் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

ஆசிரியராக யாழ். மறை மாவட்டத்தில் அமைந்துள்ள அச்சுவேலி புனித திரேசா பாட சாலை, கரவெட்டி திரு இருதய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பொஸ்கோ பாடசாலை என்பவற்றிலும் மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள வங்காலை, அடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் கொழும்பு மறைமாவட்டத் தில் கொள்ளுப்பிட்டி புனித அந்தோனி யார் பாடசாலையிலும் கடமை யாற்றியுள்ளார். தவிர சிலேவ் ஜலன்திருச்செபமாலை பாடசா லையில் அதிபராகவும் கட மையாற்றியுள்ளார். இத னைவிட மடத்தின் மேலாள ராக யாழ்ப்பாணம் கார்மேல் மடத்திலும், அச்சுவேலி, கர வெட்டி, தாளையடி ஆகிய பிரதே சங்களிலும் பணியாற்றியுள்ளார். தற்போது வவுனியா பம்பைமடு கார்மேல் மடத்தில் அமைதியை அனுபவம் செய்கிறார்.

**அருட்சகோதரி லைசா**

அருட்சகோதரி லைசா யாழ்ப்பாணம் வைத் தியசாலை வீதியை தனது சொந்த இடமாகக் கொண்டவர். மலேசியாவில் வளர்ந்தவர். இவரின் பெற்றோர் திரு.திருமதி பொன் னையா மரியம்மா தம்பதியினர் ஆவர். இவருக்கு 5 சகோதரர்களும் 4 சகோதரிக ளும் உள்ளனர். லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார் மற்றும் கார்மேல் சபை அருடசகோதரிகளான மரிய றெஜினா, தெரெஸ் கிரேஸ் ஆகியோர் இவரது சகோ தர.சகோதரிகளே. .

37 வருடங்கள் கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். ஆசிரியராக மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் பாடசாலையிலும் அதன் பின்னர் அச்சவேலி, மட்டக்களப்பு, பதுளை, பண்டாரவளை, திருகோணமலை, கர வெட்டிஆகியபிரதேசங்களிலும் பணியாற்றியுள்ளார். யாழ் நல் லூர் சென் பெனடிக்ற் றோ.க. வித்தியா லயத்தில் 6 வருடங் கள் அதிபராகப் பணியாற்றி யுள்ளார். அதன் பின்பாக பாப்ப ரசரின் இலங்கைக்கான தூது வர் அலுவலகத்திலும் பணி யாற்றினார். ஏழை மாணவ ருக்கான உதவிகளை வழங் கும் 'ஆயுபோவன்' எனும் திட் டத்தை அப்போஸ்தலிக்க கார் மேல் சபையில் ஆரம்பித்தவர் இவரேயாவர். மட்டக்களப்பு புனித சூசையப்பர் மடத்தில் தற்போது அமைதியை அனுப வம் செய்து வருகிறார்.

**அருட்சகோதரி ஜேம்ஸ்**

அருட்சகோதரி ஜேம்ஸ் 1930 ஆம் ஆண்டு தீவுப்பகுதியின் கரம்பொன் என்னும் இடத்தில் பிறந்தார். திரு.திருமதி மரியான் பிள்ளை மரியாபிள்ளை இவ ரது பெற்றோராவர். இவருக்கு 3 சகோதரிகளும் 2 சகோதரர் களும் உள்ளனர். கரம்பொன் திருக்குடும்பக் கன்னியர் மடத் தில் ஆரம்பக் கல்வியை கற்றார். 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையான 33 வருட காலப்பகுதியில் கல் விசார் செயற்பாடுகளில் இவர் ஈடுபட்டுள்ளார். மன்னார் திருக் குடும்பக் கன்னியர் மடம், முருங்கன் மகாவித்தியால யம், கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பாடசாலை, திரு கோணமலை புனித மரியாள் கல்லூரி, மட் டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றியுள் ளார். இவர் முருங்கன், கரவட்டி, பதுளை ஆகிய இடங்களில் உள்ள மடங்களில் சிறந்த மேலாளராகப் பணிபுரிந்துள்ளார். முருங் கன் மடம் மற்றும் விடுதியின் ஆரம்ப கர்த்தா வாகவும் இவர் இருந்துள்ளார். இவர் மறைந்த முன்னாள் யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நெருங்கிய உறவினர் என் பதும், திருக்குடும்ப சபை அருட் சகோதரி அஞ்ஞலினாவின் சகோதரி என்பதும் குறிப் பிட த்தக்கது. தற்போதுயாழ்ப்பாணம் கார்மேல் மடத்தில் அமைதியை அனுபவம் செய்து வருகிறார்.

**கார்மேல்சபை கன்னியரின் கல்விப்பணி**

கார்மேல் சபை கன்னியர் அளப்பரிய கல்விப் பணியை ஆற்றியுள்ளனர். குறிப்பாக யாழ். நகரில் இன்று கல்விப் பணியாற்றும் அப் போஸ்தலிக்க கார்மேல் சபையினரின் சிறந்த ஆரம்பப் பாடசாலைகளான புனித பொஸ்கோ பாடசாலை மற்றும் யாழ். நல்லூர் சென் பெனடிக்ற் றோ.கவித்தியாலயம் ஆகி யவற்றின் ஸ்தாபகர்களாய் இவர்கள் இருந்து பணியாற்றிய பெருமை யும், சிறப்பும் தன்னிகரற்றது.



கல்விப் பணியை திறம்பட ஆற்றி தங்களது பணி வாழ்வில் வைரவி ழாகாணும் கார்மேல்சபை அருட்ச கோதரிகள் ஐவரையும் வாழ்த்து வோம். அவர்கள் தங்களது ஓய்வுகா லத்தை மகிழ்வுடனும், நோய் நொடிகள் இன்றி நீண்ட ஆயுளோடும், நிறைந்த தேக ஆரோக்கியங்களோடும் வாழ்ந்திட இறை ஆசி கிடைத்திட்டும். இறையருளை பணிவோடு வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

- கருப்பு நிறம், கருந்திட்டு, கரும்புள்ளியா?
- பருக்கள், பருவந்த அடையாளமா? உதட்டுக் கறுப்பா?
- கை, கால், முதுகு கறுப்பு நிறம் நீங்க வேண்டுமா?

அனைத்துக்குமான மிக அற்புதமான கேர்வல் கிறீம் 2 வாரங்களில் மிக அழகிய தோற்றத்தைப் பெற. மேலும் இயற்கை மூலப் பொருள்களைப் பயன்படுத்தி இங்கு பேசியல் செய்யப்படும்.
ஒரே தடவையில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.
பக்கவிளைவற்றது.

பதிவு இல:- 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500, 9000

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**

பதிவு இல : 16168
077 2106 155
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

## நடராசா குமரேசன்



பிறப்பு 25.12.1949 இறப்பு 23.06.2017

ஐயனார் கோயில் ஒழுங்கை கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா குமரேசன் (23.06.2017) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - கனகசுந்தரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்புக்கணவரும் குமரவல்லி, குமாரவேல் (ஆஸ்திரேலியா), குமாரதாஸ் (நெதர்லாண்ட்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் லலிதாகினி (கனடா), நிஷாந்தினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிந்துஜா (இலங்கை வங்கி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீபாலன் (கனடா), ஐங்கரன் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), பவலக்ஷன் (British Council) ஆகியோரின் அன்புமாமனாரும் ஸ்ரீனா, சியாரா, ராதுமி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
ஐயனார் கோயில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 835 7220, 077 5170 178

## சபாரட்ணம் சற்குணானந்தன்

(முன்னாள் செயலாளர், வலி மேற்கு பிரதேச சபை)



மலர்வு 24.04.1939 உதிர்வு 21.06.2017

யாழ்ப்பாணம் சங்கரத்தையைச் சேர்ந்த சபாரட்ணம் சற்குணானந்தன் (முன்னாள் செயலாளர் வலி மேற்கு பிரதேச சபை) (21.06.2017) புதன் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - பாக்கியவதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் சிவகாம்பிகை அம்மாளின் அன்புக்கணவரும் சிவானந்தன் (U.S.A), மோகன வரதன் (கணக்காளர் George Steuarts Travels L.T.D) காலஞ்சென்ற தயானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலேஸ்வரி (U.S.A), மதனா (ஆசிரியை, கொழும்பு இராம நாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் சரண் (U.S.A),அருண்(U.S.A), [illegible] ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 [illegible] இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
[illegible]வாசி வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
021 225 0799, 077 7567 259
072 2469 103


## வீடு வாடகைக்கு

ஆறுகால்மடம், பழம் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு: 076 980 3935 (CS/4975) (10)

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் (ஓட்டுமடம்) வீடு வாடகைக்கு விடப்படும்.
(கம்பனித் தாரர்கள் விரும்பத்தக்கது)
076 430 5877, 071 433 6721

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதி, முதலாம் ஒழுங்கையில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 971 0525 (CS/5156) (10)

## கடைகள் வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகங்களுக்கும் ஏற்றது. தொடர்பு - 077 765 1826

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆறுகால் மடத்தடியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீட்டுத் திட்டம் பெறக்கூடியது.
077 913 1128

## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பல்வைத்திய நிலையத்துக்கு தாதியர் வெற்றிடங்கள் உள்ளன.
தகைமை - O/L சித்தி
தொடர்புகளுக்கு - 021 221 2599
077 234 6034

## SUPER LUXURY BUS FOR HIRE



Call
076 822 7522
076 822 7515
076 822 7523

29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi
581, K.K.S ROAD, JAFFNA.

## மெஷின் மயின்டர் தேவை

நல்லூரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு கமடா மெஷின் ஓடுவதற்கு ஒருவர் உடன் தேவை. விண்ணப்பிக்கவும்
தொ.பே.எண்: 0777 165589 (CS/5155) (10)

## ஊழியர்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் பலசரக்கு விற்பனை நிலையத்துக்கு ஊழியர்கள் தேவை.
(வடமராட்சியில் வசிக்கும் ஆண்கள் மட்டும்)
ஜமுனா ஸ்ரோர்ஸ்
39, பிரதான வீதி, நெல்லியடி.
தொடர்பு : 0777 422 604 (CS/5150) (10)

## தங்குமிடம் வாடகைக்கு

யாழ்-பல்கலை மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ளது. இணைந்த குளியல் அறைகளுடன் பாதுகாப்பான இடங்கள்
தொ.பே.எண்: 0777 769260 (CS/5152) (10)

## வாகனம் விற்பனைக்கு

அசோக் லேலன்ட் PATNER
அலுமினியம் பொடி
LL-xxxx லொறி விற்பனைக்கு
தொடர்பு : 0777 422 604 (CS/5151) (10)

## விசேட விலைக்கழிவு

- முதல்தர பனர் பிரதியாக்கம் - 30.00
- ஒரு பக்க விளம்பரப்பலகை - 150.00
- ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை - 400.00
- கதவுகளிற்கான கொத்து வேலை - 10000.00
- Mug print - 300.00
- Sunboard print - 100.00
- Fabric cloth print - 80.00
- 3D LED SIGN BOARD - 50% விலைக் கழிவில்
- கிறிஸ்ரல் பிறேம் (10x15) - 1200.00

(உங்கள் வீட்டு மங்கல நிகழ்வுகளிற்கான வீடியோ மற்றும் அல்பங்களையும் குறைந்த விலையில் பெற்றிடுங்கள்)
மூர்த்தி மனிதநல
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 224 7428


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி நிஷாந்தினி ஐங்கரன்**
அவர்களின் அன்புத்தந்தையார்

**நடராசா குமரேசன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக் கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி மன்றம்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 1936 . 04 . 14



உதிர்வு 2017 . 06 . 24

## ஐயாத்துரை குகபாலசிங்கம்


(தலவாக்கலை டயகம ஈஸ்ட் தமிழ் வித்தியாலய ஆசிரியர், பருத்தித்துறை மாதனை மெதடிஸ்த பாடசாலை அதிபர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குகபாலசிங்கம் நேற்று (24.06.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் மாணிக்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் சற்குணதேவியின் அன்புக்கணவரும் சுதர்ஷினி, கேதீஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரசேகரம் (GreenPark Hotel), பூங்குழலி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் லக்ஷாயினி (சென் மேரிஸ் கல்லூரி)யின் பாசமிகு பாட்டனாரும் புஸ்பலிங்கம் (பிரான்ஸ்), புஸ்பராணி (கொழும்பு) காலஞ்சென்ற புஷ்ப ராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராசையா, இராஜரட்ணம் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் அகபதி, விமலலோஜினி, பொன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.06.2017) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
46/01, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. 077 602 6859



## நாகரத்தினம் சிவானந்தராசா

நீராவியடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் கோயிலடியையும், திருநெல்வேலி பாற்பண்ணை வீதியையும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் சிவானந்தராசா கடந்த (23.06.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் திரு. திருமதி நாகரெத்தினம் - மங்கையற்கரசி தம்பதியரின் பாசமிகு புதல்வனும் சைலேஸ்வரியின் பாசமிகு கணவனும் திரு. திருமதி சைமன் - தனலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நிருஜன், நிலோஜா, டேனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரெத்தினராசா, இரத்தினகுமாரி, ஜெயானந்தராசா காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் விஜயராசா, விஜயகௌரி காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் சகோதரரும் வசந்தகுமாரி, வரதராசா, ஸ்ரீவதனா, ஜெயந்தி, ரேணுகா, ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், லோகேஸ்வரன், நகுலேஸ்வரன், விக்கினேஸ்வரன், தனேஸ்வரன், கமலேஸ்வரன், லோகேஸ்வரி, சைலேஸ்வரன், தனேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருநெல்வேலி. குடும்பத்தினர். 077 4384 741

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை - விக்கி...

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையைத் தொடர்ந்து வடக்கு மாகாண சபையில் கடந்த வாரம் குழப்ப நிலை தோன்றியிருந்தது. விசாரணை அறிக்கையில் குற்றமற்றவர்கள் என்று கூறப்பட்ட அமைச்சர்களை விடுப்பில் செல்லுமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததைத் தொடர்ந்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை, வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்று, குழப்பத்துக்கு முடிவு கட்டப்பட்டது.

இத்தகைய பின்புலத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மார்டின் வீதி அலுவலகத்தில் நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு மாலை 6 மணி வரையில் நீடித்தது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா இருவரும் மாத்திரமே சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பின் முடிவில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பேசியதாகவும், வடக்கு அமைச்சரவை நியமனம் தொடர்பில் பேசியதாகவும் குறிப்பிட்டார்.

சந்திப்புத் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா பத்திரிகையாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

'எங்கள் மத்தியில் பிளவுகள் இருக்கக் கூடாது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றியின் பின்னர் முதலமைச்சராக விக்னேஸ்வரன் கட்சி அலுவலகத்திற்கு, இன்று (நேற்று) வந்திருக்கின்றார். மாகாணசபை விடயம் தொடர்பில் பேசினோம். நாம் பிளவுபட்டு நிற்பது எமது இனத்தின் விடிவுக்கு உகந்தது அல்ல. இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இரு தரப்பும் இணங்கி ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். எதிர்காலத்தில் இணக்கமாகச் செயற்படுவதற்கு முடிவு எட்டப்பட்டுள்ளது. மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்த விடயத்தில் தலையிட்டதற்கு அமைவாகவே இந்தப் பேச்சு நடைபெற்றது' என்று குறிப்பிட்டார்.

(த-5-101)

## மைத்திரி...

யோசனையை அவர் நிராகரித்துள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டுப் படைகளின் தளபதியாக இருந்த எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலக்க ஜூன் மாதம் 15ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார். அந்தப் பதவி இன்னும் வெற்றிடமாக உள்ளமைக்கு இராணுவத் தளபதியின் நிராகரிப்பே காரணம் எனக் கூறப்படுகின்றது. இதனால் கூட்டுப் படைகளின் தளபதி அலுவலகத்தை மூடி விடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அரச தலைவர் வழங்கிய சேவை நீடிப்பினாலே இராணுவத் தளபதி இன்னமும் சேவையில் உள்ளார். குறித்த பதவியை நிராகரித்த இராணுவத் தளபதி, தனக்கு மீண்டும் சேவை நீடிப்பை வழங்குமாறு கோரியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

(த)

## அடிப்படைவாதிகள்...

கட்சியின் ஏற்பாட்டில் கம்பகா மாவட்ட அத்தனகலத் தொகுதி முஸ்லிம் உறுப்பினர்களுக்கான இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் திஹாரிய லப்ஸன் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் முஸ்லிம் அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பௌத்த தர்மத்தின் அடிப்படையைச் சரியாக புரிந்து கொள்ளாத குழுவே இதில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த)

## சகலருடனும்...

மாவை.சேனாதிராசாவுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பு முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் நியமனம் தொடர்பில் சந்திப்பில் பேசப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர் இது தொடர்பில் பேசுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஒன்றுசேர்ந்து பேச்சு நடத்திய பின்னரே அமைச்சு நியமனம் தொடர்பில் முடிவு செய்யப்படும் - என்றார்.

(த-5-101)

## தீர்வு குறித்து...

வர்களின் கரைவலைப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குகின்றது. எனவே உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் எனக் கோரி தென்னிலங்கை மீனவர்ள் 3 பேர் சார்பில் நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

இதனால் உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட நீதிமன்றால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளும் தொடர்ந்து இடம்பெறுகிறது.

உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்ட நிலப்பகுதி தென்னிலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபடும் பகுதியிலிருந்து 375 மீற்றருக்கு அப்பாலேயே உள்ளது என்று அரச நில அளவையாளர் மூலம் மேற்கொண்ட அளவீட்டின் ஆவணம் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளரால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. எனினும் பிரதேச செயலாளரின் அளவை வரைபடத்தை நீக்கம் செய்து அந்தப் பகுதியை கரைவலைப்பாடு தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் கோரியிருந்தனர்.

இதனால் குறித்த பகுதியை சகல தரப்பின் பிரசன்னத்துடன் மீண்டும் அளவை செய்யுமாறு நீதிமன்று கட்டளையிட்டிருந்தது. இதன் பிரகாரம் நில அளவீடு இடம்பெற்ற சமயமும் தென்னிலங்கை மீனவர்கள் குறுக்கீடு செய்தனர். அதனால் முறையான வகையில் அளவீடு இடம்பெறாததால் குறித்த பகுதியில் தொழில் புரிவதற்கு உள்ளூர் படகுத் தொழிலாளர்களுடன் தென்னிலங்கை கரைவலைத் தொழிலாளர்களுக்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இரு தரப்புக்கும் தடை விதிக்கப்பட்டபோதும் தென்னிலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் சட்டத்தை மீறி தொழிலில் ஈடுபடுகின்றனர். உள்ளூர் மீனவர்களின் மீன்பிடிக்கு அனுமதிக்குமாறும் கோரப்பட்ட நிலையில் இன்று வரை தடை உத்தரவு தொடர்கின்றது.

இருப்பினும் இந்தப் பிரச்சினை தொடர்பில் இறுதி முடிவை நீதிமன்று கோரியது. இந்தப் பிரச்சினைக்கு சட்டமா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனையைப் பெறுவதற்காக நீரியல் வளத் திணைக்களம் முடிவு செய்தது. எனினும் கடந்த 2 தவணைகளின் போதும் நீதிமன்றில் சட்டமா அதிபரின் அறிக்கை முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில் உள்ளூர் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பது தொடர்பில் ஆராய்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆகியோரை சட்டமா அதிபர் அழைத்துள்ளார். இந்தச் சந்திப்பு எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பிரச்சினை தொடர்பான வழக்கும் அதே தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு வருகிறது.

(வ-101)

## சம்பந்தன்...

வந்திருந்த, ஜேர்மன் சபாநாயகர் இதற்கான அழைப்பை விடுத்திருந்தார். அரசியல் பார்வை என்ற தலைப்பில் இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது. இந்தப் பயணத்தின்போது ஜேர்மனியின் அரசமைப்பு, அங்குள்ள நடைமுறைகள் தொடர்பில் நேரில் ஆராயப்படவுள்ளது.

இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், சரத் அமுனுகம, கயந்த கருணாதிலக, நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(த-5)

## நயினை...

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பத்தாம் திருவிழா அன்று பகல் கைலாச வாகனக் காட்சியும், அன்று இரவு திருமஞ்சத் திருவிழாவும் இடம்பெறும். எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 9ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

வழமைபோல அனைத்து தரப்பின் ஒத்துழைப்போடும் படகுச் சேவைகள், அன்னதானம், குடிதண்ணீர் விநியோகம் போன்றவை சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

(வ-ரி)

## காணாமற்...

இதன் காரணமாக காணாமற்போனவர்கள் குறித்த அலுவலகத்தைத் தாமதமின்றி உடனடியாக ஏற்படுத்தவேண்டும் எனப் பன்னாட்டு மன்னிப்புச் சபையின் தெற்காசியாவுக்கான இயக்குநர் பிராஜ் பட்நாயக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் காணமற்போனவர்களின் குடும்பத்தவர்களை நோக்கி தங்கள் கரங்களை நீட்டியுள்ளமை நம்பிக்கை அளிக்கின்றது.

எனினும் காயங்களை ஆற்றும் வார்த்தைகளுடன் நடவடிக்கைகளும் இடம்பெறவேண்டும் நீதியால் மாத்திரமே இலங்கையர்களின் காயங்களை ஆற்றமுடியும்.

காணமற்போனவர்கள் குறித்த அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்கு முழு முக்கியத்துவத்தையும் வழங்கவேண்டும்.

குறிப்பிட்ட அலுவலகத்தில் பெண்கள் சமஅளவில் இடம்பெறவேண்டும். பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் இடம்பெற்ற குற்றங்களுக்கான ஆதாரங்கள் மேலதிக விசாரணைகளுக்காக சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும் - என்றார்.

(த)

## பிரிட்டனும்...

ருக்கான பணியகச் சட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவது, எல்லா சமூகங்களையும் சேர்ந்த மக்கள் தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கு உதவியாக அமையும்" என்று கூறியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் அதுல் செகாப்பும் அண்மையில், காணாமற் போனோருக்கான பணியகம் மிக அவசியமானது என்று கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

## 2 அமைச்சர்களை...

'கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் குழு நியமித்திருந்தார். இந்தக் குழுவின் தலைவராகவும், ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரனே நியமிக்கப்பட்டிருந்தார். இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை மே மாதம் 19 ஆம் திகதி முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், வடக்கு மாகாணசபையில் குழப்பம் ஏற்பட்டிருந்தது. முன்னைய விசாரணை அறிக்கையில் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகிய இருவரும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது முறைப்பாடு கொடுத்தவர்கள் விசாரணைக்கு வருகை தரவில்லை என்பதால் மீளவும் விசாரணை நடத்தப்படும் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார்.

புதிய விசாரணை சட்டரீதியானதாகவும் சுயாதீனமானதாகவும் இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் அதனை ஏற்றுக் கொண்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, முன்பு அமைக்கப்பட்டதைப் போன்ற விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. 4 உறுப்பினர்கள் இதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த விசாரணைக் குழுவின் தலைவரைத் தவிர ஏனையோர் புதியவர்கள் என்று அறியமுடிகின்றது. விசாரணையை ஒரு மாத காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கும் முதலமைச்சரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த விசாரணைக் குழுவின் உறுப்பினர்களாக இருவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டபோதும் அவர்கள் இருவரும், இதற்குச் சம்மதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த-5.101)

## 100 க்கு...

வழங்கவே வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் குருதிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. நல்லிணக்கத்தின் அடிப்படையில் குருதிக் கொடை வழங்க பௌத்த துறவிகள் வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு வரும் துறவிகள் மத வழிபாடுகளில் ஈடுபடுவர் என்றும் அதன்பின்னர் குருதிக் கொடை வழங்கி கண்டிக்குத் திரும்பவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் குருதிக்குத் தட்டுப்பாடு என்று தகவல்கள் வெளியானதும், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் குருதிக் கொடை வழங்குவதற்கு அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.

(ற-101)

## மலேரியா...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலேரியா நோய்த் தொற்றை ஏற்படுத்தும் புதிய வகை நுளம்பு மன்னார், பேசாலையை அண்மித்த கரையோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

'அனோப்பிளிப்ஸ்ற் இவன்சி' என்ற புது வகை நுளம்பே இவ்வாறு முதல் முதலாக இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகை நுளம்பு இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் பரவி இருக்கலாம் என்று சந்தேகப்படுகின்றோம்.

புதுவித நுளம்பானது நகரப் புறங்களில் மலேரியா பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. குறிப்பாக இலங்கையின் முக்கிய நகரங்களை தாக்கி மலேரியாவை பரப்பலாம் என்ற அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இது சம்பந்தமான விழிர்ப்புணர்வு மக்கள் மத்தியில் மிக வேகமாக ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த வகை நுளம்பை அழிப்பதற்கான ஒத்துழைப்பு மிக அவசியமானதாக காணப்படுகின்றது.

தற்போது பாழடைந்த கிணறுகளில் இந்த வகை நுளம்பு அதிகளவான குடம்பிகளைப் பெருக்கி மலேரியா நோய்த் தொற்றைப் பரப்புவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது. எனவே இதற்காக இலங்கை மலேரியா தடை இயக்கமும், மன்னார் மாவட்ட மலேரியா தடை இயக்கமும் மக்களுடன் இணைந்து மிக முனைப்பாக செயற்பட்டு வருகின்றது - என்றார்.

(வ-56)

## குடும்பத்...

விபத்தில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பூதத்தம்பி சிவதரன் (வயது-38) என்பவரே நேற்று அதிகாலை உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை.

"நேற்று முன்தினம் இரவு உணவு வாங்குவதற்காகத் தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது தட்டாதெருவில் சாலையில் பயணித்துகொண்டிருந்த முச்சக்கர வண்டியை முந்திச்செல்ல முற்பட்டபோது

எதிரே வந்த பிக்கப் வாகனத்தின் பக்கவாட்டுக் கண்ணாடி மோட்டார் சைக்கிளை செலுத்தியவரின் கையில் பட்டது. அதனால் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் இடறி வீழ்ந்து சிறிது தூரம் இழுபட்டுச் சென்றுள்ளார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பலத்த காயங்களுக்குள்ளான அவரை அங்கு நின்றவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை முன்னெடுத்தனர்.

(4.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி ரி-20 இன்று

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலானரி-20 தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்றுநடைபெறவுள்ளது. முதலிரு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்று 1:1 என்று உள்ளன. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை உள்ளது.

இங்கிலாந்தில் தொடர் நடைபெறுவதால் சொந்த மண்ணில் கிண்ணம் இழப்பதைத் தவிர்க்க அந்த அணி கடும் போராட்டத்தை வெளிப்படுத்தும்.

அதேநேரம் கடந்த சில தொடர்களில் தென்னாபிரிக்க அணி தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வருகிறது. எனவே தனது சரிவில இருந்து மீண்டுவர ஓர வாய்ப்பாக இந்தத் தொடரைப் பயன்படுத்த அந்த அணி எத்தனிக்கும் என்பதால் இன்றைய ஆட்டத்தில் பெரியளவில் எதிர்பாப்பு உள்ளது. (ம)



# தோல்விக்கு பொறுப்பேற்று விலகினார் கிரஹம் போர்ட்

மினி உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் தோல்விக்குப் பொறுப்பேற்று பதவி விலகினார் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளர் கிரஹம் போர்ட்.

இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி அரையிறுதிக்குத் தகுதிபெறாமல் வெளியேறியது. இதையடுத்தே போர்ட் தனது பதவியில் இருந்து விலகினார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவரான போர்ட்டின் பயிற்சியின் கீழ் இலங்கை அணி கடந்த வருடம் நடைபெற்ற ரி-20 தொடரில் ஆஸ்திரேலியாவை 3:0 என்று வீழ்த்தியது. எனினும் ஏனைய தொடர்களில் பெரிதாக பிரகாசிக்கவில்லை. ரி-20 உலகக்கிண்ணம், ஆசியக் கிண்ணம் என எந்தத் தொடரிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. சங்கா, மகேல, டில்சான் போன்ற ஜாம்பவான்கள் இல்லாதமையும் இலங்கை அணியின் தோல்விக்கு முக்கியமான காரணமாகச் சொல்லப்படுகிறது. எனினும் தலைமைப் பயிற்சியாளர் என்ற தன் அடிப்படையில் தோல்விக்குப் பங்குண்டு என்று பதவி விலகினார் போர்ட்.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகிறது. கிரஹம் போர்ட் பதவி விலகியதை அடுத்து களத்தடுப்புப் பயிற்சியாளரான நிக் போத்தாஸ், இந்தத் தொடரில் பொறுப்புத் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்படவுள்ளார். (ம)

# ஏஞ்சல் யாழ். இந்து இறுதிக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஓர் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. அந்த அணி தனது ஆதிக்கத்தை



இரண்டாம் பாதியிலும் நிலைப்படுத்தியது. முடிவில் 70:68 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 44:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி. இரண்டாம் பாதியிலும் இந்துவின் ஏக ஆதிக்கம் தொடர்ந்தது. முடிவில் அந்த அணி 89:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)


# இன்றைய மோதல்கள்

**மைக்கல் வி.க. கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சென். மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.க. கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி யுத் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-108)




இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் மழை காரணமாக வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. தீவுகளில் உள்ள போர்ட் ஒவ் ஸ்பெயின் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. இந்த இரு அணிகளுக்க இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ம)

# இங்கிலாந்துக்கு தென்னாபிரிக்கா பதிலடி

இங்கிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்கா அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் தறபோது நடைபெற்று வருகிறது. இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக ஸ்மிட்ஸ் மற்றும் ஹென்றிக்ஸ். அணி 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் ஹென்றிக்ஸ். மோரஸ்லியை வெளியேற்றினார் பிளங்கட். களமிறங்கியது முதல் அடித்தாடினார் வில்லியர்ஸ். முன்வரிசை வீரர்களால் வீணடிக்கப்பட்ட பந்துகள் வில்லியர்ஸின் அதிரடியில் சரி செய்யப்பட்டது. தென்னாபிரிக்கா 96 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் ஸ்மிட்ஸ். மில்லர் மீண்டும் தடுமாறினார். அவரால் வெறும் 8 ஓட்டங்களையே பெற முடிந்தது. இந்த 8 ஓட்டங்களுக்காக 10 பந்துகளையும் எதிர்கொண்டிருந்தார். 20 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் வில்லியர்ஸ். முடிவில் 8 இலக்குகள் இழப்புக்கு 174 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் கர்ரன் 3 இலக்குக்களையும், பிளங்கட் 2 இலக்குகளையும், வில்லி, ஜோர்டான், டவ்சன் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்ப வீரா பில்லிங்ஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினா. எனினும், றோய், பாிஸ்ரெளவ இணைந்து ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினர். 47 ஓட்டங்களுடன் பரிஸ்ரௌவ வீழ்த்தினார் றோய். 17.1 பந்துப்பரிமாற்றத்தில் இங்கிலாந்து 150 ஓட்டங்களைத் தொட்டது. இறுதி 17 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலைமை. பட்லர், மோர்கன், லிவிங்ஸ்ரன் [illegible] முன்று [illegible] ந்து. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளநிலைப் பிரிவு மெய்வன்மை இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்ப்பாணம் மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தத்திட்டமிட்ட இளநிலைப் பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.


இன்றையநாள் போட்டிகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன. இதில் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 800 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

## வேம்படி - உடுவில் மகளிர் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 15 வயது பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி என்பன இறுதிக்குத் தகுதி பெற்றன.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 12:03 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வேம்படி முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியிலும் முன்னிலை பெற்ற அந்த அணி முடிவில் 20:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. உடுவில் மகளிருக்கு எதிராக புள்ளிகளைப் பெறுவதற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கடும் சிரமத்தை எதிர் கொண்டது. முதல் பாதியின் முடிவில் 12:00 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது உடுவில் மகளிர் கல்லூரி. இரண்டாம் பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய அந்த அணி 18:02 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகு வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)





## மிகப்பெரும் இடைவெளியில் நல்லூர் அணி சம்பியனானது

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 29ஆவது மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் நல்லூர் அணி சம்பியனானது.

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 156 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தில் கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் உள்ளது. நல்லூருக்கும் கரவெட்டிக்கும் இடையில் 60 புள்ளிகள் வித்தியாசம் காணப்படுகிறது.

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 85 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 61 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 47 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும், யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 38 புள்ளிகளைப் பெற்று ஆறாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ம-23)

## மெஸ்ஸிக்கு வயது - 30

கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவான்களில் ஒருவரான லயனல் மெஸ்ஸி, நேற்றுத் தனது 30ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் தலைவராகவும், ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரராகவும் மெஸ்ஸி உள்ளார். அவரது பிறந்த நாளை மெஸ்ஸியின் ரசிகர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடினர். சமூக வலைத்தளங்களிலும் மெஸ்ஸிக்கு வாழ்த்துக்கள் நிரம்பி வழிந்தன. (ம)

## கரணவாய் மத்தி. - பாரதி காலிறுதிக்குத் தகுதியாயின





யாழ்ப்பாணம், ஜூலை 25
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று காலிறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் பாதியில் கோல்கள் எதுவும் பதிவாகவில்லை. இரண்டாவது பாதியின் 6ஆவது நிமிடத்தில் கரணவாய் மத்தியின் வீரர் சந்திராஜ் கோல் ஒன்றைப் பதிவுசெய்ய 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குச் சென்றது அந்த அணி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் சம பலத்துடன் மோதியதால் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவு வரை கோலெதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது பாரதி அணி. (ம-108)

## யாழ். பிரதேச இளைஞர் கழகம் உடுவிலை வீழ்த்தி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் கழக அணி சம்பியனானது.

யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச இளைஞர் கழக அணி மோதியது. முதல் பாதியின் 16 ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாண பிரதேசஇளைஞர்கழகஅணியின்வீரன் சோபிதன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். வேறெந்தக் கோலும் பதிவாகாமல் முடிவுக்கு வந்தது முதலாம் பாதி.

இரண்டாம் பாதியின் 6ஆவது நிமிடத்தில் உடுவில் பிரதேச இளைஞர் கழக அணியின் ஜெகன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவ செய்தார். 1:1 என்ற நிலையில் ஆட்டம் மேலும் விறுவிறுப் பானது. 14ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாண



பிரதேச இளைஞர் கழகத்துக்கு தண்ட உதை கிடைத்தது. வாய்ப்பைக் கச்சிதமாகக் கோலாக்கினார் கஸ்ரோ. 30ஆவது நிமிடத்தில் உடுவில் அணியின் அகிலன் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றிருந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதையில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழகம் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வரும் ஆங்கில மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை. Pharmacist Certificate உள்ள மருந்தாளர் ஆண்/ பெண் இருபாலரும் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.


ஆர்.வி.ஜி மருந்தகம். 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## அறிமுக விலையில் அமோக விற்பனையில்

**Photo Print** செய்யக்கூடிய
**ALL IN ONE PRINTERS**

1 year 1 to 1 Warranty


### HP DESKJET GT 5810



Print, Scan, Copy
High-capacity ink tank system — அதிக கொள்ளளவுடைய மை தாங்கி
Spill free refill system — இலகுவான மை சிந்தாத மீள்நிரப்பல்
Water resistant printing — நீர் ஊறாத பிரதி

**Rs. 26,200.00**

### HP DESKJET GT 5820



Print, Scan, Copy
High-capacity ink tank system — அதிக கொள்ளளவுடைய மை தாங்கி
Spill free refill system — இலகுவான மை சிந்தாத மீள்நிரப்பல்
Wireless Printing

**Rs. 29,600.00**

Black: **5,000 Pages** Colour (CMY): **8,000 Pages** in **1 set Ink**
1 ink bottle : **Rs.1,100.00**

பாடசாலைகளுக்கு உகந்தது. கணனி நிறுவனங்களுக்கு விசேட சலுகை உண்டு.

* நிபந்தனைக்கு உட்பட்டது.

*The Only HP Authorized Partner in Northern Province*

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975

No. 9, 2nc Cross Street, Kanagapuram, kilinochchi.
021 228 5550

## ENGLISH IMMERSION TRAINING

ஆங்கிலம் கற்பது கடினம் !
ஆனால் எமது **Immersion Training** மூலம் குறைந்த காலத்தில் உங்கள் ஆங்கிலத்தை மேம்படுத்தலாம்.

**Lectures are by Canadian graduate in Nallur.**
**Trainings are for professionals, Doctors, Lawyers, IELTS Students and A/L Students.**

இன்றே அழையுங்கள்
Facebook - NEST Academy@Nallur
077 684 6069, 021 222 9757

## VACANCY

நான்கு வருடங்களாக சிறந்த முறையில் சேவையாற்றி வரும் ஆலோசனை நிறுவனத்துக்கு SECRETARY தேவை.

**தகைமைகள்**

- ☑ அலுவலகத்தினை சிறந்த முறையில் நிர்வகிக்கக் கூடிய ஆற்றல்.
- ☑ A/L சித்தி
- ☑ ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடியவர்கள்
- ☑ (சிங்களப் பேச்சாற்றல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)
- ☑ அடிப்படைக் கணினி அறிவு (MS.Office, Internet / email)
- ☑ நீண்டநேரம் அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடியவர்கள்.
- ☑ வயதெல்லை - 18 - 28
- ☑ சம்பளத் திட்டம் - 25000/- + Commissions + Mobile sim
- ☑ முன்னனுபவம் அவசியமில்லை. தகுந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

விரும்புவோர் உங்கள் புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக் கோவையினைப் பதிவுத்தபால் / மின்னஞ்சல் மூலம் 7 நாள்களுக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

**WINSTAR VISA CONSULTANTS**
106, Post box Junction,
Palay Road, Thirunelvely.
email:- winstarvc@gmail.com

## Daily Food City இன்

# ஒன்றரை வருட வெற்றிக்குப் பின்னால்...

# AgoySoft(Pvt)Ltd

A premium Software Developers

தகவல் தொழில்நுட்ப பாதையில் புதிய பரிணாமம்
எம்முடன் இணைவீர்!

- Whole Sellers
- Retailers
- Distributors
- Pharmacies
- Textiles
- Medi Channelling services
- Online Reservations

- SMS gateway
- Reports supporting to strategic decisions
- Mobile Apps
- Online payment gateway

** Premium Packages start from LKR 100,000/=*

**info@agoysoft.com**
**021 205 2393 / 077 430 8010**

**No 20, K.K.S Road, Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.